# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 1

## I. 12 பாடம் கொண்ட இந்த வேதப் பாடத்திற்கான விதிமுறைகள்:

**A.** ஒரு குறிப்பிட்ட கிறிஸ்தவப் பிரிவைக் குறித்தப் பாடம் இது அல்ல. இது ஒரு வேதப்பாடம் ஆகும்.

**B.** தனி நபரின் கருத்து சரியா தவறா என்றதைக் குறித்த வாக்குவாதம் யாரும் செய்ய முயற்சிக்கவில்லை.

**C.** ஒவ்வொரு பாடமும் ஒரு (1) மணியிலிருந்து 1¼ மணி நேரம் வரை நீடிக்கும்

**D.** எல்லா வேதப்பகுதிகளும் புதிய கிங் ஜேம்ஸ் வெர்ஷனிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது சில குறிப்பிட்ட பகுதிகளைத் தவிர.

**E.** மிக முக்கியமாக கர்த்தரின் வார்த்தையை திறக்கப்போகும் நாம் நம் இருதயங்களையும் சிந்தையையும் திறந்துக் கொடுப்போமாக.

## II. வேதாகமத்தின் அத்தாட்சி

**A.** சரித்திர புஸ்தகங்கள் மீண்டுமாய் எழுதப்பட்டுள்ளன ஆனால் வேதத்தில் உள்ள வாஸ்தவங்களோ பெயர்களோ அல்லது சம்பவங்களோ எப்பொழுதுமே 100 சதவீதம் சரியாக இருந்திருக்கின்றன. இவைகளை மாற்றுவதற்கு ஒரு தேவையும் உண்டானதில்லை.

ஏசாயா 40:8 "**புல் உலர்ந்து பூ உதிரும்; நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் என்பதையே சொல்லென்று உரைத்தது.**"

1 பேதுரு 1:25 "**கர்த்தருடைய** வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிற வசனம் இதுவே."

மத்தேயு 24:35"**வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை.**"

சங்கீதம் 119:89 "**கர்த்தாவே**, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது."


யோவான் 17:17 "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்."

## III. வேதாகமம் கர்த்தருடைய வார்த்தை

**A.** பரிசுத்த வேதத்திலே 3800 முறைக்கு மேல் "கர்த்தர் பேசினார்", "தேவன் பேசினார்", "இது கர்த்தர் சொல்லுகிறதாவது" என்பதைக் காணலாம்."

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 1



**சாவி #1: கர்த்தரால் எழுதப்பட்ட வார்த்தைகள்தான் பரிசுத்த வேதாகமம்**

1. **அப்போஸ்தலனாகிய பவுல்:**

1 கொரிந்தியர் 14:37 "....**நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன்**

அப்போஸ்தலனாகிய பவுலின் எழுத்துகளோ, யோசனைகளோ **அல்லது** கருத்துகளோ அவருக்குரியதல்ல ஆனால் அவைகள் கர்த்தராலே கொடுக்கப்பட்ட கட்டளைகள்.

2. **எரேமியா**

கர்த்தர் சொன்னதின் நிமித்தமாக எரேமியா தீர்க்கதரிசி எவ்வாறாக எழுதினார் என்று எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் காண்பிக்கும்.

ஏரேமியா 30:12 கர்த்தராலே எரேமியாவுக்கு உண்டான வார்த்தை: 2.இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் உன்னோடே சொன்ன எல்லா வார்த்தைகளையும் ஒரு புஸ்தகத்தில் எழுதிக்கொள்.

எரேமியா 36:2 "**நீ ஒரு புஸ்தகச் சுருளை எடுத்து,....சொன்ன எல்லா வார்த்தைகளையும் அதிலே எழுது.**"

### B. கர்ததருடைய வார்த்தைக்கு ஒரே ஒரு மெய்யான வியாக்கியானம் தான் இருக்க முடியும் ஏனெனின் பரிசுத்த வேதாகமம் கர்த்தருடைய வார்த்தை.

1 திமோத்தேயு 3:16 **அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்.**

அருளப்பட்டது என்றால் தேவனால் சுவாசிக்கப்பட்டது. முழு வேதாகமமும் கர்த்தரால் அருளப்பட்டது என்று மேற்கண்ட வேதப்பகுதி கூறுகிறது.

2 பேதுரு 1:20 **வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது.**

எல்லோரும் வேதத்தை வெவ்வேறு விதமாக வியாக்கியானம் செய்யலாம் என்று அநேகர் சொல்லுவார்கள் ஆனால் தேவனோ எந்த ஒரு தனி மனிதனையாவது தன்னுடைய சுய வியாக்கியானம் செய்ய வேண்டுமென்று விரும்பவில்லை ஆகையால் நம்முடைய சுயதோற்றத்தினால் வேதத்தை நாம் ஆராயாமல் பரிசுத்த வேதத்தை வேத வார்த்தைகளினால்தான் ஆராய வேண்டும். வேதாகமப் பகுதிகள் கொடுக்கும் **விளக்கத்தின்** நிமித்தமாகதான் கர்த்தருடைய வார்த்தையை ஆராயவேண்டும்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 1

### C. வேதத்தைச் சரியாக விளக்குவது

**சாவி #2:** வேதத்தில் உள்ள சத்தியங்களை நிலை நாட்ட 2 அல்லது 3 சாட்சிகள் (வேதப் பகதிகள்) தேவை.

1. இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின் வாயிலாக (வேதப்பகுதிகளிலிருந்து) கர்த்தருடைய வார்த்தை நிலைநாட்டப்படுகிறது. இந்த சத்தியத்தை அறிந்துக் கொள்வதற்கான அடிப்படையைப் பார்க்கலாம்.

2 கொரிந்தியர் 13:1 இந்த மூன்றாந்தரம் நான் உங்களிடத்திற்கு வருகிறேன்; சகல காரியங்களும் இரண்டுமூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும்.

2. வேதாகமத்தை விளக்குவதற்கான எந்த அடிப்படையை நாம் கொண்டுள்ளோமோ அதே அடிப்படையைதான் யூதர்களின் சட்ட ஒழுங்கு முறையை விளக்குவதற்கு பயன்படுத்துகிறோம்.

உபாகமம் 19:15 "**ஒருவன் எந்த அக்கிரமத்தையாவது எந்தப் பாவத்தையாவது செய்தான் என்று சொல்லப்பட்டால், ஒரே சாட்சியினால் நியாயந்தீர்க்கக் கூடாது; இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்படவேண்டும்.**"

மத்தேயு 18:16 "**அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ.**"

எண்ணாகமம் 35:30 "**எவனாகிலும், ஒரு மனிதனைக் கொன்றுபோட்டால், அப்பொழுது சாட்சிகளுடைய வாக்குமூலத்தின்படியே அந்தக் கொலைபாதகனைக் கொலைசெய்யக்கடவர்கள்; ஒரே சாட்சியைக்கொண்டுமாத்திரம் ஒரு மனிதன் சாகும்படி தீர்ப்புச்செய்யலாகாது.**"


இ.ந்த அடிப்படையை தயவு செய்து நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள் ஏனென்றால் இது இந்த முழு வேதப் பாடத்தில் பயன்படுத்தப்படும். ஒரு விஷயத்தைக் குறித்து ஒரே ஒரு வேதப்பகுதி இருந்தாலும் அது போதுமானதாக உள்ளது ஏனென்றால் எல்லா வேதப்பகுதிகளும் கர்த்தருடைய வார்த்தையாகும். யாராகிலும் இருவர் வேதத்தைக்குறித்ததான வியாக்கியானத்தில் வேறுபாடு கொண்டிருந்தால் மற்ற வேதப்பகுதிகள் அளிக்கும் **விளக்கத்தினால்** இது தெளிவாகும்.

### D. வேதத்தை புரிந்துகொள்ளவே முடியவில்லை என்று சிலர் சொல்லுவார்கள்.

1. **தேவன் தம்முடைய வார்தையை அங்கீகரிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கவில்லை நம்முடைய விசுவாசமும் நம்பிக்கையையும் தான் எதிர்பாற்கிறார்.**

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 1



**சாவி #3** கருத்தாக வார்த்தையின் மூலமாய் கர்த்தரை தேடுகிறவர்களுக்கு அவர் தெளிவாக புரிந்துகொள்வதற்கு உதவிசெய்வார்.

2. **தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகளுக்கு மேலானவைகள்.**

ஏசாயா 55:8-9 "**என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.**"

3. **விசுவாசம் தேவனுக்குத் தேவையானது.**



**சாவி #4** சத்தியத்தை அறிந்துகொள்வதற்கு விசுவாசம் அத்யாவசியமானது.

சத்திய வேதம் உண்மையுள்ளது என்று நிரூபிக்க உங்களது நேரத்தை நீங்கள் செலவாக்கலாம் இதை உங்களால் நிரூபிக்க முடியும். ஆனால் இப்படி செய்வதினால் உங்கள் விசுவாசம் வெறுமையடைகிறது.

எபிரெயர் 11:6 "**விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.**"

**"எனக்கு நிரூபி அதன்பிறகு நான் விசுவாசிப்பேன்" என்று உலகம் சொல்லுகிறது. ஆனால் என்னை விசுவாசியுங்கள் அதன்பிறகு நான் நிரூபிப்பேன் என்று அதற்கு எதிர்மறையாக கர்த்தர் சொல்லுகிறார்."**

## E. மனிதனால் கர்த்தருடைய வார்த்தையை மாற்ற முடியாது

இந்த அடிப்படையை புரிந்துகொள்வது மிக முக்கியமாகும். யாராவது வேதத்தின் எந்த பகுதியையாவது மாற்றவேண்டுமென்று தேவன் விரும்பவில்லை. வசனத்திலிருந்து ஒரு வார்த்தையும் கூட்டவும் குறைக்கவும் கூடாதென்று கர்த்தர் தன்னுடைய வார்த்தையிலே தெளிவாக கூறியிருக்கிறார்.

உபாகமம் 4:2 "**நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்.**"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 1

**நீதிமொழிகள் 30:6** "அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார், நீ பொய்யனாவாய்."

வெளி 22:18-19 "இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்."

**கேள்வி** : மேற்கண்ட மூன்று சாட்சிகளின் நிமித்தமாக தேவனுடைய வார்த்தையை மாற்ற முடியாது என்ற அடிப்படையை புரிந்துக் கொள்வது கடினமா?

**இல்லை.**

## IV. பழையஏற்பாட்டிற்கு ஒரு அறிமுகம்.

### A. பழையஏற்பாட்டின் புத்தகங்கள்

வேதம் என்பது ஒரு நூலகம் போன்றது. பைபிள் அல்லது பிப்ளியோஸ் என்கிற வார்த்தையுடைய அர்த்தமே புத்தகங்கள் என்பதுதான். இப்புத்தகங்கள் ஒரு நூலகத்திலே இருக்கின்றவைகள் போலவாகும்.

1. பழைய ஏற்பாட்டிலே 39 புத்தகங்கள் உள்ளன. (ஓல்டு 3 எழுத்து டெஸ்டமென்ட் 9 எழுத்துகள் இவ்விரண்டையும் இணைத்தால் 39 புத்தகங்கள் கிடைக்கும்)

2. பழையஏற்பாடு நான்கு முக்கிய பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது பரிசுத்த வேதாகமத்தைத் திறந்து ஆகமங்களில் கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்களை இவ்வாறாக பெயரிடவும்.

   a. மோசேயால் எழுதப்பட்ட முதல் 5 புத்தகங்களுக்கு நியாயப்பிரமாணம் என்று பெயர் (நல்லொழுக்கம் சமூகத்திறனின் தனி உரிமைகள் மற்றும் சடங்காச்சாரம்)
   b. இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரத்தை அடுத்த 12 புத்தகங்கள் எடுத்துச் சொல்லும்.
   c. இவைகளுக்கு பின் வருகிற 5 புத்தகங்களை கவிதை என்று அழைக்கலாம் (தேவனுக்குத் துதி சொல்லுமாறு பாடப்படுகிற பாடல்கள். சங்கீதங்கள் போன்றவை)
   d. பழையஏற்பாட்டின் கடைசி 17 புத்தகங்களை தீர்க்கதரிசனம் என்று அழைக்கலாம் இவைகளில் முதல் 5 பெரிய தீர்க்கதரிசிகள் எனவும் (ஏனென்றால் இவைகள் பெரிதான புத்தகங்கள்) கடைசி 12 சிறிய தீர்க்கதரிசிகள் எனவும் (ஏனென்றால்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 1

இவைகள் சிறிய புத்தகங்கள்) அழைக்கப்படும். கர்த்தருடைய 2-ம் வருகை மேசியாவுடைய வருகை வருங்கால உலக சம்பவங்கள் இஸ்ரவேலை குறித்ததான தீர்க்கதரிசன வார்த்தைகள் போன்ற பல காரியங்கள் இந்த புத்தகங்களில் அடங்கியுள்ளன.

### B. மனிதனுடைய மூவாயிரத்து அறுநூறு வருட இறுத்தலை பழைய ஏற்பாடு எடுத்துச் செர்லலுகிறது.

ஏறத்தாழ 1500 ஆண்டுகளின் காலக்கட்டத்திற்குள் 32 வெவ்வேறான மனிதர்கள் பழைய ஏற்பாட்டை எழுதியுள்ளார்கள். இப்படியிருக்கையிலும் ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடின்றி எழுதியிருக்கிறதின் காரணம் கர்த்தர் என்ற ஒரே ஆசீரியரால் இவைகள் ஏவப்பட்டுள்ளன என்பதாகும்.

உதாரணம் ஒரு நாலு சக்கர வாகன விபத்தை ஆறு பேர் பார்த்தார்கள் என்றால் ஒவ்வொவரு வித்யாசமான கதையைச் சொல்லுவார்கள் 40 வித்யாசமான மனிதர்களால் (ஏழை மற்றும் பணக்காரன்) மூவாயிரத்து அறுநூறு ஆண்டுகளில் நடந்த சம்பவங்களை கருத்து வேறுபாடின்றி எழுதப்பட்ட புத்தகம் தான் பரிசுத்த வேதாகம். இந்த தெளிவு கர்த்தருடைய ஆசீரியத்தன்மையை குறிக்கிறது பரிசுத்த வேதம் முழுவதும் ஒரு பரிபூரண இசைவோடு காணப்படும்.

## V. ஆதியாகமத்தின் புத்தகம்

### A. ஆதியாகமம் என்றால் ஆரம்பம் அல்லது தொடக்கம் என்று அர்த்தமாகும். ஆதியாகமத்திலே அநேக ஆரம்பங்கள் உள்ளன.

1. சிருஷ்டிப்பு
2. மனுகுலம்
3. திருமணம்
4. பாவம்
5. கர்த்தருடைய மீட்பின் பணி
6. தீர்க்கதரிசனம்
7. இஸ்ரவேல் தேசம்

### B. பரிசுத்த வேதாகமத்தின் முதல் 2 வசனங்களை நாம் படிப்போம்.

ஆதியாகம் 1:1-2 "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ <u>ஆவியானவர்</u> <u>ஜலத்தின்மேல்</u> அசைவாடிக்கொண்டிருந்தார்."

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 1

ஆவி மற்றும் தண்ணீர் (ஜலம் என்ற வார்த்தைகளைக் குறித்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் இவ்வார்த்தைகள் பரிசுத்த வேதாகமம் முழுவதும் மற்றும் நம்முடைய வேத பாடம் முழுவதும் சொல்லப்படும்.

## C. படைப்பு.

1. முதல் நாள் : ஒளி (ஆதியாகமம் 1:3-5)
2. இரண்டாம் நாள் : ஆகாயவிரிவு (ஆதியாகமம் 1:6)
3. மூனறாம் நாள் : வெட்டாந்தரை சமுத்திரம் புல் பூண்டு மற்றும் கனிதரக்கூடிய மரங்கள் (ஆதியாகமம் 1:9-13)
4. நான்காம் நாள் : சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் (ஆதியாகமம் 1: 14-19)
5. ஐந்தாம் நாள் : நீந்தும் ஜீவ ஜந்துக்களையும் ஆகாயத்தில் பறக்கும் பறவைகளையும் (ஆதியாகமம் 1:20-23)
6. ஆறாம் நாள்: நாட்டு மிருகங்கள் ஊறும் பிராணிகள் காட்டு மிருகங்கள் மற்றும் மனுஷன் (ஆதியாகமம் 1:24-31)
7. ஏழாம் நாள்: இந்த நாளிலே கர்த்தர் ஓய்வெடுத்தார். (ஆதியாகமம் 2:2-3)

பேசப்பட்ட வார்த்தையில் உள்ள தேவனுடைய வல்லமையை ஆதியாகமம் வெளிப்படுத்துகிறது.

ஆதியாகமம் 1-ம் அதிகாரம் சிருஷ்டிப்பின் மேல் நோக்கமாகும். 2-ம் அதிகாரத்திலே கர்த்தர் மனுகுலத்தின் சிருஷ்டிப்பைக் குறித்து விவரித்துள்ளார்.

## VI. அறியாமையிலிருந்து வீழ்ச்சி வரை



**சாவி #5**: <u>தேர்ந்தெடுத்தலின் அதிகாரத்தை கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிறார்.</u>

### A. இயந்திரங்கள் போல அவர் சொல்லுகிற வார்த்தைகளுக்கு கீழ்படிவதற்காக கர்த்தர் நம்மை உருவாக்கவில்லை. <u>நாமாகவே</u> அவரை துதிக்கவும் அவரை ஆராதிக்க வேண்டும் என்பதுதான் அவருடைய வாஞ்சை.

1. நாம் கர்த்தரை இவ்வாறாக ஆராதிக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார்.

யோவான் 4:23 "**உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை <u>ஆவியோடும் உண்மையோடும்</u> தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.**"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 1

2. மனுஷனையும் மனுஷியையும் கர்த்தர் சிருஷ்டித்து தோட்டத்தில் வைத்து தேர்ந்தெடுக்கக்கூடிய அதிகாரத்தை கொடுத்தார்.

ஆதியாகமம் 1:27-28 "**தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.**"

ஆதியாகமம் 2:7-8 "தேவனாகிய **கர்த்தர்** மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.தேவனாகிய **கர்த்தர்** கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்."

## B. தேவனுடைய ஒரே கட்டளை: ஒரு எளிதான தீர்வு

ஆதியாகமம் 2:16-17 "தேவனாகிய **கர்த்தர்** மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் **நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்**; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். "

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கர்த்தர் தேநர்ந்தெடுக்கக் கூடிய சுதந்திரத்தை அளித்தார். தம்மை சேவிக்கவேண்டுமென்று கர்த்தர் யாரையும் கட்டாயப் படுத்துவதில்லை.. மிருகங்களைப்போல மனுஷன் சிருஷ்டிக்கப்பட வில்லை. அவரை சேவிக்கவும் அவருக்கு கீழபடிந்தவர்களாக நடப்பதும் நமக்கு கொடுத்த தேர்வாகும்.

## C. ஆதாமும் ஏவாளும் கர்த்தருக்கு கீழ்படியாமல் இருப்போம் என்று முடிவெடுத்தார்கள்.

ஆதியாகமம் 3:1-5 "தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. **அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ** என்றது.ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்தில் உள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்;ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை;நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது."

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 1

1. முதல் தவறு : தொடத்தகாதக் கனியை அளிக்கும் விருட்சத்தின் அண்டைக்கு ஏவாள் சென்றாள். சோதிக்கப்பட்டு பாவத்தில் ஈடுபடுவது என்று அவள் முடிவெடுத்தாள். அவள் எங்கே செல்லக்கூடாதோ அங்கே சென்றால்.
2. எதிர்மறையான காரியங்கள்மேல் சாத்தான் ஏவாளுடைய திசையை திருப்பினதுமாத்திரமல்லாமல் கர்த்தருடைய வார்த்தையையும் திருப்புகிறான். அவன் என்ன சொன்னான் என்று கவனியுங்கள். "தோட்டத்தில் உள்ள யாதொரு மரத்தின் கனியை புசிக்க கூடாது என்று கர்த்தர் சொல்லியிருக்கிறாரா?" கர்த்தர் இதற்கு எதிர்மறையாகதான் சொல்கிறார். "தோட்டத்தில் உள்ள யாதொருமரத்தின் கனியையும் நீங்கள் புசிக்கலாம் ஆனால் அந்த விருட்சத்தின்...." பாவம் செய்யாததின் நிமித்தம் ஏதோ ஒரு காரியத்தை நாம் இழந்து விடுகிறதைப் போல சாத்தான் காண்பிப்பான் ஏவாளுடைய சிந்தையில் சந்தேகத்தைத் தூண்டும் படியான ஒரு கேள்வியை சாத்தான் கேட்டான். இந்த தந்திரத்தை இந்நாள்வரை அவன் பயன்படுத்திக்கொண்டு வருகிறான்.
3. கர்த்தருடைய வார்த்தையோடுகூட வார்த்தையை சேர்த்ததினால் கர்த்தர் சரியாக என்ன சொன்னார் என்று ஏவாள் அறிந்துக் கொள்ளவில்லை.

**கேள்வி** : ஆதியாகமம் 2:17 மற்றும் 3:3 —யை ஒப்பிட்டுப் பார்கையில் ஏவாள் எந்த வார்த்தைகளை சேர்த்தால் என்றுப் பார்த்தீர்களா?
**அதைத்தொடு.**

4. ஏவாளின் புரிந்துகொள்ளாமையின் நிமித்தம் சாத்தான் அவளை வஞ்சித்தான் "நீங்கள் இதை புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும் நீங்கள் தேவர்களைப்போல் நன்மை தீமை அறிந்தவர்களைப் போல இருப்பீர்கள் என்றும் கர்த்தர் அறிவார்." பரிசுத்த வேதாகமத்தை அறிந்து புரிந்துகொள்ள வேண்டும் என்பதை இந்த குறிப்ப விளக்குகின்றது. இதினிமித்தம் சாத்தான் நம்மை வஞ்சிக்க முடியாது தேவனுடைய வார்த்தையை அறியாமலிருப்போமேயானால் யார் வேண்டுமானாலும் நம்மை வஞ்சிக்கலாம். (II கொரிந்தியர்11:12-15).

5. மூன்று அத்யாவசியமான தத்துவங்கள் அல்லது பாவத்தின் வேர்கள் மூலமாக சாத்தான் நம்மில் அடுத்தபடியாக கிரியைசெய்கிறான்.

ஆதியாகமம் 3:6-7 "**அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் <u>புசிப்புக்கு நல்லதும்</u>, <u>பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு</u> இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்.**"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 1

a. பாவத்தின் மூன்று அத்யாவசியமான தத்துவங்கள் நம்மை எப்பொழுதும் சோதித்துக்கொண்டே இருக்கிறான். அதாவது உலகம்-சாத்தான்-மாமிசம் ஆகிய மூன்று காரியங்கள் ஆகும்.

1 யோவான் 2:15-16 "**உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.**"

மாமிசத்தின் இச்சை-கண்களின் இச்சை-ஜீவனத்தின் பெருமை இவைகள் மூன்றின் நிமித்தமாக ஏவாள் சோதிக்கபட்டாள்.

**கேள்வி** : இவைகளை ஆதியாகமம் 3:6-7 லே உங்களால் கண்டெடுக்க முடியுமா? கண்களின் இச்சை மாம்சத்தின் இச்சை ஜீவனத்தின் பெருமை ஆகியவை.

b. சாத்தான் ஏவாளை எந்த காரியமும் செய்ய வற்புறுத்தவில்லை என்பதை புரிந்து கொள்ளவேண்டியது மிகவும் முக்கியம். அவளுக்கு தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்பு இருந்தது அதே போல நம்மையும் பாவம்செய்யும்படியாக சாத்தான் வற்புறுத்த முடியாது. கர்த்தரும் அவரை வற்புறுத்தலாக தொழுதுகொள்ள விரும்புவதுமில்லை.

**D. ஏவாளிடம் உபயோகப்படுத்தின அதே மூன்று யுத்த தந்திரங்களை இயேசு கிறிஸ்துவினிடமும் பயன்படுத்தினான்.**

இன்றுவரைக்கும் ஒவ்வொருவரையும் சாத்தான் இதே தந்திரங்களை கொண்டு சோதித்து வருகிறான். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் கூட கண்களின் இச்சை-மாமிசத்தின் இச்சை- ஜீவனத்தின் பெருமையினால் சோதிக்கப்பட்டார்.

**கேள்வி** : மத்தேயு 4:1-11 இல் இவைகளை கணடெடுக்க முடியுமா? கண்களின் இச்சை- மாம்சத்தின் இச்சை - ஜீவனத்தின் பெருமை ஆகியவை.

**மத்தேயு** 4:1-11 "அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே
வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். 2அவர் இரவும் பகலும் நாற்பதுநாள்
உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று. 3அப்பொழுது சோதனைக்காரன்
அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி
சொல்லும் என்றான். 4அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய
வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே
என்றார். 5அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய், தேவாலயத்து
உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: 6நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்;

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 1

ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம்
கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய்
எழுதியிருக்கிறது என்று சொன்னான். 7அதற்கு இயேசு: <u>உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை</u>
<u>பாராதிருப்பாயாக</u> என்றும் எழுதியிருக்கிறதே என்றார். 8மறுபடியும், பிசாசு அவரை மிகவும்
உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின்
மகிமையையும் அவருக்குக் காண்பித்து: 9நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப்
பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான் 10அப்பொழுது
இயேசு: அப்பாலே போ சாத்தானே; <u>உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர்</u>
<u>ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக</u> என்று எழுதியிருக்கிறதே என்றார். 11அப்பொழுது
பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான். உடனே தேவதூதர்கள் வந்து, அவருக்குப்
பணிவிடை செய்தார்கள்."

**கேள்வி** : எவ்வாறாக இயேசு இந்த மூன்று சோதனைகளை மேற்கொண்டார்?
ஒவ்வொரு முறையும் இயேசு வார்த்தையைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது என்று கூறி ஒரு வேத பகுதியையும் கூறி சாத்தானை மேற்கொண்டார். எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை வைத்து இயேசு சாத்தானை மேற்கொண்டார். தேவனுடைய வார்த்தையை அறிந்து அதை பயன்படுத்துவது நமக்கு மிக முக்கியம்.

### E. பாவத்தின் நிமித்தமாக அவர்களுடைய "மனசாட்சி" எழுப்பப்பட்டது.

உடனடியாக தன்னுடைய பாவத்தை மூடி மறைக்க ஆதாமும் ஏவாளும் பிரயாசப்பட்டார்கள். குற்ற உணர்ச்சியை உண்டாக்குவது மற்றுமல்லாமல் பாவம் நம் தேவனோடிருக்கிற உறவையும் முறித்து போடுகிறது.

ஆதியாகமம் 3:7-10 "**அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள். பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளிந்துக் கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாய் இருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான்.**"



**சாவி #6 :** <u>மனிதர்களால் மாத்திரம் பாவத்தை எடுக்கமுடியாது கர்த்தருடைய உதவி நமக்குத் தேவை.</u>

அத்தியிலைகளைத் தைத்து அவர்கள் நிர்வாணத்தை மூடி மறைக்க பிரயாசித்தார்கள். ஆனால் தேவனோ இந்த போர்வையை மறுத்தார். ஆகையால் பாவத்தை நிவிர்த்தி செய்யும்படியாக மனிதன் கண்டுபிடிக்கும் வழிகள் எப்பொழுதும் குறைவாக இருக்கும்.


# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 1

நீதிமொழிகள்14:12 "**மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்**".

வேதத்தை வாசிப்பதின் மூலமாக நமக்குள் இருக்கிற பாவத்தை கர்த்தர் வெளிப்டுத்துகிறார் என்பதை புரிந்து கொள்வது முக்கியம். இந்த வேதப் பாடத்தின் மூலமாக நாம் மாறவேண்டும் என்ற காரியத்தை கர்த்தர் வெளிப்படுத்துவாரேயானால். நாம் ஒப்புக் கொடுத்து நம்மை கர்த்தர் இன்னும் நெருக்கமாக இழுத்துக் கொள்ளும்படியாக அனுமதிக்க வேண்டும். கர்த்தருடைய வழிகளிலே வாழ நாம் கற்றுக் கொள்ள வேண்டும். ஆதாமும் ஏவாளுமுடைய ஸ்தானத்தில் கர்த்தர் ஒரு மிருகத்தை பலி செலுத்தினார். அந்த மிருகத்தின் தோலைக்கொண்டு கர்த்தர் அவர்களுக்கு வஸ்திரம் செய்து கொடுத்தார்.

ஆதியாகமம் 3:21 "**தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்**."



**சாவி #7:** மாசில்லாத இரத்தத்தை சிந்துதல் எப்பொழுதும் கர்த்தருடைய வழியாகும்.

வருகின்ற வேதப்பகுதிகள் கர்த்தர் ஒரு மாற்று இணையான முறையை ஒழுங்குசெய்தார் என்பதைக் குறிக்கிறது.

எபிரெயர் 9:22 "...**இரத்தஞ்சிந்துத*லில்லாமல்* மன்னிப்பு உண்டாகாது**."

அந்த நாளிலிருந்து ஆதாமையும் ஏவாளையும் ஒவ்வொரு முறை கர்த்தர் கானும்பொழுது அவர்களுக்குப் பதிலாக ஏதோ ஒன்று மரணதண்டனையை அனுபவித்தது என்று காண்கிறார். ஆண்டவராகிய இயேசுவோ நமக்காக ஒப்பற்ற ஜீவபலியாக மறித்தார்.

1 பேதுரு 1:18-19 "**உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்,குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே**."

பழையஏற்பாடு முழுவதும் ஜனத்தின் பாவத்திற்காக இரத்தம் மிகுதியாக சிந்தப்பட்டது.

### F. ஆதியாகமத்திலே குற்றம் கூறுவது என்பதின் தொடக்கத்தை நாம் காணலாம்

தங்களைுடைய பாவத்திற்காக ஆதாமும் ஏவாளும் பொறுப்பெடுத்துக் கொள்ளாமல் மற்றவர்மேல் குற்றம் கூறினார்கள்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 1

ஆதியாகமம் 3:12-13 "**அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த <u>ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன்</u> என்றான்.அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச்செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: <u>சர்ப்பம் என்னை வஞ்சித்தது,</u> நான் புசித்தேன் என்றாள்.**"

தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்பு நமக்கு எப்பொழுதும் உண்டு உண்மையாக இருப்பதே நாம் ஒவ்வொருவரும் எடுக்கக்கூடிய முதல் முடிவாக இருக்க வேண்டும். நாமாக எடுக்கிற முடிவுகளுக்காக பொறுப்பாளிகளாக இருந்து மனம் திரும்ப ஆயத்தமாக இருக்க வேண்டும். இது செய்வதின் நிமித்தமாக மாத்திரம் கர்த்தர் நம்மை மன்னிக்கிறார்.

## VII. முதல் நியாயதீர்ப்பு

### A. வேதத்தில் இருக்கிற ஒவ்வொரு குறிப்பிட்ட காலக்கட்டமும் நியாயத்தீர்ப்பில் முடிவடைகிறது என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும்.

பாவமானது முனுஷனை தேவனிடத்திலிருந்து பிரித்துவிடுகிறது.

### B. நான்கு சாபங்களும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டது.:

1. சாத்தான் மேல் உண்டான சாபம்.

ஆதியாகமம் 3:14 "**அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப்பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டுமிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்;**"

2. ஸ்திரியின் மேல் உண்டான சாபம்.

ஆதியாகமம் 3:16 "**அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் என்றார்.**

3. பூமியின்மேல் உண்டான சாபம்.

ஆதியாகமம் 3:17-18 "**பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்.அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்.**"

4. மனுஷன் மேல் உண்டான சாபம்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 1

ஆதியாகமம் 3:19 "**நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்.**"

**C. மீட்பருடைய வாக்குத்தத்தம்**:

ஆதியாகமம் 3:15 "**உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.**"

பகை என்றால் யுத்தம் அதாவது சாத்தானுக்கும் கிறிஸ்துவுக்கும் உண்டாகிற யுத்தம்.

**D. ஆதாமும் ஏவாளும் தோட்டத்திலிருந்து வெளியே துரத்தப்பட்டனர்.**

ஆதியாகமம் 3:23-24 "**அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார். அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போம் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப் பட்டயத்தையும் வைத்தார்.**"

வேதாகமத்தில் காணப்படுகிற முதல் சபை ஆராதனையைக் குறித்து **வேதபாடம் #2**-ல் பார்போம்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 2

முழைய ஏற்பாட்டின் முதல் சில பாடங்கள் மிகவும் தேவையானது என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும். வேதத்தில் தோன்றும் கதாபாத்திரங்களின் வாழ்க்கையிலிருந்து நம் சொந்த குணாதியசத்தின் பெலவீனங்ளை அறிந்து கொள்வது மாத்திரமல்லாமல் கா்த்தருடைய ஒழுங்கின் நிமித்தமாக இந்த பெலவீனங்களை மேற்கொள்ளவும் நாம் கற்று கொள்கிறோம். புதிய ஏற்பாட்டின் உண்மைகளுக்கு பழைய ஏற்பாடு எவ்வாறாக ஒரு நிழலாய் இருக்கிறது என்பதையும் நாம் அறிந்துக் கொள்ளலாம்.

ஆதாமும் ஏவாளும் செய்த பாவத்தோடு நம்முடைய முதல் பாடம் முடிவடைந்தது. பாவத்தின் நிமித்தம் தங்கள் நிர்வாணத்தை அத்திலைகளால் மூட பிரயாசித்தனர். இதின் மூலமாக கற்றுக்கொண்ட வேத அடிப்படை என்னவென்றால் கீழபடியாமை பாவமாகும். இது மரணத்தைக் கொண்டு வரும். ஆனால் கீழபடிதலோ ஜீவனை உண்டாக்கும். கா்த்தா் ஆதாம் ஏவாளின் மீதும் வைத்த அன்பினாலே ஒரு மிருகத்தை அவா்களுக்குப் பதிலாக மரிக்கசெய்து அவா்களுக்கு ஒரு முழுப் போர்வையை உண்டாக்கினார். கா்த்தரால் மாத்திரம்தான் பாவத்தை மூட முடியும் மனுஷனால் இயலாது.

சாவிகளின் முக்கியத்துவம்: கீழ் கொடுக்கப்பட்டுள்ள சாவிகள் தான் கா்த்தரைப் புரிந்து கொள்வதற்கு அஸ்திபாரமும் சட்டமுமாகும். கா்த்தா் மாறுவதே இல்லை இதை நாம் பழை ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் கொடுக்கப்பட்டுள்ள வேதரீதியான சான்றுகளில் பார்க்கலாம். கா்த்தரும் வேதத்தில் "நான் மாறுவதில்லை" என்று கூறுகிறார். அவா் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவா் என்று வேதம் கூறுகிறது. கா்த்தரை குறித்ததான இந்த தத்துவங்கள் அல்லது சாவிகளை நாம் கற்றுக்கொண்டால் அவருடைய இராஜியத்தில் நாம் வெற்றிக் கொள்வோம்.

## I. பாவம் மனுஷனை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது --- தோட்டத்தில் வெளியே வாழ்க்கை.

### A. காயின் மற்றும் ஆபேல்

ஆதாமும் ஏவாளும் தோட்டத்திலிருந்து வெளியேறினவுடன் பிள்ளைகளைப் பெற்றெடுக்கிறார்கள். இவர்களில் இரண்டு பேர் காயின் மற்றும் ஆபேல் இந்த இரண்டு சகோதரா்கள் இரண்டு வகையான ஜனங்களை குறிக்கிறார்கள்.

1) கா்த்தரை முழுவதுமாக நம்பி ஆபேலைப் போல கீழ்படிகிற ஒரு ஜனம்
2) கா்த்தரை முழுவதுமாக நம்பினாலும் தன்னுடைய சொந்த வழியிலே காரியத்தை செய்கிற மற்றொரு ஜனம்.

**ஆதியாகமம் 4:1-5** *"ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்; அவள் கா்ப்பவதியாகி, காயீனைப் பெற்று, கா்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள். 2 பின்பு அவனுடைய சகோதரனாகிய ஆபேலைப் பெற்றாள்; ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான். 3 சிலநாள் சென்றபின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கா்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். 4 ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கா்த்தா் அங்கிகரித்தார். 5 காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது."*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 2

இதுதான் வேதத்திலே எழுதப்பட்ட முதலாவது துதி ஆராதனை. கர்த்தர் ஒரு பலியை ஒப்புக்கொள்வார் என்பதை எப்படி இவர்கள் அறிந்தார்கள்? அவர்களுடைய பெற்றோர்களிடத்திலிருந்து தான். காயினும் ஆபேலும் கர்த்தருக்கு இரண்டு வகையான பலிகளை கொண்டுவந்தார்கள். இவைகள் இரண்டு வகையான மதங்களைக் குறிக்கின்றன. கர்த்தரால் இயக்கப்பட்டது மற்றும் மனுஷனால் உண்டாக்கப்பட்டது.

இரண்டு சகோதரர்களும் <u>கர்த்தரை நம்பினார்கள்.</u> ஆனால் அவர்களுடைய வாழக்கைக் கதைகள் மிக முக்கியமான கருத்தை நமக்குப் கற்றுக் கொடுக்கிறது.



**சாவி # 1**: **<u>கர்த்தரைப் பிரியப்படுத்த நம்மிடத்திலே விசுவாசமும் கீழ்படிதலும் வேண்டும்</u>**

**கேள்வி** : கர்த்தர் ஏன் காயீனுடைய பலியை மறுத்தார்?


பலியை மறுக்க மூலக்காரணம் இரத்தம் சிந்தப்படவில்லை. இதைக் கர்த்தர் ஏற்கெனவே ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தோட்டத்திலே வெளிப்படுத்தியிருந்தார். அல்லாமலும் காயினுடைய பலியானது சபிக்கப்பட்ட மூலாதாரத்திலிருந்து வந்தது. பூமியானது கர்த்தராலே தோட்டத்திலே சபிக்கப்பட்டிருந்தது.

எபிரெயர் 9:22 *"... இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது."*

### B. காயீனுடைய பலி மறுக்கப்பட்டது; இதினிமித்தமாக அவன் கர்த்தருடைய இரக்கத்தை மறுதலித்து முதல் கொலையைச் செய்தான்.

ஆதியாகமம் 4:6-8 *"அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது? 7 நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார். 8காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான். அவர்கள் வயல்வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான்."*

காயீன் என்ற பெயருக்கு அர்த்தம் அடிக்கிறவன் என்பது. ஏவாளுடைய வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்கிற வாக்குத்தத்தின் மூலமாக ஏவாள் ஒருவேலை காயீனுக்கு இவ்வாறாக பெயரிட்டிருக்க முடியும்; ஆனால் அவனோ தன்னுடைய சொந்த சகோதரனையே அடித்து கொன்றுப்போட்டான்.



**சாவி # 2**: **<u>கர்த்தர் நியாயத்தீர்ப்பு கூறுவதற்கு முன்பதாக எப்பொழுதும் இரக்கம் பாராட்டுகின்றார்.</u>**

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 2

**கேள்வி**: ஆதியாகமம் 4 6-8 –ல் கர்த்தர் எவ்வாறாக இரக்கம் பாராட்டினார் என்று உங்களால் பார்க்க முடியுமா?

காயீனுடைய பலியை மாற்றுவதற்கு கர்த்தர் இரக்கம் பாராட்டி அவனுக்கு ஒரு வாய்பளித்தார். *"நீ நன்மை செய்தால் உனக்கு மேன்மை இல்லையோ?"* ஆனால் காயீனோ தேவனுடைய இரக்கத்தை மறுதலித்து தற்பெருமையோடும் கீழ்படியாமலும் தன்னுடைய சகோதரனை கொலை செய்தான்.

காயீனுடைய குணாதிசயத்தைக் குறித்து புதிய ஏற்பாட்டில் சில உட்பார்வைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

1 யோவான் 3:12 *"பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்கவேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே."*

## C. காயீனுடைய அவமரியாதையான, இறுமாப்புக் கொண்ட மனப் பான்மையும் அவனுக்கு உண்டான தண்டனையையும் பார்க்கலாம்.

ஆபேல் எங்கே என்று காயீனைப் பார்த்து கர்த்தர் கேட்ட போது அவன் சுடுசொல் நிறைந்த உத்தரவைக் கொடுத்தான். கர்த்தரின் நிமித்தம் அவனுக்கு இல்லாத மரியாதையும் அன்பில்லாமையையும் இது குறிக்கிறது. தங்களுடைய வாழ்க்கையை எப்படியாக வாழவேண்டும் அல்லது கர்த்தரின் வேண்டுகோளுக்கு எப்படியாக செவி சாய்க்க வேண்டும் என்றெல்லாம் ஒருவன் கர்த்தரோடே வாக்குவாதம் பண்ணுவானேயானால் அது அவனுடைய அவமரியாதையும் அன்பில்லாமையையும் குறிக்கும்.

ஆதியாகமம் 4:9-16 *"கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்; அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான். 10 அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது. 11 இப்பொழுது உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக்கொள்ள தன் வாயைத் திறந்த இந்தப் பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய். 12 நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய் என்றார். 13 அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது. 14 இன்று என்னை இந்தத் தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்; நான் உமது சமுகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன்; என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே என்றான். 15 அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: காயீனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழு பழி சுமரும் என்று சொல்லி, காயீனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்றுபோடாதபடிக்குக் கர்த்தர் அவன்மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார். 16 அப்படியே காயீன் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு..."*

உண்மையாகவே கொலை செய்தததற்கு காயீனுக்கு மிக இலகுவான சிட்சையைக் கர்த்தர் கொடுத்தார். அவனை முற்றிலும் அழிக்காமல் அல்லது காயீன் தன்னுடைய சகோதரனுக்குக் கொடுத்த அந்த தண்டனையைக் கொடுக்காமலும் நிலையற்றவனாக அலையச் செய்தார். ஆனால் அவனுடைய உண்மையான தண்டனையை 16–ம்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 2

வசனத்தில் பார்க்கலாம். அவனுடைய தண்டனைத் தான் என்ன? காயீன் கர்த்தருடைய சமூகத்திலிருந்து வெளியேற்றப்பட்டான்.

கர்த்தருடைய தத்துவங்கள் என்றென்றைக்கும் மாறுவதில்லை. அவர் நமக்கு உன்மையான வழியை போதித்து நமக்கு இரக்கம் பாராட்டுகிறார். ஆனால் இரக்கத்தை நாம் மறுதலித்தாலோ ஒரு நாள் காயீனைப்போல கர்த்தருடைய சமூகத்திலிருந்து நாமும் விலக்கப்படுவோம்.

## II. கர்த்தரோடுகூட நடந்த மனிதர்கள்

**A. ஆதாமையும் ஏவாளையும் கர்த்தர் இன்னொரு குமாரனைக் கொண்டு ஆசீர்வதித்தார். அவன் பேர் சேத் அவன் கர்த்தருக்கு கீழ்படியவேண்டும் என்ற வாஞ்சைஉள்ளவன்.**

ஆதியாகமம் 4:25-26 *''பின்னும் ஆதாம் தன் மனைவியை அறிந்தான்; அவள் ஒரு குமாரனைப் பெற்று: காயீன் கொலைசெய்த ஆபேலுக்குப் பதிலாக, தேவன் எனக்கு வேறொரு புத்திரனைக் கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்குச் சேத் என்று பேரிட்டாள்... <u>அப்பொழுது மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்</u>.''*

**B. ஏனோக்கு**

ஆதியாகமம் 5:24 *''<u>ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில்,</u> காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்.''*

புதிய ஏற்பாட்டிலே ஏனோக்கைக் குறித்து இவ்வாறாக சொல்லப்பட்டுள்ளது.

எபிரெயர் 11:5 *''விசுவாசத்தினாலே ஏனோக்கு <u>மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்;</u> தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான்.''*

அவன் மரிக்கவில்லை ஆனால் கர்த்தரைப் பிரியப்படுத்தியதினால் அவன் எடுத்துக் கொள்ளப்பட்டான். வெப்ஸ்டர் மொழியாக்கத்தில் வேரிடம் எடுத்துச் செல்லுதல் என்றால் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுவது அல்லது ஒரு உருவத்திலிருந்து இன்னொரு உருவமாக மாற்றுவது என்று அர்த்தம்.

**C. நோவா**

ஆதியாகமம் 6:8-9 *''நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது... நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்.''*

தோட்டத்தின் வெளியே வாழ்ந்த முதல் 1500 ஆண்டுகளில் வேதாகமம் மூன்றே மனுஷர்களைக் குறித்துதான் பேசுகிறது. இம்மூவரும் கர்த்தருடன் நடந்த மனிதர்கள் சேத் ஏனோக்கு மற்றும் நோவா. ஏன் இந்த மூன்று பெயர்கள் மாத்திரம் ? இயேசுகிறிஸ்து நமக்கு ஒரு எச்சரிக்கையைக் கொடுக்கிறார்.

மத்தேயு 7:13-14 *''இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் <u>அநேகர்</u>.14 ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் <u>சிலர்</u>.''*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 2

நோவாவின் காலத்தில் மனுஷர்கள் மிகவும் துன்மார்கரும் தீமையுள்ளவர்களுமாய் இருந்தார்கள். ஆகையால் கர்த்தர் பூமியை அழித்துப்போடுவதைக் குறித்து நோவாவினிடத்தில் பேசினார்.

ஆதியாகமம் 6:5-8, 11-13 *''மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, 6 தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. 7 அப்பொழுது கர்த்தர்: நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார். 8 நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது...பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. 12 தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள். 13 அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி: மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது; நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப்போடுவேன்.''*

## III. நீதிமானின் குடும்பம் பாதுகாக்கப்பட்டது.

### A. ஒரு பேழையை உண்டாக்கும்படியாக கர்த்தர் நோவாவிடத்தில் சொன்னார். இதுதான் நோவாவினுடைய இரட்சிப்பின் திட்டமாகும்.

ஆதியாகமம் 6:14-16 *''நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு; அந்தப் பேழையிலே அறைகளை உண்டுபண்ணி, அதை உள்ளும் புறம்புமாக கீல்பூசு. 15 நீ அதைப் பண்ணவேண்டிய விதம் என்னவென்றால், பேழையின் நீளம் முந்நூறு முழமும், அதின் அகலம் ஐம்பது முழமும், அதின் உயரம் முப்பது முழமுமாய் இருக்கவேண்டும். 16 நீ பேழைக்கு ஓர் ஜன்னலை உண்டுபண்ணி, மேல்தட்டுக்கு ஒரு முழத் தாழ்த்தியிலே அதைச் செய்துமுடித்து, பேழையின் கதவை அதின் பக்கத்தில் வைத்து, கீழ் அறைகளையும், இரண்டாம் தட்டின் அறைகளையும், மூன்றாம் தட்டின் அறைகளையும் பண்ணவேண்டும்.''*

எபிரெயர் 11:7 *''விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்துத் தேவஎச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை <u>இரட்சிப்பதற்குப்</u> பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்.''*

கர்த்தர் நியாயத்தீர்ப்பு கூறுவதற்கு முன்பதாக அவருடைய இரக்கத்தின் தத்துவத்தை மறுபடியுமாக பார்க்கிறார். நோவாவின் இரட்சிப்பின் திட்டத்தை தனக்கு மாத்திரம் வைத்துக்கொள்ள வில்லை. நோவாவின் மூலம் இரக்கத்தைப் பாராட்டி கர்த்தர் ஜனங்களுக்கு அவருடைய நீயாயத்தீர்ப்பு அதாவது ஜலப் பிரளயத்திலிருந்து எப்படி தப்பவைப்பது என்பதை போதிக்கிறார்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 2

2 பேதுரு 2:5 *"பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி;"*

பேழையை கட்டுவதற்காக விசுவாசம் தேவைப்பட்டது ஏனென்றால் சரித்திரத்திலே இதற்கு முன்பதாக மழை பெய்ததே கிடையாது. ஆதியாகமம் 2:5-6

**B. வேதாகமம் முழுவதும் கர்த்தரை நம்பின மக்கள் எல்லோரும் அவருக்கு கீழ்படிந்திருந்தார்கள்.**

**கேள்வி :** நோவாவை எது இரட்சித்தது?

1. கர்த்தருடைய கிருபை முன்னெச்சரிக்கையாக நோவாவுக்கு வந்ததா?
2. அல்லது நோவா பேழையைக் கட்டினதா?

**பதில் :** 1 & 2

1. கர்த்தர் முன்னெச்சரிக்கையாக சொல்லவில்லையென்றால் அவன் மறுத்திருப்பான்.
2. அவன் பேழையைக் கட்டாவிட்டாலும் மறுத்திருப்பான்



**சாவி # 3 :** **உண்மையான நம்பிக்கை மற்றும் விசுவாசம் கீழ்படிதலின் செய்கை ஆகும்.**

இரட்சிக்கப்படுவதற்கு சிலர் எனக்கு விசுவாசம் மாத்திரம் போதும் என்று சொல்லுவார்கள். ஆனால் உண்மையான விசுவாசத்தின் அடையாளமோ கீழ்படிதலாகும் (செயல்படுகிற விசுவாசம்) முதலாவது நோவா விசுவாசித்தான் ஆனால் அதற்கு பிறகு பேழையும் கட்டினான். அதேப்போல முதலாவது நாம் கர்த்தரை விசுவாசித்து அவருக்கு கீழ்படிந்திருக்க வேண்டும்.

இரட்சிப்பைக் குறித்து வேதம் இந்தத் தத்துவத்தை கற்றுக் கொடுக்கிறது. முதலாவது கர்த்தருடைய திட்டத்தில் விசுவாசம் வைத்து அதற்கு கீழ்படிய வேண்டும். இரட்சிப்பின் திட்டத்தைக் கர்த்தர் இரக்கம் பாராட்டி அளிக்கிறார். புதிய ஏற்பாட்டின் உதாரணம்.

மாற்கு 16:16 *"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்."*

ஞானஸ்நானம் இரட்சிப்புக்கு தேவையில்லை என்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் ஞானஸ்நானமோ கீழ்படிதலான விசுவாசமாகும்.

(ஆசிரியர் குறிப்பு அப்போஸ்தலர் 2 21-ன் படி கர்த்தருடைய நாமத்தை அழைக்கிறவன் இரட்சிக்கப்படுவான் என்று கூறுகிறது. ஆகையால் கர்த்தருடைய நாமத்தை எப்படி நாம் அழைக்க வேண்டும் ? பதில் அப்போஸ்தலர் 22 16 –ன் படி கர்த்தருடைய நாமத்தை தொழுதுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று பாவத்தை கழுவ வேண்டும்.)

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 2

## C. உண்மையான விசுவாசம் கீழ்படிதல்

விசுவாசமும் கிரியையும் எப்பொழுதும் இணைந்து வேதத்தில் கூறப்பட்டுள்ள இரட்சிப்பின் திட்டத்திற்காக செயல்படும். இரட்சிக்கப்படுவதற்கு நம்புவதைப்பார்க்கிலும் சில காரியங்கள் தேவை. இப்பொழுது இந்த தத்துவத்தை ஒரு உபதேசத்தின் அடிப்படையாகக் கொள்ளுவோம். இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின் வாயிலாக வார்த்தை நிறுவப்படட்டும். (பாடம் 1, சாவி 2) விசுவாசம் மாத்திரம் முக்கியமானதா? அல்லது கீழ்படிதலோடு கூட விசுவாசம் தேவையா?

எபிரெயர் 5:9 *"தாம் பூரணரானபின்பு, <u>தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும்</u> நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,"*

யாக்கோபு 2:14-20 *"என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? 15 ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, 16 உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? 17 அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும். 18 ஒருவன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே. 19 தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுக்குகின்றன. 20 வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ?"*

யாக்கோபு 2:22-26 *"விசுவாம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. 23 அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான். 24 ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலேமாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே. 25 அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்? 26 அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும்செத்ததாயிருக்கிறது."*

யாக்கோபு 1:22 *"அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்தரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்."*

ஜலப்பிரளயம் ஆரம்பிக்கும் வரை ஜனங்கள் நோவாவைப் பார்த்து நகைத்திருப்பார்கள்.

## D. கர்த்தர் பூமியை அழிக்கிறார்

ஆதியாகமம் 7:21-23 *"அப்பொழுது மாம்சஜந்துக்களாகிய பறவைகளும், நாட்டுமிருகங்களும், காட்டுமிருகங்களும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் யாவும், எல்லா நரஜீவன்களும், பூமியின்மேல் சஞ்சரிக்கிறவைகள் யாவும் மாண்டன. 22 வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவசுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயின. 23 மனுஷர் முதல், மிருகங்கள், ஊரும்பிராணிகள்,*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 2

*ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும், பூமியின்மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்து, அவைகள் பூமியில் இராதபடிக்கு நிக்கிரகமாயின; நோவாவும் அவனோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டன.''*


கர்த்தர் பேழையின் கதவை அடைத்த மாத்திரத்திலே யாரும் பேழைக்குள் பிரவேசிக்க முடியவில்லை ஒருவரும் உங்களை தவறாக வழிநடத்த விடாதீர்கள். ஒரு நாள் நாம் வாழுகின்ற இந்த காலகட்டமானது கிருபையின் காலம் நியாயத்தீர்ப்பில் முடிவடையும். கர்த்தராலே கதவு அடைக்கப்படும் அதற்குப் பிறகு இரட்சிப்பு பெறுவதற்கு மிகவும் தாமதமாகிவிடும்.

## E. ஜலப்பிரளயத்திற்குப் பிறகு நோவாவுடன் கர்த்தர் செய்த உடன்படிக்கை (ஒப்பந்தம்)

ஆதியாகமம் 9:12-17 *''அன்றியும் தேவன்: எனக்கும் உங்களுக்கும், உங்களிடத்தில் இருக்கும் சகல ஜீவஜந்துக்களுக்கும், நித்திய தலைமுறைகளுக்கென்று நான் செய்கிற உடன்படிக்கையின் அடையாளமாக: 13 நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். 14 நான் பூமிக்கு மேலாய் மேகத்தை வருவிக்கும்போது, அந்த வில் மேகத்தில் தோன்றும். 15 அப்பொழுது எல்லா மாம்சஜீவன்களையும் அழிக்க இனி ஜலமானது பிரளயமாய்ப் பெருகாதபடிக்கு எனக்கும் உங்களுக்கும் மாம்சமான சகல ஜீவஜந்துக்களுக்கும் உண்டான என் உடன்படிக்கையை நினைவுகூருவேன். 16 அந்த வில் மேகத்தில் தோன்றும்போது, தேவனுக்கும் பூமியின்மேலுள்ள சகலவித மாம்சஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையை நான் நினைவுகூரும்படிக்கு அதை நோக்கிப் பார்ப்பேன். 17 இது எனக்கும், பூமியின்மேலுள்ள மாம்சமான யாவுக்கும், நான் ஏற்படுத்தின உடன்படிக்கையின் அடையாளம் என்று நோவாவோடே சொன்னார்.''*

**கேள்வி :** வானவில்லை கர்த்தர் எப்பொழுது சிருஷ்டித்தார் எதற்காக அதைப் படைத்தார் ?

அழிவுக்குப்பின்பு கர்த்தர் வானவில்லை சிருஷ்டித்தார். நோவாவோடுகூட செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாக கர்த்தர் இதை உண்டாக்கினார். பூமியை மறுபடியுமாக ஜலத்தினால் அழிப்பதில்லை என்று கர்த்தர் வாக்குக்கொடுத்து அதினுடைய வாக்குத்தத்தத்தின் அடையாளமாக வானவில்லை கொடுத்தார். வானத்திலே வானவில் ஒவ்வொரு முறையும் தோன்றும்போது அது கர்த்தர் நோவாவோடு செய்த உடன்படிக்கையின் அடையாளமாகும்.



**சாவி # 4 :** **ஒவ்வொருமுறையும் கர்த்தர் மனுஷனோடு கூட உடன்படிக்கை செய்யும் போது ஒரு வெளிப்புறமான அடையாளம் தோன்றும்.**


உடன்படிக்கைகளிலே மனுஷனுக்கும் கர்த்தருக்குமிடையே நடந்த ஒப்பந்தத்தின் அடையாளங்கள் எப்பொழுதுமே இருக்கும். இந்த அடையாளங்கள் அந்த உடன்படிக்கை அல்லது ஒப்பந்தத்தை முத்திரைப்போடுகின்றன. பாடங்கள் 3,7, 8-ல் கர்த்தரோடுகூட நாம் செய்த உடன்படிக்கைகளின் அடையாளங்களைப் பார்ப்போம். ஆகையால் இந்தப் பாடங்களை விட்டுவிடாதீர்கள் !

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 2

நோவாவுடைய குடும்பத்தாருக்கு கா்த்தா் கொடுத்த கட்டளை நீங்கள் பலுகி பெருகி புமியை நிரப்புங்கள் என்பது (ஆதியாகமம் 9 1) கா்த்தருக்குக் கீழ்படிகிற ஜனங்கள் எப்பொழுதுமே சம்பூரனமான ஆசீா்வாாத்தினாலே ஆசீா்வதிக்கப்படுவாாா்கள் !!!

## IV. மனுகுலத்தின் நியாயத்தீர்ப்பு



**சாவி # 5 :** __வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு காலக்கட்டமும் நியாயத்தீர்ப்பில் முடிவடைகிறது__

ஒவ்வொரு புதிய உடன்படிக்கையும் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் தான் இயங்குகிறது. அந்தக் காலக்கட்டத்தில் கா்த்தா் தன்னுடைய இரக்கத்தைப் பாராட்டி இரட்சிப்பின் திட்டத்தை கொடுக்கிறாா் இதை மனுஷன் விசுவாசித்து கீழ்படிய வேண்டும். ஏனென்றால் எல்லாக் காலக்கட்டமும் நியாயத்தீா்ப்பில் முடிவடையும்

2 பேதுரு 3:3-10 *''முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவெனில்: __கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து__, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, 4 அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின்தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள். 5 பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும், 6 அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள். 7 இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது...9 தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். 10 கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.''*

நோவாவுடைய வரலாறு வேதாகமத்திலே நமக்கு ஒரு எச்சாிப்பாக கொடுக்கப்பட்டுள்ளது. ஜனங்கள் நகைத்து பாவத்திலே இருப்பாா்களேயானால் கா்த்தா் அவா் சொன்னதை அப்படியே செய்வாா் என்ற அடையாளமாக இந்த வரலாறு உள்ளது.

இயேசுகிறிஸ்து தாம் திரும்பவரும்போது நோவாவின் காலத்திலே இருந்ததுபோலவே ஸ்திாிகளும் புருஷா்களும் கொடியா்களாக இருப்பாா்கள் என்று சொன்னாா்.

மத்தேயு 24:37-39 *''நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். 38 எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண்கொடுத்தும், 39*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 2

*ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்."* கர்த்தரோடுகூட உடன்படிக்கையில் இல்லாதவர்கள் நாம் வாழந்துக்கொண்டிருக்கும் இந்த கிருபையின் காலத்தின் முடிவு எப்பொழுது என்று அறியாமலே இருப்பார்கள்.

## V. தேசங்களின் மற்றும் பாஷைகளின் ஆரம்பம்

### A. பலுகி பெருகி பூமியை நிரப்புங்கள் என்று கர்த்தர் நோவாவினிடத்திலே கட்டளை கொடுத்தும்கூட மனுஷர்கள் இந்த திட்டத்தை மாற்ற முயன்றனர்.

ஆதியாகமம் 9:1 கர்த்தர் நோவாவைப் பார்த்து பூமியை நிரப்புங்கள் என்று சொன்னதற்கு அர்த்தம் மனுகுலம் பெருகி சிதறடிக்கவேண்டும் என்பது. ஆனால் அந்தக்காலத்தின் ஸ்திரிகளும் புருஷர்களும் மறுபடியுமாக விரோதமுள்ள குணமுடையவர்களாக கர்த்தருக்கு எதிர்மறையாகக் காரியங்கள் செய்தார்கள்.

ஆதியாகமம் 11:2-6 *"ஜனங்கள் கிழக்கேயிருந்து பிரயாணம்பண்ணுகையில், சிநெயார் தேசத்திலே சமபூமியைக்கண்டு, அங்கே குடியிருந்தார்கள். 3 அப்பொழுது அவர்கள்: நாம் செங்கல் அறுத்து, அதை நன்றாய்ச் சுடுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்; கல்லுக்குப் பதிலாகச் செங்கல்லும், சாந்துக்குப் பதிலாக நிலக்கீலும் அவர்களுக்கு இருந்தது. 4 பின்னும் அவர்கள்: <u>நாம் பூமியின்மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி,</u> நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். 5 மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்குக் கர்த்தர் இறங்கினார். 6 அப்பொழுது கர்த்தர்: இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது; அவர்கள் இதைச் செய்யத்தொடங்கினார்கள்; இப்பொழுதும் தாங்கள்செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள்."*

நூற்றுமுப்பது ஆண்டுகளுக்கு முன்பதாகத்தான் கர்த்தர் பூமியை ஜலத்தினாலே அழித்தார். ஆனால் ஜனங்கள் பரலோகத்திற்கு தங்களுடைய சொந்த வழிகளை கட்டிக் கொண்டார்கள். அவர்கள் என்னச் சொன்னார்கள் என்று கவனித்துப்பாருங்கள். "வாருங்கள் நமக்கு ஒரு பெயரை நாம் உண்டாக்குவோம்"!

**கேள்வி :** பாவத்தின் மூன்று தத்துவங்களிலே இது எது?


ஜீவனத்தின் பெருமை, 1 யோவான் 2: 16

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக பாவம் அப்படியேதான் இருக்கிறது. கர்த்தருடைய திட்டத்தை மாற்றி தங்களுக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதைத்தான் ஜனங்கள் செய்யவேண்டுமென்று நினைக்கிறார்கள்.

நீதிமொழிகள் 14:12 *"மனுஷனுக்குத் செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்."*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 2



சாவி # 6 : <u>நம்முடைய சொந்தவழியிலே நாம் வாழக்கூடாது; நாம் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்றால் கர்த்தருடைய வழியிலே வாழ வேண்டும்.</u>

கர்த்தருடைய வழியிலே வாழ்ந்தால் சிருஷ்டிப்பின் நோக்கத்தை நாம் பூரணப்படுத்துவோம்

**வெளிப்படுத்தல் 4:11** *"கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்."*

## B. கர்த்தராலே அறிமுகப்படுத்தப்பட்ட வெவ்வேறு பாஷைகள்

ஆதியாகமம் 11:7-9 *"நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுகிறதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார். 8 அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார்; அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள். 9 பூமியெங்கும் வழங்கின பாஷையைக் கர்த்தர் அவ்விடத்தில் தாறுமாறாக்கினபடியால், அதின்பேர் பாபேல் என்னப்பட்டது; கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார்."*

அவர்கள் கீழ்படியவில்லை ஆனாலும் கர்த்தருடைய கட்டளை நிறைவேற்றப்பட்டது. புதிய பாஷைகளைக் கொண்டு கர்த்தர் ஜனங்களை சிதறடித்து தேசங்களை உருவாக்கினார். அவர்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பாமல் தங்களை சிதறடிக்காமல் இருந்தபடியால் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாதபடிக்கு கர்த்தர் இதை செய்தார். இதுதான் உலகத்திலுள்ள தேசங்களின் ஆரம்பம்.

வெவ்வேறு பாஷகள் அல்லது நாவுகளின் மூலமாக கர்த்தர் இந்த உலகத்தைப் பிரித்தார். ஆனால் தன்னுடைய சபையாகிய சரீரத்தை இணைக்கவோ வெவ்வேறு நாவுகளை கர்த்தர் பயன்படுத்துகிறார் என்பது சுவாரசியமான விஷயமாகும். இதை இன்னும் ஆழமாக பாடம் 8-ல் ஆராய்வோம்.

பாபேல் கோபுரத்திற்கு என்ன ஆனது?
**பாடம் 3-லே** தெரிந்து கொள்ளலாம்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 3

2000 ஆண்டுகளின் சரித்திரத்தையும் சம்பவங்களையும் ஆதியாகமம் 1-லிருந்து 11 வரையில் எழுதப்பட்டுள்ளது. ஆதியாகமம் 15-50 முன்னூறு(300) வருட சரித்திரத்தையும் ஜனங்கள் மேலும் ஒரு உட்பார்வை அளிக்கிறது. கர்த்தர் பிரதானமாக ஒரு குடும்பத்தாரோடுகூட கைக்கொள்ளும் நடவடிக்கையைக் குறித்து இந்த அதிகாரங்கள் கூறுகின்றுத.

பாபேல் கோபுரத்தைக் குறித்ததானப் பாடம் கடைசியாக முடிவடைந்தது. கர்த்தர் நோவாவைப் பார்த்து பலுகி பெருகி பூமியெங்கும் நிரப்புங்கள் என்று சொன்னபோதும் ஜனங்கள் அகங்காரம் நிறைந்து கர்ததருக்கு விரோதமாக எழும்பினர். புதிய பாஷைகளை சிருஷ்டித்து மனுஷனைக் கர்ததர் பூமியெங்கும் சிதறடித்தார் சேம் காம் யாபேத்தின் குடும்பங்கள் பிரிந்து தேசங்கள் உருவாகத் தொடங்கின.

இஸ்ரவேலின் தேசம் மற்றும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் சேமின் வம்சத்தை சேர்ந்தவர்கள். ஐரோப்பா மற்றும் ஸ்லாவிக் தேசங்கள் யர்பேத்தின் வம்சாவழிகளாகும்.. பெலிஸ்தியர் கானானியர் மற்றும் ஆப்பிரிக்காவின் தேசங்கள் யாவும் காமின் வம்சாவழிகள்.

சேமின் வம்சத்திலிருந்து ஆபிராம் ஆகிய ஆபிரகாம் தோன்றி கர்த்தராலே வழிநடத்தப்பட்டு ஒரு குடும்பத்தை துவக்கி பிறகு இஸ்ரவேல் என்ற தேசத்தையும் உருவாக்கினார். அரபு தேசங்களையும் இஸ்ரவேல்தேசத்தையும் ஆபிரகாம் துவக்கிவைத்தார் இந்தக் காலக்கட்டத்தில் கர்த்தர் முழு உலகத்தோடுகூட தொடர்பு கொள்வதை நிறுத்திவிட்டு ஆபிரகாமின் சந்ததிகளாகிய இஸ்ரவேல் மக்களோடுகூட மட்டும் தொடர்பு வைத்தார் ஒரு உடன்படிக்கை உறவிலே ஜனங்கள் எப்படியாக ஆசீர்வதிக்கப் பட்டார் என்பதற்கு மாதிரியாக இந்த ஜனங்கள் இருந்தார்கள் இந்தக் காலக்கட்டம் கோத்திரப்பிதாக்களின் காலக்கட்டமாகும்..

## I. கோத்திரப் பிதாக்களின் காலம்

### A. கோத்திரப்பிதா என்றால் ஒரு கோத்திரத்திற்குத் தலைவன் அல்லது ஆண் குடும்பம் என்று அர்த்தம்.

ஆபிரகாம் ஈசாக்கு மற்றும் யாக்கோபு இஸ்ரவேல் தேசத்தின் தலைவர்களாகவும் நிறுபர்களாகவும் கருதப்பட்டார்கள். விசுவாசத்தின் பிதா என்று ஆபிரகாம் அழைக்கப்பட்டார்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 3

**ஆதியாகமம் 12:1-3** *''கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. 2 **நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி**, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். 3 உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்."*

விசுவாசத்தின் பிதா என்று அழைக்கப்பட்டாலும் ஆபிரகாம் தானாகவே விசுவாசமாக இல்லை. கர்த்தரோடுகூட நடக்கிற முதல்கட்டத்திலே எல்லோரும் போராடுகிறதுபோல ஆபிரகாமும் விசுவாசத்தோடுகூட போராடினார்.

**ஆதியாகமம் 12:11-13** *"அவன் எகிப்துக்குச் சமீபமாய் வந்தபோது, தன் மனைவி சாராயைப் பார்த்து: நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ என்று அறிவேன். 12 எகிப்தியர் உன்னைக் காணும்போது, இவள் அவனுடைய மனைவி என்று சொல்லி, என்னைக் கொன்றுபோட்டு, உன்னை உயிரோடே வைப்பார்கள். 13 **ஆகையால், உன்னிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னாலே என் உயிர் பிழைக்கும்படிக்கும், நீ உன்னை என் சகோதரி என்று சொல் என்றான்**."*

தேவனுடைய வல்லமையினாலே அல்ல சாராய் உண்மையை மாற்றி சொன்னதினாலே அவன் பிழைப்பான் என்று ஆபிரகாம் நினைத்தான்.

ஒரு வித்தியாசமான மனிதனாக அப்போஸ்தலனாகியப் பவுல் தன் பயனத்தை தொடங்கி கர்த்தர் தன்னை முழுவதுமாக மாற்ற அனுமதித்தப் பிறகு ஒரு விசேஷித்த மனிதனாக மாறினான்.

**அப்போஸ்தலர் 8:3** *''சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான்."*

**அப்போஸ்தலர் 9:1-2** *"சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலைசெய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப்போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்."*

"சிலரைப்போல நான் கர்த்தருக்காக வாழவே முடியாது நான் என்ன தீய காரியங்கள் செய்துள்ளேன் என்று உனக்குத் தெரியாது எனக்கு கர்த்தரைக்குறித்தோ வேதத்தைக் குறித்தோ ஒன்றுமே தெரியாது" என்றெல்லாம் சந்தேகத்தினாலே நாம் சொல்லியிருக்கலாம். பூரணரைக் கர்த்தர் தேடவில்லை. அவராலே பயன்படுத்தக்கூடிய ஆட்களைத்தான் கர்த்தர் தேடுகிறார்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 3

**B. யூதர்களைத் தனக்காகத் தெரிந்து கொண்ட தேசமாகவும் ஆபிரகாமை தனக்கொன்று (கர்த்தர்) தெரிந்துக் கொண்டது எதற்கு ?**


**1. அவன் தேவனுக்கு கீழ்படிந்தான!** தன் தேசத்தை விட்டு வெளியே வா என்று கர்த்தர் சொன்ன மாத்திரத்திலே ஆபிரகாம் உடனடியாக கீழ்படிந்தான். ஆபிரகாம் கீழ்படிந்ததினால் கர்த்தராலே தேர்ந்தெடுக்கப்பட்டான். கர்த்தரைப் பிரியப்படுத்துவதற்கான மிக முக்கியமான தேவை கீழ்படிதல்.

**ஆதியாகமம் 12:4** *"__கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே__ அவன் புறப்பட்டுப் போனான்; லோத்தும் அவனோடேகூடப் போனான். ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்பட்டபோது, எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான்."*

**2. அவன் தேவனை விசுவாசித்தான் !** ஆபிரகாம் தேவன் மேலே விசுவாசமாக இருந்தான் என்று வேதம் சொல்லுகிறது.

**ஆதியாகமம் 15:6** *"அவன் __கர்த்தரை விசுவாசித்தான்,__ அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்."*

நம்புவது என்ற எபிரெய வார்த்தையின் மொழியாக்கம் "ஒருவருக்கொருவர் முழுமையாக ஒப்புக்கொடுப்பது என்பது." கர்த்தர் மேலே முழு விசுவாசம் இருந்ததினால் ஆபிரகாம் தன்னையே கர்த்தருக்கு ஒப்பு கொடுத்தான்.


**சாவி # 1: __விசுவாசித்துக் கீழ்படிதல் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும்.__**

சவாரசியமான குறிப்பு: 2000 ஆண்டு சரித்திரத்தை ஆதியாகமம் முதல் 11 அதிகாரங்கள் கூறுகின்றன. ஆனால் அடுத்து வருகிற 14 அதிகாரங்களே ஆபிரகாமை குறித்ததாகும். ஆபிரகாமின் வாழ்க்கையிலிருந்து அநேக முக்கியமான காரியங்களை நாம் கற்றுக் கொள்ள முடியும் என்பதற்காகத்தான் இத்தனை அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**C. அரபு தேசங்களின் துவக்கம். கர்த்தர் ஆபிரகாமுக்கு அநேக சந்ததிகளை வாக்கு கொடுக்கிறார்.**

**ஆதியாகமம் 15:5** *"அவர் அவனை வெளியே அழைத்து: __நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி;__ பின்பு அவனை நோக்கி: **உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்.**"*

ஆனால் அவர்களுக்கோ பிள்ளைகள் இல்லை! ஆபிரகாமும் சாராளும் பொறுமையை இழந்து காலக்கட்டத்துக்கு முன்னாகவே வாக்குத்தத்தத்தை வாஞ்சித்தார்கள். ஆகையால்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 3

காரியங்களை தங்களுடைய சொந்த கைகளிலே எடுத்துக் கொண்டார்கள். ஆபிரகாமுக்கும் சாராளின் வேலைக்காரியாகிய ஆகாருக்கும் ஒரு குழந்தைப் பிறந்தது.

**ஆதியாகமம் 16:1-4** *''ஆபிராமுடைய மனைவியாகிய சாராய்க்குப் பிள்ளையில்லாதிருந்தது. எகிப்து தேசத்தாளாகிய ஆகார் என்னும் பேர் கொண்ட ஒரு அடிமைப் பெண் அவளுக்கு இருந்தாள். 2 சாராய் ஆபிராமை நோக்கி: நான் பிள்ளைபெறாதபடிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்; என் அடிமைப் பெண்ணோடே சேரும், ஒருவேளை அவளால் என் வீடு கட்டப்படும் என்றாள். சாராயின் வார்த்தைக்கு ஆபிராம் செவிகொடுத்தான். 3 ஆபிராம் கானான் தேசத்தில் பத்து வருஷம் குடியிருந்தபின்பு, ஆபிராமின் மனைவியாகிய சாராய் எகிப்து தேசத்தாளான தன் அடிமைப்பெண்ணாகிய ஆகாரை அழைத்து, அவளைத் தன் புருஷனாகிய ஆபிராமுக்கு மறுமனையாட்டியாகக் கொடுத்தாள். 4 அவன் ஆகாரோடே சேர்ந்தபோது, அவள் கர்ப்பந்தரித்தாள்; அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டபோது, தன் நாச்சியாரை அற்பமாக எண்ணினாள்"*

**ஆதியாகமம் 16:15-16** *"ஆகார் ஆபிராமுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; ஆபிராம் ஆகார் பெற்ற தன் குமாரனுக்கு இஸ்மவேல் என்று பேரிட்டான். 16 ஆகார் ஆபிராமுக்கு இஸ்மவேலைப் பெற்றபோது, **ஆபிராம் எண்பத்தாறு** வயதாயிருந்தான்."*

இது சாராளின் யோசனையாகும். ஆனால் அதற்கு பிறகு ஆகாரின் மேல் பொறாமைக்கொண்டு தன்னுடைய வீட்டிலிருந்து வெளியே துரத்திவிட்டாள்.

அரபு நாடுகளின் தகப்பனாக இஸ்மவேல் தோன்றினான். இஸ்மவேலின் போராட்டம்தான் இன்று மத்திய கிழக்கிலே பெரும் தர்க்கத்திற்குரிய காரியமாக இருக்கிறது. நவீனகால அரபுகள் ஆபிரகாமின் சந்ததிகளாக இருந்தாலும் கர்த்தர் வாக்குத்தத்தம் செய்த தேசத்தை இஸ்மவேலுக்குக் அல்ல ஈசாக்கிற்குத் தான்.

### D. ஆபிரகாமோடுகூட கர்த்தரின் உடன்படிக்கை

ஆபிரகாம் ஒரு பெரிதான தவறு செய்தும்கூட கர்த்தர் அவனை இன்னும் நேசித்து ஒரு மாற்ற முடியாத உடன்படிக்கையை உருவாக்கினார்.

**ஆதியாகமம் 17:4-8** *"நான் உன்னோடே பண்ணுகிற என் **உடன்படிக்கை** என்னவென்றால், நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய். 5 இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல், நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினபடியால், உன் பேர் ஆபிரகாம் என்னப்படும். 6 உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப்பண்ணி, உன்னிலே ஜாதிகளை உண்டாக்குவேன்; உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள். 7 **உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்.** 8 நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார்."*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 3

கர்த்தருடைய உடன்படிக்கையின் அடையாளம் விருத்தசேதனம் ஆகும். கேள்வி இல்லாமல் விருத்தசேதனத்தைக் குறித்ததானக் கட்டளையை கீழ்படிந்தாகவேண்டியிருந்தது கீழ்படியாதவர்களுக்கு உடன்படிக்கை இல்லை. வேதனை என்ற ஒரு தியாகத்தை ஆபிரகாம் கீழ்படிதல் கொண்டுவந்தது. சில நேரங்களிலே கர்த்தர் சொல்லுகிற காரியங்கள் எளிதாக இருக்காது ஆனால் அவைகள் வாக்குத்தத்தத்தையும் ஆசீர்வாதத்தையும் கொண்டுவரும்.

**ஆதியாகமம் 17:9-14** *''பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: இப்பொழுது நீயும், உனக்குப் பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததியும், என் உடன்படிக்கையைக் கைக்கொள்ளுங்கள்.* ***எனக்கும் உங்களுக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கை*** *என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்;உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம்பண்ணக்கடவீர்கள்; அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்.உங்களில் தலைமுறை தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் எட்டாம் நாளிலே விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும்; வீட்டிலே பிறந்த பிள்ளையும் உன் வித்தல்லாத அந்நியனிடத்தில் பணத்திற்குக் கொள்ளப்பட்ட எந்தப் பிள்ளையும், அப்படியே விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும். உன் வீட்டிலே பிறந்த பிள்ளையும், உன் பணத்திற்குக் கொள்ளப்பட்டவனும், விருத்தசேதனம் பண்ணப்படவேண்டியது அவசியம்; இப்படி என் உடன்படிக்கை உங்கள் மாம்சத்திலே நித்திய உடன்படிக்கையாக இருக்கக்கடவது.நுனித்தோலின்* ***மாம்சம் விருத்தசேதனம்பண்ணப்படாதிருக்கிற*** *நுனித்தோலுள்ள ஆண்பிள்ளையிருந்தால், அந்த ஆத்துமா என் உடன்படிக்கையை மீறினபடியால்,* ***தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான்*** *என்றார்."*

கர்த்தருடைய உடன்படிக்கை மீண்டுமாக ஈசாக்கோடு உருவாக்கப்பட்டது

**ஆதியாகமம் 17:15-24** *"பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: உன் மனைவி சாராயை இனி சாராய் என்று அழையாதிருப்பாயாக; சாராள் என்பது அவளுக்குப் பேராயிருக்கும்.16 நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்; அவள் ஜாதிகளுக்குத் தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன் என்றார்.17 அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து: நூறுவயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ? 18 என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டு,இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக! என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினான்.19 அப்பொழுது தேவன்: உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு* ***ஈசாக்கு*** *என்று பேரிடுவாயாக;* ***என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்****. 20 இஸ்மவேலுக்காகவும்...... நான் அவனை ஆசீர்வதித்து, அவனை மிகவும் அதிகமாகப் பலுகவும் பெருகவும் பண்ணுவேன்; அவன் பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவான்; அவனைப் பெரிய ஜாதியாக்குவேன்.21 வருகிற வருஷத்தில் குறித்தகாலத்திலே சாராள் உனக்குப் பெறப்போகிற* ***ஈசாக்கோடே நான் என் உடன்படிக்கையை உண்டாக்குவேன் என்றார்...*** *23 அப்பொழுது*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 3

*ஆபிரகாம் தன் குமாரனாகிய இஸ்மவேலையும், தன் வீட்டிலே பிறந்த யாவரையும், தான் பணத்திற்குக் கொண்ட அனைவருமாகிய தன் வீட்டிலுள்ள ஆண்பிள்ளைகள் எல்லாரையும் சேர்த்து, தேவன் தனக்குச் சொன்னபடி, அவர்கள் நுனித்தோலின் மாம்சத்தை அந்நாளிலேதானே விருத்தசேதனம் பண்ணினான். 24 ஆபிரகாமின் நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படும்போது, அவன் **தொண்ணூற்றொன்பது வயதாயிருந்தான்.**"*

விருத்தசேதனம் செய்யபட்டபோது ஆபிரகாமுக்கு 99 வயதும் இஸ்மவேலுக்கு 13 வயதும் ஆயிற்று.

**சாவி # 2:** <u>**விருத்தசேதனம் நம் இரட்சிப்பில் கூட உண்டு!**</u>

புதிய ஏற்பாட்டு சபைகளிலும்கூட விருத்தசேதனம் செய்யப் படுகின்றது. ஆனால் அது கரங்களாலோ கத்தியினாலோ அல்ல இருதயத்தின் விருத்தசேதனமாகிய ஒரு ஆவிக்குரிய விருத்தசேதனமாகும்.

**ரோமர் 2:28-29** *''ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. 29 உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி **இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே** விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது."*

**கொலே 2:11-12** *"அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், **கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை** அவருக்குள் பெற்றீர்கள். 12 **ஞானஸ்நானத்திலே** அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்."*

**ரோமர் 6:4** *"மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, **அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்."***

**கலாத்தியர் 3:27-29** *"ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக, **ஞானஸ்நானம்** பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் **கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே**. 28 யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். 29 **நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள்.**"*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 3

**கேள்வி:** நம்முடைய இரட்சிப்பிலே விருத்தசேதனம் எங்கே நடைபெறுகிறது ?

தண்ணீரினாலே கொடுக்கப்படுகிற ஞானஸ்நானத்தில்.

பாவம் நிறைந்த பழைய மனிதனை அடக்கம் பண்ணுவது அல்லது துண்டிப்பதுதான் தண்ணீரினாலே கொடுக்கப்படுகின்ற ஞானஸ்நானம். ஆவிக்குரிய விருத்தசேதனம் நடைபெற்று ஒரு புது உடன்படிக்கைகுள் பிரவேசிக்க வைப்பதற்கு ஞானஸ்நானம் அத்தியாவசியமாகும். ஆபிரகாமுக்கு கொடுத்த அதே வாக்குத்தத்தங்களை இவ்வழியாக நாமும் சுதந்தரித்துக் கொள்ள முடியும் நாம் ஞானஸ்நானம் பெறும்போது ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்ளுகிறோம்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் ஆபிரகாம் பிரவேசித்ததுடன் தன்னுடைய அண்ணன் மகனாகிய லோத்தும் மிகுந்த பொருட்களோடும் நகர்ந்து சென்று உலகத்திலேயே மிக அதிகமான பாவம் நிறைந்த தேசத்தில் வசித்தான். கர்த்தர் இந்த தேசத்தை அதினுடைய பாவத்தினிமித்தம் கர்த்தர் அக்கினியினாலே அழித்துப்போட்டார் ஆனால் அழிவிற்கு முன் கர்த்தர் ஆபிரகாமை சந்தித்து வருகின்ற அழிவைக்குறித்து பேசினார்.

## E. சோதோம் கொமோராவின் அழிவு

**ஆதியாகமம் 18:1-2** "*பின்பு, கர்த்தர் மம்ரேயின் சமபூமியிலே அவனுக்குத் தரிசனமானார். அவன் பகலின் உஷ்ணவேளையில் கூடாரவாசலிலே உட்கார்ந்திருந்து,தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, மூன்று புருஷர் அவனுக்கு எதிரே நின்றார்கள்; அவர்களைக் கண்டவுடனே, அவன் கூடாரவாசலிலிருந்து அவர்களுக்கு எதிர் கொண்டு ஓடித் தரை மட்டும் குனிந்து;*"

இந்த இரண்டு பட்டணங்களை அழிக்க போகிறேன் என்று கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னார். இந்த மூன்று புருஷர்களிலே ஒருவர் கர்த்தருடைய பிரகடனமாகவும் மற்ற இருவர் தேவத்தூதர்களாகவும் இருந்தார்கள்.

**ஆதியாகமம் 18:16-21** "*பின்பு <u>அந்தப் புருஷர் எழுந்து அவ்விடம் விட்டு, சோதோமை நோக்கிப் போனார்கள்</u>; ஆபிரகாமும் அவர்களோடே கூடப்போய் வழிவிட்டனுப்பினான். 17 அப்பொழுது கர்த்தர்: ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவதினாலும், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும்,* ***நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?*** *கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார். 20 பின்பு கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும், 21 நான் இறங்கிப்போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன் என்றார்.*"


# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 3

நீதிமான்களின் நிமித்தம் இந்த பட்டணங்களை அழிக்கவேண்டாம் என்று ஆபிரகாம் கர்த்தரோடுகூட மன்றாடினான் 10 நீதிமான்கள் இருந்தார்களேயானால் பட்டணங்களை அழிக்கமாட்டேன் என்று ஒத்துக் கொண்டார். கர்த்தருக்கு கீழ்படிந்து உடன்படிக்கை உறவிலே வாழ்கிற மக்களின் வல்லமையை இது வெளிப்டுத்துகின்றது.

**ஆதியாகமம் 18:32** *"அப்பொழுது அவன்: ஆண்டவருக்குக் கோபம் வராதிருப்பதாக;* ***நான் இன்னும் இந்த ஒருவிசைமாத்திரம் பேசுகிறேன்;*** *பத்து நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்:* ***பத்து நீதிமான்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை*** *என்றார்."*

பத்து நீதிமான்கள் காணப்படவில்லை ஆனாலும் ஆபிரகாமின் அண்ணன் மகனாகிய லோத்துவின் குடும்பத்தாரை தேவத்தூதர்களை அனுப்பி கர்த்தர் விடுவித்தார் மறுபடியுமாக இது உடன்படிக்கையின் வல்லமையை வெளிப்படுத்துகிறது. கர்த்தரோடுகூட உடன்படிக்கையில் இருக்கின்ற ஒரு மனுஷன் தன் குடும்பத்திற்காக கர்த்தரை நோக்கி ஜெபித்தால் கர்த்தர் அவர்களை வழிநடத்தி பாதுகாப்பார்.



**சாவி # 3: கர்த்தருடைய உடன்படிக்கைக்கு கீழ்படிந்தவர்கள் அவருடைய பாதுகாப்பு மற்றும் ஆசீர்வாதத்தையும் பெறுவார்கள். (ஆதியாகமம் 19:29 ஆசிரியர் பார்க்கவும்)**

சோதோம் மற்றும் கொமோராவின் பாவத்தின் ஆழத்தை கீழ்குறித்த வசனங்கள் வெளிபடுத்துகின்றது

**ஆதியாகமம் 19:1, 4-16, 29** *"அந்த* ***இரண்டு தூதரும்*** *சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். அவர்களைக் கண்டு, லோத்து எழுந்து எதிர்கொண்டு தரைமட்டும் குனிந்து:அவர்கள் படுக்கும் முன்னே, சோதோம் பட்டணத்து மனிதராகிய வாலிபர்முதல் கிழவர்மட்டுமுள்ள* ***ஜனங்கள் அனைவரும் நானாதிசைகளிலுமிருந்து வந்து****, 5 வீட்டைச் சூழ்ந்துகொண்டுலோத்தைக் கூப்பிட்டு: இந்த இராத்திரி உன்னிடத்தில் வந்த மனுஷர் எங்கே?* ***நாங்கள் அவர்களை அறியும்படிக்கு அவர்களை எங்களிடத்தில் வெளியே கொண்டு வா என்றார்கள்****. 6 அப்பொழுது லோத்து வாசலுக்கு வெளியே வந்து, தனக்குப் பின்னாலே கதவைப் பூட்டி, 7 அவர்களிடத்தில் போய்:* ***சகோதரரே,*** *இந்த அக்கிரமம் செய்ய வேண்டாம்.8 இதோ, புருஷரை அறியாத இரண்டு குமாரத்திகள் எனக்கு உண்டு; அவர்களை உங்களிடத்திற்கு வெளியே கொண்டுவருகிறேன், அவர்களுக்கு உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்; இந்தப்புருஷர் என் கூரையின் நிழலிலே வந்தபடியால், இவர்களுக்கு மாத்திரம் ஒன்றும் செய்யவேண்டாம் என்றான். 9 அதற்கு அவர்கள்: அப்பாலே போ; பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது? இப்பொழுது அவர்களுக்குச் செய்வதைப்பார்க்கிலும் உனக்கு அதிக பொல்லாப்புச் செய்வோம் என்று சொல்லி, லோத்து என்பவனை மிகவும் நெருக்கிக்* ***கதவை உடைக்கக் கிட்டினார்கள்****. 10 அப்பொழுது அந்தப் புருஷர்கள் தங்கள் கைகளை வெளியே நீட்டி, லோத்தைத் தங்களண்டைக்கு வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு, கதவைப் பூட்டி,11 தெருவாசலிலிருந்த சிறியோரும் பெரியோருமாகிய மனிதருக்குக்* ***குருட்டாட்டம் பிடிக்கப்பண்ணினார்கள்****; அப்பொழுது அவர்கள் வாசலைத் தேடித்தேடி அலுத்துப்போனார்கள். 12 பின்பு அந்தப் புருஷர்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 3

*லோத்தை நோக்கி: இவ்விடத்தில் இன்னும் உனக்கு யார் இருக்கிறார்கள்? மருமகனாவது, உன் குமாரராவது, உன் குமாரத்திகளாவது, பட்டணத்தில் உனக்குரிய எவர்களாவது இருந்தால், அவர்களை இந்த ஸ்தலத்திலிருந்து வெளியே அழைத்துக்கொண்டு போ.13 நாங்கள் **இந்த ஸ்தலத்தை அழிக்கப்போகிறோம்**; இவர்கள் கூக்குரல் கர்த்தருடைய சமுகத்தில் பெரிதாயிருக்கிறது; இதை அழிக்கக் கர்த்தர் எங்களை அனுப்பினார் என்றார்கள். 14 அப்பொழுது லோத்து புறப்பட்டு, தன் குமாரத்திகளை விவாகம்பண்ணப்போகிற தன் மருமக்கள்மாரோடே பேசி: நீங்கள் எழுந்து இந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்படுங்கள்; கர்த்தர் இந்தப் பட்டணத்தை அழிக்கப் போகிறார் என்றான்; அவனுடைய மருமக்கள்மாரின் பார்வைக்கு அவன் பரியாசம்பண்ணுகிறதாகக் கண்டது. 15 கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக்கொண்டுபோ என்று சொல்லி, அவனைத் துரிதப்படுத்தினார்கள்.அவன் **தாமதித்துக்கொண்டிருக்கும்போது**, கர்த்தர் **அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே**... அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள்...29 தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும்போது, தேவன் ஆபிரகாமை நினைத்து, லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப்போடுகையில், லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப்போகும்படி அனுப்பிவிட்டார்."*

**யூதா 7** *"அப்படியே **சோதோம் கொமோரா பட்டணத்தார்களும்** அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும் அவர்களைப் போல் விபசாரம்பண்ணி அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து **நித்திய அக்கினியின் ஆக்கினையை** அடைந்து திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்."*

வேதம் நம்மை லோத்தின் மனைவியை நினைவுகூறும்படி சொல்லுகிறது கர்த்தரோடுகூட அவளின் உறவைப்பார்க்கிலும் இந்த உலகத்தின் காரியங்களை அவள் மிகவும் நேசித்தாள் இந்த வாஞ்சையினால் அவள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்படியாமல் மரித்துப்போனாள்.

**ஆதியாகமம் 19:17, 26** *"அவர்களை வெளியே கொண்டுபோய் விட்டபின்பு, அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நிற்காதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார். 26 **அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூண் ஆனாள்.**"*

**மத்தேயு 6: 21** *உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.*



**சாவி # 4:** <u>பின் நோக்காமல் கர்த்தரை 100% சேவியுங்கள்</u>

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 3

## F. ஈசாக்கின் பிறப்பும் ஆபிரகாமின் கீழ்படிதல் மற்றும் விசுவாசத்தின் சோதனை

சாராளுக்கு 90 வயது இருந்த போதும் ஆபிரகாமுக்கு 100 வயது இருந்தபோதும் ஈசாக்கு பிறந்தான்.



**சாவி # 5:** **<u>கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தை எப்பொழுதும் நிறைவேற்றுவார்.</u>**

**ஆதியாகமம் 21:1-5** "*கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள்பேரில் கடாட்சமானார்; கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தருளினார்.ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கையில், சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்.அப்பொழுது ஆபிரகாம் தனக்குச் சாராள் பெற்ற குமாரனுக்கு ஈசாக்கு என்று பேரிட்டான்.தன் குமாரனாகிய ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளிலே, ஆபிரகாம் தனக்குத் தேவன் கட்டளையிட்டிருந்தபடி அவனுக்கு விருத்த சேதனம்பண்ணினான்.தன் குமாரனாகிய* ***ஈசாக்கு பிறந்தபோது*** *ஆபிரகாம்* *<u>நூறு வயதாயிருந்தான்</u>.* "

**ஆசிரியர் குறிப்பு:** மாணவர்கள் ஒருவேளை இந்தப் பகுதியை தவறாகப் புரிந்துக் கொள்வார்கள் என்று நீங்கள் நினைத்தீர்களானால் இந்தக் கதையை விட்டுவிடுங்கள்

அநேக ஆண்டுகளுக்குப் பின்பு ஈசாக்கை பலி செலுத்து என்று ஆபிரகாமோடே கர்த்தர் சொன்னார் இது தான் ஆபிரகாமின் சோதனை

**ஆதியாகமம் 22:1-2** "*இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்; எப்படியெனில், அவர் அவனை நோக்கி: ஆபிரகாமே என்றார்; அவன்: இதோ அடியேன் என்றான்.அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன்* ***நேசகுமாரனுமாகிய*** *ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு,* ***மோரியா தேசத்துக்குப் போய்,*** *அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல்* ***அவனைத் தகனபலியாகப் பலியிடு*** *என்றார்.*"

ஆபிரகாமை இதை கர்த்தர் ஏன் செய்ய சொன்னார்? சில நேரங்களில் நம்மால் ஆகாதக் காரியங்களை கர்த்தர் செய்யச் சொல்லுவார் இது நமக்கு விசுவாசப்பாடம் கற்பிக்கவும் கர்த்தருடைய குணாதிசியங்ளை வெளிபடுத்துவதற்காகவும் தான்.

அவர்கள் இருவரும் திரும்புவார்கள் என்ற விசுவாசம் ஆபிரகாமுக்கு இருந்தது. ஆபிரகாம் கீழ்படிதலாகவும் இருந்தார்

**ஆதியாகமம் 22:3-8** "*ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின்மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபேரையும் தன் குமாரன் ஈசாக்கையும்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 3

*கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்து கொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப்போனான். 4 மூன்றாம் நாளில் ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, தூரத்திலே அந்த இடத்தைக் கண்டான். 5 அப்பொழுது ஆபிரகாம் தன் வேலைக்காரரை நோக்கி: நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள், நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய், தொழுதுகொண்டு, **உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம்** என்றான். 6 ஆபிரகாம் தகனபலிக்குக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனாகிய ஈசாக்கின்மேல் வைத்து, தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக்கொண்டான்; இருவரும் கூடிப்போனார்கள். 7 அப்பொழுது ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி: என் தகப்பனே என்றான்; அதற்கு அவன்: என் மகனே, இதோ, இருக்கிறேன் என்றான்; அப்பொழுது அவன்: இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான். 8 அதற்கு ஆபிரகாம்: என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான்; அப்புறம் இருவரும் கூடிப்போய்,*"

**எபிரெயர் 11:17-19** "*மேலும் **விசுவாசத்தினாலே** ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான் 18 ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே. இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன் மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி. 19 தனக்கு **ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான் மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்**.*"

கர்த்தருக்கு கீழ்படிந்தோமேயானால் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம்

**ஆதியாகமம் 22:9-14** "*தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த இடத்துக்கு வந்தார்கள்; அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தினான். 10 பின்பு ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான். 11 **அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து**, ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார்; அவன்: இதோ, அடியேன் என்றான். 12 அப்பொழுது அவர்: பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார். 13 ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான்; அப்பொழுது ஆபிரகாம் போய், கடாவைப்பிடித்து, அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான். 14 ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான்; அதினாலே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும் என்று இந்நாள்வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது.*"

சிறியவனும் பலசாலியுமான ஈசாக்கு தன்னுடைய தகப்பனை எளிதாக மேற் கொண்டிருக்க முடியும் ஆனால் இயேசுவின் மாதிரியாக ஈசாக்குடைய அன்பு தன்னை தானே ஜீவபலியாக ஒப்புகொடுப்பதற்காக அனுமதித்தது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் அதே மோரியா மலையிலேதான் சிலுவையிலே அறியப்பட்டார்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 3

**ஆதியாகமம் 22:15-18** *"கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு:நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதனென்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக்காரியத்தைச் செய்தபடியால்;17 நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், 18* ***நீ என் சொல்லுக்குக் __கீழ்ப்படிந்தபடியினால்__****, உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்."*

## II தெரிந்தெடுக்கப்பட்ட தேசமான - இஸ்ரவேல் (கர்த்தருக்காக பசியாயிருந்து கீழ்படிதலோடுகூட இருக்கின்ற ஜனங்களுக்குத்தான் கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் சுதந்தரித்துக்கொள்ள முடியும்)

### A. ஈசாக்கின் பிள்ளைகளாகிய யாக்கோபும் ஏசாவும்கூட காயீனும் ஆபேலையும் போல இரண்டு வெவ்வேறான ஜனங்களை குறிக்கின்றன.

யாக்கோபு ஆவிக்குரிய காரியங்களை வாஞ்சித்தான். ஆனால் ஏசாவோ கர்த்தருடைய காரியங்களை வெறுத்து சரீரபிரகாரமான காரியங்களை வாஞ்சித்தான்

**ஆதியாகமம் 25:21-34** "*மலடியாயிருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்; கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டருளினார்; அவன் மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள். 22 அவள் கர்ப்பத்திலே பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருந்தன; அப்பொழுது அவள்: இப்படியானால் எனக்கு எப்படியோ என்று சொல்லி, கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி போனாள். 23 அதற்குக் கர்த்தர்: இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது; இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும், அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்றார். 24 பிரசவகாலம் பூரணமானபோது, அவள் கர்ப்பத்தில் இரட்டைப் பிள்ளைகள் இருந்தது. 25 மூத்தவன் சிவந்த நிறமுள்ளவனாயும் சர்வாங்கமும் ரோம அங்கி போர்த்தவன் போலவும் வெளிப்பட்டான்; அவனுக்கு ஏசா என்று பேரிட்டார்கள். 26 பின்பு, அவன் சகோதரன் தன் கையினாலே ஏசாவின் குதிங்காலைப் பிடித்துக்கொண்டு வெளிப்பட்டான்; அவனுக்கு யாக்கோபு என்று பேரிட்டார்கள்; இவர்களை அவள் பெற்றபோது ஈசாக்கு அறுபது வயதாயிருந்தான். 27 இந்தப் பிள்ளைகள் பெரியவர்களானபோது, ஏசா வேட்டையில் வல்லவனும் வனசஞ்சாரியுமாய் இருந்தான்; யாக்கோபு குணசாலியும் கூடாரவாசியுமாய் இருந்தான். 28 ஏசா வேட்டையாடிக்கொண்டு வருகிறது ஈசாக்கினுடைய வாய்க்கு ருசிகரமாயிருந்ததினாலே ஏசாவின்மேல் பட்சமாயிருந்தான்; ரெபெக்காளோ யாக்கோபின்மேல் பட்சமாயிருந்தாள். 29 ஒரு நாள் ஏசா வெளியிலிருந்து களைத்து வந்தபோது, யாக்கோபு கூழ் சமைத்துக்கொண்டிருந்தான். 31 அப்பொழுது ஏசா யாக்கோபை நோக்கி: அந்தச் சிவப்பான கூழிலே நான் சாப்பிடக் கொஞ்சம் தா, இளைத்திருக்கிறேன் என்றான்; இதனாலே அவனுக்கு ஏதோம் என்கிற பேர் உண்டாயிற்று.அப்பொழுது யாக்கோபு:*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 3

***உன் சேஷ்ட புத்திரபாகத்தை இன்று எனக்கு விற்றுப்போடு என்றான். 32 அதற்கு ஏசா: இதோ, நான் சாகப்போகிறேனே, இந்தச் சேஷ்டபுத்திரபாகம் எனக்கு என்னத்திற்கு என்றான். 33 அப்பொழுது யாக்கோபு: இன்று எனக்கு ஆணையிட்டுக்கொடு என்றான்; அவன் யாக்கோபுக்கு ஆணையிட்டு, தன் சேஷ்ட புத்திரபாகத்தை அவனுக்கு விற்றுப்போட்டான். 34 அப்பொழுது யாக்கோபு ஏசாவுக்கு அப்பத்தையும் பயற்றங்கூழையும் கொடுத்தான்; அவன் புசித்துக் குடித்து எழுந்திருந்து போய்விட்டான். இப்படி ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை அலட்சியம்பண்ணினான்."***

முதல் பிள்ளையாய் பிறந்ததினால் ஏசா தனக்கு உண்டான சேஷ்டபுத்திர பாகத்தை பசியாய் இருந்ததினாலே விற்றுப்போட்டான். தன்னுடைய குடும்பத்திற்கு ஆவிக்குரிய மற்றும் சரீரபிரகாரமான தலைவனாகவும் தன் தகப்பனாரின் ஆஸ்திகளுக்கு இரட்டிப்பான பகுதியையும் சுதந்தரித்துக்கொள்ள ஏசாவுடைய சேஷ்டபுத்திரபாகம் உதவியிருக்கும்.

ஈசாக்கு மரிக்கிற தருவாயிலே ஏசாவைப்பார்த்து தனக்காக உணவை ஆயத்தப்படுத்தும்படியாக சொன்னான். அதன் பிறகு ஈசாக்கு ஏசாவுக்காக ஜெபித்து ஒரு ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை அவன்மேல் கட்டவிழ்த்து போடுவதாகவும் கூறினான் ஆனால் யாக்கோபும் அவனுடைய தாயாரும் இணைந்து சதிதிட்டம் தீட்டினார்கள் ரெபெக்காள் உணவை ஆயத்தப்படுத்தி மிருகத்தோல்களினாலே யாக்கோபின் கரங்களையும் கழுத்தையும் மூடி (ஏசா முடி நிறைந்த மனிதன்) யாக்கோபை ஏசாவினுடைய வஸ்திரங்களை அணிய செய்தாள். பின்பு யாக்கோபு ஈசாக்கினிடத்தில் ஏசாவை போல உணவை எடுத்துக் கொண்டு வந்தான் குருடனாகிய ஈசாக்கு ஏமாற்றப்பட்டு ஏசாவை ஆசீர்வதிக்கிறதுபோலவே யாக்கோபை ஆசீர்வதித்தான் ஏசா திரும்பிவந்த போது மிகவும் கோபமடைந்தான்

**ஆதியாகமம் 27:35-36** *"அதற்கு அவன்: <u>உன் சகோதரன் தந்திரமாய் வந்து, உன்னுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான்</u> என்றான். 36 அப்பொழுது அவன்:* ***அவன் பெயர் யாக்கோபு என்னப்படுவது சரியல்லவா?*** *இதோடே இரண்டுதரம் என்னை மோசம்போக்கினான்; என் சேஷ்ட புத்திரபாகத்தை எடுத்துக்கொண்டான்; இதோ, இப்பொழுது என் ஆசீர்வாதத்தையும் வாங்கிக்கொண்டான் என்று சொல்லி; நீர் எனக்கு ஒரு ஆசீர்வாதத்தையாகிலும் வைத்துவைக்கவில்லையா என்றான்."*


தன் மாமனாகிய லாபானிடத்திலே யாக்கோபு தன் ஜீவனுக்காக பயந்து ஓடிச்சென்றான் அவ்விடத்திலே அவன் ராகேலின்மேல் நேசம் கொண்டான். ராகேலுக்காக வரதட்சணையை செலுத்துகிற இடத்தில் 7 ஆண்டுகள் லாபானிடத்தில் வேலை செய்ய யாக்கோபு ஒத்துக்கொண்டான் 7 ஆண்டுகள் முடிவடைந்தபின் லாபான் யாக்கோபை வஞ்சித்து ராகேலின் சகோதரியாகிய லேயாளை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தான். ராகேலையும் திருமணம் செய்து கொள்ளலாம் என்று லாபான் கூறினான். ஆனால் அதற்காக இன்னும் 7 ஆண்டுகள் யாக்கோபு லாபானிடத்தில் வேலை செய்யவேண்டியதாயிருந்தது.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 3

அநேக ஆண்டுகளுக்குப்பிறகு யாக்கோபு வீடு திரும்பினான் வழியிலே யாக்கோபு தேவனை சந்தித்தான் (மனுஷனாக கர்த்தர் தோன்றினார். தன்னை ஆசீர்வதித்தாலொழிய விடமாட்டேன் என்று யாக்கோபு தேவனிடத்தில் போராடி ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான். அவனுடைய பெயரும் இஸ்ரவேல் என்று மாற்றப்பட்டது இஸ்ரவேல் என்றால் தேவனோடுகூட இருக்கிற இளவரசர் என்று அர்த்தம். (தேவனோடும் மனிதனோடும் போராடி மேற்க்கொண்டான்)

**ஆதியாகமம் 32:28** "*அப்பொழுது அவர்: உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்.*"



சாவி **# 6:** **<u>தன் நிமித்தமாக பசியாய் இருப்பவர்களை கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வதிப்பார்</u>**

## B. இஸ்ரவேலின் சந்ததிகள்

இஸ்ரவேலாகிய யாக்கோபுக்கு 12 குமாரர்கள் இருந்தார்கள் ஆனால் யோசேப்பையோ யாக்கோபு மிகவும் நேசித்தார். பெரிதான சொப்பனங்களை கர்த்தர் யோசேப்புக்கு கொடுத்தார்

**ஆதியாகமம் 37:5-11** "*யோசேப்பு ஒரு சொப்பனம் கண்டு, அதைத் தன் சகோதரருக்கு அறிவித்தான்; அதினிமித்தம் அவனை இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள். 6 அவன் அவர்களை நோக்கி: நான் கண்ட சொப்பனத்தைக் கேளுங்கள்: 7 நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம்; அப்பொழுது என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது; **உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது** என்றான். 8 அப்பொழுது அவன் சகோதரர் அவனைப் பார்த்து: நீ எங்கள்மேல் துரைத்தனம் பண்ணுவாயோ? நீ எங்களை ஆளப்போகிறாயோ? என்று சொல்லி, அவனை அவன் சொப்பனங்களின் நிமித்தமும், அவன் வார்த்தைகளின் நிமித்தமும் இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள். 9 அவன் வேறொரு சொப்பனம் கண்டு, தன் சகோதரரை நோக்கி: நான் இன்னும் ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; **சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் என்னை வணங்கினது** என்றான். 10 இதை அவன் தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் சொன்னபோது, அவன் தகப்பன் அவனைப் பார்த்து: நீ கண்ட இந்தச் சொப்பனம் என்ன? நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்க வருவோமோ? என்று அவனைக் கடிந்துகொண்டான். 11 அவன் சகோதரர் அவன்மேல் பொறாமை கொண்டார்கள்; அவன் தகப்பனோ அவன் சொன்னதை மனதிலே வைத்துக்கொண்டான்.*"

யோசேப்பின் சொப்பனங்களும் யாக்கோபின் விசேஷித்த நேசமும் அவனுடைய சகோதரர்களின் உள்ளத்தில் பொறாமையை உண்டுபண்ணி குடும்பத்திலே பிரிவினையை

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 3

உண்டாக்கியது. யோசேப்புடைய சகோதரர்கள் அவனை கொலை செய்யத் திட்டம் போட்டார்கள் ஆனால் அதற்கு பதிலாக ஒரு அடிமையாக விற்றுப்போட்டார்கள்.

**ஆதியாகமம் 37:3-4, 28** "*இஸ்ரவேலின் முதிர்வயதிலே யோசேப்புத் தனக்குப் பிறந்ததினால், இஸ்ரவேல் தன் குமாரர் எல்லாரிலும் அவனை அதிகமாய் நேசித்து, அவனுக்குப் பலவருணமான அங்கியைச் செய்வித்தான். 4 அவனுடைய சகோதரர் எல்லாரிலும் அவனைத் தங்கள் தகப்பன் அதிகமாய் நேசிக்கிறதை அவன் சகோதரர் கண்டபோது, அவனோடே பட்சமாய்ப் பேசாமல் அவனைப் பகைத்தார்கள்...28 அந்த வர்த்தகரான மீதியானியர் கடந்துபோகிறபோது, அவர்கள் யோசேப்பை அந்தக் குழியிலிருந்து தூக்கியெடுத்து, அவனை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். அவர்கள் யோசேப்பை எகிப்துக்குக் கொண்டுபோனார்கள்.*"

**ஆதியாகமம் 39:1** "*யோசேப்பு எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டான். பார்வோனுடைய பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்னும் எகிப்து தேசத்தான் அவனை அவ்விடத்திற்குக் கொண்டுவந்த இஸ்மவேலரிடத்தில் விலைக்கு வாங்கினான்.*"

போர்த்திபார்வுடைய வீட்டிலே வேலை செய்யும் பொழுது போர்த்திபார் கண்களிலே யோசேப்புக்கு கிருபை கிடைத்தது. போர்த்திபாரின் மனைவி யோசேப்பின்மேல் அவளுடைய கவனத்தை செலுத்தினாள் அவனுடனே சயனிக்கவேண்டுமென்று யோசேப்பை சோதித்த போது யோசேப்பு அவளுக்குத் தப்பி ஓடினான். செய்யாத குற்றத்திற்காக யோசேப்பு குற்றப்படுத்தப் பட்டு சிறையிலே அடைக்கப்பட்டான்.

**ஆதியாகமம் 39:20** "*யோசேப்பின் எஜமான் அவனைப் பிடித்து, ராஜாவின் கட்டளையால் காவலில் வைக்கப்பட்டவர்கள் இருக்கும் சிறைச்சாலையிலே அவனை ஒப்புவித்தான். அந்தச் சிறைச்சாலையில் அவன் இருந்தான்.*"

சிறையிலே இருக்கும் போது காவளாலியின் கண்களிலே கிருபைப்பெற்று சிறைச்சாலையின் தலைவனாக யோசேப்பு நியமிக்கப்பட்டான் தன்னோடு இருந்த பார்வோனின் ஊழியக்காரர்களாகிய இரண்டு கைதிகளின் சொப்பனத்தை யோசேப்பு விவரித்துச் சொன்னான் அதன்படியே நிறைவேறிற்று ஒரு ஊழியக்காரன் மறுபடியுமாக பார்வோனிடத்தில் ஊழியம் செய்யக் கடந்துப் போனான் சில ஆண்டுகளுக்குப்பிறகு பார்வோனுக்கு ஒரு சொப்பனம் உண்டாயிற்று அப்பொழுது இந்த ஊழியக்காரன் யோசேப்பைக் குறித்து பார்வோனிடத்தில் சொன்னான் பார்வோனின் சொப்பனத்தை சரியாக விவரித்ததினால் எகிப்துதேசத்திற்கே அதிபதியாக யோசேப்புக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டது இந்த உயர்வினால் யோசேப்புடைய சொந்த சொப்பனங்களும் நிறைவேறின தன்னுடையக் குடும்பத்தாரையும் மிகப் பெரிய பஞ்சத்திலிருந்து யோசேப்பால் காப்பாற்ற முடிந்தது.

**ஆதியாகமம் 41:39-40** "*பின்பு, பார்வோன் யோசேப்பை நோக்கி: தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 3

*விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனும் இல்லை. 40 நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக் கடவர்கள்; சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான்."*


யோசேப்புடைய குடும்பம் தானியங்களை வாங்கும்படியாக எகிப்திற்கு பிரயாணம் செய்தார்கள். அவ்விடத்திலே யோசேப்புக்கு முன்பதாக அவர்கள் வணங்கினபோது யோசேப்புடைய சொப்பனம் நிறைவேறிற்று. இஸ்ரவேலும் அவனுடைய முழு குடும்பத்தாரும் எகிப்து தேசத்திற்கு கடந்து சென்றார்கள். எகிப்து தேசத்திலே மிக சிறந்த நிலம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது.

**ஆதியாகமம் 46:5, 27-29** *"அதற்குப் பின்பு, யாக்கோபு பெயெர்செபாவிலிருந்து பிரயாணம் புறப்பட்டான். இஸ்ரவேலின் குமாரர் தங்கள் தகப்பனாகிய யாக்கோபையும் தங்கள் குழந்தைகளையும் தங்கள் மனைவிகளையும் பார்வோன் அனுப்பின வண்டிகளின்மேல் ஏற்றிக்கொண்டு... 27 ஆக எகிப்துக்குப் போன யாக்கோபின் குடும்பத்தார் எழுபதுபேர். 28 கோசேன் நாட்டிலே தன்னை யோசேப்பு சந்திக்க வரும்படி சொல்ல, யூதாவைத் தனக்கு முன்னாக அவனிடத்தில் யாக்கோபு அனுப்பினான்; அவர்கள் கோசேனிலே சேர்ந்தார்கள். 29 யோசேப்பு தன் இரதத்தை ஆயத்தப்படுத்தி, அதின்மேல் ஏறி, தன் தகப்பனாகிய இஸ்ரவேலைச் சந்திக்கும்படி போய், அவனைக் கண்டு, அவனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு, வெகுநேரம் அவன் கழுத்தைவிடாமல் அழுதான்."*

**ஆதியாகமம் 47:11** *"பார்வோன் கட்டளையிட்டபடியே, யோசேப்பு தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் எகிப்து தேசத்திலே நல்ல நாடாகிய ராமசேஸ் என்னும் நாட்டிலே சுதந்தரம் கொடுத்து, அவர்களைக் குடியேற்றினான்."*

தன்னுடைய சகோதரர்களை யோசேப்பு மன்னித்தான் கர்த்தர் தன்னுடைய வாழ்க்கையிலே தீய காரியங்கள் உண்டாகும்படியாக அனுமதித்ததின் காரணம் அவனுடைய நல்ல காரியங்கள் உண்டாவதற்குத்தான் என்று அவன் புரிந்துக் கொண்டான்.

**ஆதியாகமம் 50:19-21** *"யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா;<u>நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்</u>; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, **வெகு ஜனங்களை உயிரோடே** காக்கும்படிக்கு, **அதை நன்மையாக முடியப்பண்ணினார்**ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்."*



சாவி # 7: <u>**மன்னிக்காமல் இருப்பது கர்த்தரை வெளியே தள்ளுகிறதற்கு ஒப்பானது. ஆனால் மன்னிப்போ கர்த்தரின் ஆசீர்வாதத்தை கட்டவிழ்த்து போடுவதாகும்**</u>

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 3

யோசேப்பினுடைய வாழ்க்கை இந்த உண்மையை வெளிப்படுத்துகிறது கர்த்தருடைய திட்டத்திற்கு கீழ்படிந்து ஆபிரகாமைப் போல விசுவாசத்தை கொண்டு யோசேப்பைப்போல பிறரை மன்னித்து பாவத்தைவிட்டு விலகியோடினால் கர்த்தர் உங்களையும் அவருடைய வாக்குத்தத்தத்தின் நிமித்தமாக ஆசீர்வதிப்பார் கர்த்தர் எப்பொழுதும் உங்களுக்காக ஒரு தேர்வைக் கொடுக்கிறார்------ உங்கள் வழி அல்லது அவருடைய வழி.

**பாடம் 4-ல்** இஸ்ரவேல் மக்களுடைய அனுபவங்களைக் குறித்துப் பெரியதான பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம்.

**யாத்திராகமம் 1:8** "*யோசேப்பை அறியாத புதிய ராஜன் ஒருவன் எகிப்தில் தோன்றினான்.*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

### துரித மதிப்புரை

**1. ஏவாளை சாத்தான் எப்படி சோதித்தான்?**

1 யோவான் 2:16-ல் காணப்படும் மூன்று தத்துவங்களினாலும் பொய் மற்றும் வஞ்சகத்தினாலும் சோதித்தான்.

**2. ஆபேலை காயீன் எதற்கு கொன்றான்?**

காயீன் கர்த்தருடைய இரக்கத்திற்கு விரோதமாக செயல்பட்டு பாவம். அவனை ஆட்கொள்ளும்படியாக செய்தான்

**3. விருத்தசேதனத்தை கர்த்தர் ஏன் துவக்கிவைத்தார்?**

கர்த்தருடைய உடன்படிக்கையை மனுஷன் ஏற்றுக் கொள்வதற்கான சரீரபிரகாரமான அடையாளமாய் இது இருந்தது.

**4. லோத்தின் மனைவி ஏன் மரித்தால்?**

அவள் கர்த்தரைவிட உலகத்தை அதிகமாக நேசித்தாள்

**5. யோசேப்பு தன்னுடைய கடந்த கால வாழ்க்கையை மறப்பதற்கு அவனிடத்தில் இருந்த குணாதிசயங்கள் யாவை?**

அவன் பாவத்தை நாள் தோறும் மறுத்தான் கர்த்தர்மேல் நம்பிக்கை கொண்டிருந்தான் மற்றும் மன்னிப்பு ஆகிய குணநலன்கள் அவனிடத்தில் இருந்தது.

## I இஸ்ரவேலின் அடிமைத்தனம்

யோசேப்பு தன்னுடைய குடும்பத்தாரோடு மறுபடியும் இணைந்து எகிப்தில் உள்ள கோஷேன் என்ற இடத்திற்கு கடந்துப் போவதே கடந்த பாடத்தின் முடிவாயிருந்தது. யோசேப்பை அறிந்த பார்வோன் உயிரோடிருக்கும்வரை எல்லாக் காரியங்களும் அருமையாக இருந்தது ஆனால் அவன் மரித்தப்பின் எல்லா காரியங்களும் இஸ்ரவேலுக்கு விரோதமாக திடீரென்று மாறிற்று.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

## A. எபிரெய மக்களுக்கு விரோதமாக ஒரு புதியப் பாரவோன் ஆட்சிக்கு வந்தான்.

1. புதிய பார்வோன் யோசேப்பை அறிய வில்லை

**யாத்திராகமம் 1:8** "*<u>யோசேப்பை அறியாத</u> புதிய ராஜன் ஒருவன் எகிப்தில் தோன்றினான்.*"

**யாத்திராகமம் 1:10-14** "*அவர்கள் பெருகாதபடிக்கும், ஒரு யுத்தம் உண்டானால், அவர்களும் நம்முடைய பகைஞரோடே கூடி, நமக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகாதபடிக்கும், நாம் அவர்களைக் குறித்து ஒரு உபாயம் பண்ணவேண்டும் என்றான். 11 அப்படியே அவர்களைச் சுமைசுமக்கிற வேலையினால் ஒடுக்கும்படிக்கு, அவர்கள்மேல் விசாரணைக்காரரை வைத்தார்கள்; அப்பொழுது அவர்கள் பார்வோனுக்காகப் பித்தோம், ராமசேஸ் என்னும் பண்டசாலைப் பட்டணங்களைக் கட்டினார்கள். 12 ஆனாலும் அவர்களை எவ்வளவு ஒடுக்கினார்களோ அவ்வளவாய் அவர்கள் பலுகிப் பெருகினார்கள். ஆகையால் அவர்கள் இஸ்ரவேல் புத்திரரைக்குறித்து எரிச்சல் அடைந்தார்கள். 13 எகிப்தியர் இஸ்ரவேல் புத்திரரைக் கொடுமையாய் வேலை வாங்கினார்கள். 14 சாந்தும் செங்கலுமாகிய இவைகளைச் செய்யும் வேலையினாலும், வயலில் செய்யும் சகலவித வேலையினாலும், அவர்களுக்கு அவர்கள் ஜீவனையும் கசப்பாக்கினார்கள்; அவர்களைக்கொண்டு செய்வித்த மற்ற எல்லா வேலைகளிலும், அவர்களைக் கொடுமையாய் நடத்தினார்கள்.*"

எபிரெய மக்களுக்கு விரோதமாக எத்தனை துன்பங்கள் வந்தாலும் அவர்கள் பெருகிக்கொண்டே இருந்தார்கள் இது ஒரு சுவாரசியமான குறிப்பாகும் அதேப்போல புதிய ஏற்பாட்டின் சபைக்கு விரோதமாக எத்தனை போராட்டங்கள் வந்தாலும் கிறிஸ்தவ மார்கமானது பெருகிக் கொண்டேயிருந்தது.

2. எபிரெய மக்களின் ஆண்பிள்ளைகளை பார்வோன் கொள்ள முயற்சித்தான்.

**யாத்திராகமம் 1:16-17** "*நீங்கள் எபிரெய ஸ்திரீகளுக்கு மருத்துவம் செய்யும்போது, அவர்கள் மணையின்மேல் உட்கார்ந்திருக்கையில், பார்த்து, <u>ஆண்பிள்ளையானால் கொன்று போடுங்கள்</u>, பெண்பிள்ளையானால் உயிரோடிருக்கட்டும் என்றான்.<u>மருத்துவச்சிகளோ, தேவனுக்குப் பயந்ததினால்</u>, எகிப்தின் ராஜா தங்களுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல், ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள்.*"

**யாத்திராகமம் 1:22** "*அப்பொழுது பார்வோன், <u>பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டுவிடவும், பெண்பிள்ளைகளையெல்லாம் உயிரோடே வைக்கவும்</u> தன் ஜனங்கள் எல்லோருக்கும் கட்டளையிட்டான்.*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

எபிரெயருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் எகிப்து அல்ல இஸ்ரவேல் ஆகும் பெரும் உபத்திரவம் நேராதிருந்திருந்தால் அவர்கள் எகிப்தை விட்டு கடந்து போய் இருக்கமாட்டார்கள் இதேப்போல நம்முடைய வாழ்க்கையிலும் சில தீய காரியங்கள் இன்றைக்கும் நடைபெறுகின்றன ரோமர் 8:28-ஐ எப்பொழுதும் நினைவுக்கூறுங்கள். தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.



**சாவி # 1** **நம்மை ஆசீர்வதிப்பதற்கு கர்த்தர் நன்மையும் தீமையும் இணைத்து பயன்படுத்துகிறார்**

**B.** **மோசேயின் வாழ்க்கை**

1. பிறப்பிலே மறைக்கப்பட்டு பார்வோனுடைய குமாரத்தியின் மகனாக மோசே வளர்க்கப்பட்டான்.

**யாத்திராகமம் 2:1-10** ‘‘*லேவியின் குடும்பத்தாரில் ஒருவன் லேவியின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம் பண்ணினான். 2 அந்த ஸ்திரீ கர்ப்பவதியாகி, ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று, அது அழகுள்ளது என்று கண்டு, அதை மூன்று மாதம் ஒளித்து வைத்தாள். 3 அவள் அதை அப்புறம் ஒளித்து வைக்கக் கூடாமல், ஒரு நாணற்பெட்டியை எடுத்து, அதற்குப் பிசினும் கீலும் பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி, நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள். 4 அதற்கு என்ன சம்பவிக்கும் என்பதை அறியும்படி அதன் தமக்கை தூரத்திலே நின்றுகொண்டிருந்தாள். 5 அப்பொழுது பார்வோனுடைய குமாரத்தி நதியில் ஸ்நானம்பண்ண வந்தாள். அவளுடைய தாதிகள் நதியோரத்தில் உலாவினார்கள்; அவள் நாணலுக்குள்ளே இருக்கிற பெட்டியைக் கண்டு, தன் தாதியை அனுப்பி அதைக் கொண்டு வரும்படி செய்தாள். 6 அதைத் திறந்தபோது பிள்ளையைக் கண்டாள்; பிள்ளை அழுதது; அவள் அதின்மேல் இரக்கமுற்று, இது எபிரெயர் பிள்ளைகளில் ஒன்று என்றாள். 7 அப்பொழுது அதின் தமக்கை பார்வோனின் குமாரத்தியை நோக்கி: உமக்கு இந்தப் பிள்ளையை வளர்க்கும்படி எபிரெய ஸ்திரீகளில் பால் கொடுக்கிற ஒருத்தியை நான் போய் உம்மிடத்தில் அழைத்துக்கொண்டு வரட்டுமா என்றாள். 8 அதற்குப் பார்வோனுடைய குமாரத்தி: அழைத்துக்கொண்டு வா என்றாள். இந்தப்பெண் போய்ப் பிள்ளையின் தாயையே அழைத்துக்கொண்டு வந்தாள். 9 பார்வோனுடைய குமாரத்தி அவளை நோக்கி: நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டு போய், அதை எனக்கு வளர்த்திடு, நான் உனக்குச் சம்பளம் கொடுக்கிறேன் என்றாள். அந்த ஸ்திரீ பிள்ளையை எடுத்துக்கொண்டு போய், அதை வளர்த்தாள். 10 பிள்ளை பெரிதானபோது, அவள் அதைப் பார்வோனுடைய குமாரத்தியினிடத்தில் கொண்டுபோய் விட்டாள்.*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

*<u>அவளுக்கு அவன் குமாரனானான்.</u> அவள்: அவனை ஜலத்திநின்று எடுத்தேன் என்று சொல்லி, அவனுக்கு மோசே என்று பேரிட்டாள்."*

**கேள்வி :** குழந்தை எபிரெய பிள்ளையென்று பார்வோனுடைய குமாரத்திக்கு எப்படி தெரிய வந்தது?

பதில் : விருத்தசேதனத்தின் உடன்படிக்கையினால் தான்.

2. மோசே ஒரு எகிப்தியனைக் கொன்று மீதியான் தேசத்திற்கு தப்பியோடி நாற்பது ஆண்டுகள் வனாந்திரத்திலே இருந்தான்.

**யாத்திராகமம் 2:11-15** "*மோசே பெரியவனான காலத்தில், அவன் தன் சகோதரரிடத்தில் போய், அவர்கள் சுமை சுமக்கிறதைப் பார்த்து, தன் சகோதரராகிய எபிரெயரில் ஒருவனை ஒரு எகிப்தியன் அடிக்கிறதைக் கண்டு, 12 அங்கும் இங்கும் பார்த்து, ஒருவரும் இல்லையென்று அறிந்து, <u>எகிப்தியனை வெட்டி</u>, அவனை மணலிலே புதைத்துப் போட்டான். 13 அவன் மறுநாளிலும் வெளியே போனபோது, எபிரெய மனுஷர் இருவர் சண்டை பண்ணிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவன் அநியாயம் செய்கிறவனை நோக்கி, நீ உன் தோழனை அடிக்கிறது என்ன என்று கேட்டான். 14 அதற்கு அவன்: எங்கள் மேல் உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார்? நீ எகிப்தியனைக் கொன்று போட்டது போல, என்னையும் கொன்றுபோட நினைக்கிறாயோ என்றான். அப்பொழுது மோசே காரியம் நிச்சயமாக வெளிப்பட்டது என்று பயந்தான். 15 பார்வோன் அந்தக் காரியத்தைக் கேள்விப்பட்டபோது, மோசேயைக் கொலை செய்ய வகை தேடினான். மோசே பார்வோனிடத்திநின்று தப்பியோடி, மீதியான் தேசத்தில் போய்த் தங்கி,...*"

3. எபிரெய மக்களை அடிமைதனத்திலிருந்தும் கட்டுகளிலிருந்தும் விடுவிக்க கர்த்தராலே (அவர் ஒருவராலே) மோசே அழைக்கப்பட்டான்.

யாத்திராகமம் 3:2-10 "*அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப்பார்த்தான்; முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமல் இருந்தது. 3 அப்பொழுது மோசே: இந்த முட்செடி வெந்துபோகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப்போய் இந்த அற்புதகாட்சியைப் பார்ப்பேன் என்றான். 4 அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். <u>முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி:</u> மோசே, மோசே என்று கூப்பிட்டார். <u>அவன்: இதோ, அடியேன் என்றான்</u>. 5 அப்பொழுது அவர்: இங்கே கிட்டிச்சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார். 6. பின்னும் அவர்: நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார். மோசே தேவனை நோக்கிப்பார்க்கப் பயந்ததினால், தன் முகத்தை மூடிக்கொண்டான். 7.*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4


*அப்பொழுது கர்த்தர்: <u>எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து</u>, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன். . 8 <u>அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி, கானானியரும் ஏத்தியரும் எமோரியரும் பெரிசியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடமாகிய பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன்.</u> 9 இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என் சந்நிதியில் வந்து எட்டினது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன். 10. நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார்."*

4. பயம் உண்டாகி மோசே தேவனை நோக்கி போக்கு சொல்லத் தொடங்கினான்.

**யாத்திராகமம் 4:10-14** "*அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, இதற்கு முன்னாவது, தேவரீர் உமது அடியானோடே பேசினதற்குப் பின்னாவது <u>நான் வாக்குவல்லவன் அல்ல;</u> <u>நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன்</u> என்றான். 11 அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: **மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும் செவிடனையும் பார்வையுள்ளவனையும் குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா?** 12 **ஆதலால், நீ போ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார்.** 13 அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான். 14 அப்பொழுது <u>கர்த்தர் மோசேயின் மேல் கோபமூண்டவராகி</u>: லேவியனாகிய ஆரோன் உன் சகோதரன் அல்லவா? அவன் நன்றாய்ப் பேசுகிறவன் என்று அறிவேன்; அவன் உன்னைச் சந்திக்கப் புறப்பட்டு வருகிறான்; உன்னைக் காணும்போது அவன் இருதயம் மகிழும்."*

வஞ்சகப்புகழ்ச்சியாக புதிய ஏற்பாட்டில் மோசேயைக் குறித்து இந்தக் காரியம் சொல்லப்பட்டிருக்கிறது.

**அப்போஸ்தலர் 7:22** " *மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, **வாக்கிலும்** செய்கையிலும் **வல்லவனானான்.*** "



**சாவி # 2 <u>கர்த்தராலே பயன்படுத்தப்படுவதற்காக நம்முடைய தாலந்துகள் உருவாக்கப்பட்டுள்ளன.</u>**

நம் வாழ்க்கையை கர்த்தர் உருவாக்கும்பொழுது அவருக்காகப் பயன்படுத்தக்கூடிய தாலந்துகளையும் திறமைகளையும் நமக்குக் கொடுக்கிறார். அவருடைய மகிமைக்காக நம்மைப் பயன்படுத்தி கர்த்தர் இவைகளை நமக்கு

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

காண்பிக்கும் போது நாம் பயந்துப்போய் சுயநலம் கொண்டவர்களாக இருக்கக் கூடாது. ஆரோனை தன்னுடைய வாயாக மோசே அழைத்துச் செல்ல கர்த்தர் இரக்கமாய் அனுமதித்தார்.

## II யாத்திராகமம் (யாத்திராகமம் என்றால் வெளியே போவதற்கான வழி)

### A. யாத்திராகமம் இன்றைய உதாரணம் என்று புதிய ஏற்பாடு சொல்லுகிறது

**1 கொரிந்தியர் 10:1-2, 6** "*இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், 2 எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள்.எல்லாரும் மோசேக்குள்ளாக* ***மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்*** *பண்ணப்பட்டார்கள்... 6 அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது* "

**1 கொரிந்தியர் 10:11** "*அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்.இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.*"

### B. தேவனுடைய ஜனத்தை விடுவிக்கும்படியாக பார்வோனிடத்திலே மோசே கேட்டான்

**யாத்திராகமம் 5:1-2** " *பின்பு, மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் போய்: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் வனாந்தரத்திலே எனக்குப் பண்டிகை கொண்டாடும்படி என் ஜனங்களைப் போகவிடவேண்டும் என்று சொல்லுகிறார் என்றார்கள்.அதற்குப் பார்வோன்: நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போக விடுவதில்லை என்றான்.*"

மோசே கர்த்தருக்கு கீழ்படிந்திருந்தும் தன்னுடைய விண்ணப்பத்தை பார்வோன் மறுத்தான். அதற்குப் பதிலாக அவர்களுடைய வேலையை இன்னும் அதிகரித்தான் ஆகையால் கர்த்தருக்கு கீழ்படிந்தவுடனே ஆசீர்வாதங்களை நாம் எதிர்பார்பதுண்டு ஆனால் இது உடனே நடப்பதில்லை.

### C. எகிப்தின் 10 வாதைகள்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

கடைசி வாதையைதான் நாம் விவரித்துப் பார்க்கப் போகிறோம். யாத்திராகமம் 7-லிருந்து 12 அதிகாரங்களை தெளிவிற்காக நீங்களே வாசிக்கவும்.

1. இரத்தம்
2. தவளைகள்
3. பேன்கள்
4. ஈக்கள்
5. கால்நடைகளுக்கு உண்டான வியாதி
6. எரிபந்தமான கொப்பளங்கள்
7. கல்மழை
8. வெட்டுக்கிளிகள்
9. காரிருள்
10. தலைப்பிள்ளையின் சங்காரம்

9 முறை பார்வோன் இஸ்ரவேல் மக்களை போவதற்கு அனுமதிக்கவில்லை இதனால் தலைப்பிள்ளையின் சங்காரமாகிய மிகக் கொடூரமான 10வது வாதை நேறிற்று.

**யாத்திராகமம் 11:4-6** “ *அப்பொழுது மோசே: கர்த்தர் நடு இராத்திரியிலே நான் எகிப்தின் மத்தியில் புறப்பட்டுப் போவேன். 5 அப்பொழுது சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் ஏந்திரம் அரைக்கும் அடிமைப்பெண்ணுடைய தலைப்பிள்ளை வரைக்கும்,* ***எகிப்து தேசத்திலிருக்கிற முதற்பேறனைத்தும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தும் சாகும்*** *என்று உரைக்கிறார் என்று சொன்னதுமன்றி, 6 அதினால் எகிப்து தேசமெங்கும் முன்னும் பின்னும் ஒருக்காலும் உண்டாகாத பெரிய கூக்குரல் உண்டாகும்.*”

## D. மரண தூதனின் கடந்து செல்லுதல்

1. கர்த்தர் இஸ்ரவேல் மக்களுக்கு இரட்சிப்பின் திட்டத்தைக் கொடுத்து அவர்களுடைய இல்லங்களை மரணத்திலிருந்து பாதுகாத்தார்

**யாத்திராகமம் 12:3-7** “ *நீங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் நோக்கி: இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத் தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளக்கடவர்கள். 4 ஒரு வீட்டில் இருக்கிறவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதற்குப் போதுமான பேர்களாயிராமற் போனால், அவனும் அவன் சமீபத்திலிருக்கிற அயல் வீட்டுக்காரனும், தங்களிடத்திலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத் தக்கதாக ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ள வேண்டும்; அவனவன் புசிப்புக்குத் தக்கதாக இலக்கம் பார்த்து, ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ள வேண்டும். 5 அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்க வேண்டும்... 6 அதை இந்த மாதம் பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

*சாயங்காலத்தில் அதை அடித்து, 7 அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து.*"

**யாத்திராகமம் 12:12-13** "*அந்த ராத்திரியிலே நான் எகிப்துதேசமெங்கும் கடந்துபோய், எகிப்து தேசத்திலுள்ள மனிதர்முதல் மிருகஜீவன்கள்மட்டும், முதற்பேறாயிருக்கிறவைகளை எல்லாம் அதம்பண்ணி, எகிப்து தேவர்களின்மேல் நீதியைச் செலுத்துவேன்; நானே கர்த்தர். 13* ***நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்;*** *நான் எகிப்துதேசத்தை அழிக்கும்போது,* ***அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்***." 

**யாத்திராகமம் 12:22-23** " *ஈசோப்புக் கொழுந்துகளின் கொத்தை எடுத்து கிண்ணியில் இருக்கும் இரத்தத்தில் தோய்த்து, அதில் இருக்கும் அந்த இரத்தத்தை வாசல் நிலைக்கால்களின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் தெளியுங்கள்; விடியற்காலம் வரைக்கும் உங்களில் ஒருவரும் வீட்டு வாசலை விட்டுப் புறப்படவேண்டாம். 23 கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணுகிறதற்குக் கடந்துவருவார்; நிலையின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர் சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம்பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்துபோவார்.*"

ஒரு ஆட்டுக்குட்டியை பலி செலுத்தி அந்த ஆட்டுக் குட்டியின் இரத்தத்தை அவர்களுடைய வாசல்களில் பூசுவதே இரட்சிப்பின் திட்டமாக இருந்தது, ஆட்டுக் குட்டியின் இரத்தத்தாலே பாதுகாத்த இல்லங்களில் மாத்திரம் தான் மரணத்திலிருந்து விலக்கம் என்பது கவனத்திற்குரிய காரியம்.

2. ஆட்டுக்குட்டியின் இரத்தம்

கல்வாரியிலே அவருடைய மரணத்தை முன்குறிக்கும்படியாக கர்த்தர் இந்த சம்பவத்தை நிகழச் செய்தார். இதன் மூலமாக அவருடைய இரத்தம் நம் மேலேப் பூசப்படுவது அவசியம் என்றும் சொன்னார். இரட்சிப்பின் யோசனையை மெய்யான தேவனுடைய ஆட்டுக்குட்டியின் மரணத்தின் மூலமாக கர்த்தர் அறிமுகப்படுத்தினார்.

**யோவான் 1:29-30** " *மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் எனக்கு முன்னிருந்தபடியால் என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர்தான்.*"

**எபிரெயர் 9:26-28** " *அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

*தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். 27 அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, 28 கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.*"

**கேள்வி :** ஆதாமும் ஏவாளும் கர்த்தருக்கு கீழ்படியாமல் போனபோது ஏதேன் தோட்டத்தில் அவர்களுக்குப் பதிலாக மரித்தது யார் ?

**பதில் :** தோல் கொடுக்கக்கூடிய ஒரு விலங்கு மரித்து அவர்களுக்கு தோல் வஸ்திரம் கொடுத்தது.

**கேள்வி :** காயினுடைய பலியை மறுதலித்து ஆபேலுடைய பலியை ஏற்றுக் கொண்டதற்கான காரணம் என்ன?

**பதில் :** காயீன் இரத்தம் இல்லாத ஏற்றுக் கொள்ளப் படாத பலியை சபித்த நிலத்தின் பலியைக் கொண்டுவந்தான் இதில் கர்த்தருக்குப் பிரியமில்லை ஆனால் ஆபேல் ஒரு விலங்கின் பலியைக் கொண்டுவந்தான்.

**கேள்வி :** எகிப்திலே இருந்த இஸ்ரவேல் மக்களின் வீடுகளின் வாசற்காலிலே ஆட்டுக் குட்டியின் இரத்தம் ஏன் பூசப்பட வேண்டுமென்று கர்த்தர் கூறினார்?

**பதில் :** இஸ்ரவேலருக்குப் பதிலாக ஏதோ ஒன்று மரித்தது என்று அவர்கள் கண்டு நினைவுகூறும்படியாக கர்த்தர் இதைச் சொன்னார். மனுஷனாக வந்து சிலுவையில் நம் பாவங்களுக்காக மரிக்கும் அந்த நாளை முன் குறிக்கிறதாகவும் கர்த்தர் இதைச் செய்தார்.

இல்லங்களிலே இரத்தம் பூசப்படாவிட்டால் தலைப்பிள்ளை மரித்துவிடும். ஏன்? இல்லத்திற்குரிய ஆவிக்குரிய தலைமைத்துவத்தை தலைப்பிள்ளை சட்டப்படியாகப் பெற்றுக் கொள்வான் (இதில் கடந்தகால உடன்படிக்கைகளும் கர்த்தருடைய எல்லா உடன்படிக்கைகளும் அடங்கி இருக்கும்) ஆகையால் அந்த முழு இல்லமும் கர்த்தருடைய இரத்தத்தை மறுதலித்த அடையாளமாக மரணம் இருந்தது. இதினிமித்தமாக இரட்சிப்பின் திட்டமும் உண்டாயிருந்தது. கர்த்தருக்கு கீழ்படிவதாக நாம் எடுக்கும் முடிவுகள் நம்மை மாத்திரம் ஆசீர்வதிக்காமல் நமக்கு நெருங்கி

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

இருக்கிற நபர்களையும் ஆசீர்வதித்து பாதுகாக்கும் என்பதை புரிந்துக்கொள்வது மிகவும் முக்கியம்.

இந்த காலக்கட்டம் முதற்கொண்டு வேதாகமம் முழுவதும் 'எகிப்து' பாவத்தின் அடையாளமாக மாறிவிட்டது. இஸ்ரவேல் ஜனத்தின் பாவத்திற்காக விலங்குகளை பலி செலுத்தும்படியாக கர்த்தர் கட்டளையிட்டார். இது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மரிக்கும் வரை நடந்துக் கொண்டிருந்தது.



**சாவி # 3** **<u>நம் பாவங்களை நீக்கி இரட்சிப்பை கொண்டுவருவது நம் ஆண்டவராகிய இயேசுவின் இரத்தம் மாத்திரமே.</u>**

3. கர்த்தர் கட்டளையிட்டப்படியே இஸ்ரவேல் மக்கள் செய்தார்கள்

**யாத்திராகமம் 12:28** "*இஸ்ரவேல் புத்திரர் போய் அப்படியே செய்தார்கள்; கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.*"

கர்த்தரை விசுவாசத்தோடே கீழ்படிந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இரட்சிப்பு மற்றும் விடுதலையைப் பெற்றுக் கொண்டார்கள்.

4. நியாயத்தீர்ப்பு


**யாத்திராகமம் 12:29-31** "*நடுராத்திரியிலே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் காவல் கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளை வரைக்கும், எகிப்து தேசத்தில் இருந்த முதற்பேறனைத்தையும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தர் அழித்தார்.அப்பொழுது பார்வோனும் அவனுடைய சகல ஊழியக்காரரும் எகிப்தியர் யாவரும் இராத்திரியிலே எழுந்திருந்தார்கள்; மகா கூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று; சாவில்லாத ஒரு வீடும் இருந்ததில்லை.இராத்திரியிலே அவன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து: நீங்களும் இஸ்ரவேல் புத்திரரும் எழுந்து, என் ஜனங்களைவிட்டுப், புறப்பட்டுப்போய், நீங்கள் சொன்னபடியே கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள்.*"

இரத்தம் சிந்துதல் மாத்திரம் போதாமல் அந்த இரத்தம் பூசவும் பட வேண்டும். கர்த்தர் சொன்னதை இவர்கள் கீழ்படியாமற்போய் இருந்தால் அநேகர் தன் ஜீவனை இழந்திருப்பார்கள். புதிய ஏற்பாட்டின் ஞானஸ்நானத்தின் போது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் அதாவது ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

பூசப்படுகிறது (வெளி 7:14 அப்போஸ்தலர் 2:38 எபிரெயர் 9:22 அப்போஸ்தலர் 22:16 இவைகளைப் பார்க்கவும்)



**சாவி # 4** **<u>தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் கீழ்படிதல் எப்பொழுதும் ஒரு பங்காக இருக்கிறது.</u>**

### E. எகிப்தைவிட்டு இஸ்ரவேல் மக்கள் கடந்துப் போனார்கள்

இஸ்ரவேல் மக்களை விடுவிக்கும்படியாக பார்வோன் கடைசியில் ஒத்துக்கொண்டான்.

**யாத்திராகமம் 13:17-21** “ *பார்வோன் ஜனங்களைப் போக விட்டபின் . . . தேவன் அவர்களை அந்த வழியாய் நடத்தாமல்,சிவந்த சமுத்திரத்தின் வனாந்தர வழியாய் ஜனங்களைச் சுற்றிப் போகப் பண்ணினார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து அணியணியாய்ப் புறப்பட்டுப்போனார்கள்... 21 ... அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்.*”

## III வனாந்திரத்திலே இஸ்ரவேல்

### A. சிவந்த சமுத்திரத்தை தாண்டுதல்

பார்வோன் தனது மனதை மாற்றி மீண்டுமாக இஸ்ரவேல் மக்களைப் பின் தொடர்ந்து சென்று எகிப்துக்குக் கொண்டு வர முயற்சித்தான் ஆனால் கர்த்தரோ மிகுந்த வல்லமையோடுகூட இஸ்ரவேல் மக்களை விடுவித்தார். கர்த்தருக்குக் கீழ்படிகிறவர்கள் அவருடைய பாதுகாப்பை நிச்சயமாகப் பெற்றுக் கொள்வார்கள்.

**யாத்திராகமம் 14:19-26, 28** “ *அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடந்தார்; அவர்களுக்கு முன் இருந்த மேக ஸ்தம்பமும் விலகி, அவர்கள் பின்னே நின்றது. 20 அது எகிப்தியரின் சேனையும் இஸ்ரவேலரின் சேனையும் இராமுழுதும் ஒன்றோடொன்று சேராதபடி அவைகள் நடுவில் வந்தது; எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது, இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று. 21 மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டுபோகப் பண்ணினார்; ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று. 22 <u>இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோனார்கள்; அவர்கள் வலதுபுறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது.</u> 23 அப்பொழுது எகிப்தியர் அவர்களைத் தொடர்ந்து, பார்வோனுடைய சகல குதிரைகளோடும் இரதங்களோடும்*


# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

*குதிரைவீரரோடும் அவர்கள் பிறகாலே சமுத்திரத்தின் நடுவே பிரவேசித்தார்கள். 24 கிழக்கு வெளுத்துவரும் ஜாமத்தில் கர்த்தர் அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து எகிப்தியரின் சேனையைப் பார்த்து, அவர்கள் சேனையைக் கலங்கடித்து,அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழலவும், 25 அவர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும் பண்ணினார்; அப்பொழுது எகிப்தியர்: இஸ்ரவேலரைவிட்டு ஓடிப்போவோம், கர்த்தர் அவர்களுக்குத் துணைநின்று எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார் என்றார்கள். 26 கர்த்தர் மோசேயை நோக்கி: ஜலம் எகிப்தியர்மேலும் அவர்களுடைய இரதங்கள்மேலும் அவர்களுடைய குதிரைவீரர் மேலும் திரும்பும்படிக்கு, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டு என்றார்...28 ஜலம் திரும்பிவந்து, இரதங்களையும் குதிரைவீரரையும், அவர்கள் பின்னாகச் சமுத்திரத்தில் பிரவேசித்திருந்த பார்வோனுடைய இராணுவம் அனைத்தையும் மூடிக்கொண்டது; அவர்களில் ஒருவனாகிலும் தப்பவில்லை.*"

### B. இஸ்ரவேல் மக்களின் எல்லாத்தேவைகளையும் கர்த்தர் சந்தித்தார்.

- கசப்பானத் தண்ணீர் மதுரமாக மாற்றப்பட்டது - (யதாத்திராகமம் 15:23-26) அற்புதத்தின் தண்ணீரைக் கர்த்தர் கொடுத்தார்.
- மன்னாவையும் காடையையும் கொடுத்தார் - (யாத்திராகமம் 16:1-20) அற்புத உணவை கர்த்தர் கொடுத்தார்.
- கன்மலையிலிருந்து தண்ணீரைப் புறப்பட செய்தார் - (யாத்திராகமம் 17:1,6) மறுபடியுமாக அற்புதத்தின் தண்ணீரைக் கர்த்தர் கொடுத்தார்.


**சாவி # 5** <u>**நம்முடைய எல்லாத் தேவைகளையும் கர்த்தர் சந்திப்பார்.**</u>

பழைய ஏற்பாட்டில் மேற்கண்ட உதாரணங்களைக் கொண்டு நம் தேவைகள் எல்லாவற்றையும் சந்திப்பார் என்று கர்த்தர் காண்பிக்கிறார்.

### C. சீனாய் மலையிலே இஸ்ரவேல்

எகிப்தை விட்டுக் கடந்து சென்ற 50 நாட்கள் நிறைவிலே சீனாய் மலைக்குக் கர்த்தர் மோசேயை அழைத்து பத்துக் கற்பலகைகளைக் கொடுத்தார். இவைகள் இஸ்ரவேல் தேசத்தின் சடங்காச்சாரம் மற்றும் சமூக சட்டத்தையும் கொண்டுள்ளவைகளாகும் தேவனுடைய கூடாரத்தை கட்டுவதற்கான திட்டமும் கொடுத்தார்.

**யாத்திராகமம் 32:15-16** " *பின்பு மோசே மலையிலிருந்து இறங்கினான்; சாட்சிப்பலகைகள் இரண்டும் அவன் கையில் இருந்தது; அந்தப் பலகைகள் இருபுறமும் எழுதப்பட்டிருந்தது, அவைகள் இந்தப் பக்கத்திலும் அந்தப் பக்கத்திலும் எழுதப்பட்டிருந்தது.அந்தப் பலகைகள் தேவனால் செய்யப்பட்டதாயும், அவைகளிலே பதிந்த எழுத்து தேவனால் எழுதப்பட்ட எழுத்துமாயிருந்தது.*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

பாவத்தை சுட்டிக் காட்டவும் பரிசுத்த வாழ்க்கையை வாழ்வதற்கு மனிதன் எடுக்கும் முயற்சிகளில் ஏற்படும் குறைகளையும் காண்பிக்கச் சட்டம் கொடுக்கப்பட்டது. (அந்நாட்களிலே தேவனுடைய ஆவியின் நிறைவு இல்லை)

**ஆசிரியர் குறிப்பு:10 கட்டளைகளையும் ஒவ்வொண்றாக விவரித்து மறுபரீசிலனைச் செய்யவும்!**

**1. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். (யாத் 20:3)**

(பொய் தேவர்கள் பணம் வெற்றி வேலை வாழ்க்கை படிப்பு குடும்பம் கணவன் மனைவி ஆண் சிநேகிதர்கள் பெண் சிநேகிதர்கள் பிள்ளைகள் உடமைகள் வீடுகள் போன்ற யாவையும் கர்த்தருக்கு மேல் முக்கியத்துவம் கொடுக்காமல் இருக்க வேண்டும்)

**2. சொரூபமான தேவர்களை உண்டாக்காமல் இருப்பீராக (யாத் 20:4)**

(மரித்து போன சிலைகளை வனங்குதல் சாஷ்டாங்கமாக விழுதல் சம்பிரதாயம் மற்றும் கலாச்சாரத்தின் மூலம் உன்டான சேவிப்பு சிலுவையை கூட வணங்காமல் இருக்கவேண்டும் இந்த கட்டளைக்கு அர்த்தம் இதுவே)

**3. கர்த்தருடைய நாமத்தை வீணிலே வணங்காதிருப்பாயாக (யாத் 20:7)**

(ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தை விருதாவாகச் சொல்வதோ அல்லது சபிக்கும்படியாகச் சொல்வதோ கூடாத காரியம் அவருடைய நாமத்தை பரிசுத்தத்தோடும் பக்தியோடும் பாவிக்க வேண்டும். அவருடைய நாமத்தின் வல்லமைகள் மூலம் ஜெபங்கள் கேட்கப்படும்)

**4. ஓய்வுநாளை அனுசரித்து அதை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும் (யாத்திராகமம் 20:8 கொலோ 2:14)**

(பரிசுத்த ஆவியினாலே ஒவ்வொரு நாளும் ஓய்வு நாளைப் போல உண்டாயிருக்கிறது)

**5. தகப்பனையும் தாயையும் கனம்பண்னுங்கள் அப்பொழுது உங்கள் நாட்கள் பூமியில் நீடிக்கும் (யாத் 20:12)**

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

(வாக்குத்தத்தத்தோடு கூட கொடுக்கப்பட்ட முதல் கட்டளை இதுவே)

**6. கொலை செய்யாதிருப்பாயாக (யாத் 20:13)**

(முன் குறித்து திட்டம் தீட்டி கொலைச் செய்வது தவறு. ஒருவரை நாம் நாவாலேக்கூட கொலை செய்ய முடியும் நீதிமொழிகள் 18:21)

**7. விபச்சாரம் செய்யாமல் இருப்பாயாக (யாத் 20:14)**

(திருமணத்திற்கு முன் அல்லது திருமணத்திற்குப்பின் தவறான உறவுக் கொள்ளுதல் ஆபாசப் படங்கள் பார்த்தல் ஸ்திரிகள் மேல் மோகம் கொண்டு கண்களினாலே விபச்சாரம் செய்தல் மத்தேயு 5:28 திருமணம் ஆகாமல் இருக்கும் போது ஒருவரில் தவறான சரீரப்பிரகாரமான இச்சைகளைத் தூண்டுதல் மற்றும் உடல் உறவுக் கொள்ளுதல் பாவம்)

**8. களவு செய்யாமல் இருப்பாயாக ( யாத் 20:15)**

(மற்றவர்களுக்கு உரியதை நாம் எடுத்துக் கொள்ளுதல் ஊதியம் வாங்காமல் சில காரியங்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேலை செய்யாமல் காரியங்களைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றவர்களுடைய நேரத்தை களவு செய்தல் உதாரணமாக வேலைக்கு தாமதமாகச் சென்று நேரத்தை களவு செய்வது போன்றவைகளாகும்)

**9. பிறனுக்கு விரோதமாக பொய்சாட்சி சொல்லாதிருக்க வேண்டும் (யாத் 20:16)**

(மற்றவர்களைக் குறித்து புறம் கூறுவது பொய் சொல்லுவது வதந்திகளைப் பரப்புவது போன்றக்காரியங்களாகும்)

**10. பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக (யாத் 20:17)**

நமக்குரியவைகளல்லாத மற்றவர்களின் காரியங்களை வாஞ்சிப்பது தவறு. இச்சைக் கொள்வதின் மூலம் திருட்டு கொலை விபச்சாரம் போன்ற பாவங்களிலே ஈடுபட முடியும்

**கலாத்தியர் 3:24** “ *இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது.* ”

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

துரதிஷ்டவசமாக நாம் ஒவ்வொருவரும் இந்த 10 கட்டளைகளை உடைத்திருக்கிறோம். ஆனால் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் மூலமாக இரட்சிப்பைக் கொடுத்து தேவன் நம்மை தப்புவிக்க வழி செய்திருக்கிறார்.



**சாவி # 6: <u>10 கட்டளைகளை உடைப்பது இன்றைக்கும் பாவமாகும்.</u>**

### D. வனாந்திரத்திலே பின் திரும்பி இஸ்ரவேல் மரித்துப்போனது

எகிப்தை விட்டு சென்றவுடன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன் கடைசித் முறையாக இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியண்டை வழிநடத்தப்பட்டார்கள். மோசேயினால் வேவு பார்க்க அனுப்பபட்டவர்கள் பாலும் தேனும் ஓடுகிற (செழிப்புள்ள நிலம்) தேசத்தைக் குறித்துச் சொன்னார்கள் அதே சமயத்தில் அந்த நிலத்தில் வசிக்கும் பலவான்களைக் குறித்தும் மகாப்பெரிதான அரணிப்பான பட்டணங்களைக் குறித்தும் சொன்னார்கள். இதைக்கேட்ட மாத்திரத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் பயம் கொண்டு இந்த பட்டணத்திற்குள் பிரவேசிப்பதில்லை என்று முடிவெடுத்தார்கள்.

**எண்ணாகமம் 13:27-33** "*அவர்கள் மோசேயை நோக்கி: நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய்வந்தோம்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான்; இது அதினுடைய கனி. 28 ஆனாலும், அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள்; பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது.....30 அப்பொழுது காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி: நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம் என்றான். 31 அவனோடேகூடப் போய்வந்த மனிதரோ: நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் என்றார்கள். 32 நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்துவந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்; நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள். 33 அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம் என்று சொல்லி, இப்படி இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப்பார்த்துவந்த தேசத்தைக்குறித்து துர்ச்செய்தி பரம்பச்செய்தார்கள்.*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4

**எண்ணாகமம் 14:4** "*பின்பு அவர்கள்: நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்குத் திரும்பிப்போவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.*"

கர்த்தர் அநேக அற்புதங்களைச் செய்வதை இஸ்ரவேல் மக்கள் கண்டிருந்தார்கள் ஆனால் தேவனுடைய பூரணமான திட்டத்திற்கு கீழ்படிதலோடுகூட நடக்கும் காலம் வந்தபோது அவர்கள் இடத்திலே இருந்த அவநம்பிக்கை மற்றும் தேவன் மேல் இல்லாத விசுவாசம் அவர்களைத் தடைச் செய்தது. கீழ்படிதலில்லாத இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்திலே மரித்துப் போனார்கள். நல்ல செய்தி கொண்டு வந்த யோசுவா மற்றும் காலேபு மட்டும்தான் அந்த தேசத்திற்குள் அநேக ஆண்டுகளுக்குப் பிறகு பிரவேசிக்க கர்த்தர் அனுமதித்தார்.

**எண்ணாகமம் 14:30-35** "*எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, மற்றவர்களாகிய நீங்கள் நான் உங்களைக் குடியேற்றுவேன் என்று ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் பிரவேசிப்பதில்லை.உங்கள் பிரேதங்களோ இந்த வனாந்தரத்திலே விழும்.அவைகள் வனாந்தரத்திலே விழுந்து தீருமட்டும், உங்கள் பிள்ளைகள் நாற்பதுவருஷம் வனாந்தரத்திலே திரிந்து, நீங்கள் சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள்.நீங்கள் தேசத்தை சுற்றிப்பார்த்த நாற்பதுநாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள்.கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்; எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடின இந்தப் பொல்லாத சபையார் யாவருக்கும் இப்படியே செய்வேன்; இந்த வனாந்தரத்திலே அழிவார்கள், இங்கே சாவார்கள் என்று சொல் என்றார்.*"

கர்த்தர் சத்தியத்தோடும் இரட்சிப்போடும் நம்மை அழைக்கிற சில காலங்கள் நம் வாழ்க்கையிலே உண்டாகும் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு விசுவாசம் மற்றும் கீழ்படிதல் இல்லாவிட்டால் சத்தியம் மற்றும் இரட்சிப்பைக் குறித்ததான ஞானம் விருதாவாகிவிடும் என்பதைப் புரிந்துக் கொள்வது முக்கியம் ஞானம் மாத்திரம் நம்மை இரட்சிக்காது கர்த்தருடைய வாக்குத்தத்தங்களுக்கு வெளியே மரித்த இஸ்ரவேல் மக்கள் இதற்கு உதாரணமாவார்கள். இரட்சிப்பின் ஞானத்திற்கு ஏற்ற மாதிரி நடந்துக்கொள்வதை இந்தக் காரியம் வெளிப்படுத்துகிறது. சத்தியத்தைக் கண்டு அதற்கு கீழ்படிகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் (யோசுவாவையும் காலேபையும் போல) ஆனால் இதைச் செய்யாதவர்களோ ஆயுள்நாள் முழுதும் பரதேசிகளாகத் திரிந்து கர்த்தருடைய தயவு மற்றும் இரட்சிப்பினுடைய ஆறுதல் இல்லாமல் இருப்பார்கள்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 4



சாவி # 7: **<u>வேதத்தை அறிந்து கொள்வதின் மூலம் நாம் இரட்சிக்கப்படமாட்டோம் தேவனுடைய வேதத்திற்கு கீழ்படிதலோடுகூட நடந்தால் தான் நாம் இரட்சிக்கப்படுவோம்</u>**

**ஆசிரியர் குறிப்பு: ஜெபத்தோடுகூட முடிப்பதற்கு முன் கீழ்கொடுத்துள்ள தத்துவங்களை உங்களுடைய மாணவர்கள் புரிந்துக் கொண்டார்கள் என்பதை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.**

1. இஸ்ரவேல் புத்திரர்களைக் கொல்ல முயன்றப் பார்வோனைப் போலவே நாம் கர்த்தரைப் பின் தொடர்ந்து போகவேண்டும் என்ற வாஞ்சையை சாத்தான் கொல்ல முயற்சிக்கிறான். நம் வாழ்க்கையிலே அற்புதமான காரியங்களை கர்த்தர் சிருஷ்டிக்க ஆரம்பிக்கும் போது அவன் இதைக் கண்டு நம் வாஞ்சையைக் கொல்ல முயற்சிக்கிறான் நம்மைத் தடுக்கக்கூடிய அநேக இடறல்கள் வந்தாலும் ஜெபத்தோடும் வேதவாசிப்போடும் நாம் விடாமுயற்சியாக கர்த்தரை அறிந்துக் கொள்ள வேண்டும்.

2. கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டு அதைப்பின் தொடர்ந்து போவதற்கு மோசே மிகவும் போராடினான் ஆனால் அவன் பின் தொடர்ந்து சென்ற போது அவன் ஆசீர்வதிக்கப்பட்டான். அதேபோல் அவருக்குக் கீழ்படிந்து பின் தொடர்ந்து போவோமேயானால் தேவனுடைய வார்த்தையின் மாணவர்களாகிய நாமும் ஆசீர்வதிக்கப்படுவோம்.

3. தங்கள் நிலைக்கால்களிலே ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைப் பூசி இஸ்ரவேல் மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள். இதேப்போல நம்முடைய வாழ்க்கையிலும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தைப் பூச வேண்டும்.

4. கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்கு கீழ்படிதலான விசுவாசம் இல்லாமல் போனதினால் இஸ்ரவேல் மக்கள் வனாந்திரத்திலே மரித்துப் போனார்கள். கர்த்தருடைய திட்டத்தை அறிந்த மாத்திரத்தில் நாம் விசுவாசித்துக் கீழ்படிய வேண்டும் இல்லாவிட்டால் விருதாவாகிய ஞானம் மாத்திரம் நம்மிடத்தில் இருக்கும்-இது நம்மை இரட்சிக்காது.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 5

### துரித மதிப்புரை

**1. இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து எவ்வாறு விடுவிக்கப்பட்டார்கள்?**

அநேக வாதைகளின் நிமித்தமும், மோசேயின் தலைமைத்துவத்தின் நிமித்தமும் கர்த்தராலே அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். சங்காரத் தூதனின் கடந்துச் செல்லுதல்தான் கடைசி வாதையும் மிக கொடுமையாய் இருந்தது.

**2. ஒவ்வொரு இல்லத்திலும் தலைப்பிள்ளைகளை மரணத்திலிருந்து பாதுகாக்க எந்த குறிப்பிட்ட சம்பவம் நிகழ வேண்டியதாயிருந்தது?**

ஒரு ஆட்டுக்குட்டியைப் பலி செலுத்தி இல்லத்தின் நிலைக்கால்களில் அதின் இரத்தத்தை பூச வேண்டியதாயிருந்தது

**3. சங்காரதூதன் கடந்துச் சென்று 50 நாட்களுக்குப் பிறகு எந்த குறிப்பிட்ட சம்பவம் இஸ்ரவேலருக்கு நடைபெற்றது?**

சீனாய் மலையிலே கர்த்தர் மோசேயை சந்தித்து சமூக மற்றும் சடங்காச்சாரத்தைக் குறித்ததான நியாயப்பிரமாணங்கள் அடங்கிய 10 கட்டளைகளைக் கொடுத்தார். இந்த சம்பவம் நமக்கு குறிப்பாக முக்கியமாக இருக்கிறது. ஏனென்றால் பஸ்கா பண்டிகையின் 50 நாட்கள் முடிந்தவுடன் (சிலுவையிலே கிறிஸ்து மரித்த பிறகு) முதல் கிறிஸ்தவ சபை 50 என்ற பெந்தெகொஸ்தே என்ற நாளில் பிறந்தது.

**4. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலிருந்து வேவுப் பார்க்க அனுப்பின 10 நபர்கள் எதிர் மறையான செய்தியைச் சொன்ன மாத்திரத்தில் இஸ்ரவேல் மக்களுக்கு என்ன நடந்தது?**

இதின் மூலமாக நாம் எந்த முக்கியமானப் பாடத்தைக் கற்றுக் கொள்ளமுடியும் ?

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிப்பது ஆகாதக்காரியம் என்று இஸ்ரவேல் மக்கள் நினைத்து மறுபடியுமாக எகிப்திற்கேச் செல்ல வாஞ்சித்தார்கள் இதின் நிமித்தமாக கர்த்தர் அவர்களை பரதேசிகளாகத் திரியவைத்து வனாந்திரத்திலே மரிக்கச் செய்தார். கர்த்தருடைய வெளிப்பாட்டின் திட்டத்தை நாம் கீழ்ப்படிதலான விசுவாசத்தோடுக்கூட கைக்கொள்ள வேண்டும் இல்லையென்றால் நாமும் பதில்களைத் தேடி வாழ்நாள் முழுவதும் திரிந்துக் கொண்டிருப்போம்.,

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 5

## I. கூடாரம்

கூடாரத்தை விசேஷமாக ஆராய்கிற முறை தைபாலஜி எனப்படும் (அச்சுகளின் சாஸ்திரம்) எப்படி ஜீவனை குறித்து படிப்பதற்கு ஜீவ சாஸ்திரத்தின் ஞானம் தேவையோ நட்சத்திரங்களை படிப்பதற்கு வான சாஸ்திரங்கள் தேவையோ அவ்வாறே வேதத்தில் கூறப்பட்டுள்ள அடையாளங்களை படிப்பதற்கு அச்சுகளின் சாஸ்திரம் தேவையானது. அடையாளம் என்றால் ஏதோ ஒரு காரியத்தைக் குறிக்கிறதாகும். புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள சத்தியங்களையும் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள தத்துவங்களையும் பார்ப்பதற்காக வேதாகம ரீதியாக பயன்படுத்தும் சாஸ்திரம் தான் அச்சுகளின் சாஸ்திரம். அச்சு அல்லது நிழல் பழையஏற்பாட்டில் காணப்படுகின்றது மாற்று அச்சு புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றது. ஊதாரனமாக, ஊளசங்கார தூதன் கடந்து செல்லும் போது பலி செலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டியானது இயேசு கிறிஸ்துவின் அச்சு ஆகும். மனுகுலத்தின் பாவத்தைப் போக்க சிலுவையில் அறையப்பட்ட தேவனுடைய ஆட்டுக்குட்டி ஆகிய இயேசு மாற்று அச்சு ஆவார்.



**சாவி # 1:** **<u>புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற மாற்று அச்சுவானதை வேதத்தில் பழைய ஏற்பாட்டில் காணப்படுகிற அச்சு (அ) நிழல் என்பது முன்னறிவிக்கின்றது.</u>**

### A. மோசேயினுடைய வாழ்க்கையும் இஸ்ரவேல் மக்களும் நமக்குக் கொடுக்கப்பட்ட உதாரணங்களாய் இன்றைக்கும் இருக்கின்றன என்று புதிய ஏற்பாடு சொல்லுகிறது.

(பாடம் 4-ஐ தேவையானால் மறுபடியுமாகப் படிக்கவும் இல்லையென்றால் விட்டுவிடவும்)

1 கொரிந்தியர் 10:1-2 *"இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள்."*

1 கொரிந்தியர் 10:6 *"அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது."*

1கொரிந்தியர் 10:11 *"இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது."*

### B. கூடாரத்தின் மேற்பார்வை

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 5

இஸ்ரவேல் கர்த்தரைத் துதிப்பதற்கான வழியாக கூடாரம் இருந்தது. கர்த்தர் தெளிவாக அவருடைய திசையின் படி மோசேயை கூடாரத்தை உருவாக்கச் சொன்னார். அவர் சொன்னக் காரியம் மலையின்மேல் காண்பிக்கப்பட்டதின் நிழலாக நீ எல்லாக் காரியத்தையும் செய் என்றார்.

<u>ஆசிரியர் குறிப்பு</u>

**அடுத்து வருகிற வேதப் பகுதியை மதிப்புரைச் செய்து ஒவ்வொரு காரியத்தையும் அதற்கு ஏற்றப்படங்களைக் காண்பித்து விவரிக்கவும். ஒவ்வொருக் காரியமும் தெளிவாக மதிப்புரைச் செய்யப்படும். மாணவர்களுக்கு கூடாரத்தைக் குறித்ததான ஒரு பொதுவான மேற்பார்வையை கீழ் வரும் வேதப்பகுதி கொடுக்கும். இதின் விளக்கத்தை ஒரு படம் மூலமாக காண்பிக்கவும்.**

**எபிரெயர் 9:1-9** "*அன்றியும், முதலாம் உடன்படிக்கையானது ஆராதனைக்கேற்ற முறைமைகளும் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் உடையதாயிருந்தது. எப்படியெனில், ஒரு கூடாரம் உண்டாக்கப்பட்டிருந்தது; அதின் முந்தின பாகத்தில் குத்துவிளக்கும், மேஜையும், தேவசமுகத்தப்பங்களும் இருந்தன; அது பரிசுத்த ஸ்தலமென்னப்படும். இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரம் இருந்தது. அதிலே பொன்னாற்செய்த தூபகலசமும், முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன; அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன. அதற்கு மேலே மகிமையுள்ள கேருபீன்கள் வைக்கப்பட்டுக் கிருபாசனத்தை நிழலிட்டிருந்தன; இவைகளைக் குறித்து விவரமாய்ப்பேச இப்பொழுது சமயமில்லை. இவைகள் இவ்விதமாய் ஆயத்தமாக்கப்பட்டிருக்க, ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாங்கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்கள். இரண்டாங்கூடாரத்திலே பிரதான ஆசாரியன்மாத்திரம் வருஷத்திற்கு ஒருதரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான். அதினாலே, முதலாங்கூடாரம் நிற்குமளவும் பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார். அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம்.*"

இந்தப் பாடத்திலே நாம் மேற் கொள்கிற பயணமாவது கூடாரத்திலே சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு காரியம் மற்றும் அடையாளத்தை ஆராயவதற்காகும்.. அடையாளங்கள் அவர்களுடைய காலத்திற்காக அல்ல (அவர்கள் அப்படியே கீழ்படிந்தார்கள்). ஆனால் இந்த நாட்களில் நாம் கூடாரத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று வேதாகமம் சொல்கிறது.



**சாவி # 2:** <u>இன்று இயேசுகிறிஸ்துவின் மூலம் நாம் பெறும் இரட்சிப்புக்கு கூடாரத்தில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு விவரமும் அச்சாகும். (ஒரு தீர்க்கதரிசன அடையாளம்)</u>

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 5

## C. மோசேயை கூடாரத்தைக் கட்ட கர்த்தர் கட்டளையிடுகிறார்.

கூடாரத்தைக் கட்டுவதற்குத் தேவையான சகல வஸ்துக்களையும் இஸ்ரவேல் மக்கள் தானமாக கொடுத்தார்கள்.

**யாத்திராகமம் 25:1-8** *"கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் புத்திரர் எனக்குக் காணிக்கையைக் கொண்டுவரும்படி அவர்களுக்குச் சொல்லு; மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக. நீங்கள் அவர்களிடத்தில் வாங்கவேண்டிய காணிக்கையாவன, பொன்னும், வெள்ளியும், வெண்கலமும், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும், வெள்ளாட்டுமயிரும், சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலும், தகசுத்தோலும், சீத்திம் மரமும், விளக்கெண்ணெயும், அபிஷேகதைலத்துக்குப் பரிமளவர்க்கங்களும், தூபத்துக்குச் சுகந்தவர்க்கங்களும், ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும் பதிக்கும் கோமேதகக் கற்களும் இரத்தினங்களுமே. அவர்கள் நடுவிலே நான் வாசம் பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக. நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும், அதினுடைய எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும் அதைச் செய்வீர்களாக."*

கூடாரம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் 'கூட வசிப்பது' என்பது கர்த்தர் தன் ஜனத்துடனே எப்பொழுதும் வாழ்ந்து வசிக்க வாஞ்சித்தார் என்பதை பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் கானலாம்

**யாத்திராகமம் 29:44-46** *"ஆசரிப்புக் கூடாரத்தையும் பலிபீடத்தையும் நான் பரிசுத்தமாக்குவேன்; எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, ஆரோனையும் அவன் குமாரரையும் பரிசுத்தப்படுத்தி, இஸ்ரவேல் புத்திரரின் நடுவே நான் வாசம்பண்ணி, அவர்களுக்குத் தேவனாயிருப்பேன். தங்கள் நடுவே நான் வாசம்பண்ணும்படி, தங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அவர்கள் அறிவார்கள்; நானே அவர்கள் தேவனாகிய கர்த்தர்."*

## II. வனாந்திரத்திலே கூடாரம்

### A. கூடாரமானது முழுமையாக தூக்கிச் செல்லக் கூடியதாக இருந்தது. இதை பராமரிப்பதற்கான வேலை லேவி கோத்திரத்துக்கு கொடுக்கப்பட்டது.

**யாத்திராகமம் 40: 17** *"இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல் தேதியில் வாசஸ்தலம் ஸ்தாபனம்பண்ணப்பட்டது."*

**எண்ணாகமம் 1:50-51** *"லேவியரைச் சாட்சியின் வாசஸ்தலத்திற்கும், அதினுடைய சகல பணிமுட்டுகளுக்கும், அதிலுள்ள சமஸ்த பொருள்களுக்கும் விசாரிப்புக்காரராக ஏற்படுத்து; அவர்கள் வாசஸ்தலத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும் சுமப்பார்களாக; அதினிடத்தில் ஊழியம்செய்து, வாசஸ்தலத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கக்கடவர்கள். வாசஸ்தலம்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 5


*புறப்படும்போது, லேவியர் அதை இறக்கிவைத்து, அது ஸ்தாபனம் பண்ணப்படும்போது, லேவியர் அதை எடுத்து நிறுத்தக்கடவர்கள்; அந்நியன் அதற்குச் சமீபத்தில் வந்தால் கொலைசெய்யப்படக்கடவன்."*

## B. பாளையத்தின் நடுவிலே எப்பொழுதும் கூடாரத்தை அமைக்க வேண்டும்.

**எண்ணாகமம் 2:2** *"இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின் விருதாகிய தங்கள் தங்கள் கொடியண்டையிலே தங்கள் கூடாரங்களைப் போட்டு, ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதிராகச் சுற்றிலும் பாளயமிறங்கக்கடவர்கள்."*

**கேள்வி** கூடாரத்தை பாளையத்தின் நடுவிலே வைத்து இஸ்ரவேல் மக்களின் கூடாரங்கள் அதற்கு முன்பதாக வைக்கும்படியாக கர்த்தர் சொன்னதின் காரணம் என்ன?

காலையில் எழுந்தவுடன் முதல் காரியமாக இஸ்ரவேல் மக்கள் கூடாரத்தைக் கண்டார்கள். இரவில் கடைசிகாரியமாக அவர்கள் கூடாரத்தைக் கண்டார்கள். தன் ஜனங்கள் எந்தக் காலத்திலும் கர்த்தரையே மையமாக வைத்து நோக்கி கொண்டிருக்க வேண்டும் என்பதே அவருடைய வாஞ்சை



**சாவி # 3:** <u>**நாம் எந்தக்காலத்திலும் கர்த்தரை மையமாக வைத்து நோக்கி இருக்க வேண்டும் என்பது அவருடைய வாஞ்சை**</u>

## C. கர்த்தருடைய பிரசன்னம் கூடாரத்தில் தங்குகிறது.

கூடாரத்தின் மேல் எல்லாக் காலங்களிலும் கர்த்தருடைய வெளிபடுத்தல் அங்குமிங்கும் வட்டமிட்டுக் கொண்டிருக்கும். அவர் பகலிலே மேகமாகவும் இரவிலே அக்கினி ஸ்தம்பமாகவும் தோன்றினார். (இரவின் குளிர்ச்சிக்கு அனலாகவும் பகலின் சூரியனுக்கு நிழலாகவும் அவர் இருந்தார்)

**யாத்திராகமம் 40:36-38** *"வாசஸ்தலத்திலிருந்து மேகம் மேலே எழும்பும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணப் புறப்படுவார்கள். மேகம் எழும்பாதிருந்தால், அது எழும்பும் நாள்வரைக்கும் பிரயாணம் பண்ணாதிருப்பார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் பண்ணும் எல்லாப் பிரயாணங்களிலும் அவர்களெல்லாருடைய கண்களுக்கும் பிரத்தியட்சமாகப் பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும், வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருந்தது."*

அக்கினி ஸ்தம்பமும் மேக ஸ்தம்பமும் நகருவதைப் பார்த்தவுடன் இஸ்ரவேல் மக்கள் கர்த்தர் அவர்களை கடந்து போக சொல்லுகிறார் என்பதை அறிந்திருந்தார்கள்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 5

**எண்ணாகமம் 9:21-23** *"மேகம் சாயங்காலந்தொடங்கி விடியற்காலமட்டும் இருந்து, விடியற்காலத்தில் உயர எழும்பும்போது, உடனே பிரயாணப்படுவார்கள்; பகலிலாகிலும் இரவிலாகிலும் மேகம் எழும்பும்போது பிரயாணப்படுவார்கள். மேகமானது இரண்டுநாளாவது ஒரு மாதமாவது ஒரு வருஷமாவது வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம்பண்ணாமல் பாளயமிறங்கியிருப்பார்கள்; அது உயர எழும்பும்போதோ பிரயாணப்படுவார்கள். கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்குவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியே பிரயாணம்பண்ணுவார்கள்; கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிடுகிறபடியே கர்த்தருடைய காவலைக் காத்துக்கொள்வார்கள். "*

வனாந்திரத்திலே அக்கினி ஸ்தம்பத்தையும் மேக ஸ்தம்பத்தையும் இஸ்ரவேல் ஜனங்கள் பின் தொடர்ந்தார்கள். கர்த்தராலே நடத்தப்பட்டார்கள் என்று இந்தக் காரியம் ஸ்தாபித்தது.


தேவனுடைய ஆவியை பின் தொடரும்படியான தேவையை கீழ் கொடுக்கப்பட்டுள்ள புதிய ஏற்பாட்டில் உள்ள வசனத்தில் வெளிப்படுகிறது.

**ரோமர் 8:16** *"மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். "*

நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருப்போமேயென்றால் அவரை அன்றாடம் பின் தொடரவேண்டும். (ரோமர் 8:1-5 ஐ வாசிக்கவும்) .

## III. கர்த்தருடைய சமுகத்திற்கு செல்வதற்கான பழைய ஏற்பாட்டின் வழி

**கூடாரம் கர்த்தருடைய வழியில் கட்டப்பட்டது.** (இஸ்ரவேல் மக்களின் இரட்சிப்பின் திட்டமாக இது கொடுக்கப்பட்டது என்பதை நினைவுக் கூறுங்கள்)



**சாவி # 4** **<u>பின்பற்ற வேண்டிய விவரங்களை இரட்சிப்பு எப்பொழுதும் கொண்டிருக்கும்</u>**

சிருஷ்டிப்பை முதற்கொண்டு விவரங்களின் மேல் கர்த்தர் முக்கியதுவத்தை எப்பொழுதும் வைத்திருக்கிறார்.

**யாத்திராகமம் 25:8, 9** *"அவர்கள் நடுவிலே நான் வாசம் பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக. நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும், அதினுடைய எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும் அதைச் செய்வீர்களாக."*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 5

**யாத்திராகமம் 26:30** *"இவ்விதமாக மலையின்மேல் உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே வாசஸ்தலத்தை நிறுத்துவாயாக."*

கர்த்தருடைய உத்தரவிற்கு சரியாக கூடாரம் கட்டப்பட வேண்டியதாயிருந்தது. கர்த்தருடைய வழியிலே அது கட்டப்படாதிருந்தால் அதை அவர் அங்கிகரித்திருக்க மாட்டார்.

**கேள்வி:** தன் சொந்த வழியிலே காரியங்களை செய்ய முயன்று தோல்வி அடைந்த நபர் யார் ?

காயீன்

**கேள்வி:** ஒரு முழு குடும்பத்தை இரட்.சிக்க கர்த்தருடைய திட்டத்தின்படி கட்டப்பட்ட இன்னொரு இரட்சிப்பின் பாத்திரம் யாது ?

நோவாவின் பேழை அந்த காலத்தினுடைய இரட்சிப்பின் பாத்திரமாக பேழை மட்டும் இருந்தது. ஒருவேளை சரியாக கட்டப்படாதிருந்தாலோ அல்லது அவ்வளவு பெரிதாக இல்லாமற் போயிருந்தாலோ அது முழுகியிருக்கும்.

## B. கூடாரத்தின் வாசல் : ஒரே ஒரு கதவு

**யாத்திராகமம் 33:9-10** *"மோசே கூடாரத்துக்குள் பிரவேசிக்கையில், மேகஸ்தம்பம் இறங்கி, கூடாரவாசலில் நின்றது; கர்த்தர் மோசேயோடே பேசினார். ஜனங்கள் எல்லாரும் மேகஸ்தம்பம் கூடாரவாசலில் நிற்கக்கண்டார்கள்; ஜனங்கள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தங்கள் கூடாரவாசலில் பணிந்து கொண்டார்கள்."*

கூடாரத்திற்கு செல்வதற்காக ஒரே ஒரு வழி மாத்திரமே இருந்தது என்பது குறிப்பிடத்தக்க காரியமாகும். இரட்சிப்பிற்குள்ளாக பிரவேசித்து கர்த்தரோடுகூட உறவு கொள்வதற்கு ஒரே ஒரு குறிப்பிட்ட வழிதான் இருக்கிறது என்பதை இது வெளிப்படுத்துகிறது.

**யோவான் 10:9** *"நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்புஞ்சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்."*

**யோவான் 10:1** *"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான்."*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 5

சுவிசேஷ செய்தியிலே இரட்சிப்பிற்கான ஒரே வழியைக் குறித்து அப்போஸ்தலர்களின் போதனைகளை இப்பொழுது பார்க்கலாம்.

## C. அச்சு சாஸ்திரத்திலே கூடாரம் சுவிசேஷத்திற்கு ஒரு உதாரணம் ஆகும்

1. சுவிசேஷம் என்றால் கிறிஸ்துவினுடைய 1.மரிப்பு 2.அடக்கம் 3.உயிர்த்தெழுதலாகும்

**1 கொரிந்தியர் 15:1-4** *"அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள் நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து,*
*அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து,"*

2. ஒரே ஒரு சுவிசேஷம் மாத்திரம் தான் உள்ளது ஒரே ஒரு இரட்சிப்பின் திட்டம் மாத்திரம் தான் உள்ளது.

**கலாத்தியர் 1:6-9** *" உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்."*

இரண்டு முறை அவன் சபிக்கப்பட்டவனாய் இருக்கக் கடவன் என்று இந்த வசனம் சொல்லுகிறது. அப்போஸ்தலர்களாலே பிரசங்கிக்கப்பட்ட இரட்சிப்பிற்கான சுவிசேஷ செய்தியின் அத்யாவசியமான முக்கியத்துவத்தை இது வெளிப்படுத்துகிறது. இரட்சிப்பிற்காக ஒரே ஒரு செய்திதான் உள்ளது. ஒரே சத்தியம் தான் உள்ளது என்பதை இந்த காரியம் ஸதாபிக்கிறது. கலாச்சாரத்தையொட்டி சத்தியம் மாறுவதில்லை காலப் போக்கிலும் கூட சத்தியம் மாறுவதில்லை. கர்த்தருடைய வார்த்தை ஒரு முறை பதிவிடப்பட்டு எழுத்தானால் சத்தியம் சதாக்காலத்திற்கும் ஸ்தாபிக்கப்படும். (பாடம் 1-லிருந்து இந்த தத்துவத்தை நினைவு கூறுவதில்லையா ?)

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 5

3. சுவிசேஷ செய்தியை தனிப்பட்ட முறையில் கைக்கொண்டுக் கீழ்படிய வேண்டும்

**2 தெசலோனிக்கேயர் 1:7-9** *"தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது,"*

தேவனை அறிவதற்கு அர்த்தம் அவரோடுகூட நெருக்கமாக இருப்பது இந்த நெருக்கம் இயேசு கிறிஸ்துவின் மூலம் அளிக்கப்ட்ட சுவிசேஷ செய்திக்கு கீழ்படிந்தால்தான் பெற்றுக் கொள்ள முடியும்.



சாவி # 5: <u>**நாம் இரட்சிக்கப்படுவதற்கு இயேசுகிறிஸ்துவினுடைய மரிப்பு அடக்கம் உயிர்த்தெழுதலை நாம் தனிப்பட்ட முறையில் கைக்கொள்ள வேண்டும்.**</u>

## IV: வெண்கல பலிபீடம்

### A. வெண்கலப் பலிபீடத்தை கட்டுவதற்காக கர்த்தர் கொடுத்த குறிப்பிட்ட கட்டளைகள்.

**யாத்திராகமம் 27:1-2** *"ஐந்து முழ நீளமும் ஐந்து முழ அகலமுமாக சீத்திம் மரத்தால் பலிபீடத்தையும் உண்டுபண்ணுவாயாக; அது சதுரமும் மூன்று முழ உயரமுமாயிருப்பதாக. அதின் நாலு மூலைகளிலும் நாலு கொம்புகளை உண்டாக்குவாயாக; அதின் கொம்புகள் அதனோடே ஏகமாய் இருக்கவேண்டும்; அதை வெண்கலத் தகட்டால் மூடவேண்டும்."*

## B. மரணத்தின் இடம்

**லேவியராகமம் 17:11** *"மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே."*

இந்த பலிப்பீடத்தின் மேல் மிருகங்களை சர்வாங்க தகன பலியாக செலுத்தப்பட வேண்டியிருந்தது.. வருஷத்துக்கு ஒரு முறை பிராயசித்தத்தின் நாளில் பிரதான ஆசாரியன் பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமான இடத்தில் வைக்கப்பட்ட கிருபாசனத்தின் மேலேயும் உடன்படிக்கைப் பெட்டியின் மேலேயும் இரத்தத்தை எடுத்துச் சென்று

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 5

தெளிப்பான் இதை செய்வதின் நிமித்தம் இஸ்ரவேல் மக்களுடையப் பாவங்கள் ஓராண்டுக் காலம் முன்பதாக தள்ளிவைக்கப்பட்டிருந்தது. ஆதாம் ஏவாளுடைய நாட்களிலிருந்தே பாவத்திடிற்கும் கீழ்படியாமைக்கும் தண்டனை மரணமாக இருந்தது. பாவம் செய்தும் ஆதாமும்., ஏவாளும் பிழைத்ததற்கான காரணம் அவர்களுக்குப் பதிலாக ஒரு விலங்கு அந்த இடத்திலே மரித்ததேயாகும்.. கூடாரத் திட்டத்துடனே மிருகங்களை வழக்கமான முறையில் பாவங்களுக்காக பலி செலுத்தும் பழக்கத்தை கர்த்தர் உருவாக்கினார்.

## C. இயேசுவின் இரத்தத்தை குறித்ததான புதிய ஏற்பாட்டில் காணப்படும் வேதப் பகுதிகள்.

ஒவ்வொரு முறையும் ஒரு அப்பாவியான மிருகத்திற்கு மரணம் நிகழும்போதெல்லாம் ஒரு நாள் கர்த்தர் வந்து அவருடைய சொந்த ஜீவனைக் கொடுத்து விலை கிரயத்தைச் செலுத்துவார் என்பதை உலகத்திற்கு காண்பிக்கின்ற அடையாளமாக இருந்தது. ஆனால் இன்றைக்கோ மிருகபலிகள் நமக்குத் தேவையில்லை அதேப்போல பாவத்திற்காக நாம் தண்டிக்கப்படவும் தேவையில்லை கர்த்தரோடுகூட உறவுக் கொள்ள கீழபடிதலோடு அவருடைய சொந்த பலியை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**யோவான் 1:29** *"மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி."*

**1 பேதுரு 1:18-19** *"உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்,குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே."*

**எபிரெயர் 9:12** *"வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்."*

ஆதாமும் ஏவாளும் அவர்களுடைய இடத்திலே மரித்த மிருகத்தினுடைய தோலை ஆடையாக அணிந்துக் கொண்டார்கள் சங்காரத்தூதன் எகிப்திலே கடந்து சென்ற போது இல்லத்தின் நிலைக்கால்களிலே ஆட்டுக்குட்டியின் இரத்ததில் பூசப்பட்டது.
அதேப்போல இன்றைக்கும் அதே மாதிரியாக மனுகுலத்திற்காக சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தத்தை நாம் பூசிக் கொள்ள வேண்டும் (இரத்தம் பூசுதலின் குறித்ததான விவரங்கள் பாடம் 7-ல் கற்பிக்கப்படும்) கூடாரத்தின் நிழலாட்டமாக இருக்கிற சுவிசேஷத்தின் செய்திக்கு கீழ்படியும் போது நாம் இதைச் செய்கிறோம்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 5

## D. சுவிசேஷத்தில் மரணப்பகுதிதான் பலிப்பீடம் (மனந்திரும்புதல்)

பலிப்பீடத்தோடும் இயேசுவின் மரணத்தோடும் நாம் மனந்திரும்புதலின் மூலமாக முழுதும் ஒத்திருத்தலாக இருக்க முடியும். இது நம்முடைய மரணத்தின் இடம். நாம் வாழ்ந்துக் கொண்டிருந்த பழைய வழிகளைவிட்டு மரித்து மனந்திரும்புதலின் மூலமாக ஒரு புதிய வாழ்க்கையை நாம் பெற்றுக் கொள்ளலாம். மனந்திரும்புதலை இயேசு கட்டளையிட்டார்

**லூக்கா 13:3** *"அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்."*


வனாந்திரத்திலே 40 நாட்கள் உபவாசித்து சாத்தானுடைய சோதனையிலிருந்து ஜெயம் பெற்று இயேசு ஜனங்களிடத்தில் திரும்பினவுடன் மனந்திரும்புதலின் அவசியத்தைக் கற்றுக் கொடுத்தார்

**மாற்கு 1:15** *"காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; **மனந்திரும்பி**, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்."*

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அப்போஸ்தலனாகிய பேதுரு இரட்சிப்பின் முதல் செய்தியைக் கொடுக்கும் போது மனந்திரும்புதலை கட்டளையிட்டார்.

**அப்போஸ்தலர் 2:38** *" பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்."*

மனந்திரும்புதல் என்றால் என்ன? மனந்திரும்புதல் இரண்டு பகுதிகளை உடையதாகும் (1) தேவனிடத்திலே பாவங்களுக்காக மன்னிப்பைப் கேட்பது ஒரு பகுதி (11) பாவத்தைவிட்டுத் திரும்பி (180 தேவனை நேர்க்கி திருமபுவது இரணடாம் பகுதியாகும்., மனந்திரும்பும்போது கர்த்தருக்குப் பிரியமாக வர்ழ்ந்து நம் பழையவழிகளைவீட்டு மரிப்பதை. நாம் தேர்ந்தெடுக்கிறோம. மனந்திரும்பும்போது இயேசுகிறிஸ்துவின் மரணத்தை நம் வாழ்க்கையிலே நாம் கைக்கொள்கிறோம்.



**சாவி # 6** **<u>பலிப் பீடத்தின் நிறைவேறுதல் அல்லது மாதிரி அச்சு மனந்திரும்புதலாகும்.</u>**

## V. தண்ணீர் நிறைந்த வெண்கலத் தொட்டி

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 5

## A. சுத்திகரிக்கவும் கழுவுகிறதற்கும் இடமாக வெண்கலப் பலிப்பீடம் இருந்தது

**யாதத்திராகமம் 30:17-19** *"பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: கழுவுகிறதற்கு வெண்கலத்தால் ஒரு தொட்டியையும், வெண்கலத்தால் அதின் பாதத்தையும் உண்டாக்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்ப்பாயாக. அதனிடத்தில் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள்."*

**கேள்வி:** ஆசாரியர்கள் தண்ணீர் நிறைந்த வெண்கலத் தொட்டியில் கழுவுகிறதை மீறிச் சென்றால் என்ன நேரிடும் ?
அவர்கள் மரித்திட்டார்கள்.

**யாத்திராகமம் 30:20-21** *"அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்போதும், கர்த்தருக்குத் தகனத்தைக் கொளுத்தவும் பலிபீடத்தினிடத்தில் ஆராதனைசெய்யவும் சேரும்போதும், அவர்கள் சாகாதபடிக்குத் தண்ணீரினால் தங்களைக் கழுவக்கடவர்கள். அவர்கள் சாகாதபடிக்குத் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள்; இது தலைமுறைதோறும் அவனுக்கும் அவன் சந்ததியாருக்கும் நித்திய கட்டளையாயிருக்கும் என்றார்."*

கூடாரத்தில் உள்ள பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பதாக ஆசாரியர்கள் கர்த்தருடைய கட்டளைகளின்படியே தண்ணீர் நிறைந்த வெண்கலத் தொட்டியில் அவர்களை சுத்திகரிக்க வேண்டியிருந்தது. இல்லையென்றால் அவர்கள் மரித்து போவார்கள். பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் அடங்கி இருந்த கர்த்தருடைய பிரசன்னத்திற்குள்ளாகவும் ஆசாரியர்களும் பிரதான ஆசாரியர்களும் கடந்து செல்வதற்கு முன் அவர்களை ஆயத்தப்பபடுத்தி சுத்திகரிக்கும் இடம்தான் இந்தத் தொட்டி.

## B. ஜலத்தின் மூலமாக எடுக்கும் ஞானஸ்நானத்தில் நாம் கழுவப்படுகிறோம்.

தண்ணீர் நிறைந்த வெண்கலத் தொட்டியின் நிறை வேறுதலும் அல்லது மாதிரி அச்சுமாக புதிய ஏற்பாட்டின் ஞானஸ்நானமாகும்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 5

**மாற்கு 16:16** *"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்."*

தண்ணீர் மாத்திரம் பாவத்தைக் கழுவாது. விசுவாசம் மாத்திரம் பாவத்தைக் கழுவாது ஆனால் இயேசுவின் நாமத்தின் வல்லமையின் மேல் உள்ள விசுவாசம் ஞானஸ்நானத்தின் போது பாவங்களை கழுவும். இஸ்ரவேல் மக்களின் இல்லங்களில் உள்ள நிலைக்கால்களில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் எவ்வாறாக பூசப்பட்டதோ ஞானஸ்நானத்தின் போது இயேசுவின் இரத்தம் நம் வாழ்க்கையில் பூசப்படுகிறது. ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் மூலமாக அவர்கள் எப்படி இரட்சிக்கப்பட்டார்களோ அதின் மாதிரி அச்சான ஞானஸ்நானத்தின் மூலம் நாம் இரட்சிக்கப்படுகிறோம்.

**அப்போஸ்தலர் 22:16** *"இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து* ***கர்த்தருடைய*** *நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்."*

**அப்போஸ்தலர் 2:38** *"பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்."*

**1பேதுரு 3:21** *"உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்."*

## C. சுவிசேஷத்தின் அடக்கத்தின் பகுதியை ஞானஸ்நானமானது பூரணமாக்குகிறது.

**ரோமர் 6:3-4** *"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்."*

நாம் ஞானஸ்நானம் பெறும்போது சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்துவின் அடக்கத்திலே பங்குள்ளவர்களாய் நாமும் கலந்துக் கொள்கிறோம்



சாவி # 7: **<u>தண்ணீர் நிறைந்த வெண்கலத் தொட்டியின் மாதிரி அச்சுதான் இயேசுவின் நாமத்தில் எடுக்கும் ஞனாஸ்நானமாகும்.</u>**

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 5

## VI. பரிசுத்தஸ்தலம்

### A. பசும் பொன் குத்துவிளக்கு (யாத்திராகமம் 25:31-37)

பரிசுத்த ஸ்தலத்தின் இருந்த ஒரே வெளிச்சமாக அந்த குத்துவிளக்கு இருந்ததது. அது அனைந்து போகவே இல்லை உலகத்தின் மெய்யான வெளிச்சமாக வந்த இயேசுவை இது குறிக்கிறது (மாதிரி) அவருடைய ஒளி என்றைக்கும் மறையாது.

**யோவான் 8:12** *"மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்."*

### B. சமூகத்தப்பங்களை வைக்கும் மேஜை (யர்த்திராகமம் 25:23-30)

பரிசுத்த ஸ்தலத்திலே ஒவ்வொரு கோத்திரத்தைக் குறிப்பதற்கு ஒரு மேஜையின்மேல் பன்னிரண்டு சமூகத்தப்பங்கள் வைக்கப்பட்டிருந்தது. எல்லா ஓய்வு நாளிலும் இந்த அப்பம் நிரப்பப்பட்டு பிரதான ஆசாரியருக்கும் அவன் குமாரர்களுக்கும் பரிசுத்த ஸ்தலத்தில் உண்பதற்காக உணவாக கொடுக்கப்பட்டது. பசியாக இருக்கிற ஆத்துமாவிற்கு உணவாகவும் ஜீவ அப்பமுமான இயேசுவின் மாதிரியாக இந்த சமூகத்தப்பம் இருந்தது.

**யோவான் 6:35** *"இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்."*

**லூக்கா 4:4** *"அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்."*

இன்றைக்கு எல்லா நாட்களுமே ஆவிக்கரிய ஓய்வுநாளாய் இருக்கிறது. நம் ஜீவ அப்பமாகிய இயேசு நமக்கு எல்லா நாட்களிலும் இருக்கிறார். எந்த சமயத்தில் நமக்கு என்னத் தேவையோ அந்தத் தேவையாக இயேசு இருக்கிறார். அவரிலே நாம் நிறைந்து இருந்தோமேயானால் நம் வாழ்க்கைகள் வெறுமையாக இருக்காது.

### C. தூபப் பலிபீடம் (யாத்திராகமம் 30:1-10)

கர்த்தரோடுகூட தினந்தோறும் பேச்சுவார்த்தைக்கான இடம் தூபப் பலிபீடத்தாலே குறிக்கப்படுகிறது தூபம் தினசரி ஏற்றப்பட்டது நம்முடைய அன்றாட ஜெபங்களின் மாதிரியாக இந்த தூபம் இருந்தது.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 5

**வெளி 5:8** *"அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு, ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாக வணக்கமாய் விழுந்து:"*

தொடர்ச்சியான நம்முடைய ஜெபங்களையும் மற்றும் துதியின் அவசியத்தையும் நாள் தோறும் எரிகின்ற இந்த தூபம் குறிக்கிறது.

**எபிரெயர் 13:15** *"ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்."*

**1 தெசலோனிக்கேயர் 5:17-18** *"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது."*

இந்த தூபப் பலிபீடம் பரிசுத்த ஸ்தலத்தை பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமுள்ள ஸ்தலத்திலிருந்து பிரிக்கிறதான திரைச்சீலையின் முன்பதாக வைக்கப்பட்டது. இது உடன்படிக்கைப் பெட்டிக்கு மிக சமீபமாக இருந்தது அதே போல ஜெபத்தின் மூலமாக கர்த்தரை நாம் நேராக கண்டடையமுடியும்.

**யாத்திராகமம் 30:6** *"சாட்சிப்பெட்டிக்கு முன்னிருக்கும் திரைச்சீலைக்கும், நான் உன்னைச் சந்திக்கும் இடமாகிய சாட்சி சந்நிதியின்மேலுள்ள கிருபாசனத்துக்கும் முன்பாக அதை வைக்கக்கடவாய்."*

**எபிரெயர் 4:16** *"ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்."*

## VII. பரிசுத்தத்தின் மேல் பரிசுத்த ஸ்தலம் (கர்த்தருடைய பிரசன்னம் தங்கும் வீடு)

### A. பரிசுத்த ஸ்தலத்தை பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமான ஸ்தலத்திற்கு பிரிப்பதற்காக ஒரு திரைச்சீலை இருந்தது.

**யாத்திராகமம் 26:33** *"கொக்கிகளின்கீழே அந்தத் திரைச்சீலையைத் தொங்கவிட்டு, சாட்சிப்பெட்டியை அங்கே திரைக்குள்ளாக வைக்கக்கடவாய்; அந்தத் திரைச்சீலை பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் பிரிவை உண்டாக்கும்."*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 5

**கேள்வி:** திலைச்சீலையின் மறு புறத்திலே என்ன இருந்தது?

கர்த்தருடைய ஆவி.

**கேள்வி:** திலைச்சீலை எதின் மாதிரியாக இருந்தது?

இயேசுவின் மாமிசத்தை குறிக்கிறதாக திரைச்சீலை இருந்தது.

**எபிரெயர் 10:19-20** *"ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்,"*

**மாற்கு 15:37-38** *"இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஜீவனை விட்டார். அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது."*

கிறிஸ்துவின் சரீரத்துக்குள் அவருடைய அவி தங்கியிருந்தது (திலைச்சீலைக்கு பின்பு) அவர் மரித்த உடன் கர்த்தருடைய பிரசன்னத்திற்குள் செல்லும் வழியை நாம் எல்லோரும் பெற்றுக் கொண்டோம் பழைய ஏற்பாட்டின் தேவ ஜனங்களுக்கு இல்லாத வாய்ப்பு இன்றைக்கு நமக்கு இருக்கிறது. அவருடைய ஆவியினாலே நாம் இன்றைக்கு நிரப்பப்படலாம்.

B. உடன்படிக்கைப் பெட்டியிலே மூன்று வஸ்துக்கள் இருந்தது. இவற்றில் ஒவ்வொன்றும் தேவ ஜனத்தின் தோல்விகளையும் சாட்சிகளையும் குறிக்கிறதாக இருந்தது இந்த வஸ்துக்கள் ஆவிக்குரிய இளைப்பாறுதலை நினைவூட்டும் படியாகவும் அதிகமாக போதிக்கிறதாகவும் இருந்தது.

**எபிரெயர் 9:4** *"அதிலே பொன்னாற்செய்த தூபகலசமும், முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன; அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன."*

1. அவர்களுடைய முறுமுறுப்பிற்கும் அவிசுவாசத்திற்கும் ஞாபகார்த்தமாக மன்னா வைக்கப்பட்ட பாத்திரம் அவர்களுக்கு நினைவூட்டும் படியாக இருந்தது.

**யாத்திராகமம் 16:2-4** *"அந்த வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து: நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, **கர்த்தரின்** கையால் செத்துப்போனோமானால் தாவிளை; இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்துவந்தீர்களே என்று அவர்களிடத்தில் சொன்னார்கள். அப்பொழுது **கர்த்தர்** மோசேயை*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 5

*நோக்கி: நான் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவேன்; ஜனங்கள் போய், ஒவ்வொரு நாளுக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அதினால் அவர்கள் என் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்கமாட்டார்களோ என்று அவர்களைச் சோதிப்பேன்."*

2. தேவனுடைய ஆசாரியருக்கு விரோதமாக எழும்பின கோராவையும் அவனுடைய வெருமையையும் நினைவூட்டும்படியாக அரோனுடைய துளிர்விடும் கோல் வைக்கப்பட்டிருந்தது.

**எண்ணாகமம் 17:1-10** *"பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்கள் பிதாக்களின் வம்சங்களாகிய ஒவ்வொரு வம்சத்தினுடைய பிரபுவினிடத்தில், ஒவ்வொரு கோலாகப் பன்னிரண்டு கோலை வாங்கி, அவனவன் கோலில் அவனவன் பேரை எழுதுவாயாக. லேவியினுடைய கோலின்மேல் ஆரோனின் பேரை எழுதக்கடவாய்; அவர்களுடைய பிதாக்களின் ஒவ்வொரு வம்சத்தலைவனுக்காகவும் ஒவ்வொரு கோல் இருக்கவேண்டும். அவைகளை ஆசரிப்புக் கூடாரத்திலே நான் உங்களைச் சந்திக்கும் ஸ்தானமாகிய சாட்சிப்பெட்டிக்கு முன்னே வைக்கக்கடவாய். அப்பொழுது நான் தெரிந்துகொள்ளுகிறவனுடைய கோல் துளிர்க்கும்; இப்படி இஸ்ரவேல் புத்திரர் உங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிற அவர்கள் முறுமுறுப்பை என்னைவிட்டு ஒழியப்பண்ணுவேன் என்றார். இதை மோசே இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னான்; அப்பொழுது அவர்களுடைய பிரபுக்கள் எல்லாரும் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படி ஒவ்வொரு பிரபுவுக்கு ஒவ்வொரு கோலாகப் பன்னிரண்டு கோல்களை அவனிடத்தில் கொடுத்தார்கள்; ஆரோனின் கோலும் அவர்களுடைய கோல்களுடனே இருந்தது. அந்தக் கோல்களை மோசே சாட்சியின் கூடாரத்திலே கர்த்தருடைய சமுகத்தில் வைத்தான். மறுநாள் மோசே சாட்சியின் கூடாரத்துக்குள் பிரவேசித்தபோது, இதோ, லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது; அது துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப்பழங்களைக் கொடுத்தது. அப்பொழுது மோசே கர்த்தருடைய சமுகத்திலிருந்த அந்தக் கோல்களையெல்லாம் எடுத்து, இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் காண வெளியே கொண்டுவந்தான்; அவர்கள் கண்டு, அவரவர் தங்கள் தங்கள் கோல்களை வாங்கிக்கொண்டார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி:* ***ஆரோனின் கோல் அந்தக் கலகக்காரருக்கு விரோதமான அடையாளமாகும்பொருட்டு, அதைத் திரும்பவும் சாட்சிப்பெட்டிக்கு முன்னே கொண்டுபோய் வை; இப்படி அவர்கள் எனக்கு விரோதமாய் முறுமுறுப்பதை ஒழியப்பண்ணுவாய், அப்பொழுது அவர்கள் சாகமாட்டார்கள் என்றார்.***"

3. பொன்னினால் செய்யப்பட்ட கன்றுக்குட்டியை வணங்கினதையும் முதலாவது கற்பலகை உடைக்கப்பட்டதையும் நினைவு கூறும்படியாக பத்து கட்டளைகள் வைக்கப்பட்டிருந்தது. கண்களின் இச்சையை கற்பனை செய்து பாருங்கள்!

**யாத்திராகமம் 32:1-20** *"மோசே மலையிலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது, அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி, அவனை நோக்கி: எகிப்து தேசத்திலிருந்து*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 5

*எங்களை அழைத்துக் கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்;......... ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைக் கழற்றி, ஆரோனிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள்: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள்....அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்.....19 அவன் பாளயத்துக்குச் சமீபித்து, அந்தக் கன்றுக்குட்டியையும் நடனத்தையும் கண்டபோது, மோசே கோபம் மூண்டவனாகி, தன் கையிலே இருந்த பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப்போட்டு; அவர்கள் உண்டுபண்ணின கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக அரைத்து, தண்ணீரின்மேல் தூவி, அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்தான்."*

## C. கிருபாசனம்

உடன்படிக்கைப் பெட்டியின் மேல் கிருபாசனம் ஒரு உறைப்போல வைக்கப்பட்டிருந்தது பொன்னினால் செய்யப்பட்ட இரண்டு கேருபீன்களின் செட்டைகள் இதை மறைத்துக் கொண்டிருந்தது. பாவம் இல்லாத இரத்தம் பதிலாக கிருபாசனத்தின் மேல் ஊற்றப்பட்டது (லேவியராகமம் 16:15) கிறிஸ்து நம்முடைய கிருபாசனம் அவருடைய இரத்தம் நம் பாவங்களை மூடுகின்றது. சிலுவையின் மேலே அவர் செலுத்தின விலைகிரயத்தின் மூலமாக பாவத்தின் கட்டு உடைக்கப்பட்டது. சிலுவையிலே அவருடைய பலியின் நிமித்தமும் கிறிஸ்துவானவர் கீழ்படிந்த நியாயப் பிரமாணத்தின் நிமித்தமாகவும் நமக்கு விடுதலை உண்டு.
(தேவனுடைய ஆவி கிருபாசனத்தின் மேல் தங்கியிருந்தது)

**யாத்திராகமம் 25:22** *"அங்கே நான் உன்னைச் சந்திப்பேன்; கிருபாசனத்தின்மீதிலும் சாட்சிப்பெட்டியின்மேல் நிற்கும் இரண்டு கேருபீன்களின் நடுவிலும் இருந்து நான் இஸ்ரவேல் புத்திரருக்காக உனக்குக் கற்பிக்கப் போகிறவைகளையெல்லாம் உன்னோடே சொல்லுவேன்."*

## D. சுவிசேஷத்தின் உயிர்த்தெழுதலின் பகுதியை பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமான ஸ்தலம் நிறைவேற்றுகிறது.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 5



**சாவி # 8: <u>உடன்படிக்கைப் பெட்டியும் மற்றும் பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமான ஸ்தலத்திற்கு மாதிரி அச்சாக பரிசுத்த ஆவியினாலே பெற்றுக் கொள்ளும் ஞானஸ்நானமாக இருக்கிறது.</u>**

தேவனுடைய ஆவியோடு நேரடித் தொடர்புக் கொள்ள விரும்புகிற யாவரும் அப்படியே செய்யலாம். திரைச்சீலை கிழிக்கப்பட்டது கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார் அவரோடுகூட நெருக்கமான உறவுகொள்ள விரும்புகிறவனை கர்த்தர் தேடிக் கொண்டிருக்கிறார். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினால் கர்த்தர் நம்மோடு வைத்திருக்கும் உறவில் நேரடி மாதிரியாக கிருபாசனமும் உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தது.

**ரோமர் 8:11** *"அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்."*

**எசேக்கியேல் 36:26-27** *"உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்."*

பாவமில்லாத இரத்தம் பதிலாக கிருபாசனத்தின்மேல் ஊற்றப்பட்ட பிறகு கர்த்தர் கிருபாசனத்தின் மேல் இருந்து எப்படியாக பேசினாரோ அதேப்போல ஒரு மனுஷன் பரிசுத்த ஆவியின் நிறைவுப்பெறும் போது அப்படியே பேசுகிறார்.

**ஏசாயா 28:11-12** *"பரியாச உதடுகளினாலும் அந்நியபாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல்; இதுவே ஆறுதல் என்று அவர்களோடே அவர் சொன்னாலும் கேட்கமாட்டோம் என்கிறார்கள்."*

**அப்போஸ்தலர் 2:4** *"அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்."*

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் குறித்து அதிகமாக பாடம் 8-ல் கற்றுக் கொள்ளலாம்.

## VIII. கூடாரத்திலிருந்து சிலுவை வரை

கூடாரம் என்பது கிறிஸ்துவின் நிழலாட்டமாய் இருந்தது

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 5

**எபிரெயர் 9:11-12** *"கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்."*

**எபிரெயர் 4:16** *"ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்."*

கர்த்தர் அவரோடுகூட உறவு கொள்வதற்கான வழியை மிகவும் தெளிவாகவும் நேராகவும் வரையறுத்திருக்கிறார். எவர்களெல்லாம் கீழ்ப்படிவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்களோ அவர்களுக்கு அந்த வழி உண்டு. எல்லோரும் மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுத்து கர்த்தருடைய பரிசுத்த ஆவியின் நிறைவோடுகூட இருப்பதே அவருடைய சித்தமாகும்.

**பாடம் 6: உலகத்தின் இரட்சகரும் தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரும் ஆகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து இந்தப் பாடத்தில் நாம் படிப்போம்!**

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

## I. புதிய ஏற்பாட்டிற்கு அறிமுகம்

ஏறத்தாழ 4000 ஆண்டுகளின் சரித்திரத்தை பழையஏற்பாடு கூறுகிறது. ஆனால் புதிய ஏற்பாட்டிலேயோ 100 ஆண்டுகளின் சரித்திரத்தை மாத்திரம் நாம் பார்க்க முடியும்.

### A. ஏற்பாடு என்றால் (ஒப்பந்தம் (அ) உயில்) அதாவது மரணசாசனத்திற்கு ஒப்பானது

தேவனோடுக்கூட மனுக்குலம் உறவுக் கொள்வதற்காக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட புதிய ஒப்பந்தம் (அ) உடன்படிக்கைத்தான் புதிய ஏற்பாடு. இயேசு மரித்து உயிரோடு எழுந்து பரலோகத்திற்கு ஏறிச்சென்றப்பின் தான் இந்த ஒப்பந்தம் தொடங்கியது.



**சாவி # 1:** **<u>பெந்தெகொஸ்தே என்னும் நாளில் புதிய உடன்படிக்கை தொடங்கியது.</u>**

**B. நான்கு முக்கியபகுதிகளாகப் புதிய ஏற்பாட்டைப் பிரிக்க முடியும்.** வேதத்திலுள்ள அட்டவனைக்கு மாணவர்களுடைய சிந்தையைத் திருப்பவும்

(1) **சுவிசேஷங்கள்** அல்லது நற்செய்தி மத்தேயு மாற்கு லூக்கா மற்றும் யோவானால் இயேசு கிறிஸ்துவைக் குறித்து எழுதப்பட்டதாகும். இவைகள் இயேசுகிறிஸ்துவினுடைய மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய சுவிசேஷத்தைக் கொண்டிருக்கும். இயேசுவினுடைய பூலோக ஊழியங்கள் மற்றும் அற்புதங்கள் மற்றும் போதனைகளை இந்த நான்கு புஸ்தகங்கள் நமக்குக் காண்பிக்கும். சுவிசேஷங்கள் நம்மை இயேசுவுக்கு அறிமுகப்படுத்தும்.

(2) **சபையின் சரித்திரங்களை** கொண்டுள்ளதுதான் அப்போஸ்தலர் நடபடிகைகள் சபை எப்படி ஆரம்பமானது அப்போஸ்தலர்கள் எதை விசுவாசித்து பிரசங்கித்தார்கள் மற்றும் இந்த நாளுக்கான இரட்சிப்பின் திட்டத்தை நாம் இதிலே வாசிக்கலாம்.. உன்மையான உதாரணங்ளைக் கொடுத்து நாம் கிறிஸ்தவர்களாக எப்படி ஆக வேண்டும் என்பதை இது நமக்குக் காண்பிக்கிறது.

(3) **நிருபங்கள்** என்றால் கடிதங்கள். இவைகள் தனிப்பட்ட நபர்களுக்கும் சபைகளுக்கும் எழுதப்பட்டன. புதிய உடன்படிக்கையை உடைக்காமல் இயேசுவுக்காய் எப்படி வாழ வேண்டும் என்பதின் விதிமுறைகளை இது அளிக்கின்றன. இரட்சிப்பின் திட்டத்திற்குக் கீழ்படிந்த சீஷர்களுக்குத்தான் எல்லா 21 நிருபங்களும் எழுதப்பட்டது. சபையிலே எப்படியாக வேரூன்றி நிற்க வேண்டும் என்பதை நிருபங்கள் நமக்கு காண்பிக்கின்றன.

(4) புதிய ஏற்பாட்டில் ஒரே தீர்க்கதரிசன புஸ்தகமாக **வெளிப்படுத்தல்** இருக்கின்றது உலகத்தின் முடிவைக் குறித்து இது நமக்கு சொல்லுகிறது. கடைசிக் கால சம்பவங்களையும் பாவத்தின் மேல் தேவனுடைய தண்டனையையும் இது விவரிக்கிறது பாடம் 11-12 ல் வெளிப்படுத்தல் ஆராயப்படும்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

**C. பழைய நியாயப்பிரமாணத்திலிருந்து கர்த்தருடைய புதிய உடன்படிக்கைக்கு உள்ள மாற்றத்தின் காலம் : சுவிசேஷங்கள்**

சுவிசேஷங்களைப் புரிந்துக்கொள்வதற்கு ஒன்றை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும் மத்தேயு மாற்கு லூக்கா மற்றும் யோவான் புதிய ஏற்பாட்டின் ஒரு பங்காய் இருந்தாலும் கர்த்தரோடுகூட உறவுக்கொள்ளும் பழைய ஏற்பாட்டின் காலத்தின் விதிகளைத் தான் இவைகள் எழுத்திடுகின்றன. பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்ட இரட்சிப்பிலிருந்து (கூடாரத்திட்டத்திலிருந்து) புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பு வரைக்கும் (புதிய பிறப்பு) உள்ள மாற்றுதலின் காலத்தை சுவிசேஷங்கள் வெளிப்படுத்துகின்றது. இயேசு மரித்து அடக்கம்பண்ணப்பட்டு உயிரோடு எழுந்த பின்பு தான் புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பு துவங்கினது. இது அப்போஸ்தலர் நடபடிகைகளின் புஸ்தகத்தில் மாத்திரம் தான் காண்பிக்கப்படுகிறது. அது அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆகும்.



**சாவி # 2 <u>பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் இரட்சிப்பின் வழிகளுக்கு நடுவே உள்ள மாற்றுதலின் காலக்கட்டம் தான் சுவிசேஷங்கள்.</u>**

## II. இயேசு

வேதத்திலே மிக முக்கியமான நபர் இயேசு. இயேசு பிறப்பதற்கு 100 வருஷங்களுக்கு முன்பாகவே தீர்க்கதரிசிகள் அவருடைய ஆள்தத்துவத்ததைக் குறித்தும் குணாதிசயங்களைக் குற்த்தும் அவருக்கு என்னப் பெயர் இட வேண்டும் என்பதையும் அந்தப் பெயரின் அர்த்தத்தையும் அவர் எந்த நகரத்தில் பிறப்பார் என்பதையும் பூமியில் அவருடைய வாழ்க்கையின் பரிபூரணமான நோக்கத்தைக் குறித்தும் தீர்க்கதரிசனங்ளை எழுதத் தொடங்கினார்கள். (ஏசாயா 7:14 ஏசாயா 9:6-7) பழைய ஏற்பாட்டில் தன்னைக் குறித்ததான ஒவ்வொரு தீர்க்கதரிசனத்தையும் நிறைவேற்றி வல்லமையுள்ள ஒரு நபராக இயேசுவை புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிறது. இயற்கை வியாதி மரணம் மற்றும் அசுத்த ஆவிகளின் மேல் இயேசு தன்னுடைய வல்லமையைக் காண்பித்தார் முழு ஞானத்தோடும் அறிவோடும் அவர் போதித்தார். அவருடைய வார்த்தைகள் சீஷர்களால் குறித்துக் கொள்ளப்பட்டது. இயேசு எப்பொழுதும் அன்போடு செயல்பட்டார் என்பதை வேதம் காண்பிக்கிறது. பழைய ஏற்பாட்டின் நோக்கம் இயேசுவை நோக்கி நம்மை நடத்திச் செல்ல இருந்ததாகும் (கலாத்தியர் 3:24) இயேசுவின் பிறப்பிலிருந்து புதிய ஏற்பாடு தொடங்கினது.

**A. இயேசுவின் பிறப்பும் ஆரம்ப குழந்தைப் பருவம்**

**1. திருமணம் ஆகாத கன்னி ஒருவள் ஒரு குமாரனைப் பெற்றெடுத்து அவருக்கு இயேசு என்று பெயரிடுவாள் என்று ஒரு தூதன் அறிக்கையிட்டான். தன் ஜனங்களைப் பாவத்திலிருந்து இரட்சிக்க இவர் வருவார்.**

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

**லூக்கா 1:25-35** 25"*எனக்கு இப்படிச் செய்தருளினார் என்று சொல்லி, ஐந்து மாதம்*
*வெளிப்படாதிருந்தாள். 26 ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள*
*நாசரேத்தென்னும் ஊரில், 27 தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள*
*புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான்;*
*அந்தக் கன்னிகையின் பேர் மரியாள். 28 அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து:*
*கிருபை பெற்றவளே வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ*
*ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான். 29 அவளோ அவனைக்கண்டு அவன் வார்த்தையினால்*
*கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள். 30தேவதூதன்*
*அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய். 31* ***<u>இதோ, நீ</u>***
***<u>கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்; அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.</u>*** *32*
*அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய*
*தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். 33 அவர்*
*யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு*
*முடிவிராது என்றான். 34 அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்?*
*புருஷனை அறியேனே என்றாள். 35 தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி*
*உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில்*
*பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்."*

யோசேப்புக்கு தேவத்தூதன் சொன்தை மத்தேயு 1:18-25-ல் படிக்கலாம்.

2. **அவரின் பிறப்போடுக்கூட நடந்த நிகழச்சிகளும் அதிசயமான அடையாளங்களையும் சுவிசேஷங்கள் அறிவிக்கின்றன.**
அந்த குழந்தை தான் கர்த்தர் என்று எலிசபெத் தீர்ககதரிசனம் உரைத்தாள் (லூக்கா 1:39-44)

இயேசு பெத்லகேமில் பிறந்தார் (மீகா 5:2)

ஒரு நட்சத்திரத்தைப்பின்பற்றி கீழக்கிலிருந்து சாஸ்திரிகள் வந்து இயேசுவுக்கு பரிசுகளை கொண்டுவந்தார்கள் (லூக்கா 2:8-20)

சிமியோன் என்ற ஒரு முதிர்ந்த வயதுள்ளவருக்கு தன்னுடைய மரணத்துக்கு முன்பு மேசியாவைக் காண்பார் என்று சொல்லப்பட்டிருந்தது (லூக்கா 2:25-35)

இயேசுதான் இஸ்ரவேலின் நம்பிக்கை என்று அன்னாள் தீர்க்கதரிசி வலியுறுத்தினாள். (லூக்கா 2:36-38)

பெத்லகேமில் 2 வயதிற்கு கீழிலிருந்த எல்லா ஆண் பிள்ளைகளையும் எரோது ராஜா கொன்றுப்போட்டான் தன்னுடைய சிங்காசனத்தை புதியதாய் பிறந்தக் குழந்தை எடுத்துக்கொள்ளும் என்று சாஸ்திரிகள் அவனிடத்தில் சொன்னபிறகு அவனுக்கு பயம் உண்டாகி இதைச் செய்தான். (எரேமியா 31:15 மத்தேயு 2:17 18)

### 3. 12 வயது உள்ள போது இயேசு ஞானத்தினால் நிரப்பப்பட்டார்

**லூக்கா 2:46-50** *"மூன்றுநாளைக்குப் பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

*கண்டார்கள். 47அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங்குறித்துப் பிரமித்தார்கள். 48 தாய் தகப்பன்மாரும் அவரைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது அவருடைய தாயார் அவரை நோக்கி: மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள். 49 அதற்கு அவர்: நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? <u>என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா</u> என்றார். 50 தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை.*

இயேசு 12 வயது மாத்திரமே இருந்த போது நியாய சாஸ்திரிகளையும் பண்டிதர்களையும் தேவனுடைய வார்த்தையின் புரிந்து கொள்ளுதலினாலும் கேள்விகளாலும் பதில்களாலும் பிரமிக்கவைத்தார். இயேசு மனுஷனாகவும் தேவனாகவும் இருந்தார் என்பதை யோவான் 1:1-14 வரை வெளிப்படுத்துகிறது. அவருக்கு 12 வயது மாத்திரமே இருந்தாலும் கூட ஆவியிலே அவர் தேவனாக இருந்தார் மரியாள் மற்றும் யோசேப்பினுடைய கேள்விக்கு அவர் அளித்த பதில் கீழ்படியாமையாகவோ திருத்தலுக்காகவே இல்லை. சிறு பிள்ளையாக இருக்கும் போதே தன் வாழ்க்கையின் நோக்கத்தைப் புரிந்துக் கொண்டார் என்பதை நமக்கு வெளிப்படுத்த தான் இந்த பதில்.

**4. தன்னுடைய ஊழியத்தை தொடங்குவதற்கு முன்பதாக இயேசு ஞானஸ்நானம் பெற்றார்.**

**மத்தேயு 3:13-17** "*அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். 14 யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். 15 **இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார்.** அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். 16 இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். 17அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.*"


இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார்? பின்பற்றுவதற்கு பூரணமான உதாரணமாய் இயேசு இருந்தார். இன்றைக்கும் இருக்கிறார் அவர் செய்த எல்லாவற்றையும் நாம் செய்ய வேண்டும் இப்படி செய்தால் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம் ஆகையால் எல்லோரும் தண்ணீரிலே முழுமையாக முழுக்கு ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதை பூரணமான உதாரணமாய் இருக்கிற இயேசு காண்பிக்கிறார்.

புறாவைப்போல ஆவியிறங்கினது என்ற அடையாளம் மேசியாவை தெரிந்துக் கொள்வதற்கு யோவான் ஸ்நானகனுக்கு அனுப்பப்பட்ட அடையாளமாகும் (யோவான் 1:29-37) 8 நாட்களிலே இயேசுவுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது இது மோசேயின் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதற்காக இயேசு ஞானஸ்நாம் பெற்றார் (கொலோ 2:11-12)

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

## III. இயேசு யார் ?



சாவி # 3: <u>மனித சரீரத்தில் இயேசு தேவனாக இருந்தார்.</u>

**மாம்சத்திலே தேவனாக இயேசு வந்தார்**

**யோவான் 1:1-5, 14** "*ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. 2அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். 3சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. 4அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. 5அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை...14 அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.*

**2 கொரிந்தியர் 5:19** "*அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல்,* ***கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி****, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்."*

கொலோசெயர் **2:8-10** "*லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயேல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல. 9ஏனென்றால்,* ***தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக, அவருக்குள் வாசமாயிருக்கிறது****. 10 மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்."*

**1 தீமோத்தேயு 3:16** *அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது.* ***தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்****, ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்.*

தேவனுடைய ஒரு பங்கோ அல்லது தேவனுடைய பிரதிமையாவோ இயேசு இல்லை இயேசுவினுடைய சரீரத்திலே தேவனுடைய ஆவி வல்லமை குணாதிசயம் மற்றும் நடத்தை வாசமாயிருந்தது தேவன் சரீரமாகிய இயேசுகிறிஸ்துவில் வெளிப்பட்டார் (புரிந்துக் கொள்ளப்பட்டார்). கிறிஸ்து என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று அர்த்தம் மாம்சத்திலே தேவனாக இயேசு இருந்தார் என்பதே புதிய ஏற்பாடு எழுத்தாளர்களுடையக் கருத்து.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

## IV. இயேசுவினுடைய ஊழியங்கள் அவருடைய அற்புதங்கள்

### A. வல்லமையை காண்பிக்க இயேசு வந்தார்

இயேசு ஒரு சாதாரண மனுஷனல்ல இயேசு செய்த அநேக அற்புதங்களை கண்ணால் கண்ட சாட்சிகள் சொல்வதை சுவிசேஷங்களில் பல்வேறு இடங்களில் பார்க்கலாம்.

### B. இயேசுவின் வல்லமை

இயேசுவின் அதிசயங்களை மூன்று பகுதிகளாக இவ்வாறாக பிரிக்க முடியும்.

**1. சுகப்படுத்துதலின் வல்லமை**

**<u>குருடரின் கண்களைத் திறந்தார்</u>**

**மத்தேயு 9:27-31** *"இயேசு அவ்விடம் விட்டுப் போகையில், இரண்டு குருடர் அவர் பின்னே
சென்று: தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள். 28 அவர் வீட்டிற்கு
வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: இதைச்
செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார்; அதற்கு
அவர்கள்: ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே! என்றார்கள். 29 அப்பொழுது, அவர்களுடைய
கண்களை அவர் தொட்டு: உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார். 30
உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. இதை ஒருவரும் அறியாதபடிக்கு
எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார். 31
அவர்களோ புறப்பட்டு, அத்தேசமெங்கும் அவருடைய கீர்த்தியைப் பிரசித்தம்பண்ணினார்கள்."*

இந்தப் பகுதியிலே 2 குருடர்களை இயேசு சுகமாக்கினார் அவரைப் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கத்திற்காக இயேசு ஒரு நாளும் அற்புதங்களை செய்யவில்லை என்பதைப் புரிந்துக் கொள்வது மிக முக்கியம் ஜனங்களின் மேல் வைத்த அன்பின் நிமித்தமாக அற்புதங்களை செய்தார் மக்கள் அவரை அவர் மேல் இருக்கின்ற வாஞ்சையினாலே பின்பற்ற வேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று அவர் விரும்பினார் அவர் அவர்களுக்கு என்ன அளிப்பார் என்பதின் அடிப்படையில் இந்த தீர்மானத்தை எடுக்க வேண்டாம் என்பது தான் அவர்களுடைய வாஞ்சை.

**<u>ஆநேகரை சுகப்படுத்தினார் குஷ்டரோகிகளையும் முடவர்களையும் செவிடர்களையும் மரித்தோரையும்கூட!</u>**

**a) மரித்த வாசருவை உயிரோடு எழுப்பினார்**

**யோவான் 11:38-45** *"அப்பொழுது இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்கிக்
கல்லறையினிடத்திற்கு வந்தார். அது ஒரு குகையாயிருந்தது; அதின்மேல் ஒரு கல்
வைக்கப்பட்டிருந்தது. 39 இயேசு: கல்லை எடுத்துப்போடுங்கள் என்றார். மரித்தவனுடைய
சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி: ஆண்டவரே, இப்பொழுது நாறுமே,
நாலுநாளாயிற்றே என்றாள். 40 இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய
மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார். 41 அப்பொழுது
மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப்போட்டார்கள். இயேசு தம்முடைய*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

*கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். 42 நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார். 43 இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.*
*44 அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார். 45 அப்பொழுது*
*மரியாளிடத்தில் வந்திருந்து, இயேசு செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்."*

**b)** திரளான ஜனங்கள் சுகமாக்கப்பட்டார்கள்

**மத்தேயு 15:30** "*அப்பொழுது, சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர் முதலிய அநேகரை, திரளான ஜனங்கள் கூட்டிக்கொண்டு இயேசுவிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள்; அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார்.* "



சாவி **# 4:** <u>இயேசு இன்னும் சுகமளிக்கிறார்!</u>

**2.** இயற்கையை இயேசு கட்டுப்படுத்துகிறார்

<u>தண்ணீரின் மேலே இயேசு நடந்தார்</u>

**மத்தேயு 14:24-33** "*அதற்குள்ளாக படவு நடுக்கடலிலே சேர்ந்து, எதிர்க்காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது. 25 இரவின் நாலாம் ஜாமத்திலே இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார். 26 அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள். 27 உடனே இயேசு அவர்களோடே பேசி: திடன்கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்றார். 28 பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக்கட்டளையிடும் என்றான். 29 அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக கடலின்மேல் நடந்தான். 30 காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே, என்னை இரட்சியும் என்று கூப்பிட்டான். 31 உடனே இயேசு கையை நீட்டி அவனைப்பிடித்து: அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார். 32 அவர்கள் படவில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது. அப்பொழுது, படவில் உள்ளவர்கள் வந்து: மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்து கொண்டார்கள்.*"

<u>கடலில் சீறும்புயலை அடக்கினார்</u>

**மாற்கு 4:35-41** "*அன்று சாயங்காலத்தில், அவர் அவர்களை நோக்கி: அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார். 36 அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர் படவிலிருந்தபடியே அவரைக் கொண்டுபோனார்கள். வேறே படவுகளும் அவரோடேகூட*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

*இருந்தது.37 அப்பொழுது, பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று. 38 கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். 39 அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதலுண்டாயிற்று. 40 அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். 41 அவர்கள் மிகவும் பயந்து: இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று, ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். "*

<u>குறைந்த உணவைக் கொண்டு ஆயிரக்கனக்கான மக்களை போஷித்தார்.</u>

**மத்தேயு 14:15-23** *"சாயங்காலமானபோது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: இது வனாந்தரமான இடம், நேரமுமாயிற்று; ஜனங்கள் கிராமங்களுக்குப் போய்த் தங்களுக்குப் போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிடவேண்டும் என்றார்கள். 16 இயேசு அவர்களை நோக்கி: அவர்கள் போகவேண்டியதில்லை; நீங்களே அவர்களுக்குப் போஜனம் கொடுங்கள் என்றார். 17 அதற்கு அவர்கள்: இங்கே எங்களிடத்தில் ஐந்து அப்பமும் இரண்டு மீன்களுமேயல்லாமல், வேறொன்றும் இல்லை என்றார்கள். 18 அவைகளை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றார்.19 அப்பொழுது, அவர் ஜனங்களைப் புல்லின்மேல் பந்தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஐந்து அப்பங்களையும், அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப் பிட்டுச் சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் ஜனங்களுக்குக் கொடுத்தார்கள். 20 எல்லாரும் சாப்பிட்டு திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள். 21 ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர, சாப்பிட்ட புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம்பேராயிருந்தார்கள். 22 இயேசு ஜனங்களை அனுப்பிவிடுகையில், தம்முடைய சீஷர்கள் படவில் ஏறி, தமக்கு முன்னே அக்கரைக்குப்போகும்படி அவர்களைத் துரிதப்படுத்தினார். 23 அவர் ஜனங்களை அனுப்பிவிட்டபின்பு, தனித்து ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமானபோது அங்கே தனிமையாயிருந்தார்."*


சாவி **# 5:** <u>இயற்கையை இயேசு இன்னும் கட்டுப்படுத்துகிறார்</u>

**3.** பிசாசுகளின் மேலும் அசுத்த ஆவிகளின் மேலும் இயேசு வல்லமையை காண்பித்தார்

**லூக்கா 8:27-29, 34-35** "*அவர் கரையிலிறங்கினபோது, நெடுநாளாய்ப் பிசாசுகள் பிடித்தவனும் <u>வஸ்திரந்தரியாதவனும்</u>, வீட்டில் தங்காமல் பிரேதக் கல்லறைகளிலே தங்கினவனுமாயிருந்த அந்தப் பட்டணத்து மனுஷன் ஒருவன் அவருக்கு எதிராக வந்தான். 28 அவன் இயேசுவைக் கண்டபோது கூக்குரலிட்டு, அவருக்கு முன்பாகவிழுந்து: இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்று மகா சத்தத்தோடே சொன்னான். 29 அந்த அசுத்த ஆவி அவனை விட்டுப்போகும்படி இயேசு கட்டளையிட்டபடியினாலே அப்படிச் சொன்னான். அந்த அசுத்த ஆவி வெகுகாலமாய்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

*அவனைப் பிடித்திருந்தது; அவன் சங்கிலிகளினாலும் விலங்குகளினாலும் கட்டுண்டு காவல்பண்ணப்பட்டிருந்தும் கட்டுகளை முறித்துப்போட்டுப் பிசாசினால் வனாந்தரங்களுக்குத் துரத்தப்பட்டிருந்தான்....34 அவைகளை மேய்த்தவர்கள் சம்பவித்ததைக் கண்டு, ஓடிப்போய், பட்டணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள். 35 அப்பொழுது, சம்பவித்ததைப் பார்க்கும்படி ஜனங்கள் புறப்பட்டு, இயேசுவினிடத்தில் வந்து, பிசாசுகள் விட்டுப்போன மனுஷன் <u>வஸ்திரந்தரித்து</u> இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து <u>புத்திதெளிந்திருக்கிறதைக் கண்டு,</u> பயந்தார்கள்.*"

**லூக்கா 4:33-37** "*<u>ஜெபஆலயத்திலே</u> அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு மனுஷன் இருந்தான். 34 அவன்: ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக்கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னாரென்று அறிவேன்; நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று உரத்தசத்தமிட்டான். 35 அதற்கு இயேசு: நீ பேசாமல் இவனைவிட்டுப் புறப்பட்டுப்போ என்று அதை அதட்டினார்; அப்பொழுது பிசாசு அவனை ஜனங்களின் நடுவிலே விழத்தள்ளி, அவனுக்கு ஒரு சேதமுஞ்செய்யாமல், அவனை விட்டுப் போய்விட்டது. 36 எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் புறப்பட்டுப்போகிறதே என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். 37 அவருடைய கீர்த்தி சுற்றிலுமிருந்த நாடுகளிலுள்ள இடங்களிலெல்லாம் பிரசித்தமாயிற்று.*"

பழைய ஏற்பாட்டில் ஆண்களும் பெண்களும் கர்த்தரை நோக்கி ஜெபித்தார்கள் அவர்களுடைய ஜெபத்தின் மூலம் கர்த்தர் அநேக அதிசயங்களை செய்தார். ஆனால் பழைய ஏற்பாட்டின் காலத்தில் பிசாசுகளின் மேல் அதிகாரம் செலுத்துவதை காணமுடியாது இயேசுவினுடைய ஊழியத்தில் இந்தப்பகுதி வித்தியாசமானது. ஆவிக்குரிய மண்டலத்திலே அவர் முழு அதிகாரத்தையும் அவர் காண்பித்து பிசாசுகளை அவருடைய வார்த்தைகளைப் பயன்படுத்தியே துரத்தினார்.



**சாவி # 6: <u>இயேசு இன்னும் பிசாசுகளிடமிருந்தும் அசுத்த ஆவிகளிடமிருந்தும் விடுதலை அளிக்கிறார்.</u>**

## V. இயேசுவினுடைய ஊழியங்கள் அவருடைய போதனைகள்.

சராசரி மனிதர்களே கர்த்தருடைய நியாயங்களை பின்பற்ற கூடாத அளவிற்கு சில மத சம்பந்தப்பட்ட குழுக்கள் செயல்பட்டன ஆனால் சராசரி மனிதர்கள் சத்தியத்தை புரிந்துக் கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார். ஊலகத்திற்கு சத்தியத்தை அறிவிக்க இயேசு வந்தார். இது யூதர்களல்லாத புறஜாதிகளுக்கும் பொருந்தும்

**A. உவமைகள் மூலம் ஆவிக்குரிய கருத்துக்களை இயேசு கற்றுக் கொடுத்தார். மறை பொருள் உள்ள ஒரு சிறிய கதைதான் உவமை.**

மனதால் எண்ணக்கூடிய கருத்துகளையும் யோசனைகளையும் உவமைகள் மூலம் இயேசு எடுத்துக்காட்டினார்.. மீன்கள் விதைகள் மணல் போன்ற அன்றாடம் பயன் படுத்துகிற பொருட்களை அறிமுகம் இல்லாத ஆவிக்குரிய கருத்துகளோடு அவர்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

இனைத்தார். புதிய உடன்படிக்கை/ஏற்பாட்டிலுள்ள கஷ்டமான காரியங்களை எளிதாகப் புரிந்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பினவர்களுக்கு எளிதாய் புரிந்து கொள்ளும்படியாக ஆவிக்குரியத் தத்துவங்களை அறிமுகமான எடுத்துக்காட்டுகள் மூலம் அவர் விளக்கினார்.

சீஷர்கள் இயேசுவை நோக்கி ஒரு முக்கியமான கேள்வியை கீழ்கொடுக்கப்பட்டுள்ள வேதப்பகுதிகளில் கேட்கிறார்கள்.

**மத்தேயு 13:10-16** "*அப்பொழுது, சீஷர்கள் அவரிடத்தில் வந்து: **ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர்** என்று கேட்டார்கள். 11 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. அவர்களுக்கோ அருளப்படவில்லை. 12 **உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவன் எவனோ அவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.** 13 அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்துகொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன். 14 ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது: காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள். 15 இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே. 16 உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்.*"

ஏசாயா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றவே அவர் உவமைகளாலே ஜனங்களுக்குக் கற்றுக் கொடுத்தார் என்று இயேசு சொன்னார். கேட்ட சில ஜனங்கள் விசுவாசிக்காமல் கற்றுக் கொடுத்ததிலிருந்து பலன் அடையாமல் இருந்தார்கள் ஆனால் அந்த திரளான கூட்டத்தில் சிலரோ விசுவாசித்து அவருடைய போதனைகளினால் பலன் அடைந்தார்கள். பசியாய் உள்ள ஜனங்களுக்கு சத்தியத்திலுள்ள பொக்கிஷங்களை சத்ருக்களிடமிருந்து மறைத்து உவமைகளினாலே இயேசு கற்று கொடுத்தார்.

### B. இயேசு கிறிஸ்துவால் கற்றுக் கொடுக்கப்பட்ட முக்கியமான உவமைகள்

#### 1. காணாமல் போன ஆடுகளின் உவமை

**மத்தேயு 18:11-14** "*மனுஷகுமாரன் கெட்டுப்போனதை இரட்சிக்க வந்தார். 12 உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு நூறு ஆடுகளிருக்க, அவைகளில் ஒன்று சிதறிப்போனால், அவன் மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப்போய்ச் சிதறிப்போனதைத் தேடாமலிருப்பானோ? 13 அவன் அதைக்கண்டுபிடித்தால், சிதறிப்போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைக்குறித்துச் சந்தோஷப்படுகிறதைப் பார்க்கிலும், அதைக்குறித்து அதிகமாய்ச் சந்தோஷப்படுவான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். 14 இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல.*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

கர்த்தர் இல்லாத ஜனங்கள் மேல் கர்த்தர் எவ்வளவாக அன்புவைத்தார் என்பதை இயேசு இதிலே வெளிப்படுத்தினார் காணாமல் போன ஆடுகளைத் தேடுகிற மேய்ப்பன் அவரே (அவரை அறியாத பாவத்திலே வாழ்ந்துக் கொண்டிருக்கும் ஜனங்கள்) ஒரு நபராகிலும் அவரை அறியாதிருப்பார்களேயானால் அந்த ஒரு நபருக்கு அவருடைய அன்பைக் காண்பிப்பார் அவருடைய அன்பு அவ்வளவுப் பெரியது.

**கேள்வி :** காணாமல் போகவில்லை என்று நினைத்தால் அவரை எப்படி கண்டடைய முடியும் ?

கண்டுபிடிக்க முடியாது. இயேசுவின் போதனைகளை ஏற்றுக் கொள்ளாத ஜனங்கள் அவர்கள் காணாமல் போகவில்லை என்றுதான் நினைத்துக் கொண்டார்கள்.

### 2. விதைக்கிறவனின் உவமை

**மத்தேயு 13:3-8** "*அவர் அநேக விஷேசங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார்; கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப்புறப்பட்டான். 4 அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது. 5 சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது; மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது. 6 வெயில் ஏறினபோதோ, தீய்ந்துபோய், வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று. 7 சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது. 8 சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது.*"

**மத்தேயு 13:18-23** "*ஆகையால் விதைக்கிறவனைப்பற்றிய உவமையைக் கேளுங்கள். 19 ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன். 20 கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக்கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுகிறவன்; 21 ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான். 22 முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப்போவான். 23 நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.*"

விதை என்பது தேவனுடைய வார்த்தை (குறிப்பாக இரட்சிப்பின் வார்த்தை) விதைக்கிறவன் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளுகிறவன் சுவிசேஷத்தை கேட்கிற மனுஷனுடைய இருதயம் தான் நிலம். சுசிசேஷத்தின் சத்தியத்தைக் கேட்டு வித்தியாசமான பிரதிபலன்களை மக்கள் காண்பிப்பார்கள் என்ற ஆழமான ஆவிக்குரிய சத்தியத்தை இந்த உவமை கற்றுக்கொடுக்கிறது. சிலருக்கு கடினமான இருதயம் இருக்கும் சிலருக்கு ஆழமில்லாத இருதயம் இருக்கும் தீய காரியங்களின் மேல் நேசம் கொண்டிருக்கும் இருதயம் இருக்கும் ஆனால் சிலருக்கோ நல்ல இருதயம் இருக்கும் நல்ல இருதயமுள்ளவர்கள் பிறருக்கு இரட்சிப்பைக் கொண்டு வரும் விதத்தில் ஆசீர்வாதமான

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

நற்கிரியைகளைப் பெருக செய்வார்கள். வாழ்கையை மாற்றும் சத்தியங்களை சிலர் ஏற்றுக் கொள்வார்கள். வேறு சிலர் மறுத்துவிடுவார்கள் என்று இயேசு கூறினார் சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர்கள் அவரை ஏற்றுக் கொண்டதைப் பார்க்கிலும் 30 மடங்கோ 60 மடங்கோ அல்லது 100 மடங்கோ அதைப் பெருகச் செய்வார்கள். கற்றுக் கொடுக்கும் போது கேளுங்கள் என்ற வார்த்தை இயேசு 19 முறை பயன் படுத்துகிறார். கேளுங்கள் என்றால் இருதயத்தில் ஆழமாக பதியும் விதத்தில் வார்த்தைகளை பெற்றுக் கொள்வது என்று அர்த்தம். இது வெறும் செவிகளால் மாத்திரம் கேட்கக்கூடிய காரியம் அல்ல தேவனுடைய வார்த்தை நம்மை எவ்வளவு மாற்றுகிறது என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும் வேதத்தை வாசிப்பது மிகவும் முக்கியம் ஆனால் அதைக் காட்டிலும் முக்கியமானது வாசித்ததை கீழ்படிந்து செயல்படுத்துவதாகும்.

### 3. விலை உயர்ந்த முத்தைக் குறித்ததான உவமை

**மத்தேயு 13:45-46** *"மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. 46 அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்."*

காணாமல் போன ஆடு சத்தியம் என்ற நல்ல நிலத்தைக் கண்டடையும் போது என்ன நிகழ்கிறது என்பதை இந்த உவமை போதிக்கிறது பசியாய் உள்ளவர்கள் வேதத்தில் உள்ள சத்தியத்தை தேடும்போது அவர்கள் அதைக் கண்டடைவார்கள். இது அவர்களுக்கு விலை மதிப்பற்றதாய் இருக்கும் இதற்காக அவர்கள் எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்திடுவார்கள் சத்தியம் என்ற பொக்கிஷத்தை சம்பாதிக்கவும் அதை பத்திரமாக வைத்துக் கொள்ளவும் தேவையான எல்லா மாற்றங்களையும் செய்வார்கள்.

### 4. நல்ல சமாரியனுடைய உவமை

லூக்கா 10:30-35 "*இயேசு பிரதியுத்தரமாக: ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். 31அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். 32அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். 33 பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகி, 34 கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். 35 மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து: நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான்.*"

இந்த உவமையை புரிந்துக் கொள்ள வேண்டும் :

1) இஸ்ரவேல் தேசத்திலே மிகவும் பாவம் நிறைந்த இடமாக எரிகோ கருதப்பட்டது எரிகோவின் பாவங்கள் ஏராளமாக இருந்ததால் அவ்வழியாக கடந்து போக வேண்டாம் என்று அநேக மைல் தூரங்கள் நடந்து போய் அதை முற்றிலுமாக தவிர்த்துவிடுவார்கள்.
2) சமாரியர்கள் பாதி யூதர்களாகவும் பாதி புறஜாதிகளாகவும் இருந்தார்கள் மிகுந்த ஜாதி வெறுப்பை சமாரியர்கள் சந்தித்தார்கள். யூதர்கள் சமாரியர்களை தொடவும் மாட்டார்கள் அப்படியே தொட்டார்கள் என்றால் அவர்கள் தீட்டுள்ளவர்களாய் என்னப்படுவார்கள்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

(3) எருசலேமின் தேவாலயத்திலே பணிபுரிகிற இராஜரீக ஆசாரிய கூட்டத்தின் ஓர் அங்கத்தினர் தான் லேவியன்.

சுருக்கமாக கூறுவோமே என்றால் ஒரு மனுஷன் எரிகோவை நோக்கி அதாவது பாவத்தை நோக்கி கடந்து போனால் அவன் போகையில் திருடர்கள்அவனை அடித்து மரணத்துக்கு சமீபமாய் போட்டார்கள் மரணத்தருவாயில் அவன் சாலையோரத்தில் கிடக்கும் போது ஒரு ஆசாரியனும் ஒரு லேவியனும் மதசம்பத்தப்பட்ட உதாரணங்கள் ஆகியவன் அவ்வழயாகக் கடந்துப் போயும் அவனுக்கு உதவ வில்லை. ஆனால் ஒரு சமாரியனுக்கோ இரக்கம் உண்டாயிற்று அவன் நின்று வழிபோக்கனின் காயங்களைக் கட்டி அவனை ஒரு சத்திரத்துக்கு எடுத்துக் கொண்டு போய் அந்த மனுஷன் சுகமடையும் வரைக்கும் அங்கே தங்குவதற்கான காசையும் செலுத்தினான்.

இந்த உவமையிலே ஜாதி வெறுப்பை இயேசு வெறுத்தார். தேவன் இல்லாத ஒரு மதம் அன்பில்லாததும் உயிர் இல்லாததுமாய் இருக்கிறது என்பதை அவர் வெளிப்படுத்தினார் உன்மையான கிறிஸ்தவன் இரக்கத்தினால் அசைக்கப்பட்டு பிறருக்கு உதவியாக இருக்க வேண்டும். ஒருவன் / ஒருவள் தன்னுடைய ஆத்துமாவைக் கர்த்தரிடத்திலே ஒப்புக்கொடுக்கும் போது அவர் மாத்திரம் அவர்களுக்கு உதவியாக வருவார்.

இந்த உவமை வெறுமையான மதத்தையும் பயங்கர வாதத்தையும் குற்றத்தையும் ஜாதி வெறுப்பையும் காண்பிக்கிறது இவைகள் எல்லாவற்றையும் இந்த கால உலகத்தில் நாம் பார்க்கலாம் இந்த பொல்லாதக் காரியங்களை எதிர்த்து நிற்க இந்தக் கதை கற்றுக்கொடுக்கிறது.

## VI. இயேசு பாவங்களை மன்னித்தார்

அவர் பாவமற்றவராய் இருக்கிறபடியால் அவராலே மாத்திரம் பாவங்களை மன்னிக்க முடியும் இயேசு மற்றவர்களுடைய பாவங்களை மன்னித்தார் என்று யூத சமுதாயம் கேட்ட மாத்திரத்திலே அதிர்ச்சியடைந்து பாவங்களை மன்னிப்பதினாலே அவர் போதகரைக் காட்டிலும் தீர்க்கதரிசியைக் காட்டிலும் உயர்ந்தவர் என்பதை அவர் காண்பித்தார் இதன் மூலம் அவர் தேவனாக இருந்து இன்றைக்கும் தேவனாக இருக்கிறார் என்பதை வெளிப்படுத்தினார்.

**மத்தேயு 9:2-7** "*அங்கே படுக்கையிலே கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.3 அப்பொழுது, வேதபாரகரில் சிலர்: இவன் தேவதூஷணம் சொல்லுகிறான் என்று தங்கள் உள்ளத்தில் சொல்லிக்கொண்டார்கள். 4 இயேசு அவர்கள் நினைவுகளை அறிந்து: நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன? 5 உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ எது எளிது? 6 பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார். 7 உடனே அவன் எழுந்து, தன் வீட்டுக்குப்போனான்.*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

## VII. இயேசுவினுடைய மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல்

### 1. அவருடைய மரணம் மற்றும் அடக்கம்

**1 பேதுரு 2:21-24** *"இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். 22 அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; 23அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். 24 நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்."*

இயேசு கிறிஸ்துவினுடைய மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் நம் பாவங்களுக்காக விலைக் கிரயத்தை செலுத்தியது. ஒரு மனுஷனுடைய பாவம் அவன் சாக வேண்டும் என்பதற்காகத்தான் ஆனால் நாம் மரிக்கக்கூடாது என்று நம்முடைய இடத்திலே நமக்கு பதிலாக இயேசு மரித்தார். காலத்தின் தொடக்க முதல் ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுவதற்கு முன்பதாகவே அவர் திட்டமிட்ட தேவ ஆட்டுக்குட்டியாகவே இருந்தார்.

**யோவான் 1:29** "*மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.*"

**வெளி 13:8** *"உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ..."*

யூதாஸ் என்கிற சீஷனால் மதசம்பத்தப்பட்ட ஆட்சியாளர்களிடம் இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டார் இஸ்ரவேலில் இயேசுவினுடைய செல்வாக்கை அவர்கள் வெறுத்தார்கள் ஆகையால் அவரைக் கொல்ல வேண்டும் என்று நினைத்தார்கள். இராமுழுவதும் ஜெபித்தப் பின்பு இயேசு சேவகர்களால் கட்டப்பட்டு 'சன்ஷிட்ரின்' நீதிமன்றத்திற்கு முன்பதாக நியாயந்தீர்க்க நிறுத்தப்பட்டார் அவர் தலையிலே முட்கிரீடத்தை சுற்றி அவர் தாடியை கிழித்து அவருடைய முகத்தில் அடித்தார்கள் அவரை பரியாசம் பண்ணி அவரைத் துப்பினார்கள். அதன் பிறகு ஒரு சாட்டையை எடுத்து (கேட் ஆஃப் 9 டெயில்ஸ்) அவரை அடித்தார்கள் குற்றவாளிகளை அடிப்பதற்கு ரோமர்களால் பயன்படுத்தப்பட்ட சித்ரவதையின் குறிப்பிட்ட கருவியாக இந்த சாட்டை இருந்தது. குற்றவாளியின் சட்டையை கழற்றி அவனை ஒரு கம்மபத்திலே கட்டி பொது பார்வையிலே அடிப்பது வழக்கமாய் இருந்தது. இந்த சாட்டை மிருக தோலினால் செய்யப்பட்டது இதில் கூர்மையான எலும்புத் துண்டுகளும் இதில் இருந்தது. ஆணிகளினால் முடித்து கனமான வெண்கல வளையங்களை இந்த சாட்டை கொண்டிருந்ததது அந்த சாட்டையின் வார்களின் முடிவில் மீன்த் தூண்டில்களைப் போல கொக்கிகள் இருந்தது.

Dr. ட்ரூமின் டேவிஸ் மருத்துவ கண்ணோட்டத்தோடே சிலுவையில் அறையப்படுவதை ஆராய்ந்து ரோம சித்ரவதையை விளக்குகிறார். முழு பெலத்தோடு இந்த கனமான

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

வாற் தோள்களின்மேலும். முதுகின் மேலும் கால்களின் மேலும் கொண்டு வரப்படும். முதலாவதாக இந்த கனமான கொக்கிகள் தோலை மாத்திரம் வெட்டும் அடிகள் தொடர அவைகள் ஆழமாக தசைகளில் படிந்து தோலில் உள்ள சிறிய இரத்தக் குழாய்களை வெடிக்க செய்து சதையிலிருந்து உதிரத்தைப் புறப்படப்பண்ணும் இரும்பால் செய்யப்பட்ட விறியப்பந்துகள் ஆழமான பெரியக் காயங்களை உண்டாக்கி அதற்கு பிறகு கொடுக்கப்பட்ட அடிகளால் இந்த காயங்கள் முழுமையாக வெடியச் செய்யும். கடைசியாக முதுகிலிருக்கிற தோலானது நீலக்கயிறுகளைப் போலத் தொங்கும் அடையாளம் தெரியாத இரத்தம் வடிகிற சதையாக அந்த முழு இடமும் மாற்றப்படும் காவல்காரன் கைதி மரணத்திற்கு சமீபமாக இருக்கிறான் என்று சொன்ன மாத்திரத்திலே அடிகள் நிறுத்தப்படும்.

இந்தக் காரியங்களெல்லாம் அகோரமாக இருந்தாலும் இயசுகிறிஸ்துவினுடைய தியாகத்தை நாம் புரிந்துக்கொள்ள உதவியாக இருக்கும்.. நமக்காக அவர் பாடுகளை அனுபவித்து மற்றும் நமக்கு பதிலாக அவர் மரித்ததற்காக காரணம் நாம் கர்த்தரோடுகூட உறவு கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் நமக்கு சுகமளிப்பதற்காக இந்த பாடுகளை எல்லாம் அனுபவித்தார் என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். சுகத்திற்கான வாசலை அவர் அடிப்பட்டு திறந்துக் கொடுத்தார்.

**ஏசாயா 53:5** *"... அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்."*

**1 பேதுரு 2:24** *"... அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்."*

இதற்குப்பிறகு ரோம சேவகர்கள் அவரை மண்டை ஓடுகள் நிறைந்த இடமான கொல்கொதாவிற்கு அழைத்துச் சென்றார்கள் ஒரு மரச் சிலுவையிலே அவருடைய கால்களையும் கைகளையும் ஆணிகளால் அடித்து இரண்டு குற்றவாளிகள் நடவே அவரை சிலுவையிலே அறைந்தார்கள் அங்கே அவர் மரித்தார்.

**யோவான் 19:30** *"... முடிந்தது என்று சொல்லி, தலையைச்சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்."*

**மத்தேயு 27:50-54** *"இயேசு மறுபடியும் மகாசத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார் 51 அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது கன்மலைகளும் பிளந்தது. ... 54 நூற்றுக்கு அதிபதியும், அவனோடேகூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்."*

இயேசு மரித்த போது கர்த்தருடைய ஆவீ தங்கியிருந்த மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் உலகத்திற்கும் இடையே இருந்த தடையாகிய தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்தது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் தேவனோடுகூட உறவுக் கொள்வதற்கு நாம் கண்டடையும் வழியிலே யாதொரு தடையும் இல்லை என்பதற்கு இது ஒரு அடையாளமாய் இருந்தது.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

### 2. உயிர்த்தெழுதல்

மூன்று நாள் கல்லறையில் இருந்த பிறகு இயேசு உயிர்தெழுந்து திருஷ்டாந்தமான சாட்சிகளோடு சீஷர்களுக்கு தரிசனமானார்.

**யோவான் 20:24-31** *"இயேசு வந்திருந்தபோது பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனேகூட இருக்கவில்லை.*
*25 மற்றச் சீஷர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன்: <u>அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன்</u> என்றான். 26 மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். 27 பின்பு அவர் தோமாவை நோக்கி: <u>நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு,</u> அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். 28 தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: **என் ஆண்டவரே! என் தேவனே**! என்றான். 29 அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய்**<u>, காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்</u>**. 30 இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். 31 இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது."*

சீஷர்களைப்பார்த்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்வதற்காக (புதிய பிறப்பின் இடத்திற்கு) எருசலேமிலே போய் தங்கியிருங்கள் என்று இயேசு சொன்னார்.

**அப்போஸ்தலர் 1:3-5** *"அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். 4 அன்றியும், அவர் அவர்களுடனே கூடிவந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். 5 ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் <u>என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று</u> கட்டளையிட்டார்."*

கிறிஸ்தவ மதம் இந்தக் காரணங்களினால் வித்தியாசமானது இயேசுவைக் குறித்து எழுதப்பட்ட எல்லா காரியங்களுமே அவருடைய வாழ்க்கையிலும், மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் நிறைவேற்றப்பட்டது. அவரை விசுவாசித்து கீழ்படிகிறவர்களின் வாழ்க்கையிலும் இயேசு தீர்க்கதரிசனம் உரைத்த எல்லா காரியங்களும் இன்றைக்கும் நிறைவேறுகின்றன.

சிருஷ்டிகளின் மேல் தேவன் வைத்த அன்பின் நிமித்தமாக அவர் மரித்தார். உலகத்திலேயே கிறிஸ்தவ மதத்திற்கே இந்தப் பெருமை சேரும் இது ஒரு கதை

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6a

மாத்திரமல்ல சீஷர்களுக்கு இயேசுவால் வாக்குதத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் இன்றைக்கும் நிறைவேறுகிறது   இது நிஜம்.

இயேசுவைக் குறித்து அநேகர் வித்தியாசமான கருத்துகளை கொண்டிருக்கிறார்கள் நீங்கள் எதை விசுவாசிக்க தேர்ந்தெடுப்பீர்கள் ?



**சாவி # 7: இயேசு சொன்னது இன்றைக்கும் நடக்கிறது !**

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 7

## புதிய ஏற்பாடு இரட்சிப்பு : புதிய பிறப்பு (கர்த்தர் மனிதனோடு செய்த உடன்படிக்கையின் விளக்கம்.

ஒவ்வொருக் குறிப்பிட்ட காலகட்டத்திலும் ஸ்திரிகளுக்கும், புருஷர்களுக்கும் குறிப்பிட்ட இரட்சிப்பின் பாதையை கர்த்தர் கொடுத்தார். நோவாவோடு அது பேழையாய் இருந்தது. ஆபிரகாமோடே விருத்தசேதனமாய் இருந்தது இஸ்ரவேல் மக்களோடு கூடாரமாய் இருந்தது இயேசு மற்றும் அவருடைய சீஷர்களால் கற்று கொடுக்கப்பட்ட புதிய பிறப்பாகிய புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பிற்கான பாதையாய் நம்மோடு இருக்கிறது. இன்றைக்கு நம் பாடம் மிகவும் சுவாரசியமானது. வேதம் நம் இரட்சிப்பின் பாதையைக் குறித்து என்ன சொல்லுகிறது என்று நாம் சேர்ந்து கண்டுபிடிப்போம் இந்த இரட்சிப்பின் பாதை நம் பாவங்களை நீக்குகிறது (இந்த பாவம் கர்த்தர் நம் வாழ்க்கையில் வருவதை தடுக்கிறது) கர்த்தரோடு ஒரு அற்புதமான உறவை அடைய அது அனுமதிக்கிறது.



**சாவி # 1** **<u>கர்த்தர் இரட்சிப்பிற்காக ஒரு குறிப்பிட்ட திட்டத்தை இன்று வைத்திருக்கிறார்.</u>**

## I. புதிய பிறப்பிற்காக ஆயத்தப்படுவதற்கான படிகள்

A. A-E பகுதிகளை தேவையானால் மறு பரிசீலனை செய்யவும் அல்லது 2-ம் பாகத்திற்கு கடந்து செல்லவும் ஆசிரியர் குறிப்பு

1. முதலாவது இந்த செய்தியை நாம் விசுவாசிக்க வேண்டும்

**ரோமர் 10:17** "*ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.*"

**எபிரெயர் 11:6** "*விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், **தேவனிடத்தில் சேருகிறவன் அவர்** உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் **விசுவாசிக்கவேண்டும்**.*"

**ரோமர் 1:16** "***கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்** குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் **விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.***"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 7

**1 கொரிந்தியர் 1:21** "*எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே **விசுவாசிகளை இரட்சிக்க** தேவனுக்குப் பிரியமாயிற்று.*"

இந்த செய்தியை விசுவாசிக்கிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். ஆனால் இதோ செய்தியின்மேல் அவ்விசுவாசமாக உள்ளவர்களுக்கு இது மூடத்தனமாகக் காணப்படும் கர்த்தர் மேலும் அவர் செய்தியின் மேலும் விசுவாசமாய் இருப்பதே இரட்சிப்பிற்கான முதல் தேவையாகும் அப்போஸ்தலர்களால் பிரசங்கீக்கப்பட்ட செய்தியை நாம் விசுவாசிக்க வேண்டுமென்று இயேசு ஜெபித்தார் என்று நாம் பார்க்கலாம் இந்த செய்தி அவ்வளவு முக்கியமானது.

யோவான் 17:20 "*நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.*"

## 2. இரண்டாவதாக தேவனுடைய செய்திக்கு நாம் கீழ்படிய வேண்டும்.

நாம் கீழ்படிதலோடு இருந்தால் கர்த்தர் நித்திய இரட்சிப்பை நமக்கு கட்டளையிடுகிறார்

**எபிரெயர் 5:9** "*தாம் பூரணரானபின்பு, **தமக்குக் கீழ்ப்படிகிற** யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,*"

இரட்சிக்கப்படுவது எப்படி என்று தெரிந்தால் மாத்திரம் போதாது இதினால் நாம் இரட்சிப்பை பெற முடியாது நோவாவைப் போல இரட்சிப்பின் திட்டத்திற்கு நாம் கீழ்படிய வேண்டும் தேவனுடைய செய்தியிலே நோவாவினுடைய விசுவாசம் அவருடைய இரட்சிப்பின் திட்டத்திற்கு கீழ்படிவதின் நிமித்தம் வெளிப்படுத்தபட்டது

**எபிரெயர் 11:7** "*விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்து தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, **தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்**; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்.*"

இதேப்போல கிருபையின் காலம் முடிவடையும் போது பாவங்களுக்காக கொடுக்கப்படும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பிலிருந்து கர்த்தர் இன்றைக்கு வைத்திருக்கிற திட்டத்திற்கு நாம் கீழ்படிந்தால் இது நம்மைக் காப்பாற்றும்.

**2 தெசலோ 1:8-10** "*...8 கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். 9 அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் <u>எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே</u> உங்களிடத்திலும், <u>விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும்</u> ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, 10 அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்.*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 7



சாவி # 2 <u>இரட்சிக்கப்படுவதற்கு நாம் விசுவாசித்து கீழ்படிய வேண்டும் நம் கீழ்படிதல் செய்கையில் உள்ள விசுவாசம் / நம்பிக்கை ஆகும்.</u>

## 3. நாம் மனந்திரும்ப வேண்டும்

**மாற்கு 1:15** “ *காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று;* ***மனந்திரும்பி, <u>சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்</u>*** *என்றார்.* ”

**2 கொரிந்தியர் 7:10** “ *தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல்* ***இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை <u>உண்டாக்குகிறது</u>****; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது.* ”

மனந்திரும்புதலை 2 பகுதிகளாகப் பிரிக்கலாம்

1. நம் பாவங்களுக்காக கர்த்தரிடத்தில் மன்னிப்பு கேட்பது மற்றும்
2. பாவத்தைவிட்டு விலகி (180') கர்த்தரை நோக்கித் திரும்புவது மனந்திரும்புவதால் நாம் வாழுகிற சொந்த வழியை விட்டு விலகி மரித்து கர்த்தருக்கு பிரியமான வாழக்கையை வாழ நாம் தேர்ந்தெடுக்கிறோம் சுவிசேஷச் செய்தியை கொண்டுள்ள இரட்சிப்பின்மேல் இருக்கிற கீழபடிதலான விசுவாசம் தான் மனந்திரும்புதலின் ஆரம்பம்.

## B. நாம் ஏன் மனந்திரும்ப வேண்டும் ?

இது கட்டளையிடப்பட்டிருக்கிது

**அப்போஸ்தலர் 17:30** “*அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார்;* ***இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.***”

இது இல்லாதிருந்தால் நாம் அழிந்து போவோம்.

**லூக்கா 13:3** “*அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்;* ***நீங்கள் மனந்திரும்பாமற்போனால்*** *எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்.* ”

இது அவருடைய சித்தம்

**2பேதுரு 3:9** “*தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி* ***கர்த்தர்*** *தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்;* ***ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.***”

நாம் எல்லோரும் பாவம் செய்திருந்ததால் மனந்திரும்ப வேண்டும்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 7

**ரோமர் 3:23** “***எல்லாரும் பாவஞ்செய்து***, *தேவமகிமையற்றவர்களாகி,*”

நம்மிடத்திலே பாவம் இல்லை என்று நாம் சொல்லுவோமேயானால் நாம் பொய் சொல்லுகிறோம்

**1யோவான் 1:8-10** “*நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. 9 நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 10 நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது.*”

## C. நாம் மனந்திரும்பினால் என்ன ஆகும் ?

நம் பாவங்கள் அழிக்கப்படும்

**அப்போஸ்தலர் 3:19** “*ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில்* ***அனுப்பும்படிக்கும்***, ”

நாம் சுத்திகரிக்கப்படுவோம்

**1யோவான் 1:9** “ *நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச்* ***சுத்திகரிப்பதற்கு*** *அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.* ”

பரலோகத்திலே மிகுந்த மகிழ்ச்சி உன்டாகும் நாம் செழித்து கா்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்வோம்.

**நீதிமொழிகள் 28:13** “ *தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை* ***அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ*** *இரக்கம் பெறுவான்.*”

## D. உண்மையான மனந்திரும்புதலின் வேதாகம உதாரணம்

**லூக்கா 19:1-10** “*அவர் எரிகோவில் பிரவேசித்து, அதின் வழியாக நடந்துபோகையில், ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன், இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்துபார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார். அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டு போனான். அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படிபோனார் என்று*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 7

*முறுமுறுத்தார்கள். சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.* ”

### E. மனந்திரும்புதல் கர்த்தருக்கு ஏன் அவ்வளவு முக்கியமானது?

பாவத்தினாலே தோன்றுகிற பெரிதான பிரச்சனைகளை நாம் உணர்ந்து ஒத்துக்கொள்ள வேண்டும் என்று கர்த்தர் வலியுறுத்துகிறார் மனுகுலத்தோடு தேவன் வைத்திருந்து உறவு ஆதாமின் பாவம் அழிந்தது நான் சரியாக இருக்கிறேன் இது என் தவறு அல்ல நான் இதை சொந்தமாக செய்ய முடியும் நான் அவ்வளவு மோசம் அல்ல என்றெல்லாம் சொல்லுகிற நம் உள்ளரங்கமான சித்தத்தை மனந்திரும்புதல் முறுக்குகின்றது. நான் சரியாக வாழ்வதற்கு கர்த்தருடைய உதவி தேவை என்பதை மனந்திரும்புதல் ஒத்துக்கொள்கிறது. ஒருவன் மனந்திரும்பும் போது அவனுடைய செய்கைகள் தவறு என்று தனக்குத் தானே ஒத்துக் கொள்கிறான். இவைகளை நிரந்தரமாக மாற்றி கர்த்தரோடுகூட ஒப்பந்தத்தை செய்ய ஆயத்தமாக இருப்பார்கள் மனந்திரும்புதலின் நிமித்தம் இயேசுவை நம் வாழ்க்கையின் மேல் தேவனாக வைக்கிறோம்.. இயேசுவை நம் வாழ்க்கையின் மேல் தேவனாகவும் எஜமானாகவும் வைப்பதின் அடிப்படையிலே புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பின் திட்டத்திற்கு நாம் இன்றைக்கும் கடந்து செல்ல முடியும்



சாவி # 3 <u>இரட்சிக்கப்பட நாம் நிச்சயமாக மனந்திரும்ப வேண்டும்!</u>

## II. புதியப் பிறப்பைக் குறித்து இயேசு போதிக்கிறார்

### A. நாம் மறுபடியுமாக பிறக்க வேண்டும்

புதிய பிறப்பைக் குறித்து இயேசு போதிக்கிறார்

**யோவான் 3:3-7** “ ***இயேசு*** *அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன்* ***மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்*** *என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச்* ***சொல்லுகிறேன்*** *என்றார். 4 அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். 5 இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன்* ***<u>ஜலத்தினாலும் ஆவியினாலும்</u> பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்*** *என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். 6 மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். 7* ***<u>நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று</u>*** *நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம்.* ”

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 7

தேவனுடைய இராஜியத்திற்குள்ளே பிரவேசிப்பதற்கு நாம் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கவேண்டுமென்று இயேசு சொன்னார். வேதாகமத்தின்படி ஜலத்தினால் பிறக்க வேண்டும் என்றால் என்ன ? என்று முதலாவதாகப் பார்க்கலாம் ஆவியினாலேப் பிறப்பது என்ன ? என்று பாடம் 8-ல் கலந்துரையாடலாம்.



**சாவி # 4** **<u>இரட்சிக்கப்பட நாம் மறுபடியுமாக பிறந்தாக வேண்டும்</u>**

## III. ஜலத்தினால் பிறப்பது என்றால் என்ன ?

**A. வேதம் மிகத் தெளிவாக இருக்கிறது யோவான் 3-ல் இயேசு சொல்லுகிறதான அனுபவம் ஜலத்தினால் பெற்றுக் கொள்ளும் ஞானஸ்நானமாகும்.**

இயேசு: **மத்தேயு 28:19** "*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு* ***ஞானஸ்நானங்கொடுத்து,***"

இயேசு: **மாற்கு 16:16** "***விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்;*** *விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*"

நாம் உண்மையாகவே விசுவாசித்தால் இயேசு சொன்னதான ஜலத்தினால் பெற்றுக்கொள்ளும் ஞானஸ்நான செய்திக்கு கீழ்படிவோம் இரண்டாவதாக சொல்லப்பட்ட வேதப்பகுதி விசுவாசித்து ஞதனஸ்நானம் பெற்றுக் கொள்வதால் நாம் இரட்சிக்கபடுவோம் என்று நமக்கு சொல்லுகிறது. மேலும் விசுவாசிக்காமல் இருப்பவர்கள் ஞானஸநானம் பெற்றுக்கொள்வார்களா ? இல்லை ஆகையால் தான் விசுவாசிக்காமல் இருந்தால் அவர்கள் இரட்சிக்கப்படமாட்டார்கள். ஞானஸ்நானம் பெறுவதற்கு முதலாவதாக நாம் இரட்சிக்கப்பட வேண்டும்.

### B. ஞானஸ்நானம் என்றால் என்ள ?

புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலே எழுதப்பட்டது. ஞானஸ்நானத்திற்கான கிரேக்க வார்த்தை பேப்டைஸ்சோ (கிரீக் 907 ஸ்றாங்க்ஸ்) இதின் அர்த்தம் முழுகுவது முழுமையாக முழுகுவது ஆகையால் ஞானஸ்நாமத்திற்கான சரியான முறை முழுகுவதாகும். சுவாரகியமாக தெளிப்புக்கான கிரேக்க வார்த்தை ராண்டிஸமோஸ் (கிரீக் no.4473 ஸ்றாங்க்ஸ்) அல்லது ரான்டைசோ (கிரீக் no.4472 ஸ்றாங்க்ஸ்) ஆகும்.. வேதத்திலே ஞானஸ்நாமம் குறித்து சொல்லப்பட்ட இடங்களில் இவைகளைப் பயன்படுத்தவே இல்லை தெளிப்பு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட நபரைக்குறித்து வேதாகம உதாரணமும் இல்லை. ஆகையால் மனுஷனாலே உண்டாக்கப்பட்ட உபதேசம்தான் தெளிப்பு ஞானஸநான உபதேசமாகும் சீஷர்களாலும் இயேசுவாலும் போதிக்கப்பட்ட ஞானஸ்நானத்தின் பழக்கத்திற்கு இது எதிர் மாறாக இருக்கிறது.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 7

## C. புதிய ஏற்பாட்டில் நடந்த உண்மையான ஞானஸ்நானங்கள்

### 1. எத்தியோப்பிய மந்திரி

**அப்போஸ்தலர் 8:26-32, 35-38** "*பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து,
தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற **வனாந்தரமார்க்கமாய்ப்**
போ என்றான். 27 அந்தப்படி அவன் எழுந்து போனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய
ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய
பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த **எத்தியோப்பியனாகிய ஒருவன்**
பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து; 28 ஊருக்குத் திரும்பிப்போகும்போது, தன்
இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக்கொண்டிருந்தான். 29 29
ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார்;
30 அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச்சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை
வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான்.
31 அதற்கு அவன்: ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும்
என்று சொல்லி; பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக்கொண்டான். 32
அவன் வாசித்த வேதவாக்கியமென்னவென்றால்; அவர் ஒரு ஆட்டைப்போல
அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்; மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச்
சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்... 35
அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு
**இயேசுவைக்குறித்து அவனுக்குப்பிரசங்கித்தான்**. 36 இவ்விதமாய் அவர்கள்
வழிநடந்துபோகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ,
தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். 37
அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான்.
அப்பொழுது அவன் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று
சொல்லி; 38 இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது **பிலிப்பும் மந்திரியும் ஆகிய
இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான்**.*"

**கேள்வி :** ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதற்கான யோசனை எத்தியோப்பியருக்கு எங்கிருந்து வந்தது.

பிலிப்பு இயேசுவைக் குறித்து பிரசங்கித்த போது அவனுக்கு இந்த யோசனை தோன்றியிருக்கும் ஞானஸ்நானத்தின் செய்தியை இயேசுவைக் குறித்ததான பிரசங்கங்கள் கொண்டிருக்கும் என்பதை இது வெளிப்படுத்துகிறது.

**கேள்வி :** இருவரும் ஜலத்திற்குள்ளாக கடந்து போனார்கள் என்று வேதம் ஏன் சொல்லுகிறது.

சரியாக ஞானஸ்நானம் பெறுவதற்கு ஒருவன் ஜலத்திலே முழுமையாக முழுக வேண்டும்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 7

தீவிரமான சூழ்நிலைகளில் முழுகுவதை கர்த்தர் எதிர்பார்பதில்லை என்று சிலர் யோசிப்பார்கள் உதாரணத்திற்கு வனாந்திரத்திலே தண்ணீரின் பற்றாக்குறை தீவிரமான சூழ்நிலைகளிலே தேவன் அற்புதமாக தண்ணீரைக் கொடுப்பார் என்பதை வேதம் தெளிவாக சொல்லுகிறது. ஒருவன் ஞானஸ்நானத்தின் தேவையை உணரும் போது இது நடக்கிறது.

**2. பிலிப்பிய சிறைச்சாலைக்காரன்**

**அப்போஸ்தலர் 16:30-34** "*அவர்களை வெளியே அழைத்துவந்து: ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான். 31 அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, 32 அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும்* ***கர்த்தருடைய வசனத்தைப்*** *போதித்தார்கள். 33 மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே* ***ஞானஸ்நானம்*** *பெற்றார்கள். 34 பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு போஜனங்கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்.*"

31-வது வசனம்தான் இரட்சிப்பின் திட்டம் என்று சிலர் விசுவாசிப்பார்கள் இயேசுவே தேவன் என்று விசுவாசித்தால் போதும் என்றும் தேவனுடைய இராஜியத்தில் பிரவேசித்து விடாலாம் என்றும் இவர்கள் விசுவாசிப்பார்கள். இது தவறான போதனை ஆகும். இரட்சிப்பிற்காக விசுவாசம் தேவை உள்ளதுதான். ஆனால் இது பூரனமான திட்டம் அல்ல நாம் ஏற்கனவே பார்த்ததுப் போல புதிய பிறப்பை நிறைவேற்றுவதற்கு ஒருவன் மனந்திருப்ப வேண்டும் 32-வது வசனத்திலே **கர்த்தருடைய வார்த்தை** சிறைச்சாலைக் காரனுக்கும் அவன் குடும்பத்திற்கும் பிரசங்கிக்கப்பட்டது என்று நாம் காணலாம். இதின் நிமித்தமாக முழுக் குடும்பமும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டது. ஆகையால் இயேசுவின் செய்தியின் மேல் உண்மையாக விசுவாசிப்பது ஞானஸ்நானத்தை விசுவாசிப்பதேயாகும்.

**கேள்வி :** ஞானஸ்நானம் பெறுவதற்கான யோசனை இவர்களுக்கு எங்கிருந்து வந்தது ?

கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்கு பிரசங்கிக்கபட்ட போது ஞானஸ்நானம் அதிலே இருந்திருக்கும் வேதாகம ரீதியாக இரட்சிப்பின் திட்டத்தை ஞானஸ்நானம் இல்லாமல் பிரசங்கிக்க முடியாது

**கேள்வி :** ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதற்கு வீட்டைவிட்டு அவர்கள் எதற்கு போனார்கள் ?

வேதாகமரீதியாக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதற்கு வீட்டைவிட்டு முழுகுவதற்காக தேவையான தண்ணீரைக் கண்டடையும்படியாகப் போனார்கள்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 7

**D. புதிய ஏற்பாட்டிலே சுவிசேஷம் எங்கேயெல்லாம் பிரசங்கிக்கப்பட்டதோ அங்கேயெல்லாம் ஞானஸ்நானமும் பிரசங்கிக்கப்பட்டது.**

அப்போஸ்தலனாலே பிரசங்கிக்கப்பட்ட முதல் செய்தியில் தேவனுடைய இராஜியத்தில் பிரவேசிப்பதற்கு ஞானஸ்நானம் தேவவையானப் படி என்று பிரசங்கிக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே என்னும் பண்டிகையை கொண்டாடிக் கொண்டிருந்த யூதர்களுக்கு இந்த செய்தி கொடுக்கப்பட்டது.

**அப்போஸ்தலர் 2:38** "*பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே* ***ஞானஸ்நானம்*** *பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*"

சுவிசேஷம் சமாரியர்களாகிய பாதி யூதர்களுக்கு முதல் முறை பகிர்ந்து கொண்ட போது அவர்கள் செய்தியை விசுவாசித்து உடனடியாக ஞானஸ்நானம் பெற்றார்கள்.

**அப்போஸ்தலர் 8:5-12** "*அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப்* ***பிரசங்கித்தான்****... 12* ***தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம்பெற்றார்கள்.***"

யூதர்கள் இல்லாத புறஜாதி மக்களுக்கு முதல் முறை சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட போது அவர்கள் விசுவாசித்து உடனடியாக ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியினால் நிரப்பட்டார்கள்

**அப்போஸ்தலர் 10:44-48** "***இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிகொண்டிருக்கையில் வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.*** *45* ***அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு: நம்மைப்போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதாபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான்***..."

ஒருவன் மறுபடியுமாக ஞானஸ்நானம் பெற முடியுமா ? இந்த உதாரணத்தை நாம் பார்ப்போம் பவுல் எபேசு பட்டணத்தில் இருந்தபோது யோவான் ஸ்நானகனுடைய சீஷர்களைக் கண்டு மறுபடியுமாக அதே நாளிலே ஞானஸ்நானம் கொடுத்தார்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 7

**அப்போஸ்தலர் 19:1-7** "*அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில்,
பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய் எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக்
கண்டு: 2 நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான்.
அதற்கு அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை
என்றார்கள். 3 அப்பொழுது அவன்:* ***அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்***
*என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள். 4
அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில்
விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற
ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான். 5* ***அதைக் கேட்டபோது அவர்கள்: கர்த்தராகிய
இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.*** *6 அல்லாமலும் பவுல்
அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தாவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது
அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். 7 அந்த
மனுஷரெல்லாரும் ஏறக்குறையப் பன்னிரண்டுபேராயிருந்தார்கள்.*"

சுவிசேஷ செய்திக்கு கீழ்படிந்த ஜனங்களுடைய வாழ்க்கையிலே நடந்த இந்த உண்மையான சம்பவங்கள் சில முக்கியமான கருத்துக்களை போதிக்கின்றன. எழுத்திடப்பட்ட ஒவ்வொரு சம்பவத்திலும் விசுவாசத்தோடு சுவிசேஷ செய்திக்கு கீழபடிந்து ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். யூதர்களும் பாதி யூதர்களும் புறஜாதிகளும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் அல்லது சுவிசேஷ செய்தியைக் கேட்டபின் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள கட்டளையிடப்பட்டார்கள். ஆகையால் புதிய ஏற்பாட்டில் காணப்படும் இரட்சிப்பின் உதாரணங்கள் எல்லாம் யூதர்களாயிருந்தாலும் இல்லாவிட்டாலும், ஸ்திரிகளானாலும் புருஷர்களானாலும் ஞானஸநானத்தைக் கொண்டிருந்தது. இரட்சிப்பின் திட்டத்திற்கு ஞானஸ்நானம் தேவையானது என்று பூமியிலே விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் இதற்கு கீழ்படிய வேண்டுமென்று புரிந்துக் கொள்வது முக்கியம்



சாவி # 5 <u>இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் தேவையானது புதிய பிறப்பின் ஜலத்தின் பகுதியை இது நிறைவேற்றுகிறது.</u>

### E. சுவிசேஷத்தின் அடக்கத்தின் பகுதியை ஞானஸ்நானம் குறிக்கிறது

வேதத்தின்படி சுவிசேஷம் என்றால் இயேசுகிறிஸ்துவினுடைய மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலாகும்.

**1கொரிந்தியர் 15:1-4** "*அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த* ***<u>சுவிசேஷத்தை</u>*** *மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்...கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து,* ***அடக்கம்பண்ணப்பட்டு****, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து,*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 7

கீழ் கொடுக்கப்பட்டுள்ள வேதப் பகுதிகளெல்லாம் சுவிசேஷ செய்தின் அடக்கத்தின் பகுதியை ஞானஸ்நானம் நிறைவேற்றுகிறது என்று போதிக்கின்றன.

**ரோமர் 6:4** "*மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும்* ***ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்.***"

கொலே 2:11,12 "*அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும்* ***விருத்தசேதனத்தினாலே*** *மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். 12* ***ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும்,*** *அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.*"

இயேசு சிலுவையிலே மரித்ததுபோலவே நம் பழைய வழிகளிலிருந்து நாம் மரித்து அவர் அடக்கம்பண்ணப்பட்டது போலவே நாமும் ஞானஸ்நானத்தில் அடக்கம்பண்ணப்படுகிறோம். அடக்கம் என்கிற வார்த்தைக்கு அர்த்தம் என்ன ? வெப்ஸ்டர் 9th நியூ காலேஜியேட் மொழியாக்கத்தில் இதற்கு அர்த்தம் சூழ்ந்து கொள்ளுதல் மூடுவது மற்றும் முழுகுவது என்று அர்த்தம் பிரேதக் குழியிலே ஒரு சடலம் மண்ணினால் மூடப்படுவது போல ஞானஸ்நானம் பெறும் போது அந்த தண்ணீர் அந்த நபரை முழுவதுமாக மூட வேண்டும் இதுவே சரியான ஞானஸ்நானமாகும்.

**F. பாவங்களை கழுவுவதற்காகத்தான் ஞானஸ்நானம் பாவமன்னிப்பு என்றால் சுத்தமாக கழுவுவது ஆகும்.**

**எபிரெயர் 9:22** "*...இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.*"

**அப்போஸ்தலர் 2:38** "*...ஒவ்வொருவரும்* ***பாவமன்னிப்புக்கென்று*** *இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே* ***ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்,*** *அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*"

**அப்போஸ்தலர் 22:16** "*இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ* ***எழுந்து*** *கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு* ***ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு*** *என்றான்.*"

**G. இயேசுவே ஞானஸ்நானம் பெற்றபோது நாம் இன்னும் எவ்வளவு அதிகமாய் பெற்றுக்கொள்ள வேண்டும் ?**

**மத்தேயு 3:13-16** "*அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். 14 யோவான் அவருக்குத்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 7

*தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு,* ***இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது*** *என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.*"

பாவம் இல்லாத இயேசுதான் நம் உதாரணம் நீதியை பூரணமாக்குவதற்கு ஞனாஸ்நானம் தேவை என்று அவர் யோவான் ஸ்நானகனிடத்திலே அவர் சொன்னார். பாவமில்லாத இயேசுவுக்கே ஞானஸ்நானம் நீதியை நிறைவேற்று மென்றால் பாவமனுஷராகிய நமக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வது இன்னும் எவ்வளவு முக்கியம் ? நீதியை சரிக்கட்டுவதற்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதுதான் ஒரே வழி

## IV. யார் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளலாம் ?

A. ஞானஸ்நானம் பெற விரும்புகிறவர்கள் விசுவாசித்து மனந்திரும்பி ஞானஸ்நானத்திற்கான காரணத்தை புரிந்துக் கொண்டிருக்க வேண்டும் ஞானஸ்நானம் இவைகளை கற்றுக் கொடுக்கிறது என்று மத்தேயு 28 19 கூறுகிறது. ஒருவன் விசுவாசிக்க வேண்டும் (மாற்கு 16:16) அதன்பின் மனந்திரும்ப வேண்டும் (அப்போஸ்தலர் 2:38)

B. குழந்தைக்கு / சிசுவுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது அவசியமா ? சிசு ஞானஸ்நானம் வேதத்திலே இல்லை ஞானஸ்நானம் பெறுகிற ஒவ்வொருவரும் முதலாவது சுவிசேஷத்தைக் புரிந்துக் கொண்டு விசுவாசித்து மனந்திரும்பி இதைப் பெற்றுக் கொள்ள வேண்டும் ஒரு சிசுவால் இதை எல்லாம் செய்வதற்கான திறமைக் கிடையாது.

## V. நாம் எப்போது ஞானஸ்நானம் பெற வேண்டும் ? (கைப்பிரதியை பார்க்கவும்)

இரட்சிப்பின் செய்தியைக் கேட்டு பதில் கொடுத்த மாத்திரத்திலே அவன் / அவள் உடனடியாக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போஸ்தலரின் நடபடிக்கைகளிலே ஜனங்கள் விசுவாசித்து மனந்திரும்பினவுடன் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் என்று 9 முறை கூறப்பட்டள்ளது.

## VI. சரியான முறை என்ன ?

A. ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது வேதத்தின்படி பயன் படுத்துகிற சரியான நாமம் என்ன ?

**மத்தேயு 28:19** "*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின்* ***<u>நாமத்திலே</u> அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து***,"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

# பாடம் 7

**அப்போஸ்தலர் 2:38** “ *பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று* ***இயேசுகிறிஸ்துவின்*** ***<u>நாமத்தினாலே</u>*** ***ஞானஸ்நானம்*** *பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*”

**கேள்வி :** அப்போஸ்தலர்களுக்கு அந்த நாமம் தெரியுமா ?

ஆம்

**கேள்வி :** ஞானஸ்நானம் கொடுக்கும் போது அப்போஸ்தலர்கள் எந்த நாமத்தை சொன்னார்கள் ? இயேசு

ஜனங்கள் எப்படி வேதரீதியாக ஞானஸ்நானம் பெற்றார்கள் என்ற கைப்பிரதியைப் பார்க்கவும்.
வேதத்திலே ஞானஸ்நானம் பெற ஒரே வழி இயேசுவின் நாமத்தினாலே தான்.
'கியானி என் சைக்ளோபீடியா ஆஃப் ரிலிஜன்' இவ்வாறாக கூறுகிறது ஆதி சபை இரண்டாம் நூற்றாண்டு வரை ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தது (53)

இயேசு என்றோ அல்லது பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்று சொல்வது அவ்வளவு முக்கியமா ? ஆம் முக்கியம்தான் உதாரணம் முதலாளி உங்களுக்கு சம்பள காசோலையைக் கொடுக்கும்போது அதில் உங்கள் பெயர் இல்லாமல் மகனுக்கு தகப்பனுக்கு கனவனுக்கு என்று எழுதியிருந்தால் அது செல்லுபடி ஆகுமா ? இல்லை காசோலையில் உங்கள் பெயர் மாத்திரம் தான் இருக்கவேண்டும் (உதாரணங்கள் திருமணச்சான்று, வீடுபத்திரம், வேலை ஒப்பந்தம், மரணசாசனம். இந்த எல்லா ஒப்பந்தங்களுக்கும் இவைகள் சட்டப்படியாக செல்லுபட உங்கள் பெயரை அதில் எழுத வேண்டும்.)

## B. பிதா குமாரம் பரிசுத்த ஆவியின் நாமம் என்ன ?

பிதாவின் நாமம் இயேசு

**யோவான் 5:43** “***நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும்*** *நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை, வேறொருவன் தன் சுய நாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்.*”

(மேலும் படிப்பதற்கு யோவான் 17:16 எபிரெயர் 1:4 பார்க்கவும்)

குமாரனின் நாமம் இயேசு

மத்தேயு 1:21 “*அவள் ஒரு* ***குமாரனைப்*** *பெறுவாள், அவருக்கு* ***இயேசு*** *என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.* ”

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 7

பரிசுத்த ஆவியின் நாமம் இயேசு

**யோவான் 14:26** "***என் நாமத்தினாலே*** *பிதா அனுப்பப்போகிற* ***பரிசுத்த ஆவியாகிய*** *தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.*"


(மேலும் படிப்பதற்கு யோவான் 4:24 (தேவன் ஆவியாயிருக்கிறார்) எபேசியர் 4:4 (ஒரே ஒரு ஆவி) 2கொரிந்தியர் 5:19 கொலே 2: 9,10 (இயேசுகிறிஸ்துவின் சரீரத்திலே தேவனுடைய ஆவி தங்கியிருந்தது) ஆகையால் மாம்சத்திலே இருந்த பரிசுத்த ஆவிதான் இயேசு)

### C. ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது அந்த நபரின் மேல் இயேசுவின் நாமம் எதற்காக சொல்லப்பட வேண்டும் ?

**அப்போஸ்தலர் 4:12** "*அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை;* ***நாம் இரட்சிக்கப்படும்படிக்கு*** *வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல்* ***வேறொரு நாமம்*** *கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.*"

**கொலோ 3:17** "*வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய* ***இயேசுவின் நாமத்தினாலே*** *செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.*"

புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்களின் உதாரணங்களில் எல்லாம் இயேசுவின் நாமத்தினாலேதான் பெற்றுக் கொண்டார்கள் என்று காணலாம் இவர்கள் யாவரும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே பெற்றுக் கொள்ளவில்லை இதற்கான காரணம் எளிது பிதா குமாரன் பரிசுத்த ஆவி நாமங்கள் அல்ல ஒரே தேவனாகிய இயேசுவின் பட்டங்களாகும். இயேசுவின் நாமத்தினாலே ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வது இரட்சிப்பிற்குத் தேவை வேத ரீதியாக இந்த ஞானஸ்நான போதனைதான் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.



சாவி **# 6** **<u>இயேசுவின் நாமத்தினாலே ஜலத்தினால் ஞானஸ்நானம் பெறுவது தான் ஞானஸ்நானம் பெற சரியான வழி பிதா குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி தேவனுடைய பட்டங்கள் ஆகும் அது அவருடைய பெயரல்ல.</u>**

அநேக பிராட்டெஸ்ட்டென்ட் (அதாவது கத்தோலிக்க சபைக்கு விரோதமாக எழுந்த சபைகள்) சபைகள் கத்தோலிக்க சபையின் ஞானஸ்நான முறையை (பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம்) வைத்துக் கொண்டார்கள் இது அவர்களுடைய பிரிவை தொடங்கும் போது செய்தனர் ஆனால் இரட்சிப்பைக் கொடுக்கும் ஒரே நாமத்தின் வழியில் அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் கொடுத்தபடியால் நாமும் இயேசுவின் நாமத்தில்தான் ஞானஸ்நானம் கொடுக்க

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 7

வேண்டும். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமம் தான் இயேசு என்று அப்போஸ்தலர்கள் புரிந்து கொண்டபோது கர்த்தராலே தெரிந்தெடுக்கப்பட்ட மனிதர்களுடன் ஒத்துக் கொள்ளாமல் போவதற்கு நாம் எம்மாத்திரம் ? ஆகையால் அப்போஸ்தலர் 5:29 அதற்கு பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் மனுஷருக்கு கீழ்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்படிகிறதே அவசியமாயிருக்கிறது என்று சொன்னது போலவே நாமும் சொல்கிறதும் செய்கிறதும் எல்லாவற்றிலுமே அப்போஸ்தலர்களோடுகூட ஒத்து போக வேண்டும்.

எதற்காக இன்னும் காத்துக் கொண்டிருக்கிறீர்கள் ? அப்போஸ்தலர் 22:16 இப்பொழுது நீ தாமதிக்கிற தென்ன ? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்.

**அடுத்த பாடத்தை தவிர்க்காதீர்கள் --- புதிய பிறப்பின் இரண்டாம்படி**

**ஆவியிலே எப்படி பிறப்பது ? பாடம் 8**



சாவி # 7 **ஜலத்திலே இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வது மறுபடியுமாக பிறப்பதின் ஒரு பங்காகும்.**

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
## பாடம் 8

**ஆசிரியர் குறிப்ப,:** இந்தப் பாடத்தை துவங்குவதற்கு முன்பதாக உங்களுக்கும் உங்களுடைய மாணவர்களுக்கும் இந்தப் பாடத்தின் முக்கியத்துவத்தை தேவன் விளக்க வேண்டும் என்று ஜெபத்திலே வைத்தப்பின்பு கீழ்கொடுக்கப்பட்டுள்ள வேதப்பகுதி மற்றும் குறிப்புகளைப் படிக்கவும் தேவனுடைய காரியங்களை நீங்கள் புரிந்தக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் ஜெபிக்கவும் அதன் பிறகு ஜெபித்து கற்றுக்கொள்ள துவங்கவும்.

தேவனுடைய ஆவியின் காரியங்களை உலகத்தாலோ இயற்கையான மனதினாலோ இருதயத்தினாலோ புரிந்துக்கொள்ள முடியாது பரிசுத்த ஆவியைக் குறித்து அநேகர் புரிந்துக் கொள்ள மாட்டார்கள் என்றும் அது மூர்க்கமானது என்றும் நினைப்பார்கள் என்று வேதம் நமக்கு போதிக்கிறது.

**1கொரிந்தியர் 2:10-14** "*நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக்காண்பிக்கிறோம். ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்.* "

தேவனுடைய உதவி இல்லாமல் தேவனுடைய ஆவியின் காரியங்களை நாம் புரிந்துக் கொள்ள முடியாது என்று இந்த வேதப்பகுதி கூறுகின்றது.

**கேள்வி :** ஒரு குருடனால் ஒரு ஓவியப்போட்டியை தீர்ப்பு செய்யமுடியுமா

இல்லை

**கேள்வி :** ஒரு செவிடனால் பாடல் போட்டியை தீர்ப்பு செய்ய முடியுமா

இல்லை

**கேள்வி :** தேவனுடைய காரியங்களை தேவனுடைய ஆவி இல்லாமல் ஒருவனால் புரிந்துக்கொள்ள முடியுமா

இல்லை

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 8



**சாவி # 1** <u>**தேவனுடைய வார்த்தையைப் புறக்கணிப்பது நமக்கு இயற்கை ஆகையால் வேதத்தின் மூலம். தேவனுடைய காரியங்களை நாம் பெற்றுக்கொள்ளும் போது நாம் கவனமாக இருக்க வேண்டும்.**</u>

தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே உள்ள உடன்படிக்கைகளையும் வாக்குத்தத்தங்களையும் கொண்ட புத்தகம் தான் வேதாகமம் மொத்தத்தில் வேதத்தில் 32000 வாக்குத்தத்தங்கள் இருக்கின்றன இந்தப்பாடத்தில் பரிசுத்த ஆவியின் வாக்குத்தத்ததை பெற்றுக் கொள்வதை தியானிப்போம் இந்தக்குறிப்பிட்ட பாடம் உங்களுடைய வேதாகம அறிவை இன்னும் அதிகரிக்கும்படியாய் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது இந்த ஞானத்தை நீங்கள் அனுபவிக்கும்படியாகவும் இந்தப்பாடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது வேதத்தைக் குறித்ததான விசேஷித்தக் காரியம் இதுதான் இன்று வாசிக்கிறதை நீங்கள் அனுபவித்துப்பார்க்கலாம் அந்த அனுபவம் உங்களுடையது பரிசுத்த ஆவி பெற்றுக் கொள்வதைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது என்பதை பார்க்கலாம்.

## 1. எல்லோரும் மறுபடியுமாக பிறக்க வேண்டும்

### A. புதியப் பிறப்பின் தொடர்ச்சி

ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறக்காவிட்டால் தேவனுடைய இராஜியத்தில் பிரவேசிக்க முடியாது என்று இயேசு கொன்னார் நம்முடைய பாவங்களை எல்லாம் கழுவி வேத ரீதியாக எல்லோருக்கும் பரிசுத்த ஆவியை கொடுக்க வேண்டும் என்பதுதான் தேவனுடைய வாஞ்சை

**யோவான் 3:5-7** *"இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம். "*

கடந்தப்பாடத்தில் ஜலத்தினால் பிறப்பது என்றால் இயேசுவின் நாமத்தில் முழுக்கு ஞானஸ்நானம் பெறுவது என்று சந்தேகத்திற்கு இடமின்றி கற்றுக் கொண்டோம் ஞானஸ்நானத்திற்கு யார் தகுதி உள்ளவர்கள் என்று கற்றுக்கொண்டோம் இரட்சிப்பின் செய்தியை கேட்டு பாவத்திலிருந்து மனந்திரும்பின ஒருவன் ஜலத்தினால் பிறப்பது உடன்படிக்கையின் நம் பாகம் இது தண்ணீர் ஞானஸ்நானத்தினால் நாம் செய்கிறோம் ஆவியால் பிறப்பது உடன்படிக்கையில் தேவனுடைய பாகம் அவர் இலவசமாய் பரிசுத்த ஆவியைக் கொடுக்கிறார்.



**சாவி # 2** <u>**இரட்சிக்கப்பட எல்லோரும் மறுபடியுமாக பிறக்க வேண்டும்**</u>

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
## பாடம் 8

**B.** **ஆவியிலே ஒருவர் பிறந்தார் என்பதற்கான சாட்சி**

**யோவான் 3:7-8** ***"நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்."***

**கேள்வி:** காற்றின் குணாதிசயங்கள் என்ன **?** காற்றை எப்படி வருணிப்பீர்கள் **?**
அதை நீங்கள் காணமுடியாது அது எங்கே போகிறதென்றும் நீங்கள் காணமுடியாது ஏனென்றால் அது அதரிசனமானது ஆனால் காற்றினால் உண்டாகும் விளைவுகளை நீங்கள் பார்க்கவும் முடியும் கேட்கவும் முடியும்

**கேள்வி:** ஆவியிலே பிறப்பது காற்றைப்போல இருந்தால் ஒருவன் ஆவியிலே பிறந்தவுடன் என்ன நடக்கும் என்று இயேசு சொன்னார்
நீங்கள் ஒரு சத்தத்தைக் கேட்பீர்கள் ஆவியிலே பிறப்பவர்களுக்கு ஒரு காரியம் நடந்து அது கேட்கப்படும் இந்த சத்தம் விரைவிலே விளக்கப்படும்.

**கேள்வி:** ஒரு குழந்தை பிறந்த மாத்திரத்திலே மருத்துவர்கள் அது உயிரோடிருக்கிறது என்பதை எப்படி தெரிந்துக் கொள்ளுகிறார்கள்
அழுகையின் சத்தத்தினால்


ஆவி காற்றைப்போன்றது என்று இயேசு சொன்னார் ஆவி எங்கிருந்து வந்தது அல்லது எங்கு செல்லுகிறது என்று நாம் சொல்லமுடியாது ஆனால் ஆவியின் சத்தத்தை நீங்கள் கேட்க முடியும் ஆவியிலே பிறக்கிறவர்களோடு ஒரு குறிப்பிட்ட சப்தம் உண்டாகும் என்பதை இயேசு உணர்த்தினார்.



**சாவி # 3** **<u>ஆவியிலே மறுபடியும் பிறந்தவுடன் ஒரு சத்தம் உண்டாகும் இதனால் நீங்கள் இதை அறிந்து கொள்வீர்கள்.</u>**

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 8

## II. பெரிய வாக்குத்தத்தம்



**சாவி # 4** <u>பரிசுத்த ஆவியின் ஈவை பழையஏற்பாட்டில் வாக்குத்தத்தமாய் காணலாம்</u>

### A. ஆவியின் பிறப்பைக் குறித்ததான பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசனங்கள் (வாக்குதத்தங்கள்)

**எரேமியா 31:31-33** *"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்."*

**எசேக்கியேல் 36:26-27** *"உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்."*


**ஏசாயா 28:11-12** *"பரியாச உதடுகளினாலும் அந்நியபாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல்; இதுவே ஆறுதல் என்று அவர்களோடே அவர் சொன்னாலும் கேட்கமாட்டோம் என்கிறார்கள்."*

**யோவேல் 2:28** *"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்."*

எதிர்காலத்திலே ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்று கர்த்தர் வாக்குக் கொடுத்தார் அவருடைய நியாயத்தை ஜனங்களுடைய இருதயத்திலே எழுதி அவருடைய ஆவியை அவர்களுக்குள்ளாக வைத்து கல்லான இருதயங்களை எடுத்து நீதிமான்களாய் வாழும் திறமையைக் கொடுத்தார். ஆவியிலே ஜனங்கள் இளைப்பாறுதல் பெறுவார்கள் என்றும் பரியாச உதடுகளினால் அந்நியபாஷைகளைப் பேசி ஆவியிலே தங்களைப் புதுபித்துக் கொள்ளுவார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி மூலம் வாக்குக்கொடுத்தார். அவருடைய ஆவி யூதர்களுக்கு மாத்திரமல்ல

எல்லோருக்கும் (மாம்சமான யாவர்மேலும்) புறஜாதிகளுக்கும்கூட கொடுக்கப்படும் என்று அவர் கூறினார்

**குறிப்பு :** தேவன் பூரணமானவர் அவர் ஒருவரின் கதவை எட்டி உதைக்கமாட்டார் வாக்குத்தத்ததைப் பெற்றுக் கொள்ள ஒருவர் ஜெபிக்கும்பொழுது அவருடைய விசுவாசத்தைப் பெருகப் பண்ணும்படிக்கு தேவன் அவர்களுக்கு பரியாச உதடுகளைக் கொடுக்கிறார் தேவன் என்னை மன்னித்துவிட்டார் இப்பொழுது என்னை ஆவியினால் நிரப்பப்போகிறார் பரியாச உதடுகளின் அனுபவம் வரும்பொழுது அந்த நபரும் அந்த நபருக்காக ஜெபிக்கிற மற்றவரும் தேவன் அந்த நபர் மூலமாய் பேசபோகிறார் என்று உணருவார்கள் ஜெபிக்கிறவர்களுக்கு தேவன் இந்த அடையாளத்தை கொடுப்பதினால் ஜெபிக்கிறவர்கள் தேவனை அந்த நபரின் வாய்மேல் முழுமையாக கட்டுக்கொள்ள அனுமதித்து ஒரு புதிய பாஷையை அந்த வாயின் மூலம் பேசக் கேட்பார்கள் (ஒரு சிறு பிள்ளையை குளிர்ந்த தண்ணீரில் வைத்தால் எப்படி அதன் வாய் மற்றும் பல் உதருமோ அப்படிதான் பரியாச உதடின் உதாரணமும்)



**சாவி # 5** **<u>பரிசுத்த ஆவியின் ஈவை புதிய ஏற்பாடும் வாக்குத்தத்தம் செய்கிறது.</u>**

**B. ஆவியின் பிறப்பைக் குறித்ததான புதிய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் (வாக்குத்தத்தங்கள்)** ஜனங்களை ஆயத்தப்படுத்த தேவனாலே அனுப்பப்பட்ட யோவான் ஸ்நானகன் இயேசு ஜனங்களுக்கு பரிசுத்த ஆவியினால் ஞாஸ்நானம் கொடுப்பார் என்று சென்னான்.

**மத்தேயு 3:11** "*மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவர் என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்.* "

யோவான் ஸ்நானகன் இயேசுவைக்குறித்து சொன்னக் காரியத்தை இயேசு உறுதிப்படுத்தினார்.

**யோவான் 7:38-39** "*வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை.*"

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் இயேசுவினுடைய மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் மற்றும் மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு தான் நடைபெற்றது (யோவான் 16:7 -ஐ பார்க்கவும்) இது நடைபெறாமல் புதிய

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 8

ஏற்பாடு அல்லது உடன்படிக்கை துவங்கலாகாது. ஆகையால் இயேசுவின் மீட்புப்பணி முடிந்த பிறகே பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டது. ஆனால் திரளான ஜனங்களைப் பார்த்து விசுவாசிக்கிறவன் எவனோ தேவனுடைய ஆவியைப் பெற்றுக் கொண்டு ஜீவ ஊற்று அவனிடத்திலிருந்து புறப்படும் என்று இயேசு சொன்னார்.

**கேள்வி :** உங்களுடைய குடும்பம் அல்லது நண்பர்களை நீண்ட காலம் நீங்கள் பிரிந்து செல்லப்போகிறீர்கள் என்றால் உங்களுடைய கடைசி பேச்சுவார்த்தையில் என்ன சொல்வீர்கள் ? மிக முக்கியமான காரியங்கள் உங்களுடைய அன்பு தனிப்பட்ட ஆலோசனைகள்.
இயேசு பரலோகத்திற்கு ஏறுவதற்கு முன் அவருடைய சீஷர்களை மலை உச்சியின் மேல் எடுத்துச் சென்று சில முக்கியமானக் காரியங்களைக் குறித்துப் பேசினார் அப்படி நடந்த கடைசி சம்பாஷனையில்தான் அவர்களை எருசலேமுக்குப் போய் காத்திருந்து பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறாமல் அங்கிருந்து கடந்து செல்ல வேண்டாம் என்று அவர் சொன்னார்.

**அப்போஸ்தலர் 1:4-5** “*அன்றியும், அவர் அவர்களுடனே கூடிவந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்.*”

## III. ஆவியினாலே மறுபடியும் பிறப்பது.

### A. சீஷர்கள் இயேசுவுக்கு கீழ்படிகிறார்கள்

ஏறக்குறைய 120 சீஷர்கள் (11 அப்போஸ்தலர்கள் இயேசுவின் தாய் மற்றும் வேறு சீஷர்கள்) எருசலேமிலே இயேசு கட்டளையிட்டபடியால் கூடினார்கள். பரிசுத்த ஆவியின் வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அநேக நாட்கள் காத்திருந்து ஜெபித்தார்கள். (ஆசிரியர் குறிப்பு இயேசுவின் தாயாருக்கும் பரிசுத்த ஆவியின் நிறைவு தேவவைப்பட்டது என்பதை பாரம்பரிய கிறிஸ்தவ பிண்ணனியிலிருந்து வருகிற மாணவர்களுக்கு குறிப்பாய் சொல்லவும்.

**அப்போஸ்தலர் 1:12-15** “*அப்பொழுது அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய் ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரத்திலிருக்கிற ஒலிவமலை என்னப்பட்ட மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள்.*
*13. அவர்கள் அங்கே வந்தபோது மேல்வீட்டில் ஏறினார்கள்; அதில் பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப்புவும், தோமாவும், பர்த்தொலொமேயும், மத்தேயும், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், செலோத்தே என்னப்பட்ட சீமோனும், யாக்கோபின்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
## பாடம் 8

*சகோதரனாகிய யூதாவும் தங்கியிருந்தார்கள். அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அந்நாட்களிலே, சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடியிருந்தபோது, அவர்கள் நடுவிலே பேதுரு எழுந்து நின்று: "*

**B. அவருடைய ஜனங்களுடைய விசுவாசத்தையும் கீழ்படிதலையும் அவர் கனம் பண்ணுகிறார்.**

தேவனுக்கு கீழ்படிந்ததின் நிமித்தம் அவருடைய ஆவியினால் அவர்களை நிரப்புகிறார். அது பரலோகத்திலிருந்து வந்தது என்பதை வேத வசனம் கூறுகிறதை கவனியுங்கள் (பரிசுத்த ஆவி தேவனிடத்திலிருந்து தான் வந்தது என்று இந்த வேதப்பகுதி வெளிப்படுத்துகிறது. ஆகையால் இது முக்கியமானது)

**அப்போஸ்தலர் 2:1-4** *"பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.*
*2. அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். "*

**கேள்வி :**120 சீஷர்களிலே எத்தனைப்பேர்கள் நிரப்பப்பட்டார்கள் ?

எல்லோரும் ஏறக்குறைய 120 பேரும்.


**கேள்வி :**அந்நிய நாவுகளினால் பேசக்கூடிய திறமையை சீஷர்களுக்கு யார் கொடுத்தார்?

தேவனுடைய ஆவி

**கேள்வி :**பரிசுத்த ஆவியால் நிறைவுப் பெறும்போது சீஷர்களிடத்திலிருந்து வந்த முதலாவது அத்தாட்சியின் சப்தம் எது ?

ஆவி கொடுக்கிற உச்சரிப்புக்கு ஏற்றது போல எல்லோரும் நாவுகளினாலும் பற்பல பாஷைகளினாலும் பேசினார்கள்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 8



**சாவி # 6 <u>ஒருவன் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறான் என்பதற்கு அடையாளம் நாவுகளினால் பேசுவது.</u>**

திரளான மக்கள் பரிசுத்த ஆவியின் நிறைவுதலைப் பெற்றுக் கொண்ட சீஷர்களை சூழ்ந்துக் கொண்டு கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார்கள்.

**அப்போஸ்தலர் 2:5-17** *"வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்துவந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள். அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி? பார்த்தரும், மேதரும், எலாமீத்தரும், மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பிலியா, எகிப்து என்னும் தேசத்தார்களும், சிரேனே பட்டணத்தைச் சுற்றியிருக்கிற லிபியாவின் திசைகளிலே குடியிருக்கிறவர்களும், இங்கே சஞ்சரிக்கிற ரோமாபுரியாரும், யூதரும், யூதமார்க்கத்தமைந்தவர்களும், கிரேத்தரும், அரபியருமாகிய நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே என்றார்கள். "*

*எல்லாரும் பிரமித்துச் சந்தேகப்பட்டு, இதென்னமாய் முடியுமோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். ற்றவர்களோ: இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம்பண்ணினார்கள்.அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி: உரத்த சத்தமாய்: யூதர்களே, எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் றிந்துகொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்; "*

வானத்திற்கு கீழேயிருந்த ஒவ்வொரு தேசத்திலிருந்து கூடின திரளானக் கூட்டம் சில காரியங்களைக் கவனித்தது. கலிலேயர்கள் அவர்களுக்குத் தெரியாத பாஷைகளினாலே பேசிக் கொண்டிருந்தார்கள் ஆனால் திரளான கூட்டத்தில் உள்ளவர்களோ அந்த பாஷையை அறிந்திருந்தார்கள். அவர்களுடைய சொந்த தேசங்களில் இந்த பாஷைகள் பேசப்பட்டதால் திரளான கூட்டம் இந்த பாஷைகளை பேச இயலிற்து. கலிலேயா ஒரு சாதாரணமான படிப்பறிவில்லாத இடமாக இருந்ததினால் ஜனங்கள் இதின் அர்த்தம் என்ன என்று கேட்டார்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் நிறைவு பெற்ற பேதுரு எழுந்து தீர்க்கதரிசி யோவேலினால் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்று பிரசங்கித்தான் (பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் என்ற

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 8

2-ம் பகுதியை பார்க்கவும்) தேவன் தன்னுடைய ஆவியின் ஊற்றுதலைப் பொழிந்து கொண்டிருந்தார்.

பேதுரு பிரசங்கித்துக் கொண்டே இருந்தான் இயேசு உயிர்தெழுந்து மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஞானஸ்நானத்தை ஊற்றிக் கொண்டிருந்தார் என்பதை அவர்களுக்கு சென்னான். நீங்கள் பார்பதும் கேட்டதுமான இதை அவர் (இயேசு) ஊற்றிக் கொண்டிருந்தார்.(அப்போஸ்தலர் 2:33) இயேசுவை சிலுவையில் அறைந்தவர்கள் நீங்கள் தான் என்று அவன் அவர்களிடத்திலே சொன்னான் அவர்கள் இருதயத்திலே வெட்டப் பட்டவர்களாக நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று பேதுருவினிடத்திலே கேட்டார்கள் அப்பொழுது அப்போஸ்தலன் ஆகிய பேதுரு தேவனுடைய இராஜியத்தில் பிரவேசிப்பதற்கான சாவிகளைப் பெற்றுக் கொண்டவன் (மத்தேயு 16:19) அவர்களைப் பார்த்து இதைச் செய்ய வேண்டுமென்று சொன்னான்.

**அப்போஸ்தலர் 2:37-39** ***"இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்.***
***பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி; "***

வாக்குத்தத்தம் எல்லோருக்கும் என்பதை பேதுருவின் பிரசங்கங்கள் வெளிப்படுத்தினது. (சில மொழியாக்கங்கள் தூரமாய் இருப்பவர்கள் என்றால் புறஜாதிகள் என்று கூறும்). தம்முடைய இரட்சிப்பின் திட்டத்திற்குள் ஜனங்களை அழைப்பதை தேவன் இன்றும் நிறுத்தவில்லை ஆகையால் ஆவியினால் அதே ஞானஸ்நானத்தையும் அந்திய பாஷைகள் பேசுவதின் அடையாளத்தையும் இன்றும் தேவன் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

**C. பரிசுத்த ஆவியை பெறும் பொழுது உண்டாகும் அடையாளத்தைப் புரிந்து கொள்வது மிக முக்கியம்.**

செய்தியை விசுவாசிப்பதும் ஆவியைப் பெற்றுக் கொள்வதும் இரண்டு வகையான வித்யாசங்களான அனுபவங்கள் என்பதை வேதரீதியான சான்றோடு சொல்லலாம் ஒருவன் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட மாத்திரத்திலே அதை உறுதிப்படுத்த அந்திய பாஷைகளினால் பேசும் உடனடி வெளியரங்கமான அடையாளத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.

கீழ் வருகிற இரண்டு வேதப்பகுதிகளிலே விசுவாசத்தின் ஞானஸ்நானம் பெற்ற சில ஜனக்கூட்டங்களை நாம் காணலாம் ஆனால் இவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறவில்லை பிறகுதான் பெற்றார்கள் விசுவாசிப்பது ஞானஸ்நானம் பெறுவது எல்லாம் தனிப்பட்ட அனுபவங்கள் என்பதை இது நிரூபிக்கிறது.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 8

**சமாரியா**

**அப்போஸ்தலர் 8:12, 14-17** "*தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம்பெற்றார்கள். சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபொழுது அவர்களிலொருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்.*"

**யோவானுடைய சீஷர்கள் எபேசு பட்டணம்**

**அப்போஸ்தலர் 19:1-6** "*அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய் எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு: நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள். அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள். அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான். அதைக் கேட்டபோது அவர்கள்: கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தாவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.*"

விசுவாசிகளைப்போல் இருந்த சில மனுஷர்களைப் பவுல் பார்த்து அவர்கள் பரிசுத்த ஆவியின் நிறைவை பெற்றிருக்கிறார்களா என்று பவுல் கேட்டான். அவர்கள் பெறவில்லை என்பதை பின்பு கண்டடைந்தான் அவர்களுக்கு இயேசுவை பிரசங்கித்து மறுபடியுமாக இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தான் ஞானஸ்நானத்திற்கு பிறகு பவுல் அவர்கள் மேல் கரங்களை வைத்த போது அவர்களுக்கு பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்று வேறுபாஷையில் பேசினார்கள். ஆகையால் இந்த இரண்டு சாட்சிகளின் மூலம் (பாடம் 1, 2 அல்லது 3 சாட்சிகளின் வாயிலாக வார்த்தை நிரூபிக்கப்படும் 2 கொரிந்தியர் 13:1) பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறும் பொழுது அந்திய பாஷைகளிலே பேசுவார்கள் என்பதை நாம் பார்க்கலாம். இது மானசீனமாக செய்தியை விசுவாசிப்பதின் மூலம் நடக்காது.

**D. பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டோம் என்பதற்கான வேதரீதியான ஒரேமாதிரியான அடையாளம் அந்திய பாஷைகளினால் வேசுவது.**

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 8

அந்நிய பாஷைகளினால் பேசி அடையாளங்கள் பின் தொடருகிறவன் தான் உண்மையான விசுவாசி என்று வேதத்திலே விளக்கப் பட்டிருக்கிறது.

**மாற்கு 16:16-17** *"ஏரோது அதைக்கேட்டபொழுது: அவன் நான் சிரச்சேதம் பண்ணின யோவான்தான்; அவன் மரித்தோரிலிருந்து எழுந்தான் என்றான். ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டபோது,"*

1. யூதர்கள் முதலாவது ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள்.

**அப்போஸ்தலர் 2:4** *"அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். "*

2. ஆவியைப் பெற்றுக் கொண்ட முதல் புறஜாதிகள் பெந்தெகொஸ்தே என்ற நாளின் 7 ஆண்டுகளுக்குப்பிறகு அதாவது முதல் ஊற்றுதலுக்குப்பிறகு இது நடந்தது. புறஜாதிகள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதை யூத ஜனங்கள் எப்படி அறிந்துக் கொண்டார்கள் என்று நாம் வாசிப்போம்

**அப்போஸ்தலர் 10:44-46** *"இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிகொண்டிருக்கையில் வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள். "*

3. எபேசு பட்டணத்திலிருந்த யோவானின் சீஷர்கள் சபையின் பிறப்பின் 23 ஆண்டுகளுக்குப் பிறகு பவுல் சில விசுவாசிகளை சந்தித்தான். பரிசுத்த ஆவி அவர்களிடத்தில் வந்த பொழுது என்ன நேரிற்று ?

**அப்போஸ்தலர் 19:5-7** *"அதைக் கேட்டபோது அவர்கள்: கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தாவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். அந்த மனுஷரெல்லாரும் ஏறக்குறையப் பன்னிரண்டுபேராயிருந்தார்கள்."*

அதே ஈவு எல்லோருக்கும் கிடைக்கும் என்று அப்போஸ்தலர் 2:39 சொல்கிறது.

**(ஆசிரியர் குறிப்பு)** மாணவர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்ததினால் அவர்களுடைய ஜெபங்கள் கேட்கப்பட்டு புதிய பிறப்பின் இந்த முக்கியப் பகுதியை உங்கள் மூலமாக தேவன் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார் என்பதை உங்கள் மாணவர்களுக்கு சொல்வது மிக முக்கியம் அப்போலோவும் பவுலும் உண்மையாக இருந்தபடியினால் சத்தியத்தைக் கற்றுக்கொண்டார்கள் ஆகையால் உங்கள் மாணவர்களுக்கு சத்தியத்தை மேலும் வெளிப்படுத்துவது உங்களுடைய சிலாக்கியம்).

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 8

**மிக முக்கியமானது** இயேசுவை தன்னுடைய இருதயங்களில் வரவேற்பதினாலோ அல்லது அவரை சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொள்வதினாலோ அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் என்று சிலர் விசுவாசிப்பார்கள் ஆனால் இந்த உபதேசங்களோ உதாரணங்களோ வேதத்திலே இல்லை உபாகமம் 4:2 —ல் வேதம் என்ன சொல்லுகிறது என்பதை நினைவு கூறுங்கள் நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம் அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்.

பரிசுத்த ஆவி பெறுவதின் ஒரே வேத ரீதியான சான்று அந்நிய பாஷைகளினாலே பேசுவது தான்.

## IV. தேவன் நாவுகளை ஏன் தெரிந்தெடுத்தார் ?

### A. தேவன் ஒருவரே அரசாளுகிறார்

உதவி இல்லாமல் அவர் தனித்து ஆளுகிறார். ஒருவரோடும் கலந்துக் கொள்ளாமல் அவரால் பகுத்தறியாமல் செயல்படமுடியும்.

**ஏசாயா 40:13-14** ***"கர்த்தருடைய ஆவியை அளவிட்டு, அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்து, அவருக்குப் போதித்தவன் யார்? தமக்கு அறிவை உணர்த்தவும், தம்மை நியாயவழியிலே உபதேசிக்கவும் தமக்கு ஞானத்தைக் கற்றுக்கொடுக்கவும், தமக்கு விவேகத்தின்வழியை அறிவிக்கவும், அவர் யாரோடே ஆலோசனைபண்ணினார்?"***

### B. நாவு இருதயத்தை வெளிப்படுத்தும்

மனுஷனின் நாவு அவனுடைய ஆவிக்குரிய நிலையை வெளிப்படுத்தும் என்பதினால் கர்த்தர் நாவுகளிலே பேசுவதை தெரிந்தெடுத்தார் இருதயத்திற்குள்ளாக என்ன நடக்கிறது என்பதை நாவு வெளிப்படுத்தும்

**மத்தேயு 12:34** ***"விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படி பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்."***

உதாரணத்துக்கு நமக்கு ஒரு காரியம் பிடிக்கவில்லை என்றால் நம்மை நன்றாக அறிந்த மக்கள் நாம் பேசுகிற விதத்திலே இதை கண்டுபிடிப்பார்கள் நாம் கோபமாய் இருக்கும் போது கோபமாய் பேசுகிறோம். நாம் சந்தோஷமாய் இருக்கும் போது நம்மை சுற்றி இருக்கிறவர்கள் நாம் பேசுவதைக் கேட்டு இதைப் புரிந்துக் கொள்வார்கள் இதேப்போல மனுஷனுடைய ஆவி தேவனுடைய ஆவியின் நிறைவுதலினால் பொங்கும்போது இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட ஒரு பாஷையை பேசுவான் இந்த பாஷை முன்பதாக கேட்கபடவில்லை கற்றுக்கொள்ளப் படவும் இல்லை ஆவியிலே நடக்கிற காரியங்களை வாய் சொல்லும்.

### C. ஆண்களாலும் பெண்களாலும் நாவைக் கட்டுப்படுத்த முடியாது

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 8

சில சமயங்களில் நாம் சொன்ன வார்த்தைகளை ஏன் சொன்னோம் ? என்ற வருத்தம் உண்டாயிருக்கிறதா? அல்லது சொன்னதை ஏன் செய்தோம் என்று தோன்றியிருக்கிறதா ? நாவின் மேல் அதிகாரம் இல்லாமல் போனதின் காரணத்தை கீழ் கொடுக்கப்பட்டுள்ள வேதப்பகுதியில் பார்க்கலாம்.

**யாக்கோபு 3:3-8** *"பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம்போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம். கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும். அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்திவிடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!*
*சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷசுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. "*

பரிசுத்த ஆவியின் ஈவைப் பெறுவதற்கு முன்பதாக ஜனங்கள் தங்களுடைய வாழ்க்கையையும் இருதயத்தையும் முழுமையாக தேவனிடத்திலே ஒப்புக்கொடுத்து மனந்திரும்ப வேண்டும்.

ஒருவன் ஜெபத்தில் முழுமையாக தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கும் போது அந்த தருணத்தில் இயேசு அவருடைய ஆவியினால் அந்த நபரை நிரப்பி அறியாத நாவுகளினால் அவர் பேசுவார் ஆவியினால் கட்டுப்படுத்தப்பட்ட வாழ்க்கையின் அடையாளம் தான் நாவுகளினால் பேசுவது.

நாவுகளினாலே பேசுவது ஒரு வெளியரங்கமான பார்க்கக்கூடிய ஒரேமாதிரியான அடையாளம். நம் பாவங்களுக்கு முக்கியமான வழி பேசுவதுதான் மூளை பேச்சைக் கட்டுப்படுத்துகிறது சுய நினைவு மற்றும் பகுத்தறிவின் மையத்தை தேவன் கட்டுக்குள் கொண்டிருக்கிறார் என்பதை நாவுகளினால் பேசுவது வெளிப்படுத்துகிறது அந்த நபரை முழுவதுமாக தேவன் கட்டுப்படுத்துகிறார். எந்த மனுஷனாலும் நாவை அடக்க முடியாது. ஆனால் தேவன் இதை செய்யும் பொழுது ஒப்புக் கொடுத்த இருதயத்தை தன்னுடைய ஆவியினால் நிரப்புகிறார்.

### D. நமக்கு ஒரு ஜெப மொழி தேவை.

பரிசுத்த ஆவி ஜெபிப்பதற்கு நமக்கு உதவி செய்கிறது

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 8

**ரோமர் 8:26** *"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்."*

**எபேசியர் 6:18** *"எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்."*

நாம் நாவுகளினாலே ஜெபிக்கும் போது ஆவியிலே ஜெபிக்கிறோம்

**1 கொரிந்தியர் 14:14-15** *"என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால் என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம்பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம்பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்."*

## V. கர்த்தருடைய ஆவியின் நிரப்புதலினால் பெற்றுப் கொள்ளும் நேரடியான அனுகூலங்கள்

### A. நாம் கிறிஸ்துவினுடையவர்கள் என்று அது நம்மை குறிக்கின்றது

பரிசுத்த ஆவி இருப்பது தேவை அது இல்லாவிட்டால் நாம் கிறிஸ்துவினுடையவர்கள் அல்ல

**ரோமர் 8:9** *"தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல."*

### B. பரிசுத்த ஆவியோடு சமாதானம் சந்தோஷம் அன்பு என்று பல நன்மைகள் வரும்

**கலாத்தியர் 5:22-23** *"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை."*

**ரோமர் 14:17** *"நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை"*

### C. தேவனுடைய காரியங்களை பரிசுத்த ஆவி நமக்கு போதிக்கும்

மனுஷன் ஞானத்தினால் மாத்திரம் வேதவாக்கியங்களை நாம் வியாக்கியானம் செய்ய முடியாது கர்த்தருடைய ஆவிதான் தேவ வார்த்தைக்கு ஒளியாக இருக்கும் நாம் பரிசுத்த ஆவியைப் பெறும் போது அவர்களுக்கு போதகராகவும் வழிகாட்டியாகவும் இருக்கிறார்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 8

**யோவான் 14:26** *"என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்."*

**யோவான் 16:13** *"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்."*

**D. தேவன் மேல் வைத்திருக்கிற நம் விசுவாசம் பெலத்தில் பெருகும்**

**யூதா 20** *"நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி, "*

**E. தேவனுடைய ஆவியின் மற்றவரங்களுக்கு கதவு திறக்கப்படும்**

( 1 கொரிந்தியர் 12&14 அதிகாரங்கள்)

**F. சத்துருவின் மேல் நமக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறது**

**1 யோவான் 4:4** *"பிள்ளைகளே, நீங்கள் தேவனாலுண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர். "*

**ஏசாயா 59:19** *"அப்பொழுது சூரியன் அஸ்தமிக்குந்திசைதொடங்கி கர்த்தரின் நாமத்துக்கும், சூரியன் உதிக்குந்திசைதொடங்கி அவருடைய மகிமைக்கும் பயப்படுவார்கள்; வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார். "*

**G. கிறிஸ்துவின் சாட்சிகளாய் இருக்க பரிசுத்த ஆவி நம்மை பெலப்படுத்துகிறது.**

**அப்போஸ்தலர் 1:18** *"அநீதத்தின் கூலியினால் அவன் ஒருநிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறு வெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று. "*

வல்லமை என்ற வார்த்தைக்கு கிரேக்க மொழியாக்கம் 'டைனமிஸ்' என்ற வார்த்தையிலிருந்து வரும் டைனமோ டைனமிக் டைனமைட் என்ற ஆங்கில வார்த்தைகள் எல்லாம் இந்த வார்த்தையிலிருந்துதான் தோன்றியது. இந்த வார்த்தையின் அர்த்தம் ஒரு பலமான வெடிக்கத்தக்க மோதல் என்று அர்த்தம் அன்பு தேவைப்படுகிற இந்த உலகில் நாம் கிறிஸ்துவுக்காக ஒரு வித்தியாசமுள்ள மோதலை ஏற்படுத்துவதற்கு பரிசுத்த ஆவி நம்மை பெலப்படுத்துகிறது.

**அப்போஸ்தலர் 4:31** *"அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள். "*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 8

## VI. கடைசியாக அந்தியபாஷைகளை பேசுகிற ஒருவனையும் தடைசெய்யாதிருக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது.

**1 கொரிந்தியர் 14:37-39** *"ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது, ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன். ஒருவன் அறியாதவனாயிருந்தால், அவன் அறியாதவனாயிருக்கட்டும். இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள். "*

அந்நிய நாவுகளினால் பேசுகிற ஒருவனையும் தடையெ்யாதிருக்க வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு போதித்தார் என்பதை இந்த வேதப்பகுதியில் காணலாம். பிறரைப்பார்க்கிலும் அதிகமாக அந்நிய பாஷைகளினால் அவர் பேசினார் என்று கூறியிருக்கிறார். (1 கொரிந்தியர் 14:18) ஆவியிலே ஜெபித்து ஆவியிலே பாடினார் என்றும் அவர் சொன்னார் (1 கொரிந்தியர் 14:14-15) சபைக்கு போதனை அல்லது பிரசங்கம் பன்னும்போது தான் பவுல் அந்நிய நாவுகளினாலே பேசாமல் இருந்த ஒரே சமயம் என்று அவர் கூறினார் பேசின பாஷைகளை கூடுகைக்கு விளக்காமல் இருந்தால் அந்த செய்தி ஒருவருக்கும் பயன்படாது.

## VII. பரிசுத்த ஆவியை யார்வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம்

**அப்போஸ்தலர் 2:39** *" வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி; "*

**லூக்கா 11:9-13** *"மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். "*


உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா?
அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா?
பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 8

**அந்நிய நாவுகள் உண்மையல்ல என்று சிலர் சொல்லுவார்கள்**

**----இது மிகவும் தாமதம்**

**அனுபவம் பொய் சொல்லாது**



சாவி # 7 **பரிசுத்த ஆவியை யார்வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம்**

**ஆசிரியர் குறிப்பு :** நீங்கள் எப்படி பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்டீர்கள் என்று உங்களுடைய சொந்த சாட்சியைப் பகிர்ந்துக் கொள்ளலாம் அல்லது உங்களுக்குத் தெரிந்த 2 (அ) 3 நபர்களுக்கு எப்படிக்கொணடார்கள் என்று சொல்வதற்கு நல்ல நேரம் இது.


புதிய உடன்பாடு ஆவியின் ஞானஸ்நானம் மூலம் உண்டாகும் புதிய பிறப்பின் அனுபவத்தோடு வரும் என்பதை வேதம் வெளிப்படுத்துகிறது. ஜனங்கள் முதலாவது பரிசுத்த ஆவியை பெறும் போது அந்நிய பாஷைகளினால் பேசினார்கள் என்பது தீர்க்கதரிசியாகிய யோவேலினால் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட அடையாளம் என்பதை அப்போஸ்தலனாகிய பேதுரு கண்டுகொண்டான் இந்த அடையாளம் யூதர்களுக்கும் புற மதஸ்தருக்கும் கொடுக்கப்பட்டது புதிய ஏற்பாட்டில் உள்ள ஒரே சரித்திர புஸ்தகமான அப்போஸ்தலர்கள் நடபடிகைகளில் கொடுக்கப்பட்ட ஒரே விதமான அடையாளமாக இது இருந்தது. இந்த புஸ்தகத்திலேதான் ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள்.

**அடுத்தப்பாடம் - பாடம் 9**

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 9

## I. கர்த்தருடைய மகாப் பெரிய அற்புதம்

மரித்தவர்களை உயிரோடுகூட எழுப்புவதோ வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்குவதோ அல்லது சில அப்பங்களையும் மீன்களையும் கொண்டு திரளான ஜனங்களை போஷிப்பதோ தேவனுடைய மகா பெரிய அற்புதம் அல்ல ஜனங்களுடைய வாழ்க்கையை புதிய பிறப்பின் இரட்சிப்பில் இருக்கும் வல்லமையின் மூலம் மாற்றுவதே தேவன் செய்த மகா பெரிய அற்புதமாகும்.



**சாவி # 1** **<u>மறுபடியுமாக பிறந்தவர்கள் எல்லோரும் மாற்றப்படுவார்கள் (ஜனங்கள் உங்களைப் பார்த்து ஓ! நீங்கள் மாறி விட்டீர்கள் என்று சொல்வார்கள்.</u>**

### A. சவுல் எப்படி அப்போஸ்தலனாகிய பவுலாக மாறினான் ?

ஆதிச் சபையின் முதல் பலியாய் மரித்த ஸ்தேவானுடைய மரணத்தை திட்டமிட்டு நடப்பித்தவனில் ஒருவனாக தான் சவுல் இருந்தான். அநேத கிறிஸ்தவர்களின் சிறையிருப்பிற்கும் மரணத்திற்கும் பொறுப்பாளியாக சவுல் இருந்தான்.

**அப்போஸ்தலர் 7:58-60, 8:1-3** "*அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி அவனைக் கல்லெறிந்தார்கள். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள். 59 அப்பொழுது. கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளுமென்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள். ...அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள். 2 தேவ பக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி, அவனுக்காக மிகவும் துக்கங்கொண்டாடினார்கள் 3 சவுல் **வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான்.***"

**அப்போஸ்தலர் 9:1-9** "***சவுல்** என்பவன் இன்னுங் கர்த்தருடைய **சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி** சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; 2 இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், **அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி**, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான். 3 அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது; 4 அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: <u>சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்</u> என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். 5 அதற்கு அவன்: <u>ஆண்டவரே, நீர் யார்,</u> என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற **<u>இயேசு நானே</u>**, முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். 6 அவன் நடுங்கித் திகைத்து: <u>ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர்</u> என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். 7 அவனுடனேகூடப் பிரயாணம்பண்ணின மனுஷர்கள் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையுங் காணாமல் பிரமித்து நின்றார்கள். 8 சவுல் தரையிலிருந்தெழுந்து, தன் கண்களைத் திறந்தபோது ஒருவரையுங்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 9

*காணவில்லை. அப்பொழுது கைலாகு கொடுத்து, அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டுபோனார்கள். 9 அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தான்.* ''

**அப்போஸ்தலர் 9:17-18** ''*அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து* <u>*சகோதரனாகிய சவுலே*</u>*, நீ வந்தவழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர்,* <u>*நீ பார்வையடையும்படிக்கும்*</u> ***பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்படிக்கும்*** *என்னை அனுப்பினார் என்றான். 18* <u>*உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதிள்கள் போன்றவைகள் விழுந்தது. அவன் பார்வையடைந்து, எழுந்திருந்து*</u>*,* ***ஞானஸ்நானம் பெற்றான்.*** ''

தமஸ்கு செல்லும் காலையில் சவுல் இயேசுவை ஒரு பிரகாசமான ஒளியாகக் கண்டான் அவரே கர்த்தர் என்று சவுல் அடையாளம் கொண்டான் அடுத்ததாக சவுல் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு அவனிடத்திலே சொன்னார். சவுலுக்கு மறுபடியுமாக பிறப்பதின் சத்திய அனுபவத்தைக் கொண்டுவர அனனியா என்கிற சீஷனை இயேசு ஆயத்தப்படுத்தினார் சவுல் தன்னுடைய குற்றங்களை உணர்ந்து முழுவதுமாக தன்னை ஒப்புக்கொடுத்தான் அதற்குப்பிறகு அனனியா அவனுக்காக ஜெபித்தப் பின்பு அவன் ஒரு கிறிஸ்தவனாக மாற முடிவு செய்தான் அவன் மனந்திரும்பி ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியுமாகப் பிறந்தான். அவன் பெயர் பவுலாக மாற்றப்பட்டது. வேதாகம சரித்திரத்திலே வாழ்ந்த மாபெரும் கிறிஸ்தவர்களில் ஒருவனாகவும் தலைவர்களில் ஒருவனாகவும் அவன் இருந்தான் வேதத்திலே அதிகபட்சமான புஸ்தகங்களை அவன் எழுதினான். புதிய ஏற்பாட்டுச் சபைகளில் உள்ள நபர்களைப் பார்க்கிலும் அநேக தேசங்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்தான் தேவனாலே ஒருவனுடைய வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றக்கூடும் என்பதை சவுலுடைய கதை வெளிப்படுத்துகிறது இந்த மாற்றம் அவர்களுடைய கடந்த காலத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாது.



**சாவி # 2 :** <u>**சத்தியத்தை நாம் உண்மையாக தேடுவோமே என்றால் தேவன் நம்மை சத்தியத்திற்கு நேராய் வழிநடத்துவார்.**</u>

## B. தேவன் உண்மையானவர்களை சத்தியத்திற்குள்ளாக வழி நடத்துவார்.

உண்மையாய் இருக்கிற ஒருவனை தேவன் கண்டபின் அவனை அவர் வழி நடத்துவார். அவருடைய வல்லமையில் இருக்கிற எல்லாவற்றையும் செய்து சத்தியத்தின் முழுமையை அவர்களுக்கு அவர் காண்பிப்பார் வேதத்திலே இது போல உண்மையுள்ள மனுஷன்தான் கொர்நேலியு. கொர்நேலியும் அவன் குடும்பமும் தேவனுக்கு பக்தி உள்ளவர்களாய் இருந்தார்கள் அவர்கள் தேவனை விசுவாசித்து தினந்தோறும் ஜெபித்து ஏழைகளுக்கும் கொடுத்தார்கள் கொர்நேலியு ஒரு நல்ல மனுஷன் தான் ஆனால் சத்தியத்தின் முழுமையை அறியாதிருந்தபடியால் அவனும் அவன் குடும்பமும் இரட்சிக்கப்படவில்லை நல்லவர்களாக இருந்தால் மாத்திரம் இரட்சிக்கப்படலாகாது என்பதை புதிய பிறப்பின் மூலம் தான் உண்டாகும்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 9

கொர்நேலியு என்ற நல்ல மனுஷன் நான்கு நாட்கள் உபவாசித்து தேவனோடுகூட இருந்த ஜெபவேளையில் கீழ்கண்ட அனுபவத்தை அவன் உணர்ந்தான்.

**அப்போஸ்தலர் 10:1-6** "*இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான். 2* ***அவன் தேவபக்தியுள்ளவனும்*** *தன்வீட்டாரனைவரோடும்* ***தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்.*** *3 பகலில் ஏறக்குறைய ஒன்பதாம் மணிநேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே, என்று அழைக்கவும் பிரத்தியட்சமாய்த் தரிசனங்கண்டு, 4 அவனை உற்றுப்பார்த்து, பயந்து: ஆண்டவரே, என்ன, என்றான். அப்பொழுது அவன்: உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. 5 இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி,* ***பேதுரு*** *என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி. 6 அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான்; அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது. நீ செய்யவேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான் என்றான்.*"

கொர்நேலியு ஒரு புற மதஸ்தன் ஆகையால் பேதுரு இவன் வீட்டிற்கு போனது சபைக்கு ஒரு முக்கிய காலகட்டமாகும் ஏனென்றால் இஸ்ரவேலுடைய சம்ரதாயங்கள் தீட்டுள்ள புறமதஸ்தனின் வீட்டிற்கு ஒரு யூதன் செல்வதை தடை செய்தது. அப்போஸ்தலர் 10-ஆம் அதிகாரத்திலே தரிசனங்களின் மூலம் தேவன் பேதுருவோடே பேசி சமுதாயத்தின் சம்ரதாயங்களையும் மத நியாயங்களையும் உடைத்தெரிந்து கொர்நேலியுவை சந்திக்கச் சொன்னார் உண்மையாக இருப்பவர்களின் பசியை தேவன் கனம்பண்ணுகிறார் தேவனுடைய சபை ஜாதிகளாலோ தேசங்களினாலோ பிரிக்கப்படுவதில்லை ஒரே சரீரமாக தேவனுடைய ஆவியினால் ஒரே குடும்பமாக அது இணைக்கப்படுகிறது. எந்த தேசத்தை நாம் சேர்ந்தவர்களால் இருந்தாலும் செய்திக்கு கீழ்ப்படிவதின் மூலம் ஒரே சரீரமாக ஆகிறோம்.

**கலாத்தியர் 3:28** "*யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.*"

**1 கொரிந்தியர் 12:13** "*நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.*"

பேதுரு வந்த மாத்திரத்தில் இரட்சிப்பின் செய்தியை கேட்பதற்கு கொர்நேலியும் அவனுடைய முழு வீட்டாரும் கூடி வந்தனர்.

**அப்போஸ்தலர் 10:44-48** "*இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிகொண்டிருக்கையில்* ***வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.***
*45 அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும், 46*
*பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது,* ***பரிசுத்த***

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 9

***ஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப்*** *பிரமித்தார்கள்.*
*47 அப்பொழுது பேதுரு: நம்மைப்போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும்*
*ஞானஸ்நானம் பெறாதாபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, 48*
***கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி***
***கட்டளையிட்டான்...***"

சில நேரங்களில் ஜனங்கள் கோபித்துக் கொண்டு நான் இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறவில்லை என்பதினாலோ பரிசுத்த ஆவியின் நிறைவு இல்லாமல் இருப்பதினாலோ அந்நியபாஷை பேசாததினாலோ கர்த்தரிடத்திலே உண்மையான அனுபவம் எனக்கு இல்லை என்று நீங்கள் சொல்வதில் அர்த்தம் இல்லை என்பார்கள் இது தவறு சத்தியத்தின் முழுமையிலே நாம் நடக்க வேண்டும் என்பது தான் தேவனுடைய வாஞ்சை கொர்நேலியுவினுடைய பலிகளில் இருந்தோ விசுவாசத்திலிருந்தோ கர்த்தர் எதையும் கழித்துவிட வில்லை. தேவனுடைய கவனத்தை சம்பாதிப்பதற்காக கொர்நேலியு எடுத்த முயற்சிகள் பெரியது என்று தேவதூதன் கூறினான் இதினிமித்தமாக தேவன் ஒரு தூதனை அனுப்பி கொர்நேலியுவை இரட்சிப்பிற்கு நேராக திசை திருப்பினான் ஆகையால் கிறிஸ்துவின் மேல் ஏற்கனவே விசுவாசமாய் இருப்பவனுக்கு புதிய பிறப்பின் அனுபவத்தை கற்றுக் கொடுப்பதினால் அவர்களுடைய முந்தின அனுபவங்களை கழித்துவிடுவது என்று அர்த்தமல்ல இதின்மூலம் அவர்களுடைய அனுபவங்களுக்கும் ஞானத்திற்கும் சேர்க்கை உண்டாக்குவது தான் அர்த்தம் தேவனால் முழுவதுமாக மாற்றப்பட ஆயத்தமாயிருந்த சவுலைப்போலவும் பேதுருவின் செய்திக்கு கீழ்படிந்த கொர்நேலியுவைப்போலவும் நாம் ஒவ்வொருவரும் இருக்க வேண்டும்.

எல்லா சத்தியத்திற்குள்ளாக நடப்பது என்பது ஒரு குழந்தைப் பிறப்பதற்கு ஒப்பானது. ஒரு குழந்தை கருதரித்தப்பின் புதிய ஜீவன் தொடங்குகிறது ஆனால் பிறப்பு உண்டாகும் போது அவள் அந்தக் குழந்தையை பிரசவிக்க வேண்டும். அப்பொழுது தான் அந்த குழந்தை பிறந்த மாத்திரத்தில் சத்தமிட்டு அழுவதினால் அது உயிரோடிருக்கிறது என்பதை நாம் அறிந்துக்கொள்ளலாம். இதேப்போல தேவன் மேல் நம்முடைய விசுவாசம் துவங்கும் போது நம் ஜெபங்களுக்கு அவர் பதில் அளிக்கிறார் அவருடைய பிரசன்னத்தை நாம் உணர்ந்து வேதத்திலிருந்து புதிய காரியங்களைப் புரிந்துக் கொள்ள நாம் தொடங்குகிறோம் இது நம்முடைய ஆவிக்குரிய கருத்தரித்தலுக்கு ஒப்பானது ஆவிக்குரிய வளர்ச்சியில் நாம் எந்த கட்டத்திலே இருக்கிறோம் என்பது பிரதானம் அல்ல நாம் முறுபடியுமாக பிறந்தாக வேண்டும் என்பது தான் பிரதானம்.

## II. பழைய மனுஷனிலிருந்து புதிய மனுஷன் வரை

### A. புதிய பிறப்பிற்குப் பிறகு நாம் வல்லமையாக மாற்றப் படுகிறோம்

பரிசுத்த ஆவியினால் நாம் பெலனடைந்து இயேசு கிறிஸ்துவுக்கு ஜீவனுள்ள சாட்சிகளாய் நாம் வாழ்கிறோம் அவருடைய ஆவியினால் செல்வாக்கின் புதிய வட்டங்களுக்குள்ளாக நுழைய நமக்கு திறமையுண்டு.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 9

**அப்போஸ்தலர் 1:8** “*பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*”

## B. நம்முடைய பழைய மனுஷன் மரித்து அடக்கம் பண்ணப்படுகிறான். நாம் ஆவிக்குரியப் புதியப் பிறப்புகளாக மாறுகிறோம்.

2 கொரிந்தியர் 5:17-19 “*இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்;* ***பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.*** *18 இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். 19 அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.*”

கொலோ 2:12-14 “***ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும்****, அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். 13 உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த* ***உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து,*** *அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து; 14 நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து;*”

ரோமர் 6:3-6 “*கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? 4 மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும்* ***புதிதான ஜீவனுள்ளவர்களாய்*** *நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும்* ***ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்****. 5 ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். 6 நாம்* ***இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு,*** *பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக,* ***நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.***”

எபேசி 4:21-24 “*இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. 22 அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, 23 உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, 24* ***மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.***”

புதிய பிறப்பின் மூலம் நாம் யாராக இருந்தோம் என்பது மரித்து ஒரு புதிய நபராய் நாம் மாறுகிறோம்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 9

## C. நாம் கிறிஸ்துவினுடைய ஸ்தானாதிபதிகளாகவும் மாறுகிறோம்

**2 கொரிந்தியர் 5:20** "*ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் **கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து**, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.*"

**எபேசியர் 6:19-20** "*சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, நான் தைரியமாய் என் வாயைத்திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்கு கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம்பண்ணுங்கள்.*"

ஸ்தானாதிபதிகளாகிய நாம் சத்தியத்தை பகிரங்கமாகவும் தைரியமாகவும் அறிக்கையிட வேண்டும்

**கேள்வி ஸ்தானாதிபதி என்றால் என்ன?**

(a) தன்னுடைய இராஜியத்தையோ தேசத்தையோ செய்கிறவன் ஒருவன் தான் ஸ்தானாதிபதி அவருடைய செய்கையின் மூலம் எந்த ஒரு அவமானமும் ஏற்படக் கூடாது.

(b) இராஜியத்திற்குள்ளாகவும் தேசத்திற்குள்ளாகவும் தூதரகத்திற்குள்ளாகவும் ஜனங்களை பிரவேசிக்க அழைக்கிற ஒருவன்.

(c) தன் தேசத்தைக் குறித்தும் இராஜியத்தைக் குறித்தும் நல்லக்காரியங்களை பேசுகிற ஒருவன்

(d) தான் சந்திக்கிற தேசத்தின் ஜனங்களோடுகூட ஒத்துப்போகாமல் அவனுடைய தாய் நாட்டின் போதமைகளுக்கு உறுதியாய் கீழபடிகிறவன்

(e) தன்னுடைய தேசம் இராஜியத்திற்கு ஏற்ற வழிகளில் அவர்கள் வஸ்திரங்களை அணிந்து தங்களை சீர்படுத்திக் கொள்ளுவார்கள் பொதுவாக ஒரு ஸ்தானாதிபதியைப் பார்த்தவுடன் ஒரு பெரிதான வித்தியாசத்தை நாம் பார்க்க முடியும்

(f) தாய் நாட்டின் மொழியை அவர்களால் பேச முடியும்

(g) ஒரு ஸ்தானாதிபதியைப் பார்க்கும் போது அவருடைய இராஜா தலைவர் இராஜியம் அல்லது தேசத்தின் சாயலை நாம் பார்க்க முடியும்

கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகளாய் நாம் இருக்கிறோம் ஆகையால் மேற்கண்ட எல்லா குணாதிசயங்களையும் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 9



**சாவி # 3** <u>மறுபடியுமாக பிறந்தவுடன் நம் வாழ்க்கையை ஆளுகை செய்கிற வேத தத்துவங்களை நாம் கைக்கொள்ள வேண்டும்</u>

## III. கிறிஸ்தவர்களுக்கு சலுகைகளும் கடமைகளும் உள்ளது

### A. நாம் விசேஷித்தமானவர்கள் நாம் செய்வதற்கான அதிசயமான மற்றும் உற்சாகமான வேலை உண்டு

ஆவிக்குரிய அந்தகார உலகிற்கு நாம் ஒளியாய் இருக்கிறோம் ஜனங்கள் தங்கள் அந்தகார இருளில் இருந்து நம் பக்கமாய் இழுக்கப்படுவார்கள்

**இயேசு: மத்தேயு 5:14-16** "*<u>நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்;</u> மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. 15 விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். 16 இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி,* ***உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.*** "

**இயேசு: மத்தேயு 5:13** "*நீங்கள் <u>பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்;</u> உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.*"

தேவனுடைய துதிகளை நம் சந்ததிக்கு நாம் அறிக்கையிடுகிறோம்

**1 பேதுரு 2:9** "*நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய* ***புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத்*** *<u>தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்</u>.* "

இதின் அர்த்தம் என்னவென்றால் நாம் செல்லுகிற எல்லா இடங்களிலும் (வேலையோ பள்ளியோ இல்லமோ) தேவனுடைய ஒளியை நம் செய்கைகள் வார்த்தைகள் மற்றும் நம் வாழ்க்கை வாழுகிற விதத்தின் மூலமாக வெளிப்படுத்த நமக்கு சிலாக்கியம் உண்டு. தேவனுக்கு உப்பாக இருப்பதினால் (உப்பு பொருட்களைப் பாதுகாக்கும்) பாவம் நிறைந்த உலகில் பரிசுத்தத்தை நாம் காத்துக் கொள்ள முடியும் இது மற்றவர்களிலே தேவன்மேல் ஒரு வாஞ்சையை (தாகத்தை) உண்டாகச் செய்யும் துதி மற்றும் ஆராதனையில் நாம் வாழும் வாழ்க்கையின் நிமித்தமாய் நம் சகத் தொழிலாளிகளுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் நண்பர்களுக்கும் குடும்ப அங்கத்தினர்களுக்கும் நாம் இயேசுவை அறிக்கையிட முடியும்.

கிறிஸ்தவர்களுக்கு நிறைவாய் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ளவைகளுக்கு உத்தமமாய் இருக்க வேண்டும் என்பதை தேவன் எதிர்பார்ப்பார்.

**லூக்கா 12:48** "*அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ சில அடிகள் அடிக்கப்படுவான். எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 9

*கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்.* "

இது எதிர்மாதிரியான காரியம் அல்ல சாதகமானது என்பது தான் ஏனென்றால் நாம் தேவனாலே பயன்படுத்தப்படுகிறோம்.

**B. சரியான ஆவிக்குரிய சத்துவத்தை நாம் பராமரிக்க வேண்டும் இல்லை என்றால் நாம் ஆவியிலே மரித்து விடுவோம்.**



**சாவி # 4 <u>தினமும் வேதத்தை வாசிக்க வேண்டும் இல்லை என்றால் நாம் பட்டினியாக மரித்துவிடுவோம்.</u>**

### 1. வேதத்தை நாம் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

புதிதாய் பிறந்தக் குழந்தைகளுக்கு உயிர்வாழ பால் எப்படி தேவையானதோ தேவனுடைய வார்த்தை புதிதாய் பிறந்த கிறிஸ்தவனுக்குத் தேவை ஆகையால் நாம் தினமும் வேதத்தை வாசித்து ஆராய வேண்டும் வேத வசனங்களின் மூலமாய் தேவனை இன்னுமாய் அறிந்துக் கொள்ள கொடுக்கப்படுகிற ஒவ்வொரு வாய்ப்பையும் நாம் தேட வேண்டும்.

**1பேதுரு 2:2** "*நீங்கள் <u>வளரும்படி</u>, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்,*"

**2தீமோ 2:15** " *நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் **சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி** ஜாக்கிரதையாயிரு.* "

**2பேதுரு 3:18** " *நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை **அறிகிற அறிவிலும் வளருங்கள்**...*"

**எபிரெயர் 10:25** "*சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.*"

தனிப்பட்ட தியானத்தினாலும் தேவனால் உண்டாக்கப்பட்ட 5 வகை ஊழியங்களினாலும் (அப்போஸ்தல, தீர்க்கதரிசி, சுவிசேஷகர், போதகர், மேய்ப்பர் எபேசியர் 4:11) பிரசங்கிக்கப்படுகிற வார்த்தைகளை கேட்பது முக்கியம் தேவனுடைய இராஜியத்திலே என்ன எதிர்பார்ப்புகள் உண்டு என்பதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

கொஞ்சகாலம் சென்றப்பின் புதுமை மறைந்து பழைய மனிதன் மீண்டுமாக எழும்பி ஆட்கொள்ள முயற்சிப்பான் தேவனோடு கொண்ட நம் புதிய உறவைக் குறித்து நாம்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 9

கவனமாய் இருப்போமென்றால் இது நடக்காது இரட்சிக்கப்பட ஒரு புஸ்தகம்தான் உண்டு அப்போஸ்தலருடைய நடபடிகை ஆனால் இரட்சிப்பை பாதுகாத்துக்கொள்ள 21 புத்தகங்கள் உண்டு. இவைகள்தான் நிருபங்கள் மறுபடியுமாக பிறப்பது எளிது. ஆனால் நம் புதிய வாழ்க்கையின் விதத்தைக் கைக் கொள்ள நாம் எடுத்துக் கொள்ளும் ஆராய்ச்சியின் பயணம் வாழ்க்கை முழுவதும் தொடங்குகிறது சிறு குழந்தையின் மனப்பான்மையை நாம் கொண்டிருந்தால் மறுபடியுமாகப் பிறந்த புதுமையை நாம் இழக்கமாட்டோம் தொடர்ந்து இரட்சிக்கப்பட இது ஒரு அத்தியாவசியமானத் தத்துவம்.

**மத்தேயு 18:2-4** "*இயேசு ஒரு சிறு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து: அதை அவர்கள் நடுவே நிறுத்தி: 3* ***நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*** *4* ***ஆகையால் இந்தப்பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்.***"


ஒரு குழந்தை 1. நம்பும் 2. மன்னிக்கும் 3. கற்றுக்கொடுக்க எளிதாய் இருக்கும்

நம்மை நாம் தாழ்த்தி இந்த சிறு பிள்ளைகளின் குணாதிசயங்களை கைக்கொள்ள வேண்டும் விசுவாசிக்க நிறுத்திவிட்டாலோ மன்னிக்காமல் போனாலோ அல்லது கற்றுக் கொள்ளாமல் இருந்தாலோ நமக்கு எல்லாம் தெரியும் என்ற அகங்காரம் நம் இருதயங்களுக்குள்ளே புகுந்து விடும் தேவன் இதைக் குறித்து நமக்கு தெளிவாக எச்சரிப்பு கொடுக்கிறார்.

**1 பேதுரு 5:5-7** "*… நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர்* ***கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்;*** *<u>பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்</u>. 6* ***ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.*** *அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.*"

**நீதிமொழிகள் 16:18** "*அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை.*"

குழந்தையாய் இருப்பதற்கு முக்கியமான காரியம் வேதத்தை வாசித்து தினந்தோறும் ஜெபிப்பதாகும். தேவனோடு ஒரு பலத்த உறவை உண்டாக்க இதுதான் வழி இரட்சிக்கப்பட்டு இருப்பதற்கும் இதுதான் ஒரே வழி



**சாவி # 5** **<u>இராஜியத்திலே தங்கியிருப்பதற்கு நாம் குழந்தையைப்போல இருக்க வேண்டும் குழந்தையைப் போல நம்பி மன்னித்து கற்றுக் கொள்ள ஆயத்தமாய் இருக்க வேண்டும்.</u>**

## 2. நாம் ஜெபிக்க வேண்டும்

கர்த்தரையும் அவருடைய வாஞ்சையையும் அறிந்துக்கொள்ள ஒரே வழி அவரிடத்தில் பேசுவதாகும் கர்த்தர் நமக்கு நேரடி தொடர்பு சிலாக்கியத்தை கொடுத்திருக்கிறார்.


# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 9

கிறிஸ்தவர்களாகிய நமக்கு நாம் தினமும் ஜெபிக்க வேண்டும் முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்கு முன்பதாக நாம் ஜெபிக்க வேண்டும் நமக்காகவும் நம் குடும்பத்திற்காகவும் நண்பர்களுக்காகவும் சக வேலையாட்களுக்கும் பள்ளி நண்பர்களுக்கும் உலகத்தில் நடக்கும் சம்பவங்களுக்கும் நம் தேசத்திற்கும் நாம் ஜெபிக்க வேண்டும் எதை குறித்தாகிலும் நாம் கர்த்தரிடத்திலே பேசலாம் கர்த்தரிடத்தில் பேசுவதற்கு எந்த காரியமும் சிறியதல்ல.

கேட்பதற்கும் செவிகொடுப்பதற்கும் நாம் ஜெபிக்கிறோம் கர்த்தரை அறிந்துக்கொள்வதற்கு நாம் ஜெபிக்கிறோம் பெற்றுக்கொள்ள நாம் ஜெபிக்கிறோம் விசுவாசத்தோடு நாம் ஜெபிக்கிறோம். கர்த்தருடைய சித்தத்தின்படி நாம் ஜெபிக்கிறோம் கொஞ்சக்காலத்தையும் நீண்டக்காலத்தையும் ஜெபத்தில் நாம் செலவு செய்கிறோம் கிறிஸ்தவர்களாகிய நாம் உயிர்வாழ ஒரே வழி நாம் ஜெபிப்பதுதான். இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு ஜெபிப்பதற்கான ஒரு ஆலோசனையைக் கொடுத்தார் இது ஒரு மாதிரி அல்லது அச்சாக இருந்தது இது மனப்பாடமாகவோ அல்லது வார்த்தைகளை மாற்றாமலோ ஜெபிப்பதற்காக கொடுக்கப்படவில்லை ஆனால் ஜெபப்பிரயாணத்திற்கு தொடக்கமாக இந்த மாதிரியை நாம் உபயோகித்துக் கொள்ளலாம் சீஷர்கள் ஜெபிக்க அறியாததினால் இயேசு இதை அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார் ஆகையால் ஜெபவாழ்க்கையில் நாமும் வளர்ச்சி அடைந்து அவரை நீண்ட காலம் சேவிக்கும்படியாக கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது நாம் ஜெபநேரத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் (மத்தேயு 26:40)

**மத்தேயு 6:9-13** "*நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. 10 உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. 11 எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். 12 எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். 13 எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே.*"

நம் ஜெபத்தை முதலாவது ஸ்தோத்திரத்தோடும் துதியோடும் தேவனுக்கு நன்றியோடும் துவங்கவேண்டும் என்று இயேசு கற்றுக்கொடுக்கிறார் அதன் பிறகு அவருடைய சித்தம் நம் வாழ்க்கையில் நிறைவேறும்படியாகவும் அவர் நம் சரீரப் பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய தேவைகள் சந்திக்கும்படியாகவும் ஜெபிக்க வேண்டும். நாம் தினந்தோறும் தவறுகளையும் பாவங்களையும் செய்வதினால் ஜெபத்திலே கொஞ்ச நேரம் மன்னிப்பு கேட்க வேண்டும் கர்த்தர் நம்மை உண்மையாக மன்னித்தபடியினால் நமக்கு விரோதமாய் பாவம் செய்கிறவர்களை மன்னியுங்கள் என்று நாம் ஜெபிக்க வேண்டும் நம்மை சோதனையிலிருந்தும் பாவத்திலிருந்தும் விலக்கிக்காக்க வேண்டும் என்று நாம் ஜெபிக்க வேண்டும் நம் ஜெபவேளையின் முடிவிலே கர்த்தரை நாம் ஸ்தோத்தரித்து முடிக்க வேண்டும் அன்றாடம் ஜெபத்தை ஒரு மணி நேரமாக வளர்ப்பதற்கு முழு ஜெப கடிகாரம் என்ற கைப்பிரதியைப் பார்த்து இதைக் கைக் கொள்ளவும் இது பாடத்தின் முடிவில் கொடுக்கப்படும் (ஆசிரியர் இந்தக் கைப்பிரதியைப் பார்க்கவவும்)



**சாவி # 6 <u>ஒவ்வொரு நாளும் ஜெபிக்க வேண்டும் இல்லாவிட்டால் ஆவியிலே மரித்துவிடுவோம்.</u>**

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 9

## IV. நம் வாழ்க்கையில் நடைபெறுகின்ற இயற்கைக்கு அப்பாற்ப்படட மாற்றங்கள்

### A. பழைய மனுஷன் தீயவன்

பழைய மனுஷனின் தீய செய்கைகள் மாம்சத்தின் கிரியைகள் என்றும் பாவத்தினால் செய்யப்படும் கிரியை என்றும் அழைக்கப்படுகிறது (ஆசிரியர் மாம்சத்தின் கிரியை மற்றும் ஆவியின் கனி என்ற அட்டையைப்பார்க்கவும்)

**கலாத்தியர் 5:19-21** "***மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன***: *விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே;* ***இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று*** *முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.*"

விளக்கங்கள் விபச்சாரம் தன்னுடைய கனவன் - மனைவி அல்லாத ஒருவரோடு உடலுறவு கொள்ளுவது வேசித்தனம் திருமணம் ஆகாத ஒருபர் ஈடுபடும் எந்த விதமான பாலியல் செயல்கள். அசுத்தம் சரீரப்பிரகாரமான மற்றும் நடத்தையில் அசுத்தம் காமவிகாரம் அழுக்கான விக்ரகங்களை வணங்குவது முற்பிதாக்களை வணங்குவது தேவனுக்கு மேலாக எந்த காரியத்துக்கும் மதிப்பு கொடுப்பது (வேலை உறவு பணம்) பில்லிசூனியம் மந்திரங்கள் சாமியாடுதல் ஜோசியம் பார்த்து எதிர்காலத்தை அறிந்துக் கொள்ளுதல் பகைகள் சண்டைப்போடுவது விரோதங்கள் பிரிவினையை ஏற்படுத்தும் வாக்குவாதங்கள் மார்க்கபேதங்கள் பொய்யான போதனைகள் வெறிகள் களியாட்டுகள் மதுபானம் குடிப்பது போதைப் பொருள் உட்கொள்வது ஒருவன் தன் சுய கட்டுப்பாட்டை இழக்கச் செய்கிற காரியம்

### B. நம் இருதயம் (வாஞ்சைகள் உணர்வுகள் மனுஷசித்தம்) நம் இருதயம் நம்மை வஞ்சிக்க முயற்சிக்கும்

**எரேமியா 17:9** "*எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?*"

**மாற்கு 7:21-23** "*எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.*"

**ஏசாயா 64:6** "*நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டுபோகிறது.*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 9

**ரோமர் 7:18-21** "*<u>அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்;</u> நன்மைசெய்யவேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை. ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன். அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால், நான் அல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. ஆனபடியால் நன்மைசெய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன்.*"

தேவன் தான் நம்மை நல்லவர்களாக உருவாக்க முடியும் என்பதை நாம் உணர்வது முக்கியம். நாம் நீதிமான்கள் என்றும் அல்லது நீதி நம்முடையது என்றும் எண்ணக் கூடாது நம்முடைய சொந்த நீதி அழுக்கான கந்தை என்று அழைக்கப்படுகின்றது நம்முடைய சொந்த வழிகளையோ யோசனைகளையோ சிந்தனைகளையோ நம்பக்கூடாது நாம் தேவனை மாத்திரம் நம்ப வேண்டும். நாம் சரியான காரியங்கள் செய்வதினால் தேவனோடு சரியாக வாழ்கிறோம் என்று நினைக்கக்கூடாது. நாம் ஆவியிலே வழி நடத்தப்பட்டு நம் வாழ்க்கையை தேவன் முழுவதுமாக மாற்ற அனுமதிக்க வேண்டும்

## C. ஆவியின் கனி

**கலாத்தியர் 5:22-25** "*ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்.*"

ஒரு விருட்சத்தில் பழம் எப்படியாக வளருகிறதோ அப்படியே நம் குணாதிசயத்தில் ஆவியின் கனி வளருகிறது ஒரு பழம் வளர எவ்வளவு மணி நேரம் ஆகிறதோ அதேப்போல நம் வாழ்க்கையில் ஆவியின் மனப்பான்மையும் குணாதிசயமும் வளர நேரமாகிறது மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களாக நாம் தேவனுடைய இராஜியத்தில் நீண்டு வாழும்பொழுது நம் வாஞ்சைகளை அவருடைய வாஞ்சைகளினாலே மாற்றுகிறார் அவருக்குப் பிரியமானதையும் அவருக்கு பிடிக்காத காரியங்களையும் நமக்குள்ளாக வைக்கிறார் என்ன மாற்றம்! நாம் வெறுத்தக் காரியங்களை இப்பொழுது நேசிக்கிறோம் நாம் நேசித்தக் காரியங்களை இப்பொழுது வெறுக்கிறோம் என்ன ஆச்சரியம்! பழைய மனுஷன் மாற்றப்பட்டு புதிய மனுஷனாக மாறுவதை நாம் காணமுடியும்

**எபேசியர் 5:8-10** "*முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ **கர்த்தருக்குள்** வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள். 9 ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். 10 கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்.*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 9

## V. பரிசுத்தத்தின் அழகு

பரிசுத்தம் என்றால் பரிசுத்தப்படுத்துவது புனிதமாக்குவது பிரித்தெடுக்கப்படுவது அல்லது தேவனுக்காக அற்பணம் செய்வது

பரிசுத்தம் ஞானஸ்நானம் அல்லது மாற்றுதலுக்குப் பிறகு ஏற்படும் கிறிஸ்தவ வாக்களிப்பின் மூலம் தெய்வீக கிருபையில் பெருகுவதின் நிலை (வெப்ஸ்டர் மொழியாக்கம்) அவருடைய நோக்கத்திற்காக விசேஷித்தமாக உருவாக்கப்பட்ட ஒரு கூட்டமக்களோடுகூட தேவன் உறவுக் கொள்ள வாஞ்சிக்கிறார் பரிசுத்த ஆவியின் நிறைவுதலின் மூலம் அவருக்காக தனியாக இந்த ஜனங்களை பிரித்தெடுத்து உருவாக்குகிறார்.

**1பேதுரு 1:14-16** "*நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்.*
*நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.*"

**எபிரெயர் 12:14** "*யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும்* ***கர்த்தரைத்*** *தரிசிப்பதில்லையே.*"

**ரோமர் 12:1-2** "*அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.* "

**2கொரிந்தியர் 6:16-17** " *தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானவைகளைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*"

**யாக்கோபு 4:4** "*அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.* "

**1 யோவான் 2:5** "*அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்.*"

பரிசுத்த ஆவி ஒருவரிடத்தல் இருந்து அதோடு ஒருவர் நீண்ட நாள் வாழும் பொழுது அந்த நபர் மாற்றப்படுகிறார் இருதயத்திலே ஆரம்பமாகிற சில காரியங்கள் வெளியரங்கமாய் இந்த நபரின் வாழ்க்கை முறையில் தோன்றும் மேற்கண்ட

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 9

வேதப்பகுதிகளிலிருந்து கர்த்தர் தமக்காக விநோதமான விசேஷித்தமான பரிசுத்தமான ஜனத்தை விரும்புகிறார் என்பதை நாம் காண முடியும் நாம் அவருடைய சபை மாத்திரமல்ல மணவாட்டியும் கூட. மணவாட்டி எப்படி மணவாளனோடு திருமணம் செய்துக் கொண்டு வேறு மனுஷனோடு உறவு கொள்ள இயலுவதில்லையோ அப்படியே நாமும் நம் வாழ்க்கையின் பழைய காரியங்களிலிருந்து பிரித்தெடுத்து கர்த்தரோடுகூட நித்தியக்காலத்திற்கு திருமணம் செய்து கொள்ளுகிறோம் அவருடைய வழிகள் எவ்வளவு மேன்மையானவைகள் ! கர்த்தருக்கு ஒரே சபையும் ஒரு ஜனமும் மாத்திரம் தான் உள்ளது.

நம்மை கிறிஸ்தவ மதத்தில் வைப்பதற்கு 21 நிருபங்கள் ஏன் இருக்கின்றன ? இதில் பிரவேசிப்பதற்கு ஒரே புஸ்தகம் (அப்போஸ்தலர்) ஏன் இருக்கிறது. பழைய மனுஷனும் அவனுடைய வாஞ்சைகள் ஏன் மரித்ததாக வைக்க வேண்டும் ? ஆவியின் கனியை நாம் ஏன் சுமக்க வேண்டும் ? ஏனென்றால் தேவன் பரிசுத்த தேவன் பழைய மனுஷனை மீண்டுமாக உயிர்பிக்க அனுமதித்தோமென்றால் கர்த்தருடைய பரிசுத்தம் நம்மை நியாயந்தீர்க்கும் என்று அவர் வலியுறுத்துகிறார். அசுத்த ஆலயத்தில் பரிசுத்த தேவன் எப்படி வாழ முடியும் ? 1 கொரிந்தியர் 15:30-ல் பவுல் நான் தினந்தோறும் மரிக்கிறேன் என்று சொல்லுகிறான் ஏனென்றால் அவன் புதிய ஜீவனால் நிரப்பபட்டும் கூட பழைய மனுஷன் உயிர்த்தெழுந்து அவன் வாழுகின்ற புதிய வழியைக் கொல்ல முயற்சிப்பதினால் சொல்லுகிறான்.

**1கொரிந்தியர் 9:27** "*மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை <u>ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்</u>.*"



**சாவி # 7 <u>தேவன் பரிசுத்தமானவர் அவர் எல்லா அசுத்தத்தையும் வெறுக்கிறார் ஆகையால் நாம் மாம்சத்தை தினந்தோறும் சிலுவையில் அறைய வேண்டும் (சிலுவையை சுமந்து தினமும் நாம் மரிக்க வேண்டும்)</u>**

**பல்வேறு கிறிஸ்தவ சபைகள் எங்கிருந்து வந்தது ?**

இந்த கேள்வி மற்றும் பல கேள்விகளுக்கு 10-ம் பாடத்திலே பதில் கொடுக்கப்படும்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

சபை விசுவாசித்ததை மற்றும் பிரசங்கித்ததை காண்பிப்பதுதான் இந்த பாடத்தின் நோக்கம் சரித்திரத்தில் காணப்பட்ட பல்வேறு கிறிஸ்தவ மத குழுக்களோடு இதை ஒப்பிட்டு பார்ப்போம்.

## 1. புதிய ஏற்பாடு சபை

**A. உண்மையான அப்போஸ்தல உபதேசத்தில் இவர்கள் விசுவாசமாய் இருந்தார்கள்**

சீஷர்களும் அப்போஸ்தலர்களும் பரிசுத்த ஆவியை பெற்ற பின் முழுமையாக மாற்றம் அடைந்து உலகத்தை தங்கள் செய்தியினால் கவர்ந்தார்கள்! ஆதி சபை அப்போஸ்தலர்களின் உபதேசத்தை பின்பற்றினது இதை கற்றுக்கொடுத்தது ஆதி சபையின் தலைவர்களை இயேசு தேர்ந்து எடுத்தார். அப்போஸ்தலர்களின் உபதேசத்தின் மேல் புதிய ஏற்பாடு சபை முழு நம்பிக்கை வைத்து மற்ற பொய்யான உபதேசங்களை புறக்கணித்தது.

**அப்போஸ்தலர் 17:6** "*...உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்.*"

**அப்போஸ்தலர் 2:42** "*அவர்கள் **அப்போஸ்தலருடைய உபதேசத்திலும்**, அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் <u>உறுதியாய்த் தரித்திருந்தார்கள்</u>.*"

முதல் சபையானது அப்போஸ்தலர்களின் உபதேசத்திலும் போதனையிலும் உறுதியாய் நீடித்தது ஸ்டார்ங் ஒத்தவாக்கியத்தின் படி "Steadfastly" என்ற வார்த்தைக்கு அர்த்தம் உருதியாய் பற்றிக்கொள்வது அல்லது விடாபிடியாய் பிடித்துக்கொள்வது என்ற அர்த்தம் கொண்டது. இது சபைக்கு அப்போஸ்தலர்கள் கற்று கொடுத்ததின் முக்கியத்துவத்தை காண்பிக்கிறது. இவர்கள் கற்றுக் கொடுத்ததை அன்றி வேறு ஒரு உபதேசத்ததை மற்றவர் கற்று கொடுத்தால் அவர்கள் சபிக்கப்படுவார்கள் என்று வேதம் கூறுகிறது.

**கலாத்தியர் 1:6-12** "*உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; 7 வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. 8 நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், <u>நாங்களாவது,</u> வானத்திலிருந்து வருகிற ஒரு <u>தூதனாவது</u>, **வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால்**, **அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்**. 9 முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் **வேறொரு சுவிசேஷத்தை** ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் **அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்**. 10 இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே. 11 மேலும், சகோதரரே, **என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று** உங்களுக்குத் தெரிவிக்கிறேன். 12 நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, **இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்**.*"

**1 யோவான் 4:6** "*நாங்கள் தேவனால் உண்டானவர்கள்; **தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான்; தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்குச்***

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

***செவிகொடுக்கிறதில்லை****; இதினாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சகஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்.*"

ஆதி சபை விசுவாசித்த காரியத்தையும் அப்போஸ்தலர்கள் கற்று கொடுத்த உபதேசத்தை பார்க்கிலும் அதிகமாகவோ குறைவாகவோ விசுவாசிப்பது தவறு என்று வேத வாக்கியங்கள் கூறுகிறது ஆதி சபை சத்தியத்தின் மேல் அசைக்க முடியாது நம்பிக்கை வைத்தது என்றால் நாமும் அப்படியே செய்ய வேண்டும். சத்தியத்திற்கு விரோதமாய் உள்ள உபதேசங்களை நாம் விசுவாசிப்போம் என்றால் ஆதி சபை நேசித்தது போல சத்தியத்தை நாம் நேசிக்கவில்லை என்று தான் அர்த்தம் இந்த உபதேசத்திற்கு விரோதமாய் பிரசங்கிக்கிறவர்களை குறித்து வேதம் நம்மை எச்சரிக்கிறது.

**1 தீமோத்தேயு 1:3-4** " *வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கும்....நீ சிலருக்குக் கட்டளையிடும்பொருட்டாக, நான் மக்கெதோனியாவுக்குப் போகும்போது உன்னை எபேசு பட்டணத்திலிருக்க வேண்டிக்கொண்டபடியே செய்வாயாக.* "

**2 தெச 3:14-15** "*மேலும், இந்த நிருபத்தில்* ***சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால்,*** <u>*அவனைக் குறித்துக்கொண்டு*</u>*,* ***அவன் வெட்கப்படும்படிக்கு*** <u>*அவனுடனே கலவாதிருங்கள்.*</u> *15 ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்.* "

சுபைக்கு உபதேசமும் கீழ்படிதலும் எவ்வளவு முக்கியம் என்பதை மேல் கண்ட வேத பகுதிகள் வெளிப்படுத்தும் சத்தியத்தை கேட்டு அதற்கு விரோதமாய் எழும்பின நபரை சபை கன்னியத்தோடும் மற்றும் சாந்தத்தோடும் சகோதரனை பாவிப்பது போல். பாவித்து அவனை திருத்தி கடிந்து கொள்ள வேண்டும் என்றும் அவனுடன் அதிக நெருக்கத்தோடு இல்லாமல் பழக வேண்டும் என்று வேதம் கூறுகிறது.



**சாவி # 1:** <u>**வேதத்தில் இல்லாத கருத்து மற்றும் உபதேசம் பொய்யானது**</u>

### B. அவர்கள் ஐக்கியத்திலே விசுவாசமாய் இருந்தார்கள்

கிறிஸ்தவர்கள் மற்ற உண்மையான கிறிஸ்தவர்களோடு கூடுவது ஆதி சபையின் ஒரு இணைபிரியாத பங்காய் இருந்தது, ஆதி சபைக்கு இது தேவை என்றால் நாமும் மற்ற கிறிஸ்தவர்களோடு பெலன் அடைய மற்றும் வளருவதற்கு கூடுவது அவசியம். கிறிஸ்தவர்களான நமக்கு ஒரே சிந்தை கொண்ட மற்ற சபையாரோடு கூடுவது நம் வாழ்க்கைக்கு ஒரு முக்கிய பங்காய் இருக்க வேண்டும்.

**அப்போஸ்தலர் 2:42** "*அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.*"

**எபிரெயர் 10:25** " ***சபை கூடிவருதலைச்*** *சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும்* ***விட்டுவிடாமல்****, ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்;* ***நாளானது***

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

***சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ*** *அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.*"

கிறிஸ்துவின் தேவை இருக்கிறவர்களோடு நேரம் செலவழிக்கிறது எவ்வளவு முக்கியமோ அதே முக்கியத்துவத்தை நாம் கிறிஸ்தவர்களோடு செலவு செய்வதற்கு கொடுக்க வேண்டும். இந்த உலகம் பாவம் நிறைந்தது. ஆகையால் ஊக்கமாய் கர்த்தர் மேல் கவனம் செலுத்தி செல்வாக்கை நாம் சக விசுவாசிகளோடு சபை கூட்டங்களிலும் ஜெப கூட்டங்களிலும் வேத பாடங்களிலும் மற்றும் இதர சபை நிகழ்ச்சிகளில் தான் பெற்றுக் கொள்ள முடியும் இதை செய்வதின் நிமித்தம் நாம் ஆவிக்கும் வார்த்தைக்கும் நம்மை ஒப்புக் கொடுக்கிறோம். தேவனுடைய வார்த்தையை கேட்க்க-கேட்க்க விசுவாசம் பெருகும்.

**ரோமர்** 10:14-17 "***அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்?*** ***அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?...17 ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.***"

ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் ஒரு போர் நடந்துக்கொண்டு இருக்கிறது. ஒரு போருக்கு சரீரபிரகாரமான கவசம் அணிவது போல ஜெபத்தினால் ஆவிக்குரிய கவசத்தை தரித்துக்கொள்ள வேதம் நமக்கு போதிக்கிறது. ஆவியிலே ஜெபிப்பதற்கும் இது நம்மை உற்சாகப்படுத்துகிறது கிறிஸ்தவர்களோடு நாம் ஐக்கிய படும் போது நம் யுத்தங்களில் அவர் நமக்கு சகாயம் செய்ய முடியும் ஏன் என்றால் அவர்களுக்கும் நாள்தோறும் நடக்கும் போராட்டங்களில் ஞானம் உண்டு.

**எபேசியர் 6:10-13,18** " *கடைசியாக, என் சகோதரரே,* ***கர்த்தரிலும்*** *அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். 11* ***நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.*** *12 ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல,* ***துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.13 ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்...18 எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.***"



**சாவி # 2: <u>அப்போஸ்தலர்களின் செய்தியின் மேல் விசுவாசம் உள்ளவர்களோடு நாம் அதிக நேரம் செலுத்த வேண்டும்.</u>**

**C. பகிர்ந்து கொள்வதிலும் மற்றும் கொடுப்பதிலும் அவர்கள் விசுவாசமாய் இருந்தார்கள்.**

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

உலகத்தை சந்திப்பதற்கு சபைக்கு தேவையான உதவிய தங்களுடைய பொருட்களை விற்று கொடுத்தார்கள் என்பது ஒரு வியப்பான காரியம்

**அப்போஸ்தலர் 4:34-35** “*நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து, 35 அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய்ப் பகிர்ந்துகொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை.*”

கர்த்தரை ஏற்று கொள்ளுங்கள் இது இலவசம் என்று சிலர் இன்றைக்கு சொல்லுவார்கள் அவருக்காக ஜீவிப்பதற்கு ஒரு விலையும் இல்லை என்றும் சொல்லுவார்கள். இது உண்மையல்ல இதன் விலை நம் ஜீவனாகும். சிலுவையை சுமந்து இயேசுவின் பின் செல்வது தான் நித்திய ஜீவனுக்கு நாம் செலுத்தும் விலைக்கிரையம் நாம் எல்லாவற்றையும் தியாகமாய் கொடுக்க சித்தமாய் இருக்க வேண்டும் (மாற்கு 10:17-23-ஐ தனிப்பட்ட பாடமாய் படிக்கவும்)

**மாற்கு 8:34-38** “ *பின்பு, அவர் ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து: ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். 35 தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான். 36 மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? 37 மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? 38 ஆதலால் விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக்குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார் என்றார்.*”

**வெளி 12:10-11** “ *அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்குமுன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான். 11* ***மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல்,*** *ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.* ”

**மத்தேயு 13:44** “*அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்.*”



சாவி **# 3:** <u>கிறிஸ்தவராக நீடிக்க நமக்கு தியாக மனப்பான்மை வேண்டும்</u>

**D. ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அற்புதங்களிலும் அடையாளங்களிலும் அதிசயங்களிலும் விசுவாசமாய் இருந்தார்கள்.**

தன்னுடைய சீஷர்களை குறித்து இயேசு இப்படி சொன்னார்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

**மாற்கு 16:17-20** "*விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; 18 சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். 19 இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். 20 அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்.*"

பேதுருவும் யோவானும் அற்புதங்கள் செய்தார்கள்

**அப்போஸ்தலர் 3:1-10** " *ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்திலே பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள். 2 அப்பொழுது தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனைச் சுமந்துகொண்டுவந்தார்கள்; 3 தேவாலயத்திலே பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சைகேட்கும்படி, நாடோறும் அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையிலே வைப்பார்கள். தேவாலயத்திலே பிரவேசிக்கப்போகிற 4 பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு பிச்சைகேட்டான். பேதுருவும் யோவானும் அவனை உற்றுப்பார்த்து: எங்களை நோக்கிப்பார் என்றார்கள். 5 அவன் அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி, அவர்களை நோக்கிப்பார்த்தான். 6 அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்;* ***நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி****; 7 வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான், உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. 8 அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். 9 அவன் நடக்கிறதையும், தேவனைத் துதிக்கிறதையும், ஜனங்களெல்லாரும் கண்டு: 10 தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையிலே பிச்சைகேட்க உட்கார்ந்திருந்தவன் இவன்தான் என்று அறிந்து, அவனுக்குச் சம்பவித்ததைக்குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்.*"

ஸ்தேவான் பெரிதான அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்தான்

**அப்போஸ்தலர் 6:8** "*ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய* ***அற்புதங்களையும் அடையாளங்களையும்*** *செய்தான்.*"

பிலிப்பு அற்புதங்களை செய்தான்

**அப்போஸ்தலர் 8:6** "*பிலிப்பு செய்த* ***அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு****, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்.*"

தன்னுடைய ஊழியத்தை குறித்து பவுல் இப்படியாக சொன்னான்.

**1 கொரிந்தியர் 2:4** "*உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல,* ***தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு***,"

ஆண்டவர் இயேசுவின் நாமத்தின் மேல் நம்பிக்கை வைப்பதினால் பெரிய காரியங்களை செய்யமுடியும் என்பதை அவர்கள் விசுவாசித்து போதித்தார்கள்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

மனுக்குலத்தின் கரங்களிலே கொடுக்கப்பட்ட மிக வல்லமையான ஆயுதம் இயேசுவின் நாமம் என்பதை ஆதி சபையின் விசுவாசத்தின் வழியாய் நாம் கண்டுக் கொள்ளலாம்.

**கொலோ 3:17** "*<u>வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும்</u>, அதையெல்லாம்* ***கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து***..."



சாவி # 4: **<u>அவர் வார்த்தையை விசுவாசத்தோடு பேசும் போது அதை தேவன் அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதி படுத்துவார்.</u>**

### E. இடைவிடாமல் ஜெபிப்பதிலும் உபவாசத்திலும் அவர்கள் விசுவாசமாய் இருந்தார்கள்.

ஒரு செயலாற்றம் நிரைந்த கிறிஸ்தவனாய் இருக்க ஜெபமும் உபவாசமும் முதன்மையாய் இருக்கவேண்டும்.

**ரோமர் 12:12** "*நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்;* ***ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்.***"

**எபேசியர் 6:18** " *எந்தச் சமயத்திலும்* ***சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி,*** *அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும்* ***சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.***"

**1 தெச 5:17-18** " ***இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.*** *எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.*"

**1 கொரி 7:5** " ***உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும்*** *தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்...*"

சிரியதான உபவாச சிந்தையைக் குறித்து இயேசு போதித்தார்

**மத்தேயு 6:16-18** " ***நீங்கள் உபவாசிக்கும்போது,*** *மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். 17* ***நீயோ உபவாசிக்கும்போது,*** *அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.*"

பிசாசை ஏன் துரத்த முடியவில்லை என்று சீஷர்கள் கேட்ட போது கீழ் கொடுக்கப்பட்ட வேத வாக்கியம் உபவாசத்தின் வல்லமையை காண்பிக்கிறது.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

**மத்தேயு 17:19-21** "*அப்பொழுது, சீஷர்கள் இயேசுவினிடத்தில் தனித்து வந்து: அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று என்று கேட்டார்கள். அதற்கு இயேசு: உங்கள் அவிசுவாசத்தினாலேதான்; கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப்பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.* ***இந்த ஜாதிப்பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றார்.*** "

ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடும் காரணத்தோடும் நாம் உபவாசிக்க வேண்டும் தேவனை அசைக்க நாம் உவாசிக்க கூடாது. நம்மை நாமே அசைக்க தான் நாம் உபவாசிக்க வேண்டும் உபவாசிப்பதற்கான உண்மையான நோக்கத்தை வேதம் அறிக்கை இடுகிறது.

**ஏசாயா 58:6-9** "***அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும்***, *7 பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக்கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம். 8 அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். 9 அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார்;* ***நீ சத்தமிடுவாய்: இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார்.*** *நுகத்தடியையும் விரல் நீட்டுதலையும், நிபச்சொல்லையும், நீ உன் நடுவிலிருந்து அகற்றி,*"

பாவத்தின் கட்டுகளில் இருந்து மற்றும் மன வருத்தம் உடையவர்கள் கட்டவிழ்க்கப்பட உபவாசிப்பது தேவனுடைய சம்பூரணமான சித்தத்தில் உள்ளது அவர் வானத்திற்கு ஏறின பின்பு அவருடைய சபை உபவாசிக்க வேண்டும் என்று இயேசு கூறினார். அவருடைய சபை உபவாசத்தின் வல்லமையுள்ள நோக்கத்ததை ஒத்துக்கொளளும் என்று இயேசு எதிர்ப்பார்த்தார்.



**சாவி # 5: <u>நாம் உபவாசித்து ஜெபிக்க வேண்டும்</u>**

### F. ஆதி சபை துதி ஆராதனையில் விசுவாசமாய் இருந்தது.

துதி என்றால் தேவனுக்கு நாம் காண்பிக்கிற அன்பு மற்றும் நன்றி ஆகும் சில வேத வசனங்களை நாம் ஆராய்வோம்.

**லூக்கா 6:23** "*அந்நாளிலே நீங்கள்* ***சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்***; *பரலோகத்தில் உங்கள்பலன் மிகுதியாயிருக்கும்...*"

**1 தீமோ 2:8** "*அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல்* ***பரிசுத்தமான கைகளை உயர்த்தி***, *எல்லா இடங்களிலேயும் ஜெபம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன்.*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

**சங்கீதம் 149:3** "***அவருடைய நாமத்தை நடனத்தோடே துதித்து***, *தம்புரினாலும் கின்னரத்தினாலும்* *அவரைக்* ***கீர்த்தனம்பண்ணக்கடவர்கள்.***"

**2 சாமுவேல் 6:14** "*தாவீது சணல்நூல் ஏபோத்தைத் தரித்துக்கொண்டு, தன் முழுப் பலத்தோடும்* ***கர்த்தருக்கு முன்பாக நடனம்பண்ணினான்.***"

**சங்கீதம் 47:1** "*சகல ஜனங்களே,* ***கைகொட்டி தேவனுக்கு முன்பாகக் கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்.*** "

**சங்கீதம் 63:4** "*என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து,* ***உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன்.***"

**சங்கீதம் 150:1-6** "*அல்லேலூயா,* ***தேவனை*** *அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில்* ***துதியுங்கள்***; *அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்பார்த்து அவரைத் துதியுங்கள்.* 2 *அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள்; மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக அவரைத் துதியுங்கள்.* 3 ***எக்காள தொனியோடே*** *அவரைத் துதியுங்கள்; வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள்.* 4 ***தம்புரோடும் நடனத்தோடும்*** *அவரைத் துதியுங்கள்;* ***யாழோடும் தீங்குழலோடும்*** *அவரைத் துதியுங்கள்.* 5 ***ஓசையுள்ள கைத்தாளங்களோடும்*** *அவரைத் துதியுங்கள்;* ***பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்.*** 6 ***சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக.*** *(அல்லேலூயா.)* "

ஆதி சபை ஊக்கம் நிரைந்து மற்றும் களிக்கூர்ந்து ஆராதிப்பதில் விசுவாசமாய் இருந்தது.



சாவி **# 6:** ஆராதனையில் விசுவாசித்து இதை நாம் கடை பிடிக்க வேண்டும்

## II. இரட்சிப்பின் உண்மையான செய்தி யூதர்களுக்கு பேதுருவின் சுவிசேஷ செய்தி

**அப்போஸ்தலர் 2:38** "*பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள்* ***மனந்திரும்பி***, *ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று* ***இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்***, *அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*"

புறஜாதிகளுக்கு பேதுருவின் சுவிசேஷ செய்தி

**அப்போஸ்தலர் 10:44-48** " *இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிகொண்டிருக்கையில்* ***வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.*** *45 அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, 46 பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள். 47 அப்பொழுது பேதுரு: நம்மைப்போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதாபடிக்கு*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

*எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, 48* ***கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி** **<u>கட்டளையிட்டான்</u>**...*"

இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகளுக்கு பவுலின் சுவிசேஷ செய்தி

**அப்போஸ்தலர் 19:5-6** "*அதைக் கேட்டபோது அவர்கள்:* ***கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.*** *6 அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது,* ***பரிசுத்தாவி அவர்கள்மேல் வந்தார்;*** *அப்பொழுது அவர்கள்* ***அந்நியபாஷைகளைப் பேசித்*** *தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.*"

**<u>மிகமுக்கியமானது</u>** ஆதி சபையும் அப்போஸ்தலர்களும் ஒரே காரியத்தை கற்றுக் கொடுத்தார்கள் மனந்திரும்புதல் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் அன்னிய பாஷையின் அடையாளத்தோடு பரிசுத்த ஆவியின் நிரைவு தேவனுக்காய் ஒப்புக்கொடுத்த பரிசுத்த ஆவியின் நிரைவு தேவனுக்காய் ஒப்புக்கொடுத்த பரிசுத்த வாழ்க்கை வாழ்வது ஆகும். மாமிசத்திலே இருந்த தேவன் தான் இயேசு என்று அவர்கள் விசுவாசித்து போதித்தார்கள். இவைகள் எல்லாம் நல்ல யோசனைகள் அல்ல இவைகள் சபையின் முக்கிய உபதேசங்கள் ஆகும். ஆதி சபையும் அப்போஸ்தலர்களும் இயேசு கட்டளை இட்டபடியே ஞானஸ்நானம் கொடுத்தார்கள்.

சுவிசேஷத்தை குறித்து சபையின் மனப்பாண்மை

யூதா 3 "*பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது.*"



சாவி **# 7:** <u>அப்போஸ்தலர்களின் செய்தியை நாம் விசுவாசித்து கற்றுக் கொடுக்க வேண்டும்</u>

## III. சபையின் துன்புருத்துதல்

**மத்தேயு 16:18** " *மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.*"

மேல் கண்ட வேத வாக்கியத்தில் மூன்று குறிப்புகள் உள்ளன 1. இந்த உலகில் கிறிஸ்துவுக்கு ஒரு சபை இருக்கும் 2. பாதாளத்தின் சக்திகளும் வல்லமையும் இதற்கு விரோதமாய் சவாலிடும் 3. சாத்தானுடைய தாக்குதல்களை மீறி சபை வளர்ந்து செழிக்கும்

### 1. ஸ்தேவான் தான் சபையின் முதல் இரத்த சாட்சி

**அப்போஸ்தலர் 7:59-60** "*அப்பொழுது: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

*கல்லெறிந்தார்கள். 60 அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்."*

### 2. சபை துன்புறுத்தப்பட்டது

**அப்போஸ்தலர் 8:1-4** "*அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள்...4 சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்.*"

ஆதி சபை துன்புறுத்தப்பட்டாலும் அதை சகித்துக் கொண்டு சுவிசேஷ செய்தியை சொல்லவும் போதிக்கவும் நிறுத்த வில்லை. மேலும் துன்புறுத்துதலின் நிமித்தம் தான் சபை விரிவாய் வளர்ந்தது என்று சரித்திரம் எழுத்திடுகிறது. அநேக மத தலைவர்களும் முழு கிராமங்களும் கிறிஸ்தவர்களாய் மாறின சில தேசங்களும் கிறிஸ்தவத்திற்குள் இழுக்கப்பட்டன. ஆதி சபை மரிப்பதற்கு ஆயத்தமாய் இருந்து அப்போஸ்தலர்களின் ஒரே உபதேசமாய் இருந்தது என்றால் இரட்சிப்பை குறித்து பல்வேறு சபைகள் பல்வேறு போதனைகளை கற்றுக் கொடுப்பது ஏன் ? இந்த கேள்விக்கு பதில் புரிந்து கொள்வதற்குமுன் அப்போஸ்தலர்கள் நடபடிக்கையின் முடிவில் சபைக்கு என்ன நேரிற்று என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்பொழுது கற்றுக் கொடுக்கப்படும் காரியங்களை அநேக புத்தகங்களிலே பார்க்கலாம் பல்கலைகழகங்களில் கற்றுக் கொடுக்கப்படும் மற்றும் நூலகங்களில் காணப்படுகின்றன. சரித்திரத்தில் என்ன நடந்தது என்பதை தான் இந்த பாடம் மேற்பார்வை இடும். இன்னும் விளக்கம் தேவை என்றால் மாணவர்கள் எளிதாக கண்டுபிடிக்கலாம்.

## IV. சபையின் சரித்திரம்

### A. அப்போஸ்தல கிறிஸ்தவம் என்ற காலக்கட்டத்தில் சபை துன்புறுத்த பட்டது.

1. அழைக்கப்பட்டவர்கள் அல்லது தெரிந்து எடுத்த சிலர் என்று கிரேக்க மொழியில் எக்கலேசியா என்று அழைக்கப்பட்டது.
2. சத்தியத்திற்காக அநேகர் மரணத்தை சந்தித்தார்கள் ரோம அரசர் நீரோவின் காலத்தில் அதாவது 64 கி.பி. –யில் அநேக கொடிய சம்பவங்கள் நடந்ததை சரித்திரம் எழுத்திடுகிறது. நீரோவின் ஆளுகை வரை கிறிஸ்தவம் வெறுக்கப்பட்டது. ஆனாலும் சகிக்கப்பட்டது ஆனால் நீரோ ஆட்சிக்கு வந்த உடன் ரோமாபுரியை கிறுஸ்தவர்கள் கொளுத்திவிட்டார்கள் என்று அவர்கள் மேல் குற்றம் சாட்டினான். நீரோ தான் ரோமாபுரியில் மாபெறும் தீய்க்கு மூல காரணம் என்று சரித்திரம் கூறுகிறது இந்த பொய் குற்றச்சாட்டினால் நீரோ ரோமிலே பிரபலம் அடைந்தான். இதின் விளைவு தான் கிறிஸ்தவர்களுக்கு உண்டான மகா துன்புறுத்துதல். அநேகர் எரிக்கப்பட்டார்கள் தலைகள் வெட்டப்பட்டது கிறிஸ்தவர்கள் பிடிக்கப்பட்டு தாரினால் பூசப்பட்டு நீரோவின் தோட்டத்தில் உள்ள கம்புகளில் கட்டப்பட்டு தீயிடப்பட்டார்கள். இந்த கால கட்டத்திலே தான் பவுலும் பேதுருவும் இரத்த சாட்சிகளாய் கொல்லப்பட்டார்கள்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதின சீஷனைத்தவிர்த்து (அவன் பத்மூ தீவிற்கு வெளியேற்றபட்டான்) மற்ற எல்லா அப்போஸ்தலர்களும் கோரமாக இரத்த சாட்சிகளாய் மரித்தார்கள். இவர்கள் மரணத்தை குறித்தும் மற்ற சபை தலைவர்களின் மரணத்தை குறித்தும் நுணுக்கங்கள் புத்தகங்களில் பல்வேறு வகையாக எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் ஏறக்குறைய எல்லா நூல்களிலும் அடிப்படை தகவல்கள் ஒன்று தான். யூதா அந்திரேயா மற்றும் பிலிப்பு சிலுவையில் அறையப்பட்டார்கள் எத்தியோப்பியாவிலே மத்தேயு கொல்லப்பட்டான் யாக்கோபு மற்றும் மத்தியாவின் தலைகள் துண்டிக்கப்பட்டன பார்த்தலோமியூ உயிரோடு நெருப்பிலே போடப்பட்டான் தோமா ஈட்டியிலே குத்தப்பட்டான் மாற்கு இழுத்து கொல்லப்பட்டான் லூக்கா தூக்கிலே போடப்பட்டான் பேதுருவை தலைகீழாக சிலுவையில் அறைந்தார்கள் பவுலின் தலை வாலால் வெட்டப்பட்டது கடைசியாக யாக்கோபு கல்லாலே அடிக்கப்பட்டு கொல்லப்பட்டான்.

குறிப்பு ஆதி சபை காலத்தில் கிறிஸ்தவன் என்று அழைக்கப்பட்டாலே அதற்கு அர்த்தம் இரத்த சாட்சியாய் மரிப்பது தான். கிறிஸ்தவர்களாய் மாறுவதினால் தங்கள் உயிரை இழக்க நோரிடும் என்று ஜனங்கள் அறிந்திருந்தார்கள். ஆனால் இன்றைக்கோ சில கிறிஸ்தவர்கள் பகிரங்கமாய் தங்கள் உணவைக் கூட ஆசீர்வதிக்க தயங்குகிறார்கள்.

70 கி.பி –யில் நீரோவுக்கு பிறகு வெஸ்பசியன் பஸ்கா பண்டிகைக்கு பிறகு அரசாள வந்தான். தீத்து என்ற ரோம சேனாதிபதியும் அவன் மகனுமாகியவன் எருசலேமை அழித்து யூத மக்களை உலகம் எங்கும் சிதரடித்தான் எருசலேமின் ஆலயத்தின் அழிவை குறித்தும் எருசலேமின் அழிவை குறித்தும் இயேசு சொன்ன தீர்க்கதரிசனம் நிரைவேறிற்று (லூக்கா 19:41-44 லூக்கா 23:28-31) கொலோசியம் என்று ஒரு இடத்தின் ஏற்பாடுக்கு பொறுப்பாளியாக வெஸ்பசியன் இருந்தான். இந்த இடத்தில் கிறிஸ்தவர்கள் நகைச்சுவைக்காக சித்திரவதை செய்யப்பட்டார்கள்.

3. 68-100 கி.பி. –யின் போது முதல் நூற்றாண்டின் கடைசி தலை முறை மற்றும் சபை கடினமாக துன்புறுத்த பட்டது ஆனாலும் அவர்களின் உபதேசங்கள் மாறவில்லை உலக தலைவர்களை கொண்டு சாத்தான் சபையை சோதித்த போதிலும் சோதனையின் நிமித்தம் சுவிசேஷம் பரவி விசுவாசிகளும் பெறுகினார்கள்.

4. கிறிஸ்தவ காலத்தின் இந்த கட்டம் அப்போஸ்தல கிறிஸ்தவம் என்று அழைக்கப்படும். அப்போஸ்தலர்களின் நேரடி தலைமையில் இது 33-100 கி.பி வரை நீடித்தது. பிரசங்கித்த ஒவ்வொரு நகரத்தில் எழுப்புதல் தோன்றும் இல்லாமல் போனால் இரத்தக்களம் உருவாகும்.

5. சபை கற்றுக்கொடுத்த சத்தியத்தை விட்டு விலகினதால் இன்றைக்கு அநேக சபைகள் தங்களுடைய சாட்சியையும் வல்லமையையும் இழந்திருக்கிறார்கள். விசுவாசத்தின் சுவிசேஷம் சபைக்கு கொடுத்து. அப்போஸ்தலர்கள் சபைக்கு இதை விட்டு விலகாமல் இருக்க வேண்டும் என்று மிகுதியாய் கெஞ்சினார்கள். (அப்போஸ்தலர் 20:28-32 கலாத்தியர் 1:6-12 யூதா 1:3-4 11பேதுரு 3:1-18 இவைகளை பார்க்கவும்)

## B. சபை பிதாக்களின் கிறிஸ்தவம்

1. 100 கி.பி –யில் யோவானின் மரணத்திற்கு பிறகு சத்துருவின் புதிய சதி திட்டம் துவங்கியது. அப்போஸ்தலர்கள் பிரசங்கித்த சத்தியமன்றி வேறு உபதேசங்கள்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

கிறிஸ்தவ மதத்தில் உண்டாக துவங்கின 120 கி.பி —யில் சபை பிதாக்களின் எழுத்தின் மூலமாய் பேதுரு மற்றும் பவுலின் காலத்தில் இருந்து கிறிஸ்தவம் வேறு இருந்தது என்று புரிந்து கொள்ளலாம்.

2. நாஸ்டிசம் என்று ஒரு கருத்து வேறுபாடு சத்தியத்தை விட்டு விலகினதால் உண்டாயிற்று. இது நாஸ்டிக்ஸ் என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து தோன்றியது. இதின் அர்த்தம் ஞானமாகும். ஒரு ரகசிய ஞானத்தை கொண்டவர்கள் என்று நாஸ்டிக்ஸ் திரிந்தார்கள். காணப்படுகிற உலகம் தீயது என்றும் காணப்படாதது ஆவிக்குரிய மண்டலமே நல்லது என்றும் இவர்கள் போதித்தார்கள். இந்த போதனை தவரானது ஏனென்றால் காணப்படுகிற நம் சரீரம் பரிசுத்த ஆவி தங்கும் தேவாலயம் என்று (1கொரிந்தியர் 6:19) வேதம் கூறுகிறது. பிசாசுகளும் காணப்படுவதில்லை இவைகளும் நல்லது அல்ல.

3. 155 கி.பி —யில் மான்டானிஸ்ட் என்று பொய் உபதேசம் இரண்டாம் நூற்றாண்டில் உருவானது. இதின் இயக்குனர் அவரை பரிசுத்த ஆவியின் வாய் என்று அழைத்துக்கொண்டார். வேதத்தின் அதிகாரத்தை பார்க்கிலும் அவரை உயர்த்தி கொண்டு கிறிஸ்துவின் வருகையை குறித்து அறிக்கை இட்டு சுயத்தை கடினமாக மருத்து மாமிசத்திலிருந்து விலகி தன்னை பின் பற்றுகிறவர்களை திருமணம் செய்துக்கொள்ள வேண்டாம் என்று இந்த தலைவன் போதித்தான் பவுல் இந்த பொய் போதகத்தை குறித்து ஏற்க்கெனவே எச்சரித்தார். (1தீமோத்தேயு 4:1-3)

4. இந்த காலக்கட்டம் சபை பிதாக்களின் கிறிஸ்தவம் என்று விவரிக்கப்படும் ஒரு வார்த்தையிலே சொல்ல வேண்டும் என்றால்- மாற்றம் என்று சொல்லலாம் - அதாவது சத்தியத்தில் இருந்து மாற்றம் சில மாறுதல்கள் குறித்து இப்பொழுது பார்க்கலாம்.

இந்த தகவல்கள் ஒருவருடைய விசுவாசத்தை குறைப்பதற்காக அல்ல இதை தயவு செய்து நினைவு கூறுங்கள். வேதத்தில் இருந்து கூட்டவோ குறைக்கவோ கூடாது என்று தேவனே நமக்கு சொல்லி இருக்கிறார். இது ஒரு சரித்திர பாடம் கீழ் கொடுக்கப்பட்ட தகவல்கள் உண்மைகள் இது ஒருவரையும் பாதிக்கவோ புண்படுத்தவோ அல்ல.

5. சுமார் 200 கி.பி -யில் வேதத்தில் காணப்படாதது திருத்துவம் என்ற சொல் போதிக்க பட்டது. வட ஆப்ரிக்காவில் இருந்து டெர்ட்டூலியன் என்ற வழக்கரிஞரால் இது பிரபலமானது. தேவத்துவத்தை குறித்து ஒரு புதிய கண்ணோட்டத்தை இது அளித்தது ரோமன் கத்தோலிக்க மதத்தின் மூல அஸ்திபாரமாக இது மாறினது. இதின் அடிப்படை போதனை என்னவென்றால் தேவத்துவத்தில் மூன்று வித்தியாசமான நபர்கள் உண்டு பிதாவாகிய தேவன் குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன். இந்த மூவரும் வித்தியாசமானவர்கள் (வேறு சிந்தையும் வேறு சித்தமும்) ஆனால் மூவரும் சேர்ந்து சமமாய் இருக்கிறார்கள் நித்தியமாய் இருக்கிறார்கள் மற்றும் உறுதியாய் இருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் முதல் கட்டளைக்கும் ஆபிரகாம் மோசே மற்றும் இஸ்ரவேல் கோத்திரத்தார்களுக்கு கற்று கொடுத்த தெய்வத்தின் ஒருத்துவத்திலிருந்து யூத கிறிஸ்தவத்திலிருந்து இது மாறுதலான கருத்தாய் இருந்தது மூன்று தேவர்கள் அல்லது தேவத்துவங்கள் என்ற எகிப்திய கலாச்சாரத்தில் இருந்த இந்த போதனை உருவாகி இருக்கலாம் என்று அநேக வேத சாஸ்திரிகள் கூறுவார்கள். வடகத்திய திருத்துவம் அல்லது லத்தீன் திருத்துவத்தின் பிதாவாக

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

டிரட்டூலியன் அழைக்கப்பட்டார். திருத்துவத்தை குறித்து ஒரு அகலமான பார்வையும் உருவானது.

6. இந்த கால கட்டத்தில் வாழ்ந்து வந்த தத்துவ மேதைகளில் ஒருவரான ஆரிஜென் இவ்வாரு சொன்னார் எல்லோரும் இரட்சிக்க பட்டு பாவிகள் தண்டிக்கப்பட்டு அவர்கள் மீண்டுமாய் ஸ்தாபிக்கபடுவார்கள். இதின் நிமித்தம் துலைந்து போன உலகத்தை மீட்பதற்கான பரிசுத்த வாழ்க்கை வாழுகிற சலுகை குறைந்து போனது. எல்லா ஜாதிகளுக்கு போதியுங்கள் என்று இயேசுவின் கட்டளைக்கு நேர் விரோதமாய் இது இருந்தது. யோவான் 3-ல் மறுபடியும் பிறப்பதற்கான கிறிஸ்துவின் கட்டளையை இப்படிப்பட்ட மனுஷீக தத்துவங்கள் அவமதிக்கின்றன. தேவன் தூய ஆவியாய் (அதாவது பங்குளோ சரீரமோ இல்லாத) இருக்கிறார் என்று ஆரிஜென் கற்று கொடுத்தார். இது டெர்ட்டூலியன் கருத்திற்கு மாறாக இருந்தது.
பிதா குமாரனை நித்திய தோன்றுகையினால் பிறசெய்கிறார் என்று ஆரிஜென் நினைத்தார். தேவன் தன்னுடைய மூலமாய் இருப்பதினால் தான் குமாரனும் தேவனாய் இருக்கிறார் அவர் பிதாவைப்போல போதுமானவராய் இல்லை குமாரன் பிதாவுக்கு குறைவாய் இருக்கிறார், எல்லா சிருஷ்டியை பார்க்கிலும் குமாரனை பார்க்கிலும் பிதா பெரியவர் எல்லா பகுத்தறிவுள்ள சிருஷ்டிகளை பார்க்கிலும் பரிசுத்த ஆவியை பார்க்கிலும் குமாரன் பெரியவர் எல்லா பரிசுத்தவான்களை பார்க்கிலும் (தூதர்களை பார்க்கிலும் பரிசுத்த மனிதர்களை பார்க்கிலும்) பரிசுத்த ஆவி பெரியவர். இந்த போதனையின் மூலம் திருத்துவத்திற்கு ஒரு மாறுப்பட்ட கோணம் உண்டாயிற்று.

7. 312 கி.பி -யில் கான்ஸ்டான்டீன் என்ற புதிய ரோம மன்னர் ரோம சாம்ராஜியத்திற்கும் ரோம சபைக்கும் தலைவன் ஆனான். சாம்ராஜியத்தையும் கிறிஸ்தவத்தையும் இணைத்து எல்லாவற்றையும் குறிக்கும் ரோம சபை அல்லது கத்தோலிக்க சபையை உருவாக்கினான். 313 கி.பி -யில் கான்ஸ்டான்டீனின் சகிப்பின் சான்று வெளியிடப்பட்டபின் கிறிஸ்தவ துன்புருத்துதல் சட்டப்பூர்வமாய் முடிவடைந்தது. கிறிஸ்தவனாய் கருதப்படுவது அரசியல் செல்வாக்கை அதிகரித்த படியால் ரோமில் ஆயிரக்கணக்கானோர் கிறிஸ்தவர்களாய் மாறினார்கள். கிறிஸ்தவர்களோடு ஒரு ஐக்கியம் அரசியல் இராணுவம் மற்றும் சமூக உயர்வுக்கு ஒரு வழியாய் இருந்தது கிறிஸ்தவம் உலகத்தை மாற்றவில்லை உலகம் கிறிஸ்தவத்தை மாற்றி கொண்டு இருந்தது!

8. 300 கி.பி -யில் பிஷப்புகளால் நடத்த பட்ட ஒரு விசேஷ கூட்டம் மே மாதம் 20 தேதி 325 கி.பி. —யில் கத்தோலிக்க சபையால் கட்டப்பட்டது. இது கத்தோலிக்க சபையின் முதல் கூடுகையாக (யோசனை கூடுகை) இருந்தது. நீசியாவின் ஆலோசனை கூடுகை என்று இது அழைக்கப்பட்டது. தேவன் யார் இயேசு எப்படி தெய்வமாய் இருக்க முடியும் என்று கேள்விகளை குறித்து புதிய போதனைகளையும் புதிய சபை சட்டங்களையும் இந்த கூடுகை அமைத்தது பெரிதான வாக்குவாதத்தின் பிறகு மூன்று வேறுப்பட்ட நபர்களாய் தேவன் உருவாகி இருக்கிறார் என்று கூடுகை முடிவு செய்தது. கத்தோலிக்க சபையின் சட்டப்பூர்வமான உபதேசமாய் திருத்துவம் ஏற்றுக்கொள்ளபட்டது.

9. கான்ஸ்டான்டீநோப்பலின் கூடுகையில் (இன்றைய இஸ்த்தான்புல் துருக்கி) 381 கி.பி. — யில் நீசியாவில் எடுக்க பட்ட தீர்மானம் ரோம சாம்ராஜியத்தின் ஒரே சட்டபூர்வமான மதமாய் அமைக்க பட்டது. ரோம சட்டத்தினால் திருத்துவ உபதேசம் நிலைநாட்டப்பட்டது. இந்த சட்டத்திற்கு விரோதமாய் எழும்பினவர்களுக்கு வஞ்சகர்கள்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

என்று பட்டம் சூட்ட பட்டு பெரிதான தண்டனையை அனுபவிக்கும்படியாக சமுதாயத்தில் இருந்து விலக்கி சில நேரங்களில் தங்களுடைய வாழ்க்கையே இழந்தார்கள். திருத்துவத்தில் விசுவாசமாய் இல்லாமல் தேவன் ஒருவரே என்று சொன்னவர்களுக்கு சமூதாயத்திலோ சாம்ராஜியத்திலோ இடம் இல்லை.

10. அப்போஸ்தலர்களின் காலம் மறைய மறைய வேதத்தின் முறைகளும் மறைந்தன. கிரேக்க தத்துவங்கள் புதிய வினோதமான உபதேசங்களை உருவாக்கின. செல்வாக்கு உள்ளவர்கள் கான்ஸ்டான்டீன் கருத்தின் மூலமாய் தலைவர்களாய் சபையில் எழும்பினார்கள். ஆகையால் லஞ்சம் புறஜாதி யோசனைகள் மூட நம்பிக்கைகள் மற்றும் சடங்காசாரம் மெதுவாக உள்ளே நுழைந்தது. புறஜாதிகளின் வருந்துக்ள் சபை பண்டிகைகளாய் அனுசரிக்க பட்டு புது நாமங்கள் இட்டு இதை சபை பின்பற்றினது. இருளான காலம் என்ற காலக்கட்டத்தில் உலகம் பிரவேசித்தது.

- கர்த்தரின் பந்தி ஒரு நினைவுச் சின்னத்திற்கு பதிலாக ஒரு பலியாய் மாறிவிட்டது. பறிமார படுகிற திராட்ச்சை இரசம் இயேசுவின் உண்மையான இரத்தமாய் மாறும் என்றும் அப்பம் இயேசுவின் சரீரமாய் மாறும் என்றும் கத்தோலிக்க சபை கற்றுக்கொடுத்தது
- 431 கி.பி —யில் எபேசுவில் கூடின கத்தோலிக்க ஆலோசனை குழுவில் மரியாள் தேவனுடைய தாய் என்று நிருபப்பட்டது. இதே பட்டனத்தில் தான் தேவதை டையானாவை அதாவது தேவர்களுடைய தாயாய் கருதி அவளை ஆராதித்தார்கள் (அப்போஸ்தலர் 19:28-35) ஒரு கிறிஸ்தவ வாசனை வரவேண்டும் என்பதற்காய் டையானாவில் இருந்து மேரி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- பிஷப்மார்கள் ஆசாரியர்களை ஆளுகை செய்தார்கள் ஆசாரியர்களை கிளெர்ஜீ என்று அழைத்தார்கள் போப்பு எல்லோரையும் அரசாண்டார் (461 கி.பி)
- பரலோகத்திற்கும் நரகத்திற்கும் நடுவே உள்ள பர்கேட்டரீ என்று ஸ்தானத்தின் உபதேசம் உண்மை என அறிக்கை இடப்பட்டது (593 கி.பி) மரித்தவர்களை நோக்கி ஜெபிப்பது இரட்சிப்புக்கு அனுகூலமாய் இருக்கும் என்று போதிக்கப்பட்டது.
- 850 கி.பி. — யில் பரிசுத்த ஜலம் உபயோகிக்க துவங்கியது.
- 1090 கி.பி — யில் வரிசையாக மறுபடியும் மறுபடியுமாக சொல்லக்கூடிய ஜெப மணி அல்லது ரேசரீ என்ற பழக்கம் உருவானது. மத்தேயு 6:7 —ல் இயேசுவே புறஜாதிகளை போல வீணாக ஜெபங்களை செய்ய வேண்டும் என்று சொல்லி கூட இது நிருபப்பட்டது.
- 1073 மற்றும் 1085 கி.பி —யில் ஆண்ட போப்பு கிரெகொரி 7-வது ஹில்டெபிராண்டு என்றவர் ஆசாரியர்களை திருமணம் செய்துக் கொள்ளாதபடி வற்புறுத்தினான். திருமணமான ஆசாரியர்கள் தங்களது மனைவி மற்றும் பிள்ளைகளை விட்டு விட்டு வரவேண்டும் என்றும் அல்லது தங்கள் பதவியிலிருந்து வெளியேர வேண்டும் இவர் கூறினார். இந்த அறிக்கையின் நிமித்தம் கத்தோலிக்க ஆசாரியர்கள் மத்தியில் திருமணம் தண்டனைக்குள்ளானது. மனுஷன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று வேதம் கூறுகிறது (1தீமோத்தேயு 3:1-5 மற்றும் 1 தீமோத்தேயு 3:12) ரோமபுரியன் போப் தான் சபை கட்டப்பட்ட கல் என்றும் இவர் கூறினார்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

எல்லா பூலோக வாழ் அரசர்களை பார்க்கிலும் இவர் பெரியவர் என்றும் சொன்னார்.

- பாவத்தில் இருந்து கட்டவிழ்க்க பட அநுபவித்தலுடைய விற்பனையின் பழக்கம் சபையிலே துவங்கப்பட்டது இந்த வழக்கத்தின் படி ஐசுவரியவான்கள் தங்கள் பாவங்களுக்கு மதிப்பை முன்பதாகவே செலுத்திவிடலாம் இதை செய்வதினால் நித்திய அழிவில் இருந்து தப்பிவிடுவார்கள் என்று விசுவாசித்தார்கள். (1190 கி.பி.)
- குற்றம் சுமத்துதல் 1209 கி.பி. –யில் துவங்கியது (இதை கறித்து இணையதலத்திலே பார்க்கலாம்) அளுகிற சபையானது தன் போதனைகளுக்கு ஒத்து கொள்ளாத நபர்களை மரண தண்டனை கொடுக்க ஆயத்தமாய் இருந்தது.
- தெளிப்பு ஞானஸ்நானத்தின் முறை உபதேசமாய் மாறினது.

11. 1054 கி.பி. –யில் பல்வேறு திருத்துவ உபதேசங்களினால் இரண்டு வேறுப்பட்ட நிறுவனங்களாய் பிரிந்தது டெர்ட்டுலினின் வடக்கத்திய திருத்துவம் மற்றும் ஆரிஜெனின் கிழக்கத்திய திருத்துவத்திற்கு இடையே உண்டான சர்ச்சையின் விளைவு தான் இது. வடக்கத்திய சபை லத்தீன் மொழி பேசியது அது சிலைகளையும் இதர மத சம்மந்தமான பொருட்களை வணங்கும் பழக்கத்தில் ஈடுபட்டது. ஆனால் கிழக்கில் இருந்த சபை கிரேக்க பாஷை பேசியது. இது விக்கிரக வழிப்பாட்டில் ஈடுபடவில்லை ரோமில் உள்ள போப்பு கான்ஸ்டான்டிநோப்பலில் உள்ள பிஷப்பை மதத்தை விட்டு வெளியேற்றினார். இதன் பின் சபைகள் ரோமன் கத்தோலிக்க சபை என்றும் கிரேக்க ஆச்சார சபை என்றும் (கிரேக்க கிழக்கு சபை) அழைக்கப்பட்டன.

விக்கிரக வழிப்பாட்டிலிருந்து விலகிய நபர்கள் ரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து தங்களை பிரிக்க முயலவில்லை சபையை சீர் படுத்த முயன்றார்கள் ஆகையால் தான் கிழக்கிலே இருந்த சபைகள் அடிப்படை உபதேசங்களில் ஒன்றாய் இருந்தன. சரித்திரத்தில் காணப்படும் மகாபெரிய மாற்றாளிகள் யாவரும் ரோமன் கத்தோலிக்க சபைக்குள் தங்கி இருந்தார்கள் காலபோக்கில் இவர்கள் ஜாதி வெளியேற்றம் செய்யப்பட்டார்கள்.

12. 1540 கி.பி – யில் ட்டெரின்ட்டு என்ற ஆலோசனை குழுவில் வேதத்தில் கூறபட்டதற்கு சமமாய் ரோமன் கத்தோலிக்க சபையின் சடங்காச்சாரம் ஒப்பானது என்று அறிக்கை இடப்பட்டது. வேதத்தில் இருந்து கூட்டவோ குறைக்கவோ கூடாது என்ற கட்டளைக்கு இது நேர் விரோதமாய் இருந்தது. (வெளி 22:19 –யை பார்க்கவும்.

## C. மாறுப்பட்ட கிறிஸ்தவம்

1. மாறுதலை தைரியமான மாற்றுக்காரர்கள் துவங்கினார்கள். இதில் அநேகர் பிராடெஸ்டென்ட் சபைகளை விரோதமாய் துவங்கினார்கள். இது தான் மாற்றம் அடைந்து அல்லது மாறுப்பட்ட கிறிஸ்தவத்தின் துவக்கமாகும். விசுவாசத்தின் மூலம் இரட்சிக்க பட்ட குழுவாக இது இருந்ததது ஆனாலும் சில கிரேக்க கருத்தாளர்களின் கருத்துக்களை இது கொண்டு இருந்தது. அப்போஸ்தலர்கள் அஞ்ஞானிகள் என்று இவர்கள் நினைத்து கொண்டு வேத வாக்கியங்களை சரியாக விளக்குவது தங்களுடைய கடமையாய் நினைத்து கொண்டார்கள்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

1382 –ல் கத்தோலிக்க சபையில் இருந்து விடுதலை கோரி ஜான் வைத்துகிளிப்பு என்ற நபர் ஒரு கண்டன கூட்டத்தை ஆரம்பித்தார். சபைக்கு தலைவர் போப்பு அல்ல கிறிஸ்து தான் என்று அவர் ஆணிதனமாய் சொன்னார் விசுவாசிக்கு வேதம் தான் பிரதான ஆதாரம் மற்றும் அதிகாரம் என்று அவர் சொன்னார். முதல் ஆங்கில புதிய ஏற்பாட்டை அவர் மொழி பெயர்த்தார்.

a) 1400-1500 கி.பி.

ஜான் ஹஸ் (1455 கி.பி) அச்சகம் கண்டுபிடிக்க பட்டது இதன் மூலம் பொது மக்களுக்கு வேதம் கொடுக்கப்பட்டது.

b) 1500-1600 கி.பி

மார்ட்டின் லூத்தர் என்ற கத்தோலிக்க சந்நியாசி 1517-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதியில் அவருடைய தொகுப்பை சபை கதவுக்கு ஆணி அடித்து வைத்தார். அநுபவித்தலுடைய விற்பனை தவறு என்பதற்கான 95 காரணங்களை அவர் கொடுத்தார் இது மாறுதலையும் லூத்தரன் சபையையும் துவக்கி வைத்தது. இது விசுவாசத்தின் நிமித்தம் நீதி நியாயத்தில் நம்பிக்கை கொண்டு இருந்தது.

- இங்கிலாந்து நாட்டின் சபை அல்லது ஆங்லிக்கன் அல்லது எபிஸ்க்கோபேலியன் சபை 1534 கி.பி. – யில் துவக்கப்பட்டது இராஜாவாகிய ஹென்றி VII க்கு விவாகரத்து செய்ய போப்பு அனுமதிக்காததால் இது நடந்தது.
- சுவிஸர்லேன்டை சேர்ந்த ஆனபாப்டிஸ்ட்டுகள் குழந்தைகளுக்கு கொடுக்கும் ஞானஸ்நானம் சரி என்று 1525 –யில் கூறினார்கள்.
- ஜான் கால்வின் கால்விதிசத்தை துவக்கினார்.
- ஜான் நாக்ஸ் ஸ்காட்லேன்டில் மாறுதலை துவக்கி பிரெஸ்பிட்டேரியன் சபையை உருவாக்கினார் (1536 கி.பி) மறுபடியுமாக இராபோஜனத்தை ஒரு நினைவுச் சின்னமாக இவர் நிறுவினார். இங்கிலாந்து சபையை பரிசுத்த படுத்த வேண்டும் என்று சட்டத்தை தாமஸ் கார்ட்ரைட்டு துவக்கினார் இந்த குழுவிற்கு பியூரிட்டன்ஸ் என்று பெயர் உண்டானது தனியாய் பிறந்தவர்கள் காங்கிரிகேஷனல் சபையை 1580 கி.பி. –யில் துவக்கினார்கள் தேசத்திற்கும் சபைக்கும் பிரிவை இவர்கள் விசுவாசித்தார்கள்

c) 1600 – 1700 கி.பி

- 1609-1612 கி.பி – யில் முதல் பாப்டிஸ்ட் சபை உருவானது. ஞானஸ்நான முறைகளினால் இங்கிலாந்து சபையில் இருந்து இவர்கள் பிரிந்து வந்தார்கள் தெளிப்பு ஞானஸ்நானத்தில் இவர்கள் விசுவாசமாய் இல்லாமல் முழுக்கு ஞானஸ்நானத்தில் மாத்திரம் விசுவாசமாய் இருந்தார்கள்.
- பில்கிரிம்ஸ் அல்லது பிரித்து எடுக்கப்பட்டவர்கள் என்று முதல் அமெரிக்க குடிகளுக்கு பெயர் இடப்பட்டது (1620 கி.பி.)
- 1647 -இல் ஒரு மகாபெரிய எழுப்புதல் குழுவை ஜார்ஜ் ஃபாக்ஸ் என்ற நபர் துவக்கினார் இதில் அநேகர் அன்னிய நாவுகளினால் பேசினார்கள். இந்த இயக்கத்திற்கு நன்பர்கள் அல்லது குவேக்கர்ஸ் என்று பெயர் இருந்தது.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

d) 1700 – 1800 கி.பி

- மோராவிய இயக்கம் துவக்கப்பட்டது பெரிதான ஊழியத்தை கனம் பண்ணி உலகமெங்கும் ஊழியக்காரர்களை அனுப்பி வைத்தார்கள். சரித்திரத்தில் காணப்பட்ட மிக நீளமான தொடர் சங்கிலி ஜெபத்தை இவர்கள் செய்தார்கள்.
- நியூ இங்கிலாந்து மற்றும் வடக்கு அமெரிக்காவில் உண்டான மகாபெறும் எழுப்புதலோடு ஜோனதன் எட்வர்ட்ஸின் பெயர் இனைக்கப்பட்டது. அநேகர் மனம் திரும்பி தேவனுடைய வல்லமையினால் அசைக்கப்பட்டாகள்.
- தேவனுக்காய் பரிசுத்த வாழ்க்கை வாழ்வதை குறித்து வகைகளை ஜார்ஜ் வையிட் ஃபீட்டு மற்றும் வெஸ்லி சகோதரர்கள் (சார்லஸ் மற்றும் ஜான்) பிரசங்கித்தார்கள். இவர்களை மெத்தெடிஸ்ட்டு என்று அழைத்தார்கள். மெத்தெடிஸ்டுகளினால் சிறு பிள்ளைகளுக்கு ஞாயிறு பள்ளி துவங்கப்பட்டது.

e) 1800 - 1900 கி.பி

- பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் அவசியமானது என்று 1820 —ல் கிறிஸ்தவ சபை பிரசங்கித்தது.
- அமெரிக்காவில் பெரிதான எழுப்புதலை உருவாக்கின சார்லஸ் ஃபின்னியினால் பீடத்தண்டை வந்து மக்கள் ஜெபிக்கும்படியான வழக்கம் துவங்கப்பட்டது. இது பொதுவாக பிரசங்கத்திற்கு பிறகு நடக்கும்
- இயேசுவின் சீஷர்கள் என்ற குழுவை தாமஸ் கேம்ப்பெல் என்ற முன்னால் பிரெஸ்பிட்டேரியனால் துவக்கப்பட்டது. (1846)
- திரளான மக்களை அவரது பிரசங்கத்தால் இழுத்து கொண்டவர் தான் சார்லஸ் ஸ்பர்ஜியன்
- 1865 —ல் டிவைட்டு மூடி என்றவரினால் யங்க் மென்ஸ் கிறிஸ்டியன் அசோசியேஷன் அல்லது YMCA உருவாக்கப்பட்டது இது வாலிபர்களை தெருக்களில் நேரம் விரையமாக்குவதிலிருந்து திருத்தியது.

f) பெந்தெகொஸ்டலிசம் (1900) சகல கிறிஸ்தவ நிறுவாகங்களில் இருந்து அநேக மக்கள் பரிசுத்த ஆவியின் நிறைவை பெற்று அன்னிய பாஷைகளால் பேசினார்கள்.

- ஜனவரி மாதம் 1 ஆம் தேதி 1901-ல் கன்ஸானில் உள்ள டோபெக்கா என்ற இடத்தில் வேதாகம பள்ளி மாணவி ஆகிய ஆக்நெஸ் ஒஜ்மன் மூன்று நாள் கடினமான உபவாச ஜெபத்திற்கு பிறகு பரிசுத்த ஆவியின் நிறைவை பெற்றார். அந்நிய பாஷைகளினால் பேசினார் பரிசுத்த ஆவியின் நிறைவுக்கான அடையாளத்தை அறிந்துக்கொள்ள இந்த பள்ளி தேடிக்கொண்டு இருந்தது. இதின் பிறகு பல்வேறு மாணவர்கள் இந்த அனுபவத்திற்குள்ளாக கடந்து சென்றன. காலந்தோறும் பவுஞ்ச் பவுஞ்சகான ஜனங்கள் பரிசுத்தாவியின் நிறைவினால் அந்நிய பாஷைகளினால் பேசினார்கள். ஆனால் இந்த சம்பவத்தினால் ஒரு எழுப்புதல் உண்டாகி அநேகர் பரிசுத்த ஆவியின் நிறைவை கோரி இதை பெற்றுக்கொண்டார்கள்.
- இந்த செய்தி பரவின மாத்திரத்தில் கன்ஸாஸ் மிசௌரி டெக்ஸாஸ் கலிஃபோர்னியா மற்றும் உலகத்தின் அநேக பகுதிகளில் பரிசுத்தாவியின் ஊற்றுதல் நடை பெற்றது. லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் உள்ள அசூசா தெருவில்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

(1906) ஒரு கூடுகை பரிசுத்த ஆவியின் ஊற்றுதலுக்காக ஜெபிக்க துவங்கியது. இந்த கூடுகை வித்தியாசமாய் இருந்தது இதின் காரணம் அநேகர் அந்த காலகட்டத்தில் ஜாதி வெறியால் கட்டப்பட்டிருந்தார்கள். கறுப்பு தோலுடைய ஸ்திரிகளும் புருஷர்களும் வெள்ளை தோலுடையவர்களோடு பேசவோ பழகவோ மாட்டார்கள் ஆனால் பரிசுத்த ஆவி இந்த பிரிவினையை உடைத்து எரிந்தது உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான மக்கள் ஊழியக்காரர்கள் பிரசித்த பெற்ற ஊழியக்காரர்கள் வாழ்க்கையின் எல்லா நடக்கைகளின் இருந்து மக்கள் அந்நிய பாஷையின் அடையாளத்தோடு பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டார்கள். விரைவில் பெந்தெகொஸ்தே எழுப்புதலின் அக்கினியால் அமெரிக்கா முழுவதும் இழுத்து கொள்ளப்பட்டது.

காலம் செல்லச் செல்ல இன்னும் அதிகமாய் வெளிப்பாடு சத்தியம் மற்றும் ஒலி தோன்றியது. பரிசுத்த ஆவியால் நிரம்பின மனுஷர்கள் ஒரு புதிய உற்சாகத்துடன் தேவனுடைய வார்த்தையை ஆராய துவங்கினார்கள் (யோவான் 16:13) உண்மையான இருதயங்கள் எங்கெல்லாம் தேவனை தேடியதோ அநேக வேத சத்தியங்கள் வெளிப்படுத்த பட்டது என்று சரித்திரம் கூறுகிறது.

**அப்போஸ்தல கிறிஸ்தவம் மீண்டுமாக ஸ்தாபிக்கப்படுதல்**

சரித்திரம் முழுவதும் சில குழுக்கள் தேவனின் ஒருத்துவத்தில் விசுவாசமாய் இருந்ததினாலும் இந்த வேத சத்தியத்தை சார்ந்து ஒரு உலகளாவிய இயக்கம் 1913 வரை இயங்கவில்லை (தீ வே கால்டு ஷெரிசே சரித்திரத்தில் காணப்படும் ஒருத்துவ ஐக்கியங்களை குறித்த இந்த அற்புதமான புத்தகத்தை பார்க்கவும்) கலிஃபோர்னியா பெந்தெகோஸ்தர்களின் ஒரு முகாமின் போது இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானத்தின் செய்தி வெளிப்பட்டு சீன தேசத்தில் இருந்தும் வந்திருந்த மக்களுக்கு இந்த முகாமில் இது வெளிப்பட்டது. விரைவில் மறுபடியுமாய் ஞானஸ்நானம் எடுப்பது அநேக கிறிஸ்தவர்களுக்கு முக்கியம் என்று தோன்றியது. தங்களுக்கு உண்டான எல்லாவற்றையும் விட்டு விலகி இந்த அற்புதமான சத்தியத்தை பிரசங்கிக்க கடந்து சென்றார்கள். வெகு துரிதமாக ஒரு ஆண்டுக்குள்ளாக அமெரிக்கா மெக்ஸிக்கோ மற்றும் கனடா தேசங்களில் முழு சபைகள் மறுபடியுமாக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் இந்த செய்தி உலகத்தை வட்டம் இட்டுக் கொண்டு இருக்கையில் ரஷியா இந்தியா ஃசைனா மற்றும் பல தேசங்கள் சுவிசேஷ செய்தியான வேதத்தின் ஒருத்துவத்தினால் குத்தப்பட்டன. இது சில ஆண்டுகளிலே நடந்தது ஃசைனாவில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் 4 பேர் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியுமாக பிறந்தார்கள் இது 4 ஆண்டுகள் அளவின் தினந்தோறும் நடைப்பெற்றது. (பிரொஃபைபல்ஸ் ஆப் பென்டெக்காஸ்டல் மிஷனரீஸ் மேரி வாலஸ் பக்கம் 328-ஐ பார்க்கவும்) இதே இடத்திலே ஒரு குறிப்பிட்ட காலத்திலே 6 வாரங்களிலே 600 சைனீஸ் மக்கள் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள். (ஃபினாமினன் ஆப் பென்டெக்காஸ்ட் ஃபிராங்க் ஈவார்ட்டு பக்கம் 140-ஐ பார்க்கவும்) இன்றைக்கு 617 ஒருத்துவ ஸ்தாபனங்கள் உலகத்திலே உள்ளன, உலகமெங்கும் குறைந்த பட்சம் 27 கோடி தெரிந்த விசுவாசிகள் உள்ளன (அவர் காட் இஸ் ஒன் தி ஸ்டோரீ ஆப் ஒன்னெஸ் பென்டிக்காஸ்ட்டல்ஸ் தால்மக்கே பிரெஞ்ச்சு)

வேதம் என்ன கற்றுக்கொடுக்கிறதோ அதை தான் நாம் உறுதியாய் பற்றிக்கொள்ள வேண்டும் என்று நாம் எப்பொழுதும் நினைவுக் கூறவேண்டும் மனிதர்களின் சம்பிரதாயங்களில் அல்ல பரிசுத்தவான்களாய் இருக்கிற நமக்கு அளிக்கப்பட்ட விசுவாசத்தை நிலைநாட்டும்படியாய் நம்மை வேதம் நடக்க சொல்லுகிறது சத்தியத்தின்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 10

ஒலியை பெற்ற நாம் இந்த ஒளியில் நடப்பது முக்கியம் மனுஷர்களின் யோசனைகள் அல்ல தேவனுடைய வார்த்தையை நான் நமக்கு நியாயதிபதிகளாய் இருக்கும் யோவான் 12:48



**சாவி # 8: <u>சத்தியம் எப்பொழுதும் மேற்கொள்ளும் என்பதை சரித்திரம் வெளிப்படுத்துகிறது</u>**

**நமக்கு வேதாகமம் கொடுக்கப்பட்டு இருப்பதால் தேவனுக்கு நன்றி !**

**பாடம் 11-ல் கடைசி காலங்களின் அடையாளங்களை குறித்து பார்ப்போம்**

ஆசிரியரின் பாகம்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 11

எடுத்துக்கொள்ள படுவதற்கு முன் உலகத்திற்கு நடக்கும் காரியங்களைக் குறித்ததான தீர்க்கதரிசனங்களை இந்த பாடம் காண்பிக்கும்., அவருடைய வருகைக்கு ஆயத்தம் உள்ளவர்களாய் கிறிஸ்தவர்கள் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த தீர்க்கதரிசனங்கள் அடையாளமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. தீர்க்கதரிசனங்களில் உள்ள அடுத்தப்படியான சத்தியத்தை புரிந்துக் கொள்ள புரிந்துக்கொள்ளுதலின் அஸ்திபாரத்தை நாம் போடவேண்டும்.

இந்த பாடத்திலே இஸ்ரவேல் தேசத்துடைய அழிவையும் அதிசயமான எழுப்புதலைக் குறித்து சொல்லப்பட்டிருக்கும் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளின் வாக்கையும் இயேசுவின் முக்கியமான தீர்க்கதரிசனங்களையும் நாம் ஆராய்வோம். தானியேல் தீர்க்கதரிசியின் கனவுகளையும் கடைசியாக உயிரோடு இருந்த சீஷனாகிய யோவானால் எழுதப்பட்ட வெளிப்படுத்தல் சுவிசேஷத்தையும் நாம் படிப்போம் இந்த பாடத்தின் முடிவில் (மற்றும் 12வது பாடத்தின் முடிவிலும்) கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு மற்றும் சபை எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறித்தும் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் ஏற்கெனவே நடை பெற்றுக் கொண்டு இருக்கின்றன என்று நாம் பார்ப்போம். கிருபையின் காலத்தில் கடைசியில் நாம் வாழ்ந்துக்கொண்டு இருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை.

## I. எருசலேமின் அழிவு

கிருபையின் காலத்தை குறிக்கும் படியாக வேதத்தில் முக்கியமான தீர்க்கதரிசனங்கள் உண்டு சபை எடுத்துக்கொள்ளப் படுவதுதான் கடைசி சம்பவமாய் இருக்கும் உலகம் தோறும் சிதரடிக்கப்பட்ட யூத மக்கள் மீண்டுமாய் ஒன்றுச்சேர்க்கப்பட்டு இஸ்ரவேல் தேசம் மறுபடியுமாக ஸ்தாபிக்கப்படும் என்று இது சொல்லுகிறது எருசலேமும் அதின் தேவாலையமும் அழிக்கப்படும் என்று இயேசு தீர்க்கதரிசனம் உரைத்தார். 70 கி.பி-யில் இது நிறைவேறிற்று எருசலேம் அழிக்கப்பட்டு உலகம் எங்கும் யூத மக்கள் சிதரடிக்கப்பட்டார்கள்.

### A. எருசலேமிற்காய் இயேசு அழுதார்.

**லூக்கா 19:41-44** "*அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப்பார்த்து, அதற்காகக் **கண்ணீர்விட்டழுது**, 42 உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. 43 உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, 44 உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் வரும் என்றார்.*"

**லூக்கா 21:20-24** "***எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்***. *21 அப்பொழுது யூதேயாவிலிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமிலிருக்கிறவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப்புறங்களிலிருக்கிறவர்கள் நகரத்தில் பிரவேசியாமலிருக்கவும் கடவர்கள். 22* ***எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படி நீதியைச் சரிக்கட்டும் நாட்கள் அவைகளே.*** *23 அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ, பூமியின்மேல் மிகுந்த இடுக்கணும் இந்த ஜனத்தின்மேல் கோபாக்கினையும் உண்டாகும். 24* ***பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும்***

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 11

***சிறைப்பட்டுப்போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்.*"**

**B.** **70 கி.பி-யில் ரோமப் படை தலைவனாகிய தீத்து எருசலேமை வசந்தக் காலத்தில் தாக்கினான்**

அவனுடைய கட்டளையின் படி எருசலேம் சூழ்ந்துக் கொள்ளப்பட்டது குறுகிய காலத்திலேயே எருசலேமும் யூத மக்களும் அழைக்கப்பட்டார்கள் இஸ்ரவேல் ஒரு தேசமாக அன்று முதல் இருக்க வில்லை நடந்த கொடிய காரியங்களை சரித்திரம் எழுத்திடுகிறது. மனுஷர்களை சாப்பிட எருசலேம் குடிகள் கடந்து போனார்கள் ஆயிரக்கணக்கானவர்கள் பட்டினியின் நிமித்தம் மரித்து போனார்கள் 11 லட்ச இஸ்ரவேல் மக்கள் கொள்ளப்பட்டார்கள் மற்றும் மீதி இருந்த கைதிகள் அடிமைகளாய் விற்கப்பட்டு உலகம் எங்கும் வினியோகம் செய்யப்பட்டார்கள் அதைக் குறித்து தான் இயேசு தீர்க்கதரிசனம் உரைத்தார். ஆகவே தான் அவர் அழுதார்.

## II. யூதர்கள் மறுபடியுமாக பாலஸ்தீனாவுக்கு திரும்புகிறார்கள்

தீர்க்கதரிசிகள் ஆகிய எரேமியவாலும் ஏசாயாவினாலும் இஸ்ரவேல் மக்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பும் படியாக உறைத்த தீர்க்கதரிசனங்களை பார்த்து வேதத்தை பரியாசம் செய்கிறவர்கள் நகைத்தார்கள். இந்த குறிப்பிட்ட தீர்க்கதரிசனம் நிறைவேராது என்றும் இது நிரைவேர இயலாது என்றும் அவர்கள் சொன்னார்கள். ஆகையால் வேதம் பொய்யானது என்று அவர்கள் நினைத்தார்கள் ஆனால் இந்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேரின ஆகையால் வேதம் மாற்றி எழுத படவில்லை அது மீண்டுமாகவும் எழுத படவில்லை ஆகையால் வேதம் உண்மையுள்ளது.

**ஏசாயா 11:12** "*ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, <u>யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்</u>.*"

**எரேமியா 30:3** "*இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலும் யூதாவுமாகிய என் ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பி, நான் அவர்கள் <u>பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்ப வரப்பண்ணுவேன்; அதை அவர்கள் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்</u> என்று கர்த்தர் சொல்லுகிறார்.*"


**எரேமியா 31:10** "*ஜாதிகளே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, தூரத்திலுள்ள தீவுகளில் அறிவித்து, இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக்கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும்வண்ணமாக அதைக் காப்பார் என்று சொல்லுங்கள்.*"

தேவனுடைய வார்த்தை 100% உண்மையானது 1948 மே 15-ந்து அன்று இஸ்ரவேல் தேசமாயிற்று ஐக்கிய நாடுகள் இணைந்து இஸ்ரவேல் தேசத்தை மறுபடியுமாக உருவாக்கினார்கள் தேசம் திரும்பிய யூதர்கள் ஒரு மகா பெரிய ஐக்கியத்தை உண்டு பண்ணினார்கள். இது நிரைவேறும் என்று தீர்க்கதரிசனம் கூறியது. இது நிறைவேறும் போது அது காலத்தின் முடிவின் அடையாளம் என்றும் கூறியிருக்கிறது மீண்டுமாக ஒன்று சேர்க்க பட்ட இஸ்ரவேல் மறுபடியுமாக சிதரடிக்கப்படாது என்று ஆமோஸ் தீர்க்கதரிசி உரைத்தார்.

**ஆமோஸ் 9:14-15** "***என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்;*** *அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். 15* ***அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; <u>நான்</u>***

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 11

***<u>அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய</u>*** *கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.*"




**<u>சாவி # 1 வேதத்தின் தீர்க்கதரிசனங்கள் உண்மையானவைகள் எதிர்காலத்திற்காய் நம்மை ஆயத்தப்படுத்தவும் அதை புரிந்துக் கொள்வதற்கும் இவைகள் நமக்கு உதவியாய் இருக்கின்றன.</u>**

## III. புறஜாதிகளின் காலம்

**லூக்கா 21:24** "*பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள்; புறஜாதியாரின் காலம்* ***நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்.***"

எருசலேம் சிறையிடப்பட்டு புறஜாதி தேசங்கள் அதின் மேல் ஆளுகை செய்யும் என்று தீர்க்கதரிசனம் கூறுகிறது. மனுகுலத்தை சுவிசேஷத்தின் வழியாக இரட்சிப்பதை கர்த்தர் நிறுத்தும் வரைக்கும் இது நடைப்பெறும்.



**<u>சாவி # 2 இயேசு புறஜாதிகளுக்கு இரட்சிப்பை கொண்டுப் போய் முடித்த பின் யூதர்களின் பக்கம் அவருடைய கவனத்தை மறுபடியும் திருப்புவார்.</u>**

**A. ஓர் உலக அரசாங்கத்தைக் குறித்ததான தீர்க்கதரிசனங்கள் - தானியேல் திர்க்கதரிசியும் நேபுகாத்நேச்சார் ராஜாவும்.**

ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கனவை தானியேல் வியாக்கியானம் பண்ணி உலகத்தில் தோன்றப்போகும் பெரிதான சக்கி வாய்ந்த தேசங்களை குறித்து சொன்னான் இந்த சக்திகள் ஓர் உலக அரசாங்கத்தை அமைக்கும் ஐந்து புறஜாதி இராஜியங்களையும் ஆறாவதாக கடைசி இராஜியமாக கிறிஸ்துவின் ஆளுகையையும் இந்த கனவு விவரித்தது வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் உள்ள தீர்க்கதரிசனங்களை குறித்து அல்லாமல் தானியேலோடு கனவையும் நேபுக்காத் நேச்சாருடைய கனவை குறித்து படிப்பது முக்கியம் கனவை குறித்து படிப்பது முக்கியம் கடைசி கால தீர்க்கதரிசனங்களை குறித்ததான தெளிவை இது கொடுக்கிறது. தானியேலின் தீர்க்கதரிசனங்கள் விதிமுறைகளை அறியாமல் வெளிப்படுத்தல் புத்தகத்தை புரிந்துக்கொள்ள முடியாது ஆகையால் தானியேல் தீர்க்கதரிசியின் புத்தகத்தில் தோன்றும் தீர்க்கதரிசனங்களை குறித்து தாம் பார்ப்போம்.

- **இராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கனவு (600 கி.மு)**

**தானியேல் 2:31-35** "***ராஜாவே, நீர் ஒரு பெரிய சிலையைக்கண்டீர்; அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது;*** *அது உமக்கு எதிரே நின்றது; அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது. 32* ***அந்தச் சிலையின் தலை <u>பசும்பொன்னும்</u>, அதின் மார்பும் அதின் புயங்களும் <u>வெள்ளியும்</u>, அதின் வயிறும் அதின் தொடையும் <u>வெண்கலமும்</u>****, 33* ***அதின் கால்கள் <u>இரும்பும்</u>, அதின் <u>பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது</u>****. 34 நீர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே,* ***கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்தது; அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி அவைகளை நொறுக்கிப்போட்டது****. 35 அப்பொழுது அந்த இரும்பும் களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடைகாலத்தில்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 11

*போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப்போலாயிற்று; அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக்கொண்டுபோயிற்று;* ***சிலையை மோதின*** ***<u>கல்லோவென்றால்</u>, ஒரு பெரிய பர்வதமாகி <u>பூமியையெல்லாம் நிரப்பிற்று</u>.*** ''

- **தானியேல் தீர்க்கதரிசியின் கனவு**

**தானியேல் 7:2-7** ''*தானியேல் சொன்னது: இராத்திரிகாலத்தில் எனக்கு உண்டான தரிசனத்திலே நான் கண்டது என்னவென்றால்: இதோ, வானத்தின் நாலு காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின்மேல் அடித்தது. 3 அப்பொழுது* ***வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய மிருகங்கள்*** *சமுத்திரத்திலிருந்து எழும்பின. 4* ***முந்தினது சிங்கத்தைப்போல இருந்தது; அதற்குக் கழுகின் செட்டைகள் உண்டாயிருந்தது****; நான் பார்த்துக்கொண்டிருக்கையில், அதின் இறகுகள் பிடுங்கப்பட்டது; அது தரையிலிருந்து எடுக்கப்பட்டு, மனுஷனைப்போல இரண்டு காலின்மேல் நிமிர்ந்து நிற்கும்படி செய்யப்பட்டது; மனுஷ இருதயம் அதற்குக் கொடுக்கப்பட்டது. 5 பின்பு,* ***கரடிக்கு ஒப்பாகிய வேறே இரண்டாம் மிருகத்தைக் கண்டேன்; அது ஒரு பக்கமாய்ச் சாய்ந்துநின்று, தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக்கொண்டிருந்தது;*** *எழும்பி வெகு மாம்சம் தின்னென்று அதற்குச் சொல்லப்பட்டது. 6 அதின் பின்பு, சிவிங்கியைப்போலிருக்கிற வேறொரு மிருகத்தைக் கண்டேன்; அதின்* ***முதுகின்மேல் பட்சியின்செட்டைகள் நாலு இருந்தது; அந்த மிருகத்துக்கு நாலு தலைகளும் உண்டாயிருந்தது****; அதற்கு ஆளுகை அளிக்கப்பட்டது. 7* ***அதற்குப்பின்பு, இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது;*** *அதற்குப் பெரிய இருப்புப்பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது; அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப்பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது, அதற்குப்* ***பத்துக் கொம்புகள் இருந்தது****.* ''

- **தானியேல் தீர்க்கதரிசியின் தரிசனம்**

**தானியேல் 8:2-8** ''*தரிசனத்திலே நான் கண்டது என்னவென்றால்: நான் பார்க்கையில் ஏலாம் தேசத்திலுள்ள சூசான் அரமனையில் இருந்தேன்; அங்கே நான் ஊலாய் என்னும் ஆற்றங்கரையில் இருந்ததாகத் தரிசனத்திலே கண்டேன். 3 நான் என் கண்களை ஏறெடுத்துப்பார்த்தேன்; இதோ, இரண்டு கொம்புகளுள்ள ஒரு ஆட்டுக்கடா ஆற்றிற்கு முன்பாக நின்றது; அதின் இரண்டு கொம்புகளும் உயர்ந்தவைகளாயிருந்தது; ஆகிலும் அவைகளில் ஒன்று மற்றதைப்பார்க்கிலும் உயர்ந்திருந்தது; உயர்ந்தகொம்பு பிந்தி முளைத்தெழும்பிற்று. 4 அந்த ஆட்டுக்கடா மேற்கும் வடக்கும் தெற்கும் பாய்கிறதைக் கண்டேன்; ஒரு மிருகமும் அதின் முன்னே நிற்கக் கூடாதிருந்தது; அதின் கைக்குத் தப்புவிப்பாருமில்லை; அது தன் இஷ்டப்படியே செய்து வல்லமைகொண்டது. 5 நான் அதைக் கவனித்துக்கொண்டிருக்கையில், இதோ, மேற்கேயிருந்து ஒரு வெள்ளாட்டுக்கடா நிலத்திலே கால் பாவாமல் தேசத்தின்மீதெங்கும் சென்றது; அந்த வெள்ளாட்டுக்கடாவின் கண்களுக்கு நடுவே விசேஷித்த ஒரு கொம்பு இருந்தது. 6 நான் ஆற்றின் முன்பாக நிற்கக்கண்ட இரண்டு கொம்புகளுள்ள ஆட்டுக்கடாவினிடமட்டும் அதுவந்து, தன்பலத்தின் உக்கிரத்தோடே அதற்கு எதிராகப் பாய்ந்தது. அது ஆட்டுக்கடாவின் கிட்டச் சேரக்கண்டேன்; 7 அது ஆட்டுக்கடாவின்மேல் கடுங்கோபங்கொண்டு அதை முட்டி, அதின் இரண்டு கொம்புகளையும் முறித்துப்போட்டது, அதின்முன் நிற்க ஆட்டுக்கடாவுக்குப் பலமில்லாமையால், வெள்ளாட்டுக்கடா அதைத் தரையிலே தள்ளி மிதித்துப்போட்டது, அதின் கைக்கு ஆட்டுக்கடாவைத் தப்புவிப்பார் இல்லை. 8 அப்பொழுது வெள்ளாட்டுக்கடா மிகுதியும் வல்லமைகொண்டது; அது பலங்கொண்டிருக்கையில், அந்தப் பெரிய கொம்பு முறிந்துபோயிற்று; அதற்குப் பதிலாக ஆகாயத்தின் நாலுதிசைகளுக்கும் எதிராய் விசேஷித்த நாலுகொம்புகள் முளைத்தெழும்பினது.*''

(**ஆசிரியர் குறிப்பு** - தேசங்களின் தலைவர்களை கொம்புகளாக குறிக்கும் என்று சொன்னால் மாத்திரம் போதும்)

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 11

**B.** வியாக்கியானமும் ஒப்பணையும்

**தானியேல் 2:36** "*சொப்பனம் இதுதான்; அதின் அர்த்தத்தையும் ராஜசமுகத்தில் தெரிவிப்போம்.*"
**தானியேல் 7:17** "*அந்த நாலு பெரிய மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற நாலு ராஜாக்கள்.*"

**தானியேல் 8:19** "*இதோ, கோபத்தின் முடிவுகாலத்திலே சம்பவிப்பதை உனக்குத் தெரிவிப்பேன்; இது குறிக்கப்பட்ட முடிவுகாலத்துக்கு அடுத்தது.*"

உலகத்ததை ஆளுகை செய்யும் படியாக உருவாகும் மகாசக்திகளின் பூரணமான தொடர்ச்சியையும் அவைகளின் வல்லமை சுபாவம் மற்றும் குணாதிசயங்களை குறித்து அந்த கனவு வெளிப்படுத்தினது. ஒவ்வொரு இராஜியம் உருவாகும் போது அதின் பெலனும் பெருகியது இதை உலோகங்களின் பெலன் பெருகுவதைப் பார்த்து நாம் புரிந்துக் கொள்ளலாம். அநேக இராஜியங்களைப் பிரதிபலிக்கும் உலோகங்களின் மதிப்பு குறைவதையும் பார்க்கலாம்.

**1. தங்கத்தின் தலை — கழுகின் செட்டைகள் கொண்ட சிங்கத்தைப் போன்ற மிருகம் .**

**தானியேல் 7:4** "*முந்தினது சிங்கத்தைப்போல இருந்தது; அதற்குக் கழுகின் செட்டைகள் உண்டாயிருந்தது; நான் பார்த்துக்கொண்டிருக்கையில், அதின் இறகுகள் பிடுங்கப்பட்டது; அது தரையிலிருந்து எடுக்கப்பட்டு, மனுஷனைப்போல இரண்டு காலின்மேல் நிமிர்ந்து நிற்கும்படி செய்யப்பட்டது; மனுஷ இருதயம் அதற்குக் கொடுக்கப்பட்டது.*"

நேபுகாத் நேச்சாரின் தலைமையில் இருந்த பாபிலோன் இராஜியத்தை தங்கத்தின் தலையை குறிக்கிறது பாபிலோனியர்களின் வாழ்க்கை வகையும் ஆராதனை முறையும் குறிக்கிற எல்லாப் பொருள்களும் தங்கத்தால் செயப்பட்டு இருந்தது.

**தானியேல் 2:37-38** "***ராஜாவே, நீர் ராஜாதி ராஜாவாயிருக்கிறீர்;** பரலோகத்தின் தேவன் உமக்கு ராஜரீகத்தையும் பராக்கிரமத்தையும் வல்லமையையும் மகிமையையும் அருளினார். சகல இடங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின் மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார். **பொன்னான அந்தத் தலை நீரே.***"

**2. வெள்ளி புயங்களையும் மார்பும் - கரடிக்கு ஒப்பாகிய ஆட்டுக்கடா போன்ற மிருகம் மீதியா மற்றும் பெர்சியா. தானியேல் 7:5**

வெள்ளி புயங்களும் மார்பும் கொண்டஇரண்டாம் உலக இராஜியம் மீதியான் தேசத்தையும் பெர்சியாவையும் குறிக்கும் தங்கத்தைப் பார்க்கிலும் வெள்ளி குறைவாய் இருக்கிறதைப் போல இந்த இராஜியம் பாபிலோனைவிட குரைவாய் இருந்தது. ஆனால் இரானுவ சக்தியில் இது குறைவாய் இல்லாமல் பாபிலோனை கவிழ்த்துப்போட்டது.

**தானியேல் 2:39** "*உமக்குப்பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும்; பின்பு பூமியையெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யமொன்று எழும்பும்.*"

**தானியேல் 8:20** " *நீ கண்ட இரண்டு கொம்புள்ள ஆட்டுக்கடா மேதியா பெர்சியா தேசங்களின் ராஜாக்கள்;*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 11

**3. வெண்கல வயிறும்  தொடையும் – வெள்ளாட்டுக் கடாவை போலவும் சிவிங்கியை போன்ற மிருகம்** – கிரேக்க தேசம்  – தானியேல் 7:6

கிரேக்க தேசத்தை மாவீரன் அலெக்ஸான்டர் உருவாக்கும் வரைக்கும் மீதியான் மற்றும் பெர்சியா இராஜியங்கள் நீடித்தது  வெண்கல வயிறும் தொடைகளும் உள்ளது தான் கிரேக்க சாம்ராஜியம்.

**தானியேல் 2:39** "*உமக்குப்பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும்; பின்பு பூமியையெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யமொன்று எழும்பும்.*"

**தானியேல் 8:21** "*ரோமமுள்ள அந்த வெள்ளாட்டுக்கடா கிரேக்கு தேசத்தின் ராஜா; அதின் கண்களுக்கு நடுவே இருந்த பெரிய கொம்பு அதின் முதலாம் ராஜா;*"

**4. இரும்பு கால்கள் – ஒப்பற்ற மிருகம்** – ரோம் – தானியேல் 7:7

கிரேக்க சாம்ராஜியத்தை ரோம சாம்ராஜியம் மேற்கொண்டது இது இரும்பால் குறிக்கப்பட்டது.  எப்படியாக இரும்பு தங்கத்தைப் பார்க்கிலும் வெள்ளியைப் பார்க்கிலும் வெண்கலத்தை விடவும் வல்லமை உள்ளதாய் இருக்கிறதோ அப்படியே ரோம சாமராஜியமும் மற்ற இராஜியங்களை விட வல்லமை உள்ளதாய் இருந்தது

**தானியேல் 2:40** "*நாலாவது ராஜ்யம் இரும்பைப்போல உரமாயிருக்கும்; இரும்பு எல்லாவற்றையும் எப்படி நொறுக்கிச் சின்னபின்னமாக்குகிறதோ, அப்படியே இது நொறுக்கிப்போடுகிற இரும்பைபோல அவைகளையெல்லாம் நொறுக்கித் தகர்த்துப்போடும்.*"

வேதம் எவ்வளவு வியப்பானது அல்லவா?

தீர்க்கதரிசனம் உறைத்ததுப்போல 4 உலக சாம்ராஜியங்கள் இருந்தது  சரித்திரத்தின் உண்மை இவைகள் மீதியா பெர்சியா கிரேக்க மற்றும் ரோம சாம்ராஜியங்கள்

**5. களிமண்ணும் இரும்பும் உடைய கால்கள் – 10 கொம்புகளும் ஒரு சிறிய கொம்பும் உடைய மிருகம்** –கடந்தக்காலம் / எதிர்க்காலம் – தானியேல் 7:7-8

<u>கடைசி புறஜாதி சாம்ராஜியத்தை இந்த சிலையின் கால்கள் குறிக்கிறது  களிமண்ணாலும் இரும்பினாலும் கொண்ட கால்களின் காலத்தில் இப்பொழுது நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம்.</u>  பெலனும் பெலவீனமும் கலந்த நிலையை இது குறிக்கும்.  சிலையின் கால் விரல்களால் குறிக்கப்படும் 10 தேசங்களும் 10 கொம்புகள் உடைய மிருகமும் பெரிதான வல்லமையோடும் பெலத்தோடும் எழும்பும் தேசங்கள் நடுவே ஏற்படும் அரசியல் இணைப்புகளின் மூலமாகவும் ஒப்பந்தங்களின் மூலமாகவும் இது நடைபெறும் இந்த காலக்கட்டத்தின் முடிவில் இந்த தேசங்கள் எழும்பி அந்திக்கிறிஸ்துவுக்கு பெலன் அளிக்கும்.  உண்மையான ரோம சாம்ராஜியத்திலிருந்த இந்த 10 ஆளுனர்கள் வருவார்கள் என்று வேத ஆராய்ச்சி செய்கிறவர்கள் கற்றுக்கொடுப்பார்கள்.

**தானியேல் 2:41-43** "*பாதங்களும் கால்விரல்களும் பாதிகுயவனின் களிமண்ணும், பாதி இரும்புமாயிருக்க நீர் கண்டீரே,* ***அந்த ராஜ்யம் பிரிக்கப்படும்****; ஆகிலும் களிமண்ணோடே இரும்பு கலந்திருக்க நீர் கண்டபடியே இரும்பினுடைய உறுதியில் கொஞ்சம் அதிலே இருக்கும். 42* ***கால்விரல்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது என்னவென்றால், அந்த ராஜ்யம் ஒருபங்கு உயரமும் ஒருபங்கு நெரிசலுமாயிருக்கும்****. 43 நீர் இரும்பைக் களிமண்ணோடே கலந்ததாகக் கண்டீரே, அவர்கள் மற்ற மனுஷரோடே*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
## பாடம் 11

*சம்பந்தங்கலப்பார்கள்; ஆகிலும் இதோ, களிமண்ணோடே இரும்பு கலவாததுபோல அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொள்ளாதிருப்பார்கள்.*"

**6. கல் – சிலையைத் தாக்கி பூமியை நிரப்பும் பெரிதான மலையாய் மாறிவிடுகிறது** – தேவனுடைய இராஜியம் தானியேல் 2:35


கடைசி ராஜியம் மனிதனால் உருவாக்கப்படாது இந்த கல் கிறிஸ்துவை குறிக்கிறது. கடைசி ஓர் உலக அரசாங்கத்தின் முடிவில் அவர் தோன்றுவார் (10 விரல்களும் 10 கொம்புகள்) அப்பொழுது இந்த சிலையின் கால்கள் நொருக்கப்பட்டு சிலை பட்ச்சிக்கப்பட்டு இந்த கடைசி இராஜியம் வீழ்த்தப்படும்

**தானியேல் 2:44** "*அந்த ராஜாக்களின் நாட்களிலே,* ***பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால்பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்***."

**ஏசாயா 28:16** "*ஆதலால்* ***கர்த்தராகிய*** *ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும்; விசுவாசிக்கிறவன் பதறான்.*"

**மத்தேயு 16:18** "*மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாயிருக்கிறாய், இந்தக்கல்லின் மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.*"

**மத்தேயு 21:42-44** "*இயேசு அவர்களை நோக்கி: வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்;* ***இது எவன் மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும்*** *என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.*"



சாவி # 3 யூதர்களின் பக்கமாக தேவன் தம்முடைய கவனத்தை திருப்பும் பொழுது இந்த உலகத்தின் தேசங்கை அழித்து ஆளுகை செய்வார்.

## IV. தானியேலின் 70 வாரங்கள் ( தானியேலின் 70 வாரங்கள் என்ற வரைபடத்தை பார்க்கவும்)

தானியேல் 70 வாரங்கள் யூத ஜனங்களைக் குறித்து குறிப்பாக பேசுகிறது. இது புறஜாதிகளுக்கு அல்ல

**தானியேல் 9:24-27** "***மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்கும்***, *நித்திய நீதியை வருவிக்கிறதற்கும்,*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 11

*தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம்பண்ணுகிறதற்கும், உன் ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த நகரத்தின்மேலும் எழுபதுவாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது. 25 இப்போதும் நீ அறிந்து உணர்ந்துகொள்ளவேண்டியது என்னவென்றால்: <u>எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக்கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும்</u> **ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்**; <u>அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில்</u> இப்படியாகும். 26 அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல; நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள்; அதின்முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும்; முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது. 27 அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான"*

**பாடச் சுருக்கம்**

1. எருசலேமை மீண்டுமாக கட்டி எழுப்பும் கட்டளையிலிருந்து முதல் 7 வாரங்கள் விவரிக்கும் (1 வாரம் 7 ஆண்டுகளுக்கு சமம்) இது 49 ஆண்டுகளைக் குறிக்கும்.

2. நெகேமியாவின் காலத்தில் எருசலேம் கட்டப்பட்டதிலிருந்து அபிசேஷகம் பண்ணப்பட்டவர் துண்டித்துப்போன காலம் வரையிலான கணக்கு 62 வாரங்கள் அல்லது 434 ஆண்டுகளாகும் இது ஏறக்குறைய 30 கி.பி ஆகும். இந்தக் காலத்தில் தான் இயேசு சிலுவையில் அறையப்பட்டார்.

3. 69-ம் வாரத்திலிருந்து 70 வாரம் வரை ஒரு இடை வெளி உள்ளது இந்த இடைவெளியில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் இரட்சிப்பைத் தேடும் விதத்திலும் மறுபடியுமாக பிறப்பதைக் குறித்தும் தேவன் நம்மோடு பேசுகிற சபையின் காலம் அல்லது புறஜாதியினுடைய காலம் தான் இந்த இடைவெளி. புற ஜாதிகளின் காலம் சீக்கிரமாக முடிவடைந்து 69-ம் வாரத்தின் முடிவில் சபை எடுத்துக் கொள்ளப்படும்.

4. புற ஜாதிகளின் காலத்தின் முடிவில் தானியேலுடைய 70-வது வாரம் துவங்குகிறது. யூதர்களோடு ஒரு வாரத்திற்கு ஒப்பந்தம் செய்பவனோடு இது ஆரம்பிக்கிறது. பெரியக் கொம்பும் பத்து கால் விரல்களின் தலைவனாகிய இந்த நபர் தான் அந்தி கிறிஸ்து இஸ்ரவேலோடு ஒரு உலக அரசாங்கத்தின் தலைவன் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திடுவான். யுத்தத்தால் கீழாக்கப்பட்ட தங்களுடைய தேசத்திற்கு இந்த உடன்படிக்கை சமாதானம் கொண்டு வருகிறபடியால் இந்த உடன்படிக்கை சமாதானம் கொண்டுவருகிறபடியால் இந்த தலைவன் தான் மேசியா என்று யூதர்கள் நினைத்துக்கொள்வார்கள் "அநேகரோடு ஒரு வாரத்திற்கு உறுதியான பெலமாக உடன்படிக்கையில் அவன் பிரவேசிப்பான்" அவர்களுடைய நோக்கமோ விரைவில் மாறும் இந்த உடன்படிக்கை வாரத்தின் நடுவே ( 7 ஆண்டுகள் உடன்படிக்கை) அல்லது 3½ ஆண்டுகளில் மறுபடியுமாக கட்டப்பட்ட யூத தேவாலயத்தில் அந்திகிறிஸ்து ஒரு அருவருப்பை உண்டு பண்ணுவான் இது செய்யும் போது இஸ்ரவேல் மக்களுக்கு அவன் அந்திகிறிஸ்து என்று வெளிப்படுத்தப்படுவான்.

## V. கடைசி காலத்தினுடைய அடையாளங்கள் கிருபையின் காலத்தின் முடிவு

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 11


**A.** தம்முடைய சீஷர்களுக்கு இயேசு கடைசி காலத்தைக் குறித்து விவரித்தார்

**மத்தேயு 24:3-5** "*பின்பு, அவர் ஒலிவமலையின் மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.*"

**மத்தேயு 24:11** "*அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்.*"

**மத்தேயு 24:24** "*ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.*"

கள்ளதீர்க்கதரிசிகளைக் குறித்து கவனமாக இருக்கும்படி இயேசு தொடர்ந்து எச்சரித்தார். இதை நாம் 7-ம் பாடத்தில் பார்த்தோம் பொய்யான தீர்க்கதரிசியை கண்டு பிடிப்பதற்கு வழியை நமக்கு மிகவும் எளிதாக்கி தந்தார். (i) தேவனிடத்தில் அவர்கள் இருந்தால் அப்போஸ்தலர்களின் செய்திக்கு கீழ்படிவார்கள் இல்லாவிட்டால் அவர்கள் பொய்யானவர்கள் (1 யோவான் 4 6) (ii) வானத்திலிருந்து தூதனோ அல்லது மனுஷனோ வேறொரு சுவிசேஷத்தை (அப்போஸ்தலர் சுவிசேஷம் அல்லாமல்) பிரசங்கித்தால் அவன் சபிக்கப்படுவான் என்று கூறியுள்ளது. (கலாத்தியர் 1 8-9) (iii) அப்போஸ்தலர்கள் கற்றுக் கொடுத்ததின் நிமித்தமாய் தன் மேல் நாம் விசுவாசம் கொள்வோம் என்று இயேசு ஜெபித்தார் (யோவான் 17 20) ஆகையால் அப்போஸ்தலர்கள் போதித்த செய்தியை நாம் புரிந்து கொண்டு படித்தால் ஒரு மனுஷன் உண்மையானவனா அல்லது பொய்யானவனா என்று அவன் செய்யும் போதனையின் மூலமாய் நாம் புரிந்துக் கொள்ளலாம் ஊழியக்காரர்கள் செய்யும் அற்புதங்கள் மற்றும் அடையாளங்களின் மூலமாய் நாம் அவர்களை விசுவாசிப்பதற்கு வஞ்சிக்கப்பட மாட்டோம். வேதத்தை தினந்தோறும் படித்து புரிந்து அறிந்துக் கொள்வது முக்கியம் என்று இது நமக்கு வெளிப்படுத்துகிறது.



**சாவி # 4** **<u>இந்தகாலத்தின் நிறைவைக் குறித்ததான தீர்க்கதரிசனங்கள் இப்பொழுதே நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.</u>**

**B.** யுத்தங்கள்

யுத்தங்கள் எப்பொழுதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன ஆனால் காலத்தின் முடிவுக்கு முன்பதாக யுத்தங்கள் எண்ணிக்கையில் அதிகரிக்கும்.

**மத்தேயு 24:6-7** "*யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும் முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 11

உலகத்தில் யுத்தம் நடைபெறுகின்ற சில இடங்களை நீங்கள் பெயரிட்டு சொல்ல முடியுமா? யுத்தங்களைக் குறித்ததான சில வதந்திகளை செய்திகளிலே பார்ப்பது / கேட்பதை நீங்கள் போசிக்க முடியுமா? எந்த தேசமாவது இன்னொரு தேசத்துடன் விரோதமாக இருப்பது உங்களுக்குத் தெரியுமா? இயேசுவின் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது என்பதை இது வெளிப்படுத்துகிறது. (யுத்தங்கள் அல்லது யுத்தத்தைக்குறித்ததான செய்திகள் நடைப்பெற்றுக் கொண்டிருக்கிற சில இடங்களை மாணவர்களை எழுத சொல்லுங்கள்.

**C. பூமி அதிர்ச்சிகள் பஞ்சம் கொள்லை நோய்கள் மற்றும் வானத்திலிருந்து பயங்கரமான காட்சிகளும் அடையாளங்களும்**

உலகத்தில் மரணத்திற்கு முதன்மையானக் காரணம் பட்டியாய் இருப்பதே! இது சரித்திரத்தில் நடைபெறாத பூமி அதிர்ச்சிகள் இப்பொழுது நடைப்பெற்றுக் கொணடிருக்கிறது. இதில் ஒன்று தான் தென் கிழக்கு ஆசியாவிலே சுனாமியை உருவாக்கினது. கோடிக்கனக்கான ஜனங்களை அழிக்கக்கூடிய மருந்துகள் வேலை செய்யாத புதிதான ஒரு கொடிய நோய் தோன்றும் என்ற பயம் இப்பொழுது இருக்கிறது. (பறவைகாய்ச்சல் SARS, HIV/AIDS, கொல்ல முடியாத உயிர் அணுக்கள் போன்றவை.

**மத்தேயு 24:7-8** "*ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். 8 இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.*"

**லூக்கா 21:11** "*பல இடங்களில் மகா பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் உண்டாகும்; வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும்.*"

கொள்ளை நோய் என்ற வார்த்தைக்கு அர்த்தம் ஒருவரில் இருந்து ஒருவருக்கு பரவக்கூடிய உயிர்ச்சேதம் உண்டாக்கக்கூடிய கொடூரமான வியாதி என்று அர்த்தம் வெப்டர் மொழியாக்கத்தின்படி கொள்ளை நோய் என்றால் மிகவும் விஷமுள்ள வேகமாக பரவக்கூடிய சீரத்தின் எதிர்ப்பு சக்தியை மேற்கொள்ளக்கூடிய வியாதி என்று அர்த்தம் (இந்த காரியங்கள் நடைபெற்று கொண்டு வருகிற சில இடங்களை மாணவர்களை எழுத சொல்லுங்கள்)

**D. நோவாவின் நாட்களிலும் லோத்துவின் நாட்களிலும் நடந்தது போல இருக்கும்**

**லூக்கா 17:26-30** "*நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும். 27 நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது. 28 லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். 29 லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப்போட்டது. 30 மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்.*"

இயேசு: **மத்தேயு 24:37-39** "*நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். 38 எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும், 39 ஜலப்பிரளயம் வந்து அனைவரையும்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 11

*வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்.* "

நோவாவின் நாட்கள் மிகவும் கொடிய நாட்கள் ஆதியாகமம் 6:5 —ல் மனிதனின் இருதயத்திலிருந்து தோன்றுகிற ஒவ்வொரு சிந்தையும் தொடர்ந்து தீயவைகளாக இருந்தது என்று மனுஷனைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. ஒழுங்கின்மை லோத்தின் காலத்தில் விபரீதமாக இருந்தது. ஓரின சேர்க்கை சோதோமில் அதிகமாய் இருந்தது. (சோதோம் என்கிற வார்த்தை இங்கிருந்து தான் உருவாயிற்று) இயற்கைக்கு மாறாக உடல் உறவுக் கொள்வதுதான் சோதோம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்று வெப்டர் மொழியாக்கம் கூறுகிறது. நோவாவின் காலத்தின் லோத்துவின் காலத்திலும் நடந்ததுப் போலவே ஜனங்கள் பாவத்தினால் விழுங்கப்படுவார்கள் என்று இயேசு தன்னுடைய தீர்க்கதரிசனத்திலே வெளிப்படுத்துகின்றார். துருஅதிஷ்டமாக வேறெந்த ஒரு சந்ததியிலும் காணப்படாத அளவிற்கு இந்த சந்ததியில் இணையத்தளத்தின் மூலமாக தவறான எண்ணங்கள் ஆபாசபடங்கள் ஓரின சேர்க்கை போன்ற காரியங்கள் செழித்தோங்குகின்றன. இந்த சந்ததியை குறித்துதான் நிச்சயமாக இயேசு சொல்லியிருப்பார். நோவா மற்றும் லோத்துவின் காலத்தில் நடந்தப் பேரழிவைக் குறித்து ஜனங்கள் அறியாதிருந்ததுப் போலவே அவர் வருகையைக் குறித்து ஜனங்கள் அறியாதிருப்பார்கள் என்று இயேசு சொன்னார். திடீரென்று பேரழிவு வரும்பொழுது எப்பொழுதும் போல வாழ்ந்து கொண்டுதான் இருப்பார்கள்.(ஆதியாகமம் 6:1-11 ஆதியாகமம் 19:1-10 — ஐ பார்க்கவும்) அவருடைய வருகையைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் அவருடைய சபை அதிர்ச்சி அடையும் என்பதை இயேசு ஒருபோதும் சொல்லவில்லை பாவத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தான் திடுக்கிடுவார்கள் என்று அவர் சொன்னார். ஆகையால் உலகத்தின் பெரும்பகுதிகள் கடைசி கால அடையாளங்களை குறித்து கவனமாக இருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்ககூடாது. ஆனால் இப்பொழுது நாம் உணரும் அவசரம் கர்த்தரிடத்திலிருந்துதான் என்று நாம் உறுதியாக இருக்கலாம். அவருடைய வருகைக்கு நாம் ஆயத்தமாக இருக்கவேண்டுமென்று அவர் வாஞ்சிக்கிறார். ஆகையால் தான் வேதத்தை வாசிப்பதற்கு நாம் நடத்தப்படுகிறோம்

**E. கடைசி நாட்களில் அறிவு வளரும். என்பதைக் குறித்தான தானியேலின் தீர்க்கதரிசனம்.**

**தானியேல் 12:4** "*தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப்புஸ்தகத்தை முத்திரைபோடு; அப்பொழுது அநேகர் இங்குமங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்.*"

இன்றைக்கு இருக்கிற பிரயாணம் செய்யக்கூடிய திறமையை அன்றைக்கு தானியேல் பார்த்தான் என்பதில் சத்தேகம் இல்லை. உலகமெங்கும் மிக குறுகிய காலத்தில் ஜனங்கள் பிரயாணம் செய்வதை நம் தலைமுறையில்தான் காணமுடியும் அநேக வியாபாரிகள் வழக்கமாக உலகத்தை சுற்றிலும் பிரயாணம் செய்கிறார்கள் உலகத்தின் எல்லா பகுதிகளுக்கும் சிறிய விடுமுறைகளுக்காக பறந்து செல்வதும் எளிதாக மாறிக் கொண்டு இருக்கிறது. இந்த தலைமுறையை குறித்துதான் இந்த தீர்க்கதரிசனம் என்பதில் சந்தேகம் இல்லை அதிக அறிவைக் குறித்ததான தீர்க்கதரிசனத்தைக் குறித்து லாஸ் ஏஞ்சலிஸ் வேதாகம ஆராய்ச்சி சமுகம் இவ்வாறாக கூறுகிறது.

"ஜலப்பிரளயத்தின் காலத்திலிருந்து 1800 வருடம் வரை (4100 ஆண்டுகள்) மனுஷனுடைய ஞானம் ஒரு முறை இரட்டிப்பானது. 1800-1900 ஆண்டு வரை மறுபடியுமாக அது இரட்டிப்பானது 1969 லிருந்து அறிவு 10 ஆண்டுகளுக்கு 1

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 11

முறை இரட்டிப்பானது. 1973 லிருந்து 5 ஆண்டுகளுக்கு 1 முறை இரட்டிப்பானது. இன்றைக்கு மனிதனுடைய படிப்பறிவு 2½ ஆண்டுகளுக்கு 1 முறை இரட்டிப்பாகிறது நம் தலைமுறையைக் குறித்துதான் இந்த தீர்க்கதரிசனம் என்பது உறிதியாகிறது.

### F. சூனியமும் அந்தகார செய்கைகளும்

நம் சமுதாயத்திலே மந்திரவாதத்தில் அதிக ஆர்வம் இருப்பதை நாம் பார்க்கலாம். அதிர்ஷ்டம் எதிர்காலத்தை அறிவிக்கும் காரியங்கள் அல்லது மாற்றும் காரியங்கள் இருளான கலைகள் கருப்பு மந்திரவாதம் ESP சூனியம் குறி சொல்லுதல் செத்தவர்களிடத்தில் பேசுதல். ஆண்மீகம் ஜாதகம் மற்றும் ஜோசியத்திற்கு அதிக கவனம் கொடுக்கப்படுகிறது. இந்த காரியங்களைத் தழுவியே அநேதக புத்தகங்களும் குழந்தைகளுக்கும் மற்றும் பெரியவர்களுக்குமான படங்கள் தயாரிக்கப்படுகின்றன.

**1 தீமோ 4:1** "*ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்.*"

### G. கடைசி நாட்களில் வாழும் குணாதிசயங்கள்

கடைசி காலத்தில் மனுகுலத்தின் குணாதிசயங்களின் விவரத்தைக் கூர்ந்து கவனிக்கவும்

**2 தீமோ 3:1-7** " *மேலும், கடைசிநாட்களில் கொடியகாலங்கள் வருமென்று அறிவாயாக.*
*2 எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்,*
*3 சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும்,*
*4 துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும்,*
*5 தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு. பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு,*
*7 எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள்.*"

சுகத்தை தேடுவதுதான் உலகத்தின் பிரதானமான நோக்கமாக மாறிவிட்டது இந்த மாம்சக் குணாதிசயங்கள் நம் தலைமுறைக்குப் பொருந்தும்.

இந்த தத்துவத்தைப் புரிந்துக் கொள்வது முக்கியமாகும் தேவனைப் போல இருந்தும் அதின் வல்லமையை மறுப்பதை கிறிஸ்தவ போதனைகளுக்கு ஜனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டும் வாழ்க்கையை மாற்றக்கூடும் அதின் வல்லமையை மறுதலிப்பார்கள் இவர்களை போன்ற ஜனங்கள் அதாவது உண்ணையான கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களை தவிர்க்க வேண்டும் என்று வேதம் நமக்கு சொல்லுகிறது. அதே சமயத்தில் எப்பொழுதும் கற்றுக் கொண்டேயிருந்தும் சத்தியத்தின் அறிவுக்கு வரமுடியாத சிலரும் இருப்பார்கள். கிறிஸ்தவ மதத்தைக் குறித்ததான அறிவிலும் ஞானத்திலும் ஜனங்கள் பெருகுவார்கள் ஆனால் உண்மையாகவே சுவிசேஷத்தை அறிந்துக் கொள்ளமாட்டார்கள் ஏன்? ஏனென்றால் அவர்களுடைய நோக்கங்களும் செய்முறைகளும் தேவனுக்காக ஏற்படும் உண்மையான பசியிலிருந்து வேரூன்ற வில்லை. உண்மையான பசியான இருதயத்திற்கு கர்த்தர் எப்பொழுதும் சத்தியத்தை வெளிப்படுத்துவார்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 11


**H.** **கடைசி நாட்களின் காலம்.**

கடைசி நாட்களின் அடையாளங்களை புரிந்து கொள்ளும்படியாக இயேசு தன் சீஷர்களுக்கு ஒரு உவமையை சொல்லுகிறார்.

**லூக்கா 21:26-31** "*வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும்*
*ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்.*
*27 அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல்*
*வருகிறதைக் காண்பார்கள். 28 இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு*
*சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றார். 29*
*அன்றியும் அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்: அத்திமரத்தையும் மற்றெல்லா*
*மரங்களையும் பாருங்கள். 30 அவைகள் தளிர்க்கிறதை நீங்கள் காணும்போது வசந்தகாலம்*
*சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள். அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது,*
*தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்.*"

ஒரு காலத்தைப் போல பூமிக்கு முடிவு வரும் என்பதை அவர் சீஷர்களுக்கு சொன்னார். வருகின்ற காலத்தை வெளிப்படுத்தும் வகையில் மரங்களில் எப்படி மொட்டுக்கள் தோன்றுகிறதோ இயேசு நமக்காகக் கொடுத்த அடையாளங்கள் இந்த யுகத்தின் முடிவு சமீபமாய் இருக்கிறது என்று நமக்கு சொல்லுகிறது. காலத்தின் முக்கியத்துவத்தை எல்லோரும் புரிந்துக் கொள்வது அரிதானது தேவனுக்கு ஜீவிக்க முடிவு செய்வதற்கு நமக்கு அதிக நேரம் இல்லை தங்களுடைய வாழ்க்கையை சீர்படுத்திவிட்டு தேவனிடத்திலே வரலாம் என்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் இரட்சிப்புக்கு சரியானபாதை இது இல்லை என்று வேதம் கூறுகிறது ஒருவன் உடனடியாக செயல்படவேண்டுமென்பதை வேதம் போதிக்கிறது.

**2கொரிந்தியர் 6:2** "*அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சணியநாளிலே உனக்கு உதவிசெய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்.*"



சாவி # 5 **கடைசிகாலத்தின் அடையாளங்கள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன இந்த காலக்கட்டம் முடிவடைய போகிறது என்பதை இவைகள் வெளிப்படுத்துகின்றன.**

## VI. தம்முடைய சபைக்காக இயேசு வருகிறார் (எடுத்துக் கொள்ளப்படுவது)

**A.** **இயேசு கிறிஸ்துவின் தனிப்பட்ட வருகையை குறித்து புதிய ஏற்பாட்டில் 318 ஒத்த வாக்கியங்கள் உள்ளது**

தேவனுடைய தீர்க்கதரிசன கால அட்டவனையில் அடுத்த நிகழ்ச்சி சபை எடுத்துக் கொள்ளப்படுவதே இரவிலே திருடன் வருகிற விதமாய் கர்த்தருடைய நாள் எதிர்பாராத நிகழ்ச்சியாக இருக்காது.

**1 தெச 5:1-4** "*சகோதரரே இவைகள் நடக்குங்காலங்களையும் சமயங்களையுங்குறித்து*
*உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை. 2 இரவிலே திருடன் வருகிறவிதமாய்க்* ***கர்த்தருடைய***

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 11

*நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். 3 சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை. 4 சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே.*"

எடுத்துக் கொள்ளப்படுவது மிக சீக்கிரமாய் நடைபெறும் ஒரு இமைப் பொழுதில்

**1 கொரி 15:51-52** "*இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.*"

மேகங்களிலிருந்து கிறிஸ்து இறங்குவார் கிறிஸ்துவுக்குள் மரித்த பரிசுத்தவான்கள் முதலாவதாக எழுந்திருப்பார்கள் பின்பு உயிரோடிருக்கிற கிறிஸ்தவர்கள் எழுந்து பிரேத குழிகளிலிருந்து எழுந்த பரிசுத்த வான்களோடு மத்திய வானில் கர்த்தரை சந்திப்பார்கள்.

**1 தெச 4:13-18** "*அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. 14 இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார். 15 கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை.16 ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். 17 பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். 18 ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.*"

இயேசுவின் மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக நம்முடைய சரீரங்கள் மறுரூபமாக்கப்படும் பசியோ வியாதியோ மரணமோ அந்த நொடியிலிருந்து நம் சரீரங்களை அண்டாது.

**பிலிப்பியர் 3:21**"*அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.*"

எடுத்துக் கொள்ளப்படுவது ஒரு சாதாரணமான நாளில் நடைபெறும் என்று இயேசு போதித்தார்.

**மத்தேயு 24:40-44** "*அப்பொழுது, இரண்டுபேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான். 41 இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக்கொண்டிருப்பார்கள்; ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள். 42 உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள். 43 திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள். 44 நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 11

**சாவி # 6 <u>எடுத்துக் கொள்ளப்படுவதோடு கிருபையின் காலம் முடிவடைகிறது. இது ஒவ்வொரு கிறிஸ்தவனின் நம்பிக்கை.</u>**

**B. தேவனுடைய ஆவி நமக்குத் தேவை**

இயேசுவின் வருகையின் போது மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களுக்குள்ளாக இருக்கும் பரிசுத்த ஆவிதான் எடுத்துக் கொள்ளப்பட பெலன் அளிக்கும். பரிசுத்த ஆவி நம் மேல் வாசமாய் இல்லாமற் போனால் நாம் எடுத்துக் கொள்ளப்பட மாட்டோம்.

ரோமர் 8: 9,11 "*தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. 11 அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.*"

**சாவி # 7 <u>எடுத்துக் கொள்ளப்படுவதற்கு பரிசுத்த ஆவியின் நிறைவு தேவை</u>**

இந்த உலகத்தில் உள்ள பாவத்தின் மேல் கர்த்தரின் கோபாக்கினை ஊற்றப்படும் ஆனால் மணவாட்டி சபையின் மேல் ஊற்றப்படாது

**1தெச 5:9** "*தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துமூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்.*"

**லூக்கா 21:31** "*அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்.*"

**சாவி # 8 <u>கர்த்தரின் நியாயத்தீர்ப்பிலிருந்து சபை எடுத்துக் கொள்ளப்படுவது பாதுகாக்கும்</u>**

எப்படியாக எல்லாம் முடிவடையும் என்பதை நம் கடைசி பாடத்திலே நாம் கண்டறிவோம்.

**பாடம் # 12**

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 12

## I. இரட்சிப்பின் திட்டத்தின் மறு பார்வை

### A. நாம் எல்லோரும் மனந்திரும்ப வேண்டும்

**லூக்கா 13:3, 5** "…. *நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்றார்.*"

### B. நாம் மறுபடியுமாக பிறக்க வேண்டும்

**யோவான் 3:3-5** "*இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்… இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.*"

### C. இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் எடுத்து மறுபடியுமாக நாம் பிறக்க வேண்டும்

**மாற்கு 16:16** "*விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*"

**அப்போஸ்தலர் 2:38** "*பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*"

**கலாத்தியர் 3:27** "*ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.*"

### D. ஆவியினாலே நாம் பிறக்க வேண்டும்

**மாற்கு 16:17** "*விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள்*"

**அப்போஸ்தலர் 2:4** "*அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.*"

**அப்போஸ்தலர் 2:38** "*பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*"

**அப்போஸ்தலர் 10:44-46** "*இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிகொண்டிருக்கையில் வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள்.*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 12

**அப்போஸ்தலர் 19:6** “*அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தாவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.*”


குறிப்பு இரட்சிப்பை ஏற்றுக் கொள்வதற்கு முடிவு செய்யாமல் அநேகர் ஒரு வேதப் பாடத்திலே உட்கார்ந்து கொண்டிருக்கலாம் இதைக் குறித்து நான் ஜெபிக்கிறேன் என்று இவர்கள் சொல்லலாம். கர்த்தர் நம்மை ஏற்கனவே செய்ய சொன்னதைக் குறித்து நாம் ஜெபிக்க வேண்டியதில்லை நாம் மற்றக் காரியங்களுக்காக ஜெபிக்கலாம் ஒரு நல்ல வேலை நம் குடும்பம் உறவினர்கள் நண்பர்கள் போன்றவை ஆனால் இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்து நாம் ஜெபிக்க வேண்டியதில்லை அதற்கு கீழ்படிந்தால் மாத்திரம் போதும்.

### E. அகரிப்பா இராஜாவைப்போல இருக்காதீர்கள்

**அப்போஸ்தலர் 26:28** “*அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான்.*”

கர்த்தருடைய வருகையின் போது எடுத்துக் கொள்ளப்படாமல் கைவிடப்படும் ஜனங்கள் பாவத்திற்கு விரோதமாக கர்த்தருடைய கோபாக்கினையை சம்பாதித்துக் கொள்ளுவார்கள் இது நடக்கும் பொழுது பூமியிலே இருப்பதற்கு நம் யாவருக்கும் வாஞ்சையில்லை எடுத்துக்கொள்ளப்படுவதை விட்டுவிடாமல் இருப்பதற்கு ஒரே வழியானது ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பதாகும்.

**ஏசாயா 55:6** “*கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.*”



**சாவி # 1:** **<u>மனந்திரும்புதல் இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் மற்றும் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவது நம் நித்திய இரட்சிப்பிற்கு அத்தியாவசியமானது.</u>**

## II. அந்திகிறிஸ்துவின் ஆளுகை (மிருகமும் அதின் செயல்முறைகளும்)


உபத்திரவத்தின் காலத்தில் உலக தலைமைத் துவத்தை ஆளுகை செய்யும்படியாக ஒரு வல்லமையுள்ள அரசியல் தலைவன் வருவான் இவன்தான் அந்தி கிறிஸ்து இவனுக்கு உதவியாக கள்ளதீர்க்கதரிசி இருப்பான் அவன் உலக மதத்தின் தலைவனாக இருப்பான் அந்திகிறிஸ்துவாலே ஆளுகை செய்யபடுகிற ஒரே உலக அரசாட்சியின் செயல் முறை எல்லா அரசியல் மதம் மற்றும் பொருளாதாரம் பகுதிகளை சூழ்ந்துக்கொள்ளும்.

### A. முதலாவது சபையானது எடுத்துக்கொள்ளப்பட்டு ஆட்டுக்குட்டியின் கல்யாண விருந்துக்குப்போகும்.

**வெளி 19:7-9** “*நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லியவஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே. பின்னும், அவன் என்னை நோக்கி: ஆட்டுக்குட்டியானவரின்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 12

*கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும், இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்.* ”



**சாவி # 2: <u>மறுபடியுமாக பிறந்தவர்கள்தான் எடுத்துக் கொள்ளப்பட்டபின் கல்யாண விருந்தை கொண்டாடுவார்கள்</u>**

## B. அந்திகிறிஸ்து

கீழ் கொடுக்கப்பட்டுள்ள வேதப்பகுதி பாவம் நிறைந்த சட்ட ஒழுங்கு இல்லாத ஒரே உலக அரசாட்சியின் தலைவனாக அந்திகிறிஸ்து என்ற மனிதனைக் குறித்து வெளிப்பாடு கொடுக்கிறது.

**2 தெச 2:3-12** “*3 எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு
எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய
பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. 4 <u>அவன் எதிர்த்துநிற்கிறவனாயும்,
தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும்
மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல
உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும்</u> இருப்பான். 5 நான்
உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா? 6
அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடை செய்கிறது
இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே. 7 அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே
கிரியைசெய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது
வெளிப்படாது. 8 நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக்
கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின்
பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார். 9 அந்த அக்கிரமக்காரனுடைய வருகை
சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான
அற்புதங்களோடும், 10 கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித
வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை
அவர்கள் அங்கிகரியாமற்போனடியால் அப்படி நடக்கும். 11 ஆகையால் சத்தியத்தை
விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, 12
ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும்
ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு,*”

1. அவன் எருசலேமிலே ஆளுகை செய்து தேவனுடைய ஆலயத்திலே உட்கார்ந்து தன்னை தேவனென்று கூறிக் கொள்ளுவான் (2 தெச 2:4 தானியேல் 11:36)

2. தேவனை எதிர்த்து தன்னை தேவனுக்கு மேலாக உயர்த்திக் கொள்ளுவான் (2தெசல 2:4 தானி 7:25)

3. அர்மெகத்தோனில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவன் அழிக்கப்படுவான் (2 தெச 2:8)

4. பொய்யான அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் சாத்தான் அவனுக்கு வல்லமையை அளிப்பான் (2 தெச 2:9)

5. சத்தியத்தை நேசிக்காதவர்களை அந்திகிறிஸ்து வஞ்சிப்பான் (2 தெச 2:10)

6. சத்தியத்தை விசுவாசிக்காமல் மறுப்பவர்களை அந்திகிறிஸ்துவாலே வஞ்சகம் செய்யப்பட கர்த்தர் அனுமதிப்பார். இதனால் அவர்கள் அந்திகிறிஸ்துவின் பொய்களை

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 12

விசுவாசிப்பார்கள் அப்பொழுது தீமையை ருசிபார்த்து நன்னையை விசுவாசிக்காமல் இருந்ததால் அவர்கள் கண்டிக்கப்படுவார்கள். (2 தெச 11:12)

## C. அந்திகிறிஸ்துவும் கள்ள தீர்க்கதரிசியும் சாத்தானும்

வெளிப்படுத்தல் 13-ல் சமுத்திரத்திலிருந்து எழும்புகிற முதல் மிருகமாக அந்திகிறிஸ்துவையும் வலுசர்பத்தை சாத்தானாகவும் மற்றும் இரண்டாம் மிருகத்தை கள்ளதீர்க்கதரிசியாகவும் விவரித்ததைப் பார்க்கலாம்.

வெளி 13:1-18 "*பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது* ***சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன்****; அதற்கு ஏழு தலைகளும் பத்துக்கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன. 2 … வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது… பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி, 4 அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த* ***வலுசர்ப்பத்தை*** *வணங்கினார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி,* ***மிருகத்தையும் வணங்கினார்கள்.*** *5 பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது; அல்லாமலும், நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. 6 அது* ***தேவனைத் தூஷிக்கும்படி தன் வாயைத் திறந்து****, அவருடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையம், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷித்தது. 7 மேலும்,* ***பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி*** *அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது. 8* ***உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்****… 11 பின்பு,* ***வேறொரு மிருகம்*** *பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது. 12 அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச்சொஸ்தமடைந்த* ***முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது.*** *13 அன்றியும், அது மனுஷருக்குமுன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப்* ***பெரிய அற்புதங்களை நடப்பித்து****, 14 மிருகத்தின்முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி, …**மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று*** *பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று. 15 மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது. 16 அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும்* ***தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும்****, 17 அந்த* ***மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது****. 18 இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன்; அது மனுஷருடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு.*"

1. வலுசர்பம் (சாத்தான்) அந்திகிறிஸ்துவுக்கு (முதல் மிருகம்) வல்லமையையும் அதிகாரத்தையும் அளிக்கும் (வெளி 13:2)

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 12

2. ஜனங்கள் வலுசர்பத்தையும் அந்திகிறிஸ்துவையும் ஆராதிப்பார்கள் (வெளி 13:4)

3. தேவனையும் அவருடைய நாமத்தையும் அவருடைய கூடாரத்தையும் பரலோகத்தில் தாபரிக்கிறவர்களையும் அந்திகிறிஸ்து தூஷிப்பான் (வெளி 13:6)

4. தேவனுடைய ஜனங்களை துன்புறுத்தி அவர்களோடுகூட அந்திகிறிஸ்து யுத்தம் பண்ணுவான் (வெளி 13:7 தானியேல் 7:21)

5. கள்ள தீர்க்கதரிசியான மதத்தலைவன் அற்புத அடையாளங்களைச் செய்து அந்திகிறிஸ்துவுக்கு உதவி அளித்து அந்திகிறிஸ்துவின் விக்கிரகத்தை ஜனங்கள் வணங்கும்படியாக செய்வான் (வெளி 13:11-14)

6. வாங்குவதற்கோ விற்பதற்கோ வலதுகரத்திலோ அல்லது நெற்றியிலோ அடையாளத்தை சுமந்து கொள்ளும்படி அந்திகிறிஸ்து செய்வான் (வெளி 13:16-17)

7. அந்த எண்ணானது 666 (வெளி 13:18)



**சாவி # 3: <u>அந்திகிறிஸ்துவும் பொய் தீர்க்கதரிசியும் அரசியல் மற்றும் மத உலகத்தை ஆளுவார்கள்.</u>**

## III. பெரிதான உபத்திரவம்

வெளிப்படுத்தலிலே பேசப்படுகிற பெரிதான உபத்திரவம் கீழ்படியாத விசுவாசிக்காமல் இருக்கும் பூமியின் ஜனங்கள் மேல் கர்த்தருடைய கோபாக்கினை ஊற்றப்படுவதாகும். (யோவான் 3:36 எபேசி 5:1-6)

வேதத்திலே கடைசிகாலமானது மிகவும் உன்னிப்பாக விவரிக்கப்பட்டுள்ளது. எபி 10 31-ல் ஜீவனுள்ள தேவனின் கரங்களில் விழுவது மிகவும் பயங்கரமானது என்று கூறப்படுகிறது. நிச்சயமாகவே பெரிதான உபத்திரவத்தின் போது பூமியின்மேல் இருப்பது மிகவும் பயங்கரமாக இருக்கும் இந்த காலகட்டத்தில் கர்த்தர் கொடூரமான நியாயத் தீர்ப்பை ஊற்றுவார். கலசங்களினாலும் எக்காளங்களினாலும் முத்திரைகளினாலும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு பூமிக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது.

**ஆசிரியர் குறிப்பு** மாணவர்களை வேதத்திலிருந்து முத்திரைகளைக் குறித்தும் எக்காளங்கள் மற்றும் கலசங்களைக் குறித்தும் படிக்கச் சொல்லி ஒவ்வொரு நியாயத்தீர்ப்பையும் குறித்து விளக்கத்தை கூற வையுங்கள்

**A. முத்திரைகள் இயேசுவினாலே திறக்கப்படுகின்றன** (வெளி 6, 8:1) (இந்த வேதப்பகுதிகளைப் பார்க்கவும்)

**1. முதல் முத்திரை - வெள்ளைக் குதிரையின் மேல் ஒருவன் ஏறி வருகிறான்**. இது அந்திகிறிஸ்துவைக் குறிக்கும் (வெளி 6:1-2)

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 12

**2. இரண்டாம் முத்திரை — சிவப்புக் குதிரை:** யுத்தம் நடைபெற்று பூமியிலிருந்து சமாதானம் எடுத்துக் கொள்ளப்படுகிறது (வெளி 6:3-4)

**3. மூன்றாம் முத்திரை - கருப்புக் குதிரை:** பஞ்சம் வெளி 6:5-6

**4. நான்காம் முத்திரை - மங்கின நிறமுள்ள குதிரை:** பூமியின் கால்வாசியான ஜனங்கள் பட்டயத்தினாலும் பஞ்சத்தினாலும் வியாதியினாலும் கொடூரமான மிருகத்தினாலும் அழிக்கப்பட்டு மரிப்பார்கள் வெளி 6:7-8

**5. ஐந்தாம் முத்திரை - தேவனுக்காக கொல்லப்பட்டவர்கள் அநேகமாக யூதர்களாக இருக்கலாம்** (வெளி 6:9-11)

**6. ஆறாம் முத்திரை** - பெரிதான பூமி அதிர்ச்சி உண்டாகும் நட்சத்திரங்கள் விழும் சூரியன் இருண்டுவிடும். சந்திரன் இரத்த நிறமாக சிவந்து விடும் எல்லா மலைகளும் தீவுகளும் தங்களுடைய இடத்திலிருந்து அசைக்கப்படும். (வெளி 6:12-17)

**7. ஏழாம் முத்திரை** - அமைதியின் காலம் வெளி 8:1

**B. எக்காளங்கள் தேவத்தூதர்களால் ஊதப்படும்** (வெளி 8:7-9, 21 வெளி 11:15-19)

**1. முதல் எக்காளம்** - ஆழங்கட்டியும் நெருப்பும் இரத்த மழையுடன் கலந்து பூமியின்மேல் புயலாக வீசும் செடிகளில் 1/3 இது அழித்துவிடும். (வெளி 8:7)

**2. இரண்டாம் எக்காளம்** - அக்கினி நிறைந்த பெரிதான மலை கடலிலே வீசப்படும் சமுத்திரத்தில் மூன்றில் ஒரு பங்கு இரத்தமாக மாறும் மச்சங்களில் 1/3 பங்கு மரித்துவிடும் மற்றும் சமுத்திரத்திலுள்ள கப்பல்களில் 1/3 பங்கு அழிக்கப்படும் (வெளி 8:8-9)

**3. மூன்றாம் எக்காளம்** - எட்டி என்ற நட்சத்திரம் வானத்திலிருந்து விழும் பூமியின் மேல் இருக்கிற தண்ணீரில் 1/3 பங்கை அது விஷமாக மாற்றும் இதை குடிப்பதினால் அநேகர் மரித்து விடுவார்கள். (வெளி 8:10 11)

**4. நான்காம் எக்காளம்** - சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் 1/3 பங்கு இருளடைந்து பகலிலும் 1/3 பங்கு பிரகாசமில்லாமல் போயிற்று இரவிலும் 1/3 பங்கு பிரகாசமில்லாமல் போயிற்று (வெளி 8:12)

**5. ஐந்தாம் எக்காளம்** - ஆழமில்லாத குழியிலிருந்து வெட்டுக் கிளியைப்போன்று தீய ஜந்துக்கள் அவிழ்க்கப்படும் தேள்களைப் போல இவைகள் மனிதர்களைக் கொட்டி 5 மாதக் காலம் சித்ரவதை செய்யும் ஜனங்கள் தற்கொலை செய்ய முயற்சிப்பார்கள். ஆனால் சாகமுடியாமல் இருப்பார்கள் (வெளி 9:1-12)

**6. ஆறாம் எக்காளம்** - 20 கோடி மனித சேனையை 4 தேவ தூதர்கள் அவிழ்ப்பார்கள் இந்த சேனை பூமியின் 1/3 ஜனத்தொகையை கொன்று விடும் ஜீவனோடு இருப்பவர்கள் இன்னும் மனந்திரும்பாமல் இருப்பார்கள் (வெளி 9 13-21)

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 12

குறிப்பு 6-வது எக்காளம் + 4-வது முத்திரை ½ இறந்துப்போன பூமியின் ஜனத்தொகை, குறைந்தபட்சத்தில்.

**7. ஏழாம் எக்காளம்** - தூதர்களின் சப்தம் தேவனைப் போற்றும். சாத்தான் முழுவதுமாக பூமியிலே கட்டவிழ்க்கப்பட்டு மனுகுலதிற்கு எதிராக அவன் சித்தம் போல செய்வான் பெரிய இடி முழக்கமும் பூமி அதிர்ச்சியும் கடும்புயலும் உண்டாகும் (வெளி 11:15-19)

**C. தூதர்களால் ஊற்றப்படும் கலசங்கள்** (வெளி 16)

**1. முதல் கலசம்** - மிருகத்தினுடைய அடையாளத்தைக் கொண்டவர்களையும் அவன் சாயலை வணங்குகிறவர்களையும் கொடூரமான கட்டிகள் தாக்கும் (வெளி16:1-2)

**2. இரண்டாம் கலசம்** - செத்தவனைப் போல சமுத்திரம் இரத்தமாக மாறும் சமுத்திரத்திலுள்ள எல்லா ஜீவ ராசிகளும் இதினால் மரித்துவிடும் (வெளி 16:3)


**3. மூன்றாம் கலசம்** - நதிகளும் ஓடைகளும் இரத்தமாக மாறும் (வெளி 16:4-6)

**4. நான்காம் கலசம்** - சூரியன் வெப்பம் கொண்டு ஜனங்களின் சரீரத்தை சுட்டெரிக்கும் (வெளி 16:8-9)

**5. ஐந்தாம் கலசம்** - பூமியை இருள் சூழ்ந்துக் கொள்ளும் வேதனையினால் ஜனங்கள் தங்களுடைய நாவுகளை கடித்துக் கொள்வார்கள் (வெளி 16:10-11)

**6. ஆறாம் கலசம்** - ஐபிராத்து நதி உலர்ந்து அர்மகெதோன் என்ற யுத்தத்திற்காக ஒரு வழியை ஆயத்தப்படுத்தும். 3 அசுத்த ஆவிகள் சாத்தானிடத்திலிருந்தும் அந்திகிறிஸ்துவினிடத்திலிருந்தும் பொய்யான தீர்க்கதரிசியினிடத்திலிருந்தும் எழும்பும் இந்த அசுத்த ஆவிகள் தேசத்தின் தலைவர்களை அர்மகெதோன் யுத்தத்திற்கு ஒன்றுசேர ஏவிவிடும் (வெளி 16:12-16)

**7. ஏழாம் கலசம்** - மின்னலும் இடியும் இதுவரை பூமி அனுபவிக்காத மகா பெரிய பூமி அதிர்ச்சி உண்டாகும் ஒவ்வொரு தீவும் மறைந்து விடும். எல்லா மலைகளும் சமமாகிவிடும். ஆழங்கட்டிகள் விழும் அதின் ஒவ்வொரு ஆழங்கட்டியின் எடையும் சுமார் 45 கிலோ இருக்கும் (வெளி 16:17-21)



சாவி # 4: **முத்திரைகள் எக்காலங்கள் மற்றும் கலசங்கள் உலகத்தின் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பாகும் இது தான் பெரிதான உபத்திரவம்**

**D. மிருகத்தின் அடையாளத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு தப்பிச் செல்ல வழி இல்லை**

வெளி 14:11 "*அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும்,* ***அதினுடைய நாமத்தின் முத்திரையைத்*** *தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது.*"

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 12

**முக்கிய குறிப்பு** இவைகளெல்லாம் சம்பவிப்பதை ஒரு வேளை நான் கண்டால் மிருகத்தின் அடையாளத்தை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். கர்த்தருக்காக நிற்பேன் என்று சிலர் சொல்லுவார்கள் எளிதாக இருக்கும் போதே கர்த்தருக்காக நம்மால் ஜீவிக்க முடியாவிட்டால் இருக்க இடம் இல்லாத பொழுதோ உணவு வாங்க இயலாத நேரங்களிலோ நம்மால் கர்த்தரை நிச்சயமாக சேவிக்க முடியாது இதுதான் இரட்சிப்பின் நாள் இதுதான் அநுக்கிரக காலம் என்று நினைவுக் கூறுங்கள் (2 கொரி 6:2)

## IV. அர்மகெதோன் யுத்தம்

### A. எருசலேமுக்கு எதிராக தேசங்கள் ஒன்று சேரும்

**சகரியா 14:1-3** “ *இதோ, கர்த்தருடைய நாள் வருகிறது, உன்னில் கொள்ளையானது உன் நடுவிலே பங்கிடப்படும். எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்; நகரம் பிடிக்கப்படும்; வீடுகள் கொள்ளையாகும்; ஸ்திரீகள் அவமானப்படுவார்கள்; நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப்பட்டுப்போவார்கள்; மீதியான ஜனமோ நகரத்தை விட்டு அறுப்புண்டுபோவதில்லை. கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவதுபோல் அந்த ஜாதிகளோடே போராடுவார்.*”

### B. யுத்தம்

உலகத்தின் இணைந்த சேனைகளோடே இஸ்ரவேலால் நிற்க முடியாது ஆனால் இயேசு அவர்களை காப்பாற்றுவார். ஆட்டுக்குட்டியின் கல்யாண விருந்துக்காக ஏற்கனவே எடுத்துக் கொள்ளப்பட்ட சபையை தன்னோடுகூட இயேசு கொண்டு வருவார். வெண் வஸ்திரம் தரித்து வெண் குதிரைகளின் மேல் பரலோகத்தின் சேனைகளாக சபை கடந்து வரும்.

**வெளி 19:11-16** “ *பின்பு, பரலோகம் திறந்திருக்கக்கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார். 12 அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது. 13 இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் **தேவனுடைய வார்த்தை** என்பதே. 14 <u>பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந்தரித்தவர்களாய், வெள்ளைக்குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின்சென்றார்கள்.</u> 15 **புறஜாதிகளை வெட்டும்படிக்கு** அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார். 16 **ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா** என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது.*”


### C. யுத்தத்தின் முடிவு

தூதர்களின் உதவியோடு கர்த்தர் துரிதமாக இந்த யுத்தத்தை முடித்து விடுவார். கீழ் கொடுக்கப்பட்ட வேதப்பகுதியில் காணப்படும் திராட்சைகள் இயேசுவுக்கு விரோதமாக போராடும் ஜனங்களுக்கு ஒப்பானவைகள்

**வெளி 14:17-20** “ *பின்பு வேறொரு தூதனும் கருக்குள்ள அரிவாளைப் பிடித்துக்கொண்டு பரலோகத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டுவந்தான். 18 அக்கினியின்மேல் அதிகாரமுள்ள வேறொரு தூதனும் பலிபீடத்திலிருந்து புறப்பட்டுவந்து, கருக்குள்ள*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 12

*அரிவாளைப்பிடித்திருக்கிறவனை நோக்கி: பூமியின் திராட்சப்பழங்கள் பழுத்திருக்கிறது, கருக்குள்ள உமது அரிவாளை நீட்டி, அதின் குலைகளை அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தத்தோடே சொன்னான். 19 அப்பொழுது அந்தத் தூதன் தன் அரிவாளைப் பூமியின் மேலே நீட்டி, பூமியின் திராட்சப்பழங்களை அறுத்து, தேவனுடைய கோபாக்கினையென்னும் பெரிய ஆலையிலே போட்டான். 20* ***நகரத்திற்குப் புறம்பேயுள்ள அந்த ஆலையிலே அது மிதிக்கப்பட்டது;*** *அந்த* ***ஆலையிலிருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள்மட்டும் பெருகிவந்தது****."*



**சாவி # 5: <u>இயேசுவும் தேவனுடைய பரிசுத்தவான்களும் தேவதூதர்களும் அர்மகெதோன் யுத்தத்தில் யுத்தம் செய்து சாத்தானையும் அந்திகிறிஸ்துவையும் பொய்யான தீர்க்கதரிசியையும் அவர்களுடைய சேனையையும் தோல்வி அடைய செய்வார்கள்.</u>**

மிருகம் (அந்திகிறிஸ்து) மற்றும் பொய்யான தீர்க்கதரிசியும் இந்த யுத்தத்திற்கு பிறகு அக்கினி கடலில் போடப்படுவார்கள்

**வெளி 19:19-20** "*பின்பு, மிருகமும் பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரோடும் அவருடைய சேனையோடும் யுத்தம்பண்ணும்படிக்குக் கூடிவரக்கண்டேன். 20 அப்பொழுது* ***மிருகம் பிடிக்கப்பட்டது****; மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின* ***கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப்*** *பிடிக்கப்பட்டான்;* ***இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்****."*

வலுசர்பம் (பிசாசு என்கிற சாத்தான்) சங்கிலிகளால் கட்டப்பட்டு படுகுழியில் 1000 ஆண்டுகள் போடப்படுவான்.

**வெளி 20:1-3** " *ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான். அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும்."*

## V. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் ஆயிரம் ஆண்டு அரசாட்சியும்

கிறிஸ்துவின் ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் குணாதிசயங்கள்

பெரிதான உபத்திரவத்திலிருந்து தப்பித்தவர்கள் இயேசுவுடன் இந்த பூமியில் வாழ்ந்து அவர் இராஜாவாக ஆளுகை செய்கிறதைக் காண்பார்கள்.

1. பூமியின் இராஜாவாக இயேசு கிறிஸ்து இருப்பார் (சகரியா 14:9)
2. பூமியை ஆயிரம் ஆண்டுகள் இயேசு ஆளுகை செய்வார் (வெளி 20:6)
3. தேசங்கள் நியாயந்தீர்க்கப்படும் (மத்தேயு 25:31-46)
4. கிறிஸ்துவோடே தேவ ஜனங்கள் ஆளுகை செய்வார்கள் (வெளி 20:4-5)

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 12

5. தலைநகரம் எருசலேமாக இருக்கும் (சகரியா 14:16-17)
6. மிருகங்களின் கொடூரமான சுபாவம் மாறும் (ஏசாயா 11:6-8  65:25)
7. மனஷனுடைய ஆயுசு நாட்கள் நீடிக்கப்படும் (ஏசாயா 62 20)
8. ஆயிரம் ஆண்டு காலத்துக்கு சாத்தான் கட்டப்படுவான் (வெளி 20:2-3)

## VI . ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் முடிவு

ஆயிரம் ஆண்டுகள் சமாதானத்தின் முடிவில் மறுபடியுமாக சாத்தான் கட்டவிழ்க்கப்படுவான். தேவனுக்கு விரோதமாகவும் எருசலேமை தாக்கும் படியாகவும் கடைசி முறை எழும்புவான்.

**வெளி 20:7-10** "***அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி,*** *8 பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான்; அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும்.*
*9 அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது. 10* ***மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்.***"

## VII. வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு

### A. காலத்தின் துவக்கத்திலிருந்து உயிரோடு இருந்து மரித்த ஒவ்வொரு மனிதனும் நியாயந்தீர்க்கப்படுவான் மணவாட்டி சபையை தவிர்த்து

**வெளி 20:11-15** " *பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்;... 12* ***மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.*** *13 சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்.*
*14 அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். 15* ***ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்.***"

நூற்றாண்டுகள் தோறும் தேவனுக்கு கீழ்படியாமல் மரித்தவர்களை அவர்களுடைய கிரியைகளுக்கு ஏற்ற வழியில் நியாந்தீர்க்கப்பட்டு நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தில் நம் பாவங்களை கழுவுவது அதாவது ஞானஸ்நானம் பெறுவது மற்றும் இன்றைய உடன்படிக்கையின்படி பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்று புதிய வாழ்க்கை வாழ்வதும் எவ்வளவு முக்கியம் என்று இது நமக்கு காண்பிக்கிறது ஆட்டுக்குட்டியின் ஜீவ புஸ்தகத்தில் நம் பெயர்களை எழுத தேவனை நாம் அனுமதிக்க வேண்டும். இல்லாமறபோனால் நாம் நியாயந்தீர்க்கப்பட்டு நித்தியமாக சபிக்கப்படுவோம்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 12

**B.** நியாயத்தீர்ப்பு வரும்

**யோவான் 12:48** "*என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்.*"

**நீதிமொழிகள் 1:24-31** "*நான் கூப்பிட்டும், நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள்; நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை. 25 என் ஆலோசனையையெல்லாம் நீங்கள் தள்ளி, என் கடிந்துகொள்ளுதலை வெறுத்தீர்கள். 26 ஆகையால், நானும் உங்கள் ஆபத்துக்காலத்தில் நகைத்து, நீங்கள் பயப்படுங்காரியம் வரும்போது ஆகடியம்பண்ணுவேன். 27 நீங்கள் பயப்படுங்காரியம் புசல்போல் வரும்போதும், ஆபத்து சூறாவளிபோல் உங்களுக்கு நேரிடும்போதும், நெருக்கமும் இடுக்கமும் உங்கள்மேல் வரும்போதும், ஆகடியம்பண்ணுவேன். 28 அப்பொழுது அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள்; நான் மறுஉத்தரவு கொடுக்கமாட்டேன்; அவர்கள் அதிகாலையிலே என்னைத் தேடுவார்கள், என்னைக் காணமாட்டார்கள். 29 அவர்கள் அறிவை வெறுத்தார்கள், **கர்த்தருக்குப்** பயப்படுதலைத் தெரிந்துகொள்ளாமற்போனார்கள். 30 என் ஆலோசனையை அவர்கள் விரும்பவில்லை; என் கடிந்துகொள்ளுதலையெல்லாம் அசட்டைபண்ணினார்கள். 31 ஆகையால் அவர்கள் தங்கள் வழியின் பலனைப் புசிப்பார்கள்; தங்கள் யோசனைகளினால் திருப்தியடைவார்கள்.*"

**எபிரெயர் 2:3** "*முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும்,*"

**2 தெச 1:7-9** "***தேவனை அறியாதவர்களுக்கும்**, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் **சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும்** நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, 8 **கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்**. 9 அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது,*"

**2 பேதுரு 2:4-6** "*பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து; பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி; சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து;*"

சிலர் தேவன் தீயவர்களை மாத்திரம் நியாயந்தீர்ப்பார் என்றும் தேவன் அன்பான தேவனாய் இருக்கிறபடியால் தங்களுடைய பாவங்களை மன்னித்து விடுவார் என்று நினைத்துக் கொள்வார்கள் ஆனால் எல்லோரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள் ஆகையால் தான் இன்று நாம் நித்தியத்திற்கு நியாயந்தீர்க்கப்படாமல் சுவிசேஷத்திற்கு கீழ்படுவது முக்கியமாகும் எடுத்துக் கொள்ளப்படும் காலம் வரும் போது சுவிசேஷத்திற்கு கீழ்படியும் நேரம் முடிந்து விடும். "இன்றைக்கு இரட்சிப்பின் நாள்!"



சாவி **# 6** <u>கர்த்தரின் நியாயத்தீர்ப்பிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள இன்றைய இரட்சிப்பின் திட்டத்திற்கு கீழ்படிவது மிக முக்கியம்</u>

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 12

## VIII. நாம் அறிந்து கொண்டபடியே காலம் நிறைவேறி நித்தியம் துவங்குகிறது

### A. பூமியும் பரலோகமும் அக்கினியால் அழிக்கப்படும்

2 பேதுரு 3:7-13 " ***இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது***. ...*கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.*
*10 கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்;* ***அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளுமெரிந்து அழிந்துபோம்.*** *11 இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்! 12 தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்;* ***அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம்.*** *13 அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்.*"

### B. புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும்

வெளி 21:1-7 " *பின்பு,* ***நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின;*** *சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.*
*2* ***யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக்கண்டேன்;*** *அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. 3 மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். 4 அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. 5 சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். 6 அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். 7 ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்.*"

### C. புதிய எருசலேமின் தோன்றுகை

வெளி 21:10-14 "*...தேவனுடைய மகிமையை அடைந்த* ***எருசலேமாகிய பரிசுத்தநகரம்*** *பரலோகத்தைவிட்டு தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை எனக்குக் காண்பித்தான். 11 அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப்போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருந்தது. 12 அதற்குப் பெரிதும் உயரமுமான மதிலும், கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று*


# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது
# பாடம் 12

*வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன. 13 வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்களிருந்தார்கள்; அந்த வாசல்களின்மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய **பன்னிரண்டு கோத்திரத்தாருடைய** நாமங்களும் எழுதப்பட்டிருந்தன. 14 நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன; அவைகள்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய **பன்னிரண்டு அப்போஸ்தலரின்** பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன."*

**யோவான் 14:2-3** "*என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். 3 நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.* "

இயேசு சீக்கிரமாய் வருகிறார். நீங்கள் ஆயத்தத்திற்காக என்ன செய்ய வேண்டும் என்பதை இந்த வேதப்பாடம் உங்களுக்கு உதவியிருக்கும் என்று நான் ஜெபிக்கிறேன். இரட்சிப்பின் சுவிசேஷ செய்திக்கு நீங்கள் யாவரும் கீழ்படிந்திருப்பீர்களென்று நம்புகிறேன்.

இன்றைக்கு இரட்சிப்பின் நாள் என்று நினைவு கூறுங்கள்



சாவி # 7: உங்களுக்கு வாழ்வதற்கு ஒரு வாழ்க்கை தான் அதற்கு பிறகு நித்தியத்திற்கு கடந்து போவோம. நீங்கள் யாருக்கு கீழ்படிவீர்கள் ?